290

செயப்பிரகாசன் கதா நாவல்.

உ

பரமபதி துணை.

செயப்பிரகாசன்.

கதாசார நாவல்.

அருப்புக்கோட்டை யென்னும்

திருநல்லூர் செல்வவந்தர்களான ம-ள-ள-ஸ்ரீ

முத்துச்சாமி நாடாரவர்களும்,

ம-ள-ள-ஸ்ரீ மா. வே.

மாயநாடாரவர்களும் செய்த

அனுமதியால்

பெருநாழி வெ. ஆறுமுகநாடார் குமாரர்

குமரய்ய நாடாரால்

எழுதப் பெற்றது.

மாக்ஷிமை தங்கிய

மேற்படி திருநல்லூர் நாடார்

உறவின் முறையாரவர்கள்

தூத்துக்குடி பிரபல வர்த்தகம்,

மா. வே. சண்முகவேல் நாடாரவர்கள்

பொருட் சகாயத்தால்

சென்னை.

சென்ட்ரல் பிரஸில் அச்சிடப் பட்டது.

[ரிஜிஸ்டர்ட்] 1923 [காபிரைட்]

உ

கடவுள் துணை.

முகவுரை.

பூர்வகாலந் தொடங்கி வித்வான்கள் தம் நுட்ப ஆராச்சியால்
நவரசங்களையும் அமைத்து கற்பனை யலங்காரவர்ணனைகளுடன்
செய்யுட்கருத்துகளைக் கண்டறியுங் கற்றவர்களுங் கண்டறியாமற்ற
வர்களும் படித்தறியும்படி எளியதமிழ்நடையில் வசனரூபமாக
எழுதிவரும் கதைகளை ஜனங்கள் படித்தும், கேட்டும் களிகூர்ந்து
வருகின்றனர் இவ்வின்பத்தை நோக்கியேநவில் தோறும்நூல்நயம்
போலும் பயில் தோறும் பண்புடையாளர் தொடர்புஎன்றுநாயனார்
நவின்றனர் போலும் உண்மையாகவோ கற்பனையாகவோ
பண்டைய காலவழக்கங்களைத் தெரிவித்து அம்மானை வசன
ரூபமாக எழுந்து நடைபெற்று தமிழ்நாடெங்கும் வியா
பித்திருக்கும் பழங்கதைகளொருபுற மிருக்க அரிய பெரிய விஷ
யங்களையும் அந்நியதேசக்கல்விமான்களுங்கண்டதிசயிக்கத்தக்க கற்
பனையலங்காரவர்ணனையின் சுவைகளையும் நிலவிகொண்டு பெருங்
காப்பியங்களும் சிறுகாப்பியங்களும் என்றும் புதிதா யிலங்கி வரு
கின்றன தற்காலம் தமிழாங்கில பாஷைகளிற்பாண்டித்தியம்
பெற்ற கல்வி மான்கள் பழங்கதை காவியப்போக்குகளைச் சிறிது
தழுவி நாளது அரசியல் கல்வி செல்வம் உத்யோகம் விபசாயம்
வணிகம்போக்குவரவு சாதனம்காலஅளவு கொலைகளவு செய்தல்
அவைகளைக் கண்டு பிடித்தல் ஏமாற்றல் ஏமாற்றுச்குட்படல் ஆ
கிய ஜனங்களின்கோட்பாடுகளைவிளக்கி ஒவ்வொருகுடும்பங்களிலு
ள்ள தலைவன் தலைவியின்ஜீவியசரித்திரங்கள்போன்று ஜனங்கள் சா
தாரணமாய்ப் பேசிவருகிற சம்பாஷணையாய் எளியதமிழ்நடையி
ல்நாவலென்று பெயர்புனைந்துபல கதைகளெழுதி வருகின்றனர்
அவைகள் லட்சக்கணக்காய் வெளியாகிச் சாதாரணமாய் ஜனங்கள்
படித்தும்பார்த்தும்பொழுதுபோக்குவதற்கோர் ஆதாரமாயிருந்து
வருகின்றன பழையன கழிதலும் புதியன புகுதலு வழுவலகாலவ
கையினானே யென்றுநன்னூலார்இயம்பியதற்கிசைய இன்னுங்கோடி
கணக்காகப் பெருகினும் பெருகுக நான்தற்கால நாவல்கள் பழங்
காலக்கதை காவியங்களின் கருத்துகளை ஆராய்ந்து செயப்பிரகாச
ன் கதையென்னும் இந் நாவலையெழுதத்துணிந்தேன் கதாநாயகன்
நகரம் அருப்புக்கோட்டை யென்ற திருநல்லூர் இவ்வூரைப்பற்றி
ஈஸ்டிண்டியா கம்பெனியார் அரசாட்சி காலத்தில் இங்கிலீஷ் து
ரைமார்களால் தென்னிந்தியா பூர்வ சாசனங்களைக்கண்டு பிடித்து
கோர்வையிடப் பட்டு சுமார் 90 வருடங்களுக்கு முன் அச்சு

டப்பட்ட பாண்டிய நாளாகம மென்னும் புஸ்தகத்தில் அருப்புக் கோட்டையென்பது அற்பக்கோட்டை யென்றுசொல்லுகிற சிறு கோட்டை யுடைதாகிச்சிற்றரசாகளால் ஆளப்பட்டு வந்திருகின்ற தென்று சொல்லப் பட்டிருக்கின்றது மஹாவம்ஸோ என்னும் இலங்கை தேச சரித்திரத்தில் கி.பி. 12ம் நூற்றூண்டில் பராக்கிரம பாண்டியனுக்கும்குலசேகரபாண்டியனுக்கும் நாடு விஷயமாய் விவாதம் நேர்ந்தபோது பாராக்கிரம பாண்டியனுகக்கு உதவிசெய்ய வந்த 1ம் பாராக்கிரமபாகுஎன்னும் இலங்கையரசனுடன் உயுத்தஞ்செய்த குலசேகரபாண்டியனுக்குச்சகாயமாய்போர்புரிந்தவர்கள் வீரகங்கநாடாள்வார்கலவண்டியநாடாள்வார் அளத்தூருநாடாள்வார்அஞ்சு கோட்டை நாடாள்வார் புங்குண்டநாடாள்வார் என்று சொல்லப்பட்டிருக்கின்றன.

கவி.

தோடாரு மலர்த்தொடைய லணியுந் தோளார்
சோணாடர் சொற்கடங்கிக் கலியே வந்து
ஊடாடா வூர்பலவாய்த் தங்கித்தங்களுரிமை கெடா
தவ்வவற்றி னுரிமையான
நாடாள்வா ரெனும்பெயரை ஞாலங்கூற நாடாச்சி
யெனும் பெயரை நலமாயேற்ற
கோடாத கற்புடைய மாதர் மைந்தர் குழுவுடனே
யாண்டிருந்தார் கோக்களாக.

கி. பி. 8-9 ம் நூற்றூண்டுகளில் பாண்டிய ராசாங்கம் சோழ ராசாங்க வன்மை யினு லொடுக்கப்பட்டுஅக்காலம் நாடாள்வாரென்னும் பட்டங்களுடன்சிற்ற ரசுகளாகப் பிரிந்துசோழர்களுக்கடங்கிப் பின்பு சுயாதீனம்பெற்றகாலத்தும்அப்படியே அப்பட்டங்களுடன் பாண்டிநாடெல்லாம் பரவி பெரிய பாண்டியராச்சியத்துக்குள்ளடங்கி வந்தவர்களே இவர்களாவர் இவர்களில் அஞ்சு கோட்டை நாடாள்வார் என்பது அருப்புகோட்டையை யாண்ட சிற்றரசுப் பாண்டியர்களையே குறிக்கும். ஏனெனில், அருப்புக் கோட்டை வெண்கோட்டை செங்கோட்டை வடுகோட்டை பொம்மகோட்டையாகிய ஐந்துகோட்டைகளையுடைய வூராயிருந்து வந்த தென்று திருநல்லூர்வாசிகளாற் சொல்லப்பட்டு வருகின்றது. பாண்டியர் குலதெய்வமாகிய சொக்கலிங்கம் மீனுக்ஷியம்மன் கோவிலும் பழமையா யிருந்து வருகின்றது. இன்னும் அவ்வூருக்குக் கிழக்கே 3 மைல் தூரத்தில் முன் சொல்லிய ஐந்து காட்டை களில் ஒன்றாகிய பொம்மகோட்டை யென்னுங் கிராமத்தில் பழுதுபட்டுப் போனச் சிவன் கோவிலொன்று பழமையா

யிருக்கின்றது. அவ்வூர் வாசிகள் செலுத்துகிற நிலத்தீர்வைப்
பட்டாக்களில் குலசேகரபுரமென்று அவ்வூர்ப்பெயரை பரம்ப
ரையாய் வழங்கி வருகின்றனர். இதனை யோசிக்கப் பாண்
டியர்களில் ஒருவன் பேராகிய குலசேகரன் கோட்டையென்
றிருந்து. நாயக்க ரரசாட்சி காலத்தில் பொம்மகோட்டை
யென்று மாறியதாயத் தெரிகின்றது. வடுக கோட்டையும்
அப்படித்தானிருக்கலாம் திருநல்லூர்தலப்புராணம்பாடியமகாவித்
வான் வெங்கடாசலம்பிள்ளையவர்கள் இந்நகரின்பழமையைப்பலவா
று யாராய்ந்தும் பரம்பரையாய்வரும் முதியோர் வாய்மொழிக
ளைக்கேட்டும் மதுரைப்பெரியபாண்டியர்கால்வழியினுள்ளசுந்தரபா
ண்டியனென்னும் ஓர்பாண்டியன் வந்து அரசுசெய்தஇடமென்றும்
பாண்டிய பரம்பரையிருந்துவந்த தென்றும்ஷெபுராணத்திற்கூறி
யிருக்கின்றனர் இவ்வித அம்சங்களிருப்பது பற்றி கதாநாயகன் ந
ல்லையம் பதிவை யாண்டு வந்த பாண்டிவேந்தர் மரபின னென்று
அமைத்துச் சொல்லியிருக்கிறேன் பதிநீங்கிப் பாலலீலையாய் மாந்
தரீகரைவதைத்து காளிகா தேவி யருள் பெற்று கனற் கவசக் கன்
னியைக்கலந்து அரக்கர்களை யொழித்து துட்டதேவதைகளை யடக்
கி சகலசீவராசிகளும் வணங்க சகோதர வாற்சல்லியம் தோழர்க
ணேயம் அபய மென்றோரை யாதரித்தல் நிகரில்லாத ஆற்
றல் முதலிய நன்மைகளெல்லாமமைந்த வீரனென்றும் கதாநாயகி
அக்கினியே கற்பைக்காத்துவர அரக்கர்சிறையிலிருந்துமீட்கப்பட்
டு ஓர்வேந்தனிடஞ்சிக்கிமீண்டு விஞ்சையருலகுவரை போய் வீர
நாயகனாற் கொண்டுவரப்பட்ட பதி விரதையென்றும் வர்ணித்துக்
கூறப்பட்டிருக்கின்றதுபன்னூல்களின்சாரமானஇந்நூலில்கசசலன்
பியாவென்னும் மகம்மதுமார்க்கநூலில் கூறிய யானையைத்தூக்கும்
பக்ஷியை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது தமிழாங்கில
பாண்டித்யமுடையார்களுக்கு இக்கதைப்போக்கு சிறிதுபொருத்த
மாகாதெனினும் கதையின்பத்தையே கருதிவருமாந்தரனைவோரு
க்கும் பொருத்தமாக விருக்குமென்றே நம்புகிறேன்.

யான்இந்தநூலைதிருநல்லூர் பிரபலபிரபுக்களாகிய மு. முத்து
சாமிநாடார் மா. வே. மாயநாடார் ஆகியபெரியோர்கள் அனுமதி
யின்பேரில் எழுதிமுடிவுசெய்து நாள்கடந்துவிட்டன. பின்புதூத்
துக்குடியில்வசிக்கும் அருப்புக்கோட்டை வாசி மேகன் வ. டி. மு.
சிவநாராயணநாடார் முயற்சியின் மேல் மேற்சொன்ன இருவூர்க
ளிலும் பொருளாதிக்கம்பெற்று மகாபிரபலபிரபூவாய்விளங்கிவ
ரும் மா. வே. சண்முகவேல்நாடாரவர்களுதவிய பொருட்சகாயத்
தாலும் பரோகாரசித்தமுள்ள சில கனவான்களின் முயற்சியால்
அருப்புக்கோட்டை நாடார்கள் மஹா உறவின்முறையுவந்து தந்த
நிதிச்சகாயத்தாலும் இந்நூலை வெளியிட்டுப் பிரசித்தப்படுத்த
லாயிற்று சுபம்.

பிழை திருத்தம்.

64ம் பக்கம் 14 வரியில் உங்கள் அதிகாரத்துக்கு பயந்து-அல்ல
152 ம்பக்கம் கடைசியில்

கரணங்களை யொருவழிப்படுத்தி அறிவுமயமாய் நின்று ஆதி பகவானைத் தியானித்து ரிஷிபத்தினி உபதேசித்தப்படி மந்திரத்தை ஜெபித்தான் அம்மந்திரவுருவால் கற்சிலையாய்நின்ற காளை வீரன் பொற்சிலை வயங்குூந் திருத்தோளிலங்க பூரணமதிபோற்றிருமுகம்விளங்க பூட்டிய திருவணியாயுதங்களெல்லாஞ் சுயவுருவாயத்துலங்க

சாத்துக்கவிகள்.

முத்துச் செல்லையாபுரம் மஹாவித்துவான்

ம-ா-ா-ஸ்ரீ சங்குமுத்துப் பிள்ளையவர்கள்

இயற்றியது

களிதருங் கவிதை கற்றுக் கதைப்பயன் றெரிகிலாரும்
தெளிவுற வசனமாகச் செயப்பிரகாசன் காதை
குளிர்பொழிற் பழசையூர்வாழ் குமரய்ய நாடான்செய்த
துளிமதுச் சுவையே மற்றச் சுவையெலாம் வென்றதம்மா.

பெருநாழி புராதனவித்துவான் ம-ா-ாஸ்ரீ

வெ. கந்தசாமிப் புலவரவர்கள்

இயற்றியது.

வல்லாருங்கனதனச் செவ்வாய்ச் சுவர்ணப்பிரபை
மென்றோள் மருவுங்காதல்
கல்லாருந் திணிபுயத்தான் செயப்பிரகாசன்
கதையைக் கழறுகென்னச்
செல்லாருந் பொழினல்லூர் வாழ்முத்துச்
சாமிநனி செப்பச்செய்தான்
சொல்லாரும் தமிழ்மதுரக் குமரயவே
ளெனுநாமச் சுகுணன்மாதோ.

பெருநாழி நல்லகண்ணுப்பிள்ளையவர்கள் குமாரர்

சோதிடம் சிவஞானம் பிள்ளை யவர்கள்

இயற்றியது.

தண்புனற் புணரிசூழுந் தடம்புவியோர்கள் மெச்சும்
திண்புயவீரனை செயப்பிரகாசன் சீராம்
வண்சுதையாய் பன்னூலாம் வாரியிற்றிரட்டி யீய்ந்தான்
பண்புடனெவர்க்கும் பாக்கள் பகர்குமரய்ய மாலே.

விருதுப்பட்டி ஸ்ரீமான்

இராமலிங்கக்குருக்களவர்கள்

இயற்றியது.

நல்லையூர்ச் சீர்சால்நாடார் நவின்றிடச் செயப்பிரகாசன்
மல்லையிற் சீர்த்திக்காதை யெழிற்குமரய்ய னென்போன்
கல்லையு முருக்கக் கேட்போர் கருத்தையு முருக்கச் சொன்ன
சொல்லையே யுகக்குமிந்தத் தொடுகடற் புவனமாதோ.

விருதுபட்டி ஸ்ரீமான் சங்கீத சாகித்யம்
கந்தசாமி கவிராயரவர்கள்
இயற்றியது.

திருநாவி லரணைமொழிசெயப்பிரகாசன்கதையைச்செகத்திற்றீட்டி
வருநாவலவ்வளவுபசலவன்முன்விளக்கொளிபோல் மழுங்கலெய்த
ஒருநாழிகைப்பொழுதி லாயிரம்பாவினம் பாடுமொரு வாயாலே
பெருநாழி யாறுமுக நாடனருள் குமரயமால் பேசினனே.

வாலசுப்பிரமணியபுரம் மகாவித்வான் சித்தமக் கவிராயரவர்கள்
சீடரும் மருகரும் ஆகிய
குமரய்யக் கவண்டரவர்கள்
இயற்றியது.

பாவளர் சீர்த்திமூதூர் பழசைமா நகரில் வாழும்
நாவலர் புகழுமேன்மை நற்குமரய்ய நாடான்
சேவலனைய வீரன் செயப்பிரகாசன் காதை
காவல ரெவருமெச்சக் கனிவுடன் கூறினனே.

இது உடுமலைப்பேட்டை சரபம், ஸ்ரீமான்
முத்துச்சாமிக் கவிராயரவர்கள்
இயற்றிய
எண்சீர் ஆசிரிய விருத்தம்.

பொன்பரவு திருநல்லூர்ச் சான்றோ ரான
பூஞ்செல்வ நாடார்கள் வாஞ்சை போற்றி
இன்பமிகு மொருசுவர்ணப் பிரபை மாதின்
ஈடேற்ற மரக்கரிடர் இகந்த காதை
முன்பழகு நாவலெனப் படிக்க யார்க்கும்
முதிர்சுவையூட் டிக்கொடுத்த முமுக்ஷு வ ளன்
அன்பமைநெஞ் சுள்ளகும ரைய்ய னென்போன்
அருளினன் தமிழ்ப்பெருமை யறியத்தானே.

சென்னை ம-ா ா-ஸ்ரீ
ச. சு. சங்கரலிங்க நாடாரவர்கள் எழுதியது.
அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

பொதுநலமாங் கல்வியிரு பாலார்க்குநடையொழுங்கிற்
புதுமை காட்டி
இதுவரையுங் காணுத நாவல்ஜெயப் பிரகாசன்
என்றீங் தானல்
முதுகுளத்தூர்ச் சேகரமாம் பழசைநகர் வளராறு
முகவே ளீன்ற
குதுகலஞ்சேர்த் தமிழ்ப்புலமைக் குமரய்ய வபிதானக்
குணபூ மானே.

ௐ

விருதுநகர் க்ஷத்திரியகுல வித்தியாசாலை உபாத்தியாயர்

செ. சு. சங்கரலிங்க நாடாரவர்கள்.

இயற்றியது.

மண்டல மதனில்மேலாய் வளர்பெரு நாழியூரான்
பண்டுள நூல்களாய்ந்தோன் பனிவரை குலுங்குமாறு
செண்டு கொண்டடித்தோன் நாடாள் செயப்பிரகாசன் காதை
கண்டுநேராகச் சொன்னான் கவிக்குமரய்யன் மாதோ.

அருப்புக்கோட்டைநாடார்குலமித்திரன் பத்திராதிபர் ம-ா-ா-ஸ்ரீ

சூ. ஆ. முத்து நாடாரவர்கள்

இயற்றியது.

மங்களஞ்சேர் திருநல்லூர் மாநகரை யாளரசர் மகிமை யேற்ற
செங்கணெடுமாலனைய செயப்பிரகாசன் கதையைச் செப்புகென்று
எங்கள்முத்துச்சாமியுட னெழின்மாயநாடனுமேயிசைந்துசொல்ல
பொங்குதமிழ்காவியம்போற்குமரய்யமால்கவியும் புகன்றிட்டானே

சென்னை ம-ா-ா-ஸ்ரீ

பூ. வைத்தியநாதையரவர்களியற்றியது.

வெண்பா.

செந்தமிழின் றேனுஞ் செயப்பிரகாசன் காதை
நந்தமிழ் நாட்டாருவக்க நாட்டினான்—சுந்தரஞ்சேர்
பாண்டிப் பழசைநகர்ப் பாவலவனாற் கவிச்சீர்
பூண்டகுமரைய்யன் புகழ்.

———

உ

பரமபதி துணை.

செயப்பிரகாசன்

அனவரத விநாயகக் கடவுள் துதி.

விருத்தம்.

அம்மலர்ச் சோலைவாவி யணிதிகழ் நல்லூராண்ட
செம்மலென் றுரைக்கும்வீரச் செயப்பிர காசன்காதை
இம்மகி தலத்திற்கூற வென்சிர மீது வைத்தேன்.
நம்மன வரதச்செல்வ விநாயகன் நளினத்தாளே.

அமுதலிங்கக் கடவுள் துதி.

வயப்பிர காசத்தாலே வையக மனைத்துங்காக்குஞ்
செயப்பிர காசன்காதை செந்தமிழ் நடையிற்கூற
நயப்பிர காசத்தோர்முன் னமுதநா யகமாய்த்தோன்றுஞ்
சுயப்பிர காசமான சோதியை வணக்கஞ்செய்வாம்,

அமுதநாயகி துதி.

சமரமே புரிந்துமாதின் றனிச்சிறை மீட்டவீரன்
விமலநற் சதைக்குவந்து மெய்யருள் புரியுமாறு
குமுதநா யகனுர்வேணிக் குழகனை யென்றும்நீங்கா
அமுதநா யகியாமம்மை யடியிணை யகத்தில்வைப்பாம்.

கலைமகள் துதி.

பாணியிற் புள்ளிமானேந்திப் பாகத்தி லறமான்கொண்டு
வேணியிற் புனன்மான் றாங்கும் விமலநல் லமுதலிங்கங்
காணியவன்பான் மிக்கோன் கதைசொலக் கல்வியாயும்
வாணியென் னம்மைசெய்ய மலரடி வணக்கஞ்செய்வாம்.

வரதராசப்பெருமாள் துதி.

வேறு

இரத வீரர்வானமான விரதமேறவமர் செயும்
விரதவாய் மையாளிசீர் விளம்பநல்கும் நல்லருள்
பரதன்முன்னே னாகிமுன்பு பார்புரந்து பின்பொரு
வரதராச னாகிநல்லை வைகுமெங்கள் சோதியே.

பாலசுப்பிரமணியக் கடவுள் துதி.

வே று

அங்கிகாக்கு மழிவிலாக் கற்புள
நங்கைகேள்வன் கதைசொல நல்லையில்
இங்கும்கல்லமு தீய்த்தி யென்றம்மைமுன்
செங்கை யேந்துமோர் சேயடிபோற்றுவாம்.

அவையடக்கம்.

அலையெலாங் கிழியத்தாவுஞ் சுறவின்முன் னயிரைபோலும்
மலையெலாஞ் சுற்றுமெண்காற் பறவைமுன் மசகம்போலும்
கொலையெலாம் புரியுஞ்சீயக் குழுவிலோர் பூசைபோலும்
கலையெலா முணர்ந்தோர்முன்பு கழறுமென் புலமைதானே.

நூல் செய்தகாலம். செய்யும்படிசொல்லிய பிரபுக்கள். பொருள்தந்து ஆதரித்த கனவான் ஆகிய இவர்களைக்குறித்தது கவிகள்.

ஆயிரத்துத் தொளாயிரத்தோ டிருபதாக
அவனிபுக ழாங்கிலமா வருடந்தன்னில்
தோயும்சித் தார்த்தியாண்ட ரசசெல்வத்
துரைமுத்துச் சாமியெனுஞ் சுபுணன்சொல்ல
மாயபூ பதியுமதை யேற்றுக்கூற
வள்ளல் செயப்பிரகாசன் கதையை நானும்
பாயிரஞ்சேர் காவியம்போ லினிதுசெய்தேன்
பரிசுதந்தார் நல்லைநகர் நாட்டார்தாமே.

திருமந்திர நகரங்கூடல் செழுந்திரு நல்லூராதி
பெருகிய வாழ்க்கையாள பிரபலவணிகவள்ளல்
தருவென வழங்குஞ் செங்கைச் சண்முகவேலாம்நல்ல
கருணையா னிதியந்தந்து கதையினை விளங்கச் செய்தான்,

நூல்

மகம்பல கண்டுகாத்த வான்பதத் தவருமங்கட்
செகம்பல கண்டுகாத்த மனுக்களுஞ் சிதையுமென்பூ
வகம்பல காலமாக வமர்ந்தவன் றுயின்றுநீங்கும்
உகம்பல கண்டதாக வோதுநற் பாண்டிநாடு.

ஆதிபராபர நித்திய நிராமயக் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சாகரஞ்சூழ்ந்த தாரதலத்தில் திராவிட பாஷையால் சிரப்புற்றோங்கிய பாண்டி மண்டலத்தில் நீர்வளம் நிலவளம் பொருந்திப் பல வகை விளை பொருள்களாற்றிருந்தி மாட மாளிகை கூட கோபுரங்கள் துலங்கி மகாலக்ஷ்மி கடாட்சம் பொருந்திய மன்னர் மாளிகைகளிலங்கி சகல ஜாதி ஜனங்களும் நெருங்கி ஆவணவீதி லட்சணங்களமைந்து சாது சங்கங்கள் பெருகி தேவாலயங்கள் சிறந்து மகத் ஐஸ்வரியங்களுஞ் செழித்தோங்கித் திருமகள் திருநடஞ் செய்யப்பட்டதாய் விளங்கிய நல்லையம்பதி என்றொரு நகருமுண்டு. அந் நகரில் ஆயிர நாமக்கடவுள் அரிதுயில் புரியும் ஆர்கலியில் ஆரமுதுட னுற்பவித்து அம்புவியனைத்தும் அமுதகலையைப் பரப்பி ஜீவ கோடிகளுக்கெல்லாம் ஆனந்த அமிர்தமாய் நின்ற அப்பன் சடையிலிருந்து வீற்றிருக்கும் சோதி மதி திருமரபினராகிய பாண்டியர் குலத்தி லுதிததவனும் சமரசனென்று நாமமுடையவனுமாகிய ஓரரசன் சாதுசீல மந்திரியுடன் சிங்கர்தனத்தி லமர்ந்து தெக்ஷண தேசமனைத்தையும் ஆண்டுவந்தான். அப்படி யாண்டுவந்த சமரச மகாராஜன் கொங்கண தேசத்தரசன் குமாரத்திகளாகிய கமல சவுந்தரி கனகவல்லி யென்பவர்களை மணமுடித்துத் தனது நாமதேயத்துக் கேற்றபடி குடிகளிடம் பக்ஷப் பிரபக்ஷமில்லாமல் "சமன் செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க்கணி" என்னும் நீதிவாக்கியத்திற் கிணங்க நடந்து அகிலாண்டகோடி பிரமாண்டநாயக ஆதிமூல அமுதலிங்கப் பெருமானையும் அமுதநாயகி யம்மையையும் அன்புடன் தியானஞ்செய்தும் அக்கடவுளின் அடியரை அக்கடவுளாமெனப்பூசித்தும் அரசுசெய்து வருங்காலத்தில் அம்மன்னனுக்கு எல்லாப் பாக்கியங்களிருந்தும் புததிர பாக்கியமட்டு மில்லாதிருந்தது எத்தனை புத்திரர்களிருந்தாலும் சகல சீரும்பார்த்து சமரக்ஷணைசெய்து வரத்தக்க செல்வர்கள் புத்திரருக் கேமாந்திருக்கவும் தினந்தினம் கிடைப்பது வயிற்றுக்குக் காணுமல் வருந்தும் ஏழைகள் புத்திரப் பெருக்கால் உணவின் கஷ்டங்களுண்டாகி மனஞ் சலிக்கவுஞ் செய்து வருவது எம்பெருமானின் திருவிளையாட்டிலொன்றல்லவோ? அவ்வாறு மகப்பேரில்லாமல் வருந்திய மன்னர் பெருமான் மந்திரியை நோக்கி என் மனதுக்கினிய மந்திரியே! நமக்கோ ஆதி பரம்பரையாய் யமைந்த அகண்ட செல்வமனைத்து மிருக்கின்றன. பிற்காலம் அவைகளை வைத்தாள்வதற்கான அருமைக் குழந்தையில்லை. வட்டியிற் படைத்த அன்னத்தை தாமரைக்கையாலளைந்து தேமழலைச் சொற்களைச்

செவிகுளிரச் செப்பி மனமெலாம் உருகப்பார்க்கும் மக்களில்லாதவர்களுக்கு இவ்வுலகில் என்ன பொருள்களிருந்தாலும் ஓர் பயனுமில்லை யென்று பெரியோர்கள் கூறி யிருக்கின்றனர்.

ஐந்தருவை நேர்கொடையரேனு மதில்வாழும்
இந்திரனை நேர்நிதியரேனு மருள்சித்தி
அந்தரனை நேர்பெரியரேனு மதிதங்கும்
மைந்தரில்லை யென்னில் வருமாட்சியலை மன்னே.

ஆனதால் கால்வழி தழையச்செய்து கதியெல்லாந் தரவல்ல மக்கள் செல்வமின்றி மகிதலத்தை யாண்டு வருவதிலென்ன பயனுகப் போகிறதென்று கண்ணீர் பெருகக் கவலையிலாழ்ந்தான் சமரச மகாராஜன். தரணிகாவலன் வாட்டத்தைக் கண்ட சாதுசீல மந்திரி எழுந்து தடக்கரங்கூப்பி திங்கள் குலச்செல்வா செகதலங்காக்க வல்ல சிறுவர்களில்லாதிருப்பது நமக்கோர் பெருங் குறைவுதான். அதனை நிவர்த்திசெய்ய சர்வ ஜீவதயாபர மூர்த்தியாகிய ஜெகதீசனுலாகுமன்றி நம்மாலாகுமோ வென்று செப்ப சமரச மகாராஜன் அது முதற்கொண்டு அமுதலிங்கக் கடவுள், அமுதாம்பிகை திருவாலயங்களுக்குரிய சகல கைங்கிரியங்களையும் குறைவற நடத்தி காலைமாலை யிருபோதுஞ் சென்று வணங்கி, இடையருத பக்தி செலுத்தி வருங்காலத்தில் சச்சிதானந்தச் சோதி பச்சைமேனி யமுதாம்பிகை யிச்சையாய்க்கூறு மினிய வாய்மொழிக் கிரங்கிச் செய்த திருவருளால் ராஜ பத்தினிகளிருவரும் கர்ப்பவதி யாயினர். அது செய்தி தெரிந்த சமரச மகாராஜன் சந்தோஷ சித்தமுடையவனுய் ஏழை பரதேசிகளுக் கபரிமிதமான தான தருமஞ்செய்து தெய்வபக்தி மாறுமல் அரசுசெய்து வருநாளையில் கர்நாடக தேசாராஜனுகிய சவுரியசிங்கனும், கலிங்கநாட்டரசனுகிய உக்கிரவர்மனும் பாண்டிநாட்டிற் படையெடுத்து வடதேச மன்னர் பலருடன் நல்லையம்பதி நாற்புறமும் வளைந்துகொண்டனர். இது செய்தி தெரிந்த சமரச மகாராஜன் ஆக்கிரம சித்தனுய் தனது சேனைகளெல்லாம் போர்க்கோலத்துடன் புறப்படும்படி படைத் தலைவர்களுக்கு உத்தரவு செய்து தானும் போர்க்கோலங் கொள்ளப்போகுஞ் சமயத்தில் சாதுசீல மந்திரி பணிந்து மன்னர் பெருமானே! எனதுரையைச் சிறிது சிந்திக்கக்கடவீர். அஃதென்னையெனில் வெகுகாலம் புத்திரப் பேறின்றி வருந்திய நமக்கு அட்பாக்கிய முண்டாவதற் கேதுவாயிருக்கு மிக்காலத்தில் சோதனைபோல் மகா பலவான்களான வடதேச மன்னர்கள் படையெடுத்து வந்திருக்கின்றனர். வெற்றி தோல்வி எவ்வகையோ தெரிகிலம். தேவியரோ மரபுதழைத் தோங்குவதற்குரிய மூலப்பொருள்களைத் தாங்கி யிருக்கின்றனர், அவர்களை ஊரைவிட்டு வேறிடம் போகச்செய்வதே உத்தமம். செயமானுலழைத்துக்கொள்ளலாம், அபசெயமானுலும் நன் மைந்தரைப்பெற்று மரபு விளங்கும்படி செய்வார்கள். ஆனதால் அவர்கள் தந்தை

யாகிய் கொங்கணதேசத் தரசனிடம் போகச்சொல்வதே உசிதமென் றெண்ணுகிறேன். தேவரீர் சித்த மெவ்விதமோ தெரிகிலேனென் றமுதன் மந்திரி மொழிந்தான். மந்திரி வார்த்தையைக்கேட்ட மன்னர் பெருமான் சற்றுலோசித்து மகப்பேறு பெற்று மகிழ்ந்திருக்கல மென்று எண்ணி யிருந்தோம். இவ்விடையூறு வந்துவிட்டது. மந்திரியின் யோசனையே ஏற்படும். வெற்றி தோல்விகளுக்கு நலமாகத் தோன்றுகின்றதென்று அந்தப்புறஞ் சென்றான். கமல சவுந்தரியும் கனகவல்லியும் கணவன் வரவைக் கண்டெதிர்சென்று வணங்கி ஏது சுவாமி இந்நேரம் கொலுவைவிட்டு வந்ததென்ன வென்று கேட்டனர். சமரசன் அவர்கள் பங்கயமுகத்தை நோக்கிக் கற்பிற்சிறந்த காந்தைமர்காள் மறு மண்டலத்தரசர்கள் படையெடுத்துவந்து நமது மாநகரை வளைந்திருக்கின்றனர். நான் போர் புரியப்போகின்றேன். வெற்றி; தோல்வி எப்படியோ தெரியாது, நீங்களோ கர்ப்பவதிகளா யிருக்கின்றீர்கள். உங்களாற்றான் குலம் விளங்கவேண்டியதா யிருக்கின்றது. இது சமயம் உங்கள் தந்தை நகர் செல்வீர்களேயானல் சத்துரு ஜெயஞ்செய்து அழைத்துக் கொள்ளுகின்றேன். அபஜெயப் பட்டுப்போனல் உங்கள் திருவுதரத்திலிருக்கும் மகவுகளால் மரபை விளங்கும்படி செய்வீர்கள். இவ்வரசாக்ஷி நம்மைவிட்டுப் போகாது. பகைவர்க ளறியாதபடி கொங்கணதேசம்போய்ச் சேருவீர்களென்று கூறினன். மன்னவனுரையைக்கேட்ட மாதர்கள் மனந் திடுக்கிட்டயர்ந்து இடியோசை கேட்ட மயில்கள்போ லேங்கிக் கரங்களை நெறித்துக் கண்ணீர்சோர வயிற்றிலுள்ள கர்ப்ப பலனுக்காக மணவாளனை விட்டுப்போவோமா. தங்களுக்கேற்படும் நயமிடறுகளுக்கு ஈடுபட்டு இவ்விட மிருப்போமே யொழிய தந்தைநகர் செல்லமாட்டோமென்று தளர்ந்து சாற்றினர். மகாராஜன் ஓ! மாதுசிரோண்மணிகளே ! என் வார்த்தையைத் தடுக்காதீர்கள். நீங்களிவ்விட மிருந்தால் நமது குலம் வேரற்றுப்போகும். கற்புக்குப் பங்கம் வந்தாலும் வரும். இது சமயம் இந்த நகரைக்கடந்து வேறிடஞ் சென்றிருந்தால் பின்பு எப்படியாவது உங்களைக் கண்டுகொள்வேன். என் வார்த்தையை மறுக்கவேண்டாமென்று கூறினன். மாதர்கள் தியங்கி நாயகன் சொற்படி நடப்பதே நன்மையெனத் தேறி மலரடியை வணங்கி திருவாக்குப்படி நடக்கின்றேமென்று கண்ணீரொழுக நின்றனர். தென்னர் பெருமான் மனத்திடமுடையவனாய் ஆயர்மாதரைப்போல் வெளிப்பட்டுப் போவீர்களென் றுரைத்து அந்தப்புரம் நீங்கிச் சேனைகள் நிற்குமிடம் வந்து சதுரங்க சேனைகள்சூழ மந்திரியுடன் கோட்டை கடந்து போர்க்களஞ் சேர்ந்தான். கமலசவுந்தரியும் கனகவல்லியும் மதிமயக்க முடையவர்களாய் மணவாளன் சொற்படி நடப்போம். உள்ளபடி யாகிறதென்று கனகமணி யாடை யாபரணங்களைக் களைந்து சாதாரணத் துகில்களை யுடுத்தி வழிக்குரிய உணவுப்

பொருள்களையுங் கொண்டு தாங்கள் செல்வதை யொருவருக்குந் தெரிவியாதிருக்கும்படி தாதிகளுக்குக் கண்டிப்பா யுத்தரவுசெய்து ஆளுக்கொரு பாற்பானை யெடுத்துத் தலையின்மேல் வைத்து மதி முகஞ் சற்றே தெரியும்படி மூடி பால் தயிரை விற்றுச் செல்லும் இடைச்சிகளுடன் சேர்ந்து திருநல்லூர் கோட்டைகடந்து போயி னர். சமரச மகாராஜன் சாதுசீல மந்திரியுடன் வந்தெதிர்த்த மறு மண்டல மன்னருடன் போர்புரிந்து அவர்கள் மிகுதியாகவும் பல வான்களாகவு மிருந்தபடியால் தோற்றுப்போயினன். வடதேச மன்னர்கள் திடமுடன அவனையும் மந்திரியையும் கைப்பற்றி நல் லையம்பதிக்குத் தங்களிலொருவனை நாயகனாகவைத்து கர்நாடகதேச த்திற் கொண்டுபோய்க் கடுஞ்சிறையி லிட்டனர். ஊர்கடந்துபோன உத்தமிகளிருவரும வடமேற்றிசை வழி செல்லும் ஆச்சிகளுடன் சேர்ந்து இனியவார்த்தைகள் பேசி நடந்து அவர்கள் தம் தம ஊர் களுக்குப் பிரிந்துபோக இவர்கள்மட்டுந் தனியே சென்றனர். கொங் கணதேசத்தை நாடிச் சிலதூரஞ் சென்றுகொண்டிருக்குஞ் சம யம் கீழ்பக்கமாயிருநதுவரும் பாதையில் ஓர் சந்யாசி வந்து மாதரசி களைக்கண்டு மாதர்கள் முக லட்சணத்தையும் தற்சமயம்கொண்ட கோலத்தையுங் குறிப்பினாலறிந்து கிட்ட நெருங்கி ஆண்பாலின்றித் தனித்துச்செல்லும அன்னம்போன்றவர்களே! எவ்வூர் செல்கிறீர் கள். தனியே செல்லவேண்டியதென்ன? வெளிக்கு ஆயர்குலம் போற்றெரியினும் இருக்கின்ற லட்சணக்குறியால் ராஜகுலமாய்த் தெரிகின்றதே உண்மையைச் சொல்வீர்களென்றான். மன்னவன் பத்தினிகள் இவன் யாவனோ வெனச் சந்தேகித்து நீவிர் யார்? எவ்விடம் போகிறீரென்றனா. சந்யாசி சொல்லுகிறதாவது அம் மணிகள்! நான் தங்குமிடமொன்று நிலையாயுண்டோ எவ்விடமுந் திரியப்பட்டவன் இராமேஸ்வரம்போய் காசி முதலிய க்ஷேத்திரங்க ளுக்குப் போகின்றேனென்றான். மங்கையர்கள் அந்தப்புரத்திலே யிருந்து உலக விஷயங்கள் கவனியாதவர்களாகையால் சந்யாசி வார்த்தை சரியாயிருக்கும மஹாத்மாவா யிருக்கலாமென்று மதித் துத தங்கள் வரலாறு ஒழியாமற் கூறிப்போகுமிடத்தையுங் கூறி னர். சந்யாசி உள் மகிழுந்து மாதரசிகாள் அஞ்சவேண்டாம். நான் போகக்கூடிய தலங்களுக்குக் கொங்கணதேச வழியாய்ப் போக வேண்டியதா யிருப்பதால் என் பிறகே வாருங்கள். உங்கள் தந்தை நகர் சேர்தது விடுகறேனென்றான். கொற்றவன் பத்தினிகளும வழியினுக்குற்ற துணை வாய்த்ததென்று அவன் பிறகே சென்றனர். சநயாசியும் தங்குமூர்களிற்றங்கி காட்டு வழியாய் இரண்டு மூன்று நாள் நடக்கும்படி செய்து ஓர் காட்டுவழி கொண்டுபோனான். மாத ரசிகளும் அவன் கூறும் மேலான வாக்கியங்களைக்கேட்டு மனச் சந் தேக மில்லாதவர்களாய் நடந்து ஓர் மலையடிவாரத்தைக் கண்டார் கள். வானததளாவிய அம்மலைச்சாரலில் ஓராலயமும் திருக்குளமு

மிருக்கக்கண்டு சங்யாசி மாதர்க்கரசிகளே நாம் இன்றுதினம் இவ்வி டத்திற்றங்கி நாளைக் கொங்கணதேசம் போய்ச் சேருவோமென்று கூறினர். கோதையர் திகைத்து நாம் மனிதசஞ்சாரமில்லாத இக் கொடிய வனத்திற்றங்கலாமா சிலதூரம் நடந்து ஒரூர் பதியைச் சேர்ந்துகொள்வது நலமென்று கூறினர். சங்யாசி வாசிக்குங் குழ லிகளே ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம். அடுத்து ஊரென்பதே கிடையாது. சிலதூரம் போவதற்கு நேரமுமில்லை யின்றிரவு இவ் விடம் தங்கியிருந்து நாளைக்காலமே யெழுந்து போவோமென்று கழறினன்.

காவலன் பத்தினிகளும், கருத்தொருமித்து அவன்காட்டிய ஆலய மோர்புறத்தில் தங்கிக்கொண்டுவந்த ஆகாரவஸ்துக்களிற் கொஞ்சம் சங்யாசிக்கும் கொடுத்து, தாங்களும் புசித்து, தாகசாந்திசெய்து சூரியனஸ்தமயமாகி யிருள் பரவியசமயம் அவ்வாலய முன்கட்டிட மொன்றில் படுத்துக்கொண்டனர். சங்யாசியுஞ் சற்றுதூரத்திற் படுத்து நித்திரைசெய்தனன் கதிரோனுதயத்திற் கன்னியரிருவ ருந் துயில்விட்டெழுந்தசமயம், சங்யாசியெழுந்து தராதிபதியின் பத் தினிகளே! அதோ சிலர் ரூபமாய் நிற்குந்தெய்வம். எனக்கநேக இஷ்டசித்திகளையுதவியதாகும். அதனைப் பூஜிக்கும் நாள் இன்று கும் நீங்கள் சாமளரூபி ஆலயத்தி லிருப்பீர்களே யானல் பூஜையை முடித்துவந்து அழைத்துப்போய் அத்தெய்வத்தினருட் பிரசாத மகிமையும் வாங்கித்தருகிறேன். பின்பு கொங்கணதேசம் போவோமென்றனன்! மாதர்க ளக்கருத்துக்கிசைந்து சாமளரூபி ஆலயம்சென்றனர் சங்யாசி தான் கருதியதை முடிப்பதற்கான பொருள்களை அமைத்துக்கொண்டிருந்தான் பார்வேந்தன் பத்தினிக ளிருவரும் பராசத்தியாலயஞ் சென்று பார்க்க திருமதிற் கோபுர மும் உள்ளாலயப் பிரகாரங்களும் பரிவாரதேவதைகளிருக்கும் பாங் கும், அம்மனிருக்குங் கோலாகலமுங்கண்டு சர்வலோகநாயகி சந் நிய தானத்தில் வந்து நமஸ்காரஞ்செய்து சிரமேற்கரங்குவித்து அறைரட்சகி! அகிலாண்டவல்லி! அரவாபரணி! அகோரி! வீரி! பச் சைரூபி! பரம்பரையா யெங்களை யாட்கொண்ட பராசத்தி! நாங்கள் சிந்தனையின்றி கொங்கணதேசம்போய்ச் சேரவும், கொடும்பகைவேந் தரை யெங்கள் நாயகன் வென்று ஜெயசீலராய் விளங்கவும் கருணை செய்யவேண்டுங் காரணியேயென்று துதித்து கண்ணீர்புரளக் கசிந் ந்துருகிநின்றனர். அப்படி நிற்குங் கன்னிநாடன் பத்தினிகளை கண் ணபிரான் றிருத்தங்கை கடாக்ஷமாய்ப் பார்த்தருளி தருமசொரு பன் பத்தினிகள் சண்டாளனிடஞ் சிக்கி மடியும்படி நேரிட்டதே யென வருந்தி இவ்விபத்தினின்று விலக்கத் திருவுளங்கொண்டு செவ்வேற்கண்ணர் செவிகளிற்கேட்கும்படி அசரீரிவாக்காக விதனைக் கூறலானள். இந்நிலம் புரக்கு மன்னவன் பத்தினிகளே! நீங்களிது

சமயம், கபடசந்யாசி வஞ்சனையிற்சிக்கி மாளும்படியாயிற்றே யென்றனள். மாதர்களிருவருந் திடுக்கிட்டு ஆ ஹா! அனுதரட்சகி! எங்களுக்கு அச் சந்யாசி என்னதீங்கு செய்யப்போகிறான். அதனைத் திருவுளம்பற்றவேண்டுமென்று தெண்டனிட்டனர். ஏகரூபியான அம்மன் என தருமை மக்களே! உங்களைச்கூட்டி வந்தவன் கோரக்கனென்னும் ஓர் மாந்தரீகனாகும், அவன் அநேக இஷ்டசித்திகள் பெறும்பொருட்டு, தேசாந்தரம் வந்தவன் இவ்விடம்வந்தான் இவ்வாலயத்திற்கு ஈசான்யதிசையிலிருக்கும் அடா மந்திரரூபதேவதையிடஞ் சென்று அத்தெய்வம் தன்வசப்பட்டு தன்தொழிலுக் கனுகூலமாயிருக்கும்படி பிரார்த்தித்தான். அது முதற்கற்பிணியான மன்னர்குலப்பெண்ணைக் கொண்டுவந்து பலிகொடுத்தால் உன்வசப்பட்டுக்கோரியகாரியங்களை முடித்துக்கொடுப்பதோடு தன்னிடமுள்ள ஆயுதம்பொருள்களனைத்தையங் கொடுக்கிறேனென்று கூறியது அவனும் அதுமுதற்கொண்டு பூமியெலாந்திரிந்து நாடியபலி கிடையாமல் வேசாரிவரும்போது உங்களைக்கண்டு தந்திரமாய்க் கைவசப்படுத்தி இவ்விடங்கொண்டுவந்து இங்கிருக்கும்படிச்செய்து தேவதை முன்பு செய்யுமுறைகளைச் செய்துவருகிறான். அம்முறைகளும் முடிந்துவருகின்றன. மூத்தாளை பலிகொடுத்து இளையாளை மனைவியாக்கி இஷ்டசித்திகளையும் பெற்று தன்னிடம்போக எண்ணியிருக்கிறான். இதுதான் உங்களுக்கு வந்தவிபத்தென்று கூறினர். நவின்ற வாக்கியங்களைக்கேட்ட நாட்டரசன் பத்தினிகள் நடுநடுங்க நமக்குவந்த ஆபத்து எப்படியிருக்கின்றது பகைவருக்கஞ்சி ஊரைவிட்டுவந்தோம் வந்தவிடத்தில் மாபாவியிடஞ்சிக்கி மடியும்படியாயிற்றே யென்று தேம்பித்தேம்பி யழுது பல்லாயிரங்கோடி ஜீவராசிகளையும் பாதுகாக்கும் பராசத்தியே இதுசமயம் உன்கதியல்லாமல் வேறுகதியில்லை யென்றுருகி அம்மனடிமலரில் வீழ்ந்தனர் சர்வலோகமாதா தயவுகூர்ந்து பார்ப்பனச் சிறு பெண்போல்வந்து பொற்பிலும் கற்பிலுஞ் சிறந்த பூவையர்காள் அஞ்சவேண்டாம். குளிகை தருகிறேன். ஒன்றை யருந்துவீர்களேயானால் உங்கள் சுதந்தரரூபம் வேறுபட்டுக் குஷ்டரோகிகள்போல்த் தெரிவீர்கள் உங்கள் நாயகனையடையுங்காலம்ஒன்றையருந்திச் சுயரூபமடைந்துகொள்வீர்கள் நாளைபத்தினம் வேடர்கள் வருவார்கள் அவர்களுடன் சேரிசென்று மைந்தரைப்பெற்று நற்காலம் வந்தபோது நாயகனிடஞ் சேர்ந்திருப்பீர்களென்று நங்கையிருவருக்கும் இரண்டிரண்டு குளிகைகள் தந்தருளினள் அரசிகள் ஆயிரங்கண்ணுடையாள் அம்புயக்கையால் தந்தருளியகுளிகையிலொன்றையெடுத்தவாயிலிட்டு தங்கள் சுயரூபமாறிக் குட்டநோய் கொண்டவர்போலாகிக் குரலும் வேறுபட்டு அச்சந்நிதியிலேயேயிருந்துகொண்டனர்.

கோரக்கனென்னும் கொடியோன் அடா மந்திரரூபதேவதை முன்பு செய்யவேண்டிய கிரிகைகளெல்லாஞ் செய்து பார்வேந்தன்

பத்தினியைப் பலிகொடுக்கவேண்டு மென்னும் விருப்புடையவனாய் சாமளரூபியாலயம்வந்து தான் கொண்டுவந்தபடியில்லாமல் விகார வடிவாய்த்தோன்றும் மெல்லியரைக்கண்டுதிகைத்து அவர்களருகிற் சென்று ஓ பெண்காள்! நீங்களெவ்விடமிருந்து வந்திருக்கின்றீர்கள் சுந்தரவதிகளான தோகையரிருவர் வந்தனரே! அவர்களைக் கண்டீர்களா வென்றான். அதற்கம்மாதர்கள் ஐயா சந்நியாசியாரே! நாங்கள் கொங்கணதேசத்திலுள்ள ஓர் குக்கிராமவாசியான ஓர் குடியானவன் மனைவியர்கள் குஷ்டரோய் பற்றி தால் நாயகனும் வீட்டார்களும் விரும்பிச் சமரக்ஷணைசெய்வதற்கில்லாதாகிவிட்டது. நாங்களெப்படியாவது இந்நோயைப் போக்கவேண்டுமென்று புறப்பட்டுத் தேவாலயங்கள் பணிந்து, தீர்த்தங்களாடி இவ்வழிவந்து இம் மகாதேவியாலயத்தில் புகுந்தோம். இங்கிருந்த சௌந்தரவதிகளான இருமாதர்கள் எங்களிடம் கொங்கணதேசம் போவதாகச்சொல்லிப் போயினரென்றனர். காரிகையர் கூறிய மொழியைக்கேட்ட கபடன் மனம் புழுங்கித்தொடர்ந்து வந்த அனல் பனையிலேறவிட்டு உயரப் பார்க்கும் நாயைப்போல அடடா மடாமந்திர ரூபதேவதை செயலிப்படியாயிருந்தது. உலகெலாந் தேடி யகப்பட்ட பொருளை விட்டுவிடுகிறதா வென்று கால்வேகமெல்லாங் காட்டி வடதிசையைநோக்கி ஓடினான். பத்தினிகளிருவரும் பராதேவதையைத் தியானஞ்செய்து அச்சமகற்றி யவ்விடமிருந்தனர். மறுநாள் அரணியனென்னும் வேடர் தலைவன் அநேக வேடர்கள் வேடுவச்சிகள் புடைசூழக் கடலொலிபோல் வேட்டுவப்பறை முழங்கப் பூசைச் சாமான்களுடன் சாமளரூபி யாலயம் வந்தான். அங்கு அரச பத்தினிகள் அணிப்பற்றுடைய மேனியிற் பிணிப்பற்றுடையவர்களா யிருக்கக் கண்டு அருகிற்சென்று அம்மணிகளே நீங்களிருப்பது எத்தேசம். தனியாக இவ்விடம் வந்திருக்கவேண்டிய காரணமென்ன? ஒழியாமற் சொல்லவேண்டுமென்று கேட்கக் கமலசவுந்தரி கனகவல்லியாகிய மாதர்கள் அம்மன் திருவுளம்பற்றியபடி இவ்வேடன் வந்தானென்று மதித்துத் தங்கள் வரலாற்றை யொருபோக்காக அவனிடங் கூறத்தொடங்கினர். அகிலநாயகி யாலயத்திற் சகல ஜனங்களுடன் வந்து நிற்கும் வேடுவர் தலைவனே! நாங்களிருப்பது பாண்டிநாட்டிலுள்ள நல்லேடம்பதியாகும். அந்நகரிலிருந்து பாண்டிநாடனைத்தும் ஆண்டுவந்த சமரச மகாராசனுடைய படைத்தலைவன் வீரமார்த்தாண்டனுடைய மனைவியர்கள் எங்கள் தந்தை வீட்டிற் பேரழகிகளாக அக்காளுந் தங்கையுமாயிருந்த எங்களை மணமுடித்து இன்பமாய் வாழ்ந்துவருங் காலத்தில் இரண்டு மாதத்துக் கர்ப்பவதிகளானோம் அதுசமயம் இந்நோய் சென்மாந்தர வினையால் தொடர்ந்து அங்கலட்சணத்தைக் குறைவு படுத்தியது. அதனால் மாமன் மாமி முதலானோர் விருப்பமின்றி யிருப்பினும் எங்கள் நாயகர் மூன்றுமாதகாலமாய் எங்களுக்கு யாதொரு குறைவும் வராமற்

பராமரித்து வந்தனர். தற்காலம் மராடங்கலிங்க முதலிய தேசங்களை யாளும் ராஜர்கள் பகைத்துப் பாண்டிநாட்டிற் படையெடுத்து நல்லையம்பதியை வளைந்துகொண்டமையால் சமரச மகாராசனுடன் சேர்ந்து எங்கள் நாயகர் போர்முனை சென்றுவிட்டார். எங்களைப் பாதுகாக்கும்படியான எண்ணம் மாமன் மாமி முதலானவருக்கில்லாமையாலும் சர்வ லட்சணமமைந்த மாதர்கள் சஞ்சரிக்கும் இந்நகரில் நாம் எப்படி வெளிச்செல்கிறதென்கின்ற நாணத்தாலும் கணவன் பிரிந்த வருத்தத்தாலும் ஊரிலிருக்க மனம் பொருந்தாமல் தேசாந்தரிகளாய்ப் புறப்பட்டுவிட்டோம். தேவாலய தெரிசனை புண்யநதி ஸ்நானமிவைகளா லிந்நோய் தீர்ந்துவிட்டால் ஊர்போய்ச் சேருகிறது. இல்லையெனில் நல்லோர்கள் வசிக்கும் ஊர்களில் கற்புக்கு பங்கம் வராமலிருந்து காலங் கடத்துகிறதென்கின்ற எண்ணமாய் யிவ்வழியிவ்வாலயத்தில்வந்துதெரிசனை செய்துகொண்டிருக்கிறோம். எங்கள் பெயர் தாமரைரூபி தங்கமாலை யாகுமென்றனர். கருங்குழல் மாதர் கூறிவருங் காரணமனைத்தையுங்கேட்ட பெருஞ்சிலை வேடன் இவ்வரலாறு உண்மையா யிருக்கலாமென்ற ஒரு வசனங் கூறுகின்றான். சித்திரச்சிலை வீரன் பத்தினிகளே? சித்தம் பேதலித்து வேறிடஞ் செல்லவேண்டாம். நான் அரணியனென்னும் வேடனாகும். அரணிய சேரியென்னும் சேரியிலுள்ளவன் வழக்கம்போல் வரும் வருஷத்தி லொருநாளாகிய இன்று சாமளரூபி யம்மனுக்குப் பூசை பொங்கல் முதலியவை நடத்திப் போகலாமென்று வந்தேன். உங்களைக் கண்டேன். என் சேரிக்கு வருவீர்களேயானால் தேன் தினைமா கனிவர்க்கமாகிய உணவுகள் தந்து உங்களைப் போஷிக்கிறேன். உங்கள் வயிற்றிலுதிக்கு மகவுகளுக்குஞ் சீர்பார்க்கிறேன். போர்முனை சென்ற புருடன் ஜெயம்பெற்றுவரின் அனுப்பி விடுகிறேன். உங்கள் கருத்தென்னவென்று கேட்டான். வேடர் பெருமான் கூறிய வார்த்தைகளைக்கேட்ட வேந்தர் பெருமான் தேவிகள் வேதாந்த நாயகி விமலை யுத்தரவும் அப்படியே யிருந்தமையால் நல்லது உன் சேரி வருகிறோமென்றனர். வேடன் தன் ஜனங்களுடன் அம்மனுக்குச் செய்யவேண்டிய பூசைக் கிரமங்களை யெல்லாம் முடித்து மாதர் இருவரையும் அழைத்துக்கொண்டு வேடர் குழாங்கள் சூழ்ந்துவர அரணியமென்னுந் தன் சேரி சேர்ந்து ஓர் குடிசைவீட்டில் அரசபத்தினிகளை யிருந்துவரும்படி செய்தான், அவர்களதனைத் தாது ராஜமாளிகையா யெண்ணி வேடனால் தரப்பட்ட தேன் தினைமா கனிவர்க்கமிவைகளைப் புசித்து மனச்சமாதானமாக இருந்து வந்தனர். அரணியன் அவர்கள் விரும்பிய பொருள்களை கொடுத்து காப்பாற்றி வேடன் மனைவி வந்தான். சிங்கிவள்ளியும் சேரிப் பெண்களும் அடிக்கடிபோய் அவர்கள் குணதிசயங்களையும் வாய்மொழிகளையும் பார்த்து அதிக அன்புடையவர்களா யிருந்து வந்தனர். காவலன் பத்தினிகளும் இவர்கள்தான் நமக்குற்ற பங்

துக்களென்று உரிமை கொண்டிருந்தனர். இப்படி யிருந்துவருங் காலத்தில் மகா சைலமென்னும் அம்மலையின் ஓர் பக்கத்தில் பரிபூரணானந்தரென்னும் ஓர் முனிவர் தம் சிஷிய வர்க்கங்கள் பணிவிடை செய்யத் தவஞ் செய்துகொண்டிருப்பார், அரணியன் அவரிடஞ் சென்று அவர்களுக்குரிய புலித்தோல் மான்றோல் முதலியவை கொடுத்து ஆசிர்வாதம் பெற்று வருகிறது வழக்கம். ராஜ பத்தினிகள் வந்தபின் ஓர்நாள் அரணியன் முனிவரிடஞ் செல்ல அவர் வேடனை நோக்கி வேடர்கோனே? உன் சேரியில் வந்திருக்கு மாதர்கள் நற்குலத்துள்ளோர் யாதொரு குறைவும் வராமல் பராமரித்து வந்தால் பின்பு உனக்கு நற்பெயர் கிடைக்குமென்று கூறினர் அரணியன் மகா பாக்கியம் அப்படியே செய்து வருகிறேனென்று சேரியில் வந்து பயபக்தியாய்ப் பாதுகாத்து வந்தான். ராஜபத்தினிகள் திருவயிற்றில் வளர்ந்த கர்ப்பமுதிர்ந்து பத்துமாதமுஞ் சென்று வேடுவப்பெண்கள் கூடி உபசரிக்க நல்ல சுபலக்கனத்தில் ஒருநாள் முன்னும் பின்னுமாக இரண்டு மாதாகளும் இரண்டு புதல்வரைப் பெறறெடுத்தனர். மைந்தரைக்கண்ட மாதர்க ளிருவரும் பிராக்காதலும் ஆருத்துயரமும் பொங்க அம்புயக்கைகளாலெடுத்தணைத்து அடா சண்மணிகளே! பாண்டிநாடனைத்தையும் ஆள வந்த பாக்கியங்களே! இன்று தினம் திருநல்லூர்ப் பட்டணத்தில் நீங்கள் உதயஞ் செய்திருப்பீர்களேயானல் எத்தனை கோடி பிராமணர்கள் தானம் பெற்றிருப்பார்கள். எத்தனை யாசர்கள் காண வந்திருப்பார்கள். அமுதலிங்கேசர் திருவாலயம் தீபாலங்கார சோதியில் எவ்விதச் சிறப்பையடையும் பட்டணத்துச் சனங்கள் என்ன சந்தோஷங்கொண் டாடுவார்கள். உங்கள் திருமுகங்காணப் பேராவுடன் பெருந்தவமிருந்த தந்தையாரடையும் ஆனந்தத்தை சொல்லியடங்குமா. பாண்டிதேச மனைத்துஞ் சர்க்கரை வழங்குவார்களே! அவ்விதமாகிய பதவி யெல்லாம் பெற்றிருந்தும் இக்கானகத்தில் அந்நிய வேடுவச் சனங்களே வந்து உங்கள் முகம்பார்க்க வுதித்தீர்களே யெனக் கண்ணீர் பொழிய வுருகிப் பரவசமாயினர். அரணியன் மனைவி சிங்கிவள்ளியும் அதே தினத்தில் ஓராண்குழந்தையைப் பெற்றனள். இவ்விசேஷங்கள் தெரிந்த வேடராஜன் அளவில்லாத மகிழ்ச்சி யுடையவனாய் வேடர்களுடன் வந்து குழந்தைகளின் லட்சணங்களைப் பார்த்து ஆனந்தக்கடலி லாழ்ந்தான். வேடப்பெண்கள்கூடி இப்பெண்களைப் பார்த்தால் யாரும் அருவருக்கக்கூடியவர்களா யிருக்கின்றனர். வயிற்றிலுதித்த மைந்தரைப் பார்த்தால் மாணிக்கமயமாய்த் துலங்குகின்றனர். நல்லதுக்குக் கெட்டதும், கெட்டதுக்கு நல்லதும் வாய்க்குமென்பது மெய்யாயிற்றே யென வியந்து பேசி ஆழ்ந்த அன்புடன் அவர்களுக்கான ஊழியங்களைச் செய்து வந்தனர்.

பாலர் பிறந்த விசேஷந்தெரிந்த பரிபூரணானந்த முனிவர் தம்

ஷிஷர்கள் புடைசூழ வேடர் சேரியிலெழுந்தருளி யாயினர். வேடர் கோன் எதிர்சென்றழைத்துவந்து உபசரித்தான். முனிபுங்கவர் அரசபத்தினிக ளிருக்குமிடஞ்சென்று வேடர் பெண்களாற் பாலர்க ளைக் கொண்டுவரச்செய்து அவர்கள் தேசு லட்சணங்களைப்பார்த்து வியந்து மூத்தாள்பெற்ற மைந்தனுக்குச் செயப்பிரகாசனென்றும் இளையாள் பெற்ற மைந்தனுக்கு மதிப்பிரகாசனென்றும் நாமகரண மிட்டு; இக்குழந்தைகளால் மரபு தழைத்தோங்குமென்று மாதர்க ளிடங் கூறும்படி கூறி ஆசீர்வதித்துத் தமதிருப்பிடஞ் சென்றார். வேடன் தன் மகனுக்குக் கிரிசானென்று பேர்வைத்து மூன்று குழ ந்தைகளையும் ஓரேசீராய்ப் பார்த்துவந்தான். வள்ளைக்குழை மாதர் பிள்ளைகளைப்பார்த்து உள்ளம் பூரித்து தாங்கள் வசித்த வெள்ளி மணிமாட முதலியவைகளை மறந்து காதலர்மேற் கண்ணுங் கருத்து மாயிருந்து வந்தனர். பாலர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து நாலுவயது ஐந்துவயது ஆனவுடன் வே டர் சிறுவருடன் நடந்தோடி விளையாடி மழலை மொழிகள் பயின்று உல்லாசமாய் வருவார்கள். அப்படிவரு மைந்தர்களைக் கண்ட மாதர்கள் ஆனந்த பரவசர்களாய் ஆசைக் களஞ்சியங்காள் நெடிய மணிமாடம் நிறைந்த நல்லையம்பதிக் கடைத்தெருவில் சிறு தேருருட்டி விளையாண்டு வருவதைக் காணவும். மெழலைச் சொற் களைக் கேட்கவும் உங்கள் தந்தையார் தவஞ்செய்தும் செய்யா மற் போயினரே யெனக் கூறி யெடுத்தணைத்து முத்திகொடுத்து எப்படியாவது இவர்களால் நமது பதியை அடையலாமென் று ஒருவர்க்கொருவர் பேசியும் வந்திருக்குங்காலத்தில் பரிபூர ணனந்த முனிவர் வந்து மாதரசிகளே மைந்தர்களுக்குக் கல்வி கற் பிப்பதற்குரிய காலமு மிதுவேயென்று மன்னன் பாலர்களைப் பன் னகசாலை கொண்டுபோய்க் கலைவகையெலாங் கற்பித்துப் பத்து வயதுக்குள் அஸ்திர சஸ்திர வித்தைகள், யானை பரிதேரேற்ற முதலியவைகளும் அபூர்வமான போர்த்தொழில்களுங் கற்று வல்ல வர்களாகச்செய்து மங்கையரை வரவழைத்து ஒப்புவித்து உங்களு க்கு நற்காலம் வருஞ்சமயம்பதியிற்போய்ச்சேரலாம் மத்தியிலெண்ண வேண்டாம். வேடர் சேரிபோய்ச் சேருவீர்களென்றனர்.

மங்கையர் மாமுனிவரடி மலர்பணிந்து தங்கள் கருணை கடாட் சம் பூரணமாயிருக்கும்போது எங்கள் பொருளெங்களுக்குக் கிடை யாமற் போகுமாவென்று விடைபெற்று வில்லம்புடனிற்கு மைந்தர் களையு மழைத்துக்கொண்டு வேடர் சேரி சேர்ந்து மிகு மகிழ்ச்சியுட னிருந்தனர்.

இவர்களிப்படியிருக்க முன் வடதிசை சென்ற கோரக்கன் எதி ர்ப்பட்டவர்களை யெல்லாம் வசீகரமான மாதர்களிருவர் இவ்வழி செல்கின்றனரா? பார்த்தீர்களாவென விசாரித்துப் பல விடங்களி லுந் திரிந்து புலன் தோற்றாமல் கொங்கணதேசம் புகுந்து அதிட்ட

புரஞ்சென்று அரண்மனை முதலிய விடங்களிற் பிச்சை யேற்ப வன்போல் திரிந்து விசாரித்து மாதர் வரவில்லையென்பது தெரிந்து தன்னகர் சென்று பலகாலமிருந்து தன் சிநேகன் வீரக்கனைக்கண்டு தான் கீழ்நாடு சென்றதும் பாண்டிநாட்டின் வடமேற்றிசையிலுள்ள ஓர் மலையிற் சாமளரூபி யாலயமும் அடா மந்திரரூபதேவதை யிருப்பும் அதனிடமாயுள்ள ஆயுதம் புதையல்களின் பெருக்கும் அது கேட்டுக்கொண்டபடி கொண்டுவந்த பாண்டிநாட்டுப் பெண்கள் போன மாயமும் அவர்களைத் தேடித்திரிந்து அகப்படாமல் இவடம் வந்ததும் ஆகிய சங்கதிகளைச் சவிஸ்தாரமாய்ச்சொல்லி யெப்படி யாவது அத்தெய்வத்தை வசப்படுத்தி ஆயுதம் பொருள்களைக் கைக் கொள்வோமெனில் இந்நாட்டரசனையுஞ் செயித்து நாமே யரசாக ளாசலாம் உன் கருத்தென்ன வென்றான். அவ்வார்த்தைகளைக் கேட்ட வீரக்கன் பேராசைபொங்க இப்பொழுதே புறப்படுவோ மென்று இருவரும் புறப்பட்டு மலை நாடுகடந்து மகா சைலமென்னு மலைப்பக்கமாயுள்ள சேரி வழி வந்தனர். அங்கு சமரச மகாராஜன் புத்திரர் சாமனுங் காமனும்போல வேடுவச்சிறுவருடன் விளையாடி யிருக்கக்கண்டு திருந்தநோக்கிஇவர்களரசகுமாரர்களைப்போல் விளங் குகின்றனர். இவ்விடம் வரவேண்டிய காரணமென்ன அறிவோமென் றவர்க ளருகிற்சென்று இளங்குமாரர்களே! நீங்கள் யார் புதல்வர். இங்கு வரவேண்டிய தென்னவென்று கேட்டனர். சுந்தரமைந்தா இவர்கள் மகாத்மாவா யிருக்கலாமென்று வணங்கிச் சுவாமிகளே! எங்கள் குலங் கோத்திரம் எங்களுக்குத் தெரியாவிட்டாலும் எங்கள் தாய்மார் சொல்லத்தெரிந்த விபரமட்டும் சொல்லுகிறோம். அதா வது பாண்டிநாட்டிலுள்ள நல்லையம்பதிக்கு நாயகன் சமரச மகா ராஜனுடைய சேனாபதி வீரமார்த்தாண்டன் எங்கள் தந்தையாகும். அவர் சமரசனுடன் சேர்ந்து யுத்தஞ்செய்யப் போய்விட்டபடியால் எங்களன்னையர் மனவெறுப்பா லிவ்விடம் வந்தெங்களைப் பெற்றனர். நாங்கள் வேடர்களுடன் சேர்ந்து வசித்து வருகிறோமென்றனர். காவலன் மைந்தர் கூறிவருங் காரணங்களைக்கேட்ட கபட சந்நியாசி களிருவரும் அவர்க ளன்னையாமேற் சந்தேகமுண்டாகிப் போயறி வோமென்று ராஜகுமாரர் பின்பாக நடந்து மாதர்களைக் கண்டனர். கோரக்கன் இவர்கள் முன்பு சாமளரூபி யாலயத்தில் விடுத்த மாதர் களுக்குக் கொங்கணதேச வழிசொல்லி யங்கிருந்த மங்கையர்கள ல்லவா இவர்கள் முன்பு நம்மிடம் கொங்கண தேசமென்று கூறினர் சிறுவர்கள் வாய்மொழியால் தென்தேசமென் றேற்படுகின்றது. பாலர்கள் லட்சணத்தையும் பத்திரகாளி யாலயத்தி லிவர்களிருந்த இருப்பையும் தன்னுடன் வந்த மாதர் காணமற் போயினதையும் கவனித்தால் பாண்டிநாட்டி லிருந்துவந்த பாவையர்கள் இவர்கள் தான். வடிவத்தைப் பேதப்படுத்திக்கொண்ட விதந் தோற்றவில்லை யென்று மதித்து நின்றனர். மகாத்மாக்களென்று மாதர்களும்

பாலர்களும் பணிந்து உண்ணும் உணவுதந்து உபசரிக்க அவைகளை பெற்று அவ்விடமிருந்து மாதர்கள் ராஜபத்தினிகளாகவும் பாலர்கள் ராஜகுமாரர்களாகவுமிருக்கலாமென்று எண்ணிக்கொண்டனர்.

அரணியனும் சிறிது வேடருடன் வந்து அம்மணிகளே சாமளரூபி யம்மனுக்குப் பொங்கல் விசேஷம் நடத்துந் தினமின்றுதலாற் புறப்படுவீர்களென்றான். மாதர்கள் மகிழ்ந்து மைந்தருடன் புறப்பட்டனர். வேடனும் அதற்குரிய சாமான்களுடனும் வேட கூட்டத்துடனும் பிரயாணமானான். கபட சந்யாசிகளும் இவர்களைக் கொண்டு நமது கருத்தை ஒருவாறு நிறைவேற்றலாமென்று அவர்களுடன் புறப்பட்டனர். வேந்தன் மனைவியரும் வேடன் மனைவியும் மத்தியிற்செல்ல சுற்றி வேடப்பெண்கள் வர வேடக்கூட்டங்கள் அணியணியாய்ப் பக்கங்களில் நடக்க ஜெயப்பிரகாசன் மதிப்பிரகாசன் கிரிசனாகிய அரசிளங் குமாரர்கள் செஞ்சிலைகளேந்திச் சிங்கக் குட்டிகள்போல் முன்னேசெல்ல அளவிறந்த பூசைச் சாமான்களேற்றிய வண்டிகளை இழுத்து இடிபோல் முழங்கி மேக நிரை போல் எருமைக் கடாக்கள் செல்ல நாயினங்கள் சுற்ற மதுக்களையருந்தி வேட கூட்டங்கள் ஆடிப்பாடிவர திசைகளெல்லாஞ் செவிடுபடும்படி வேடுவப்பறை முழங்க சாமளரூபி யாலயத்தை யடைந்தனர்.

சென்றவர்களெல்லாம் அம்மனுக்கும் மற்றுந் தேவதைகளுக்கும் உரிய பொங்கல் பூசைகளை நடத்திக்கொண்டிருக்க கோரக்கனும் வீரக்கனும் அடா மந்திரரூப தேவதை முன்வணங்கி கருங்கச்சைக்காரா கறுக்கருவாட் கையா, அடங்காமுனியா, அடா மந்திரரூபா வெனத் துதித்து ஓர் முகூர்த்தகாலம் உருச்செபித்தனர். அத்தெய்வம் அவர்கள்முன் பிரசன்னமாய் ஓ! மாந்திரவாதிகளே! என்னை எதற்காக அழைத்தீர்களென்றது. பலையாளிகள் ஓ! வல்லமைதங்கிய தெய்வமே! எங்களுக்கு உம்மிடமாயுள்ள ஆயுதம் பொருள்களைத் தந்தருள வேண்டுமென்றனர். தெய்வம் அப்பா! கோரக்கா! நான் முன்பு உன்னிடங் கேட்டிருந்த பலியைக்கொடுத்து என்னிடமாயுள்ளவைகளை யெடுத்துப் போவீர்களென்றது. இவர்கள் கேட்ட பலி கிடைத்துந் தவறிப் பலதேசந் திரிந்தும் அகப்படவில்லை. ஆதலால் அதனை மாற்றி வேறு பலி கேட்டால் தருகிறோமென்றனர். வீரத்தெய்வம் முன்சொல்லிய பெண்பலி கிடைபாவிட்டால் ஆண் பலி யொன்று கொடுக்கவேண்டும். அஃதெப்படி யென்றால், என் பலிபீடத்திற்குமுன் அக்கினிகுண்டமமைத்து அரசகோத்திரம் அல்லது ரிஷிகோத்திரமாகிய ஓர் ஆடவனை வெட்டி யுதிரத்தை அக்குண்டலத்தில் விட்டால் உதிரத்தை யுட்கொண்டு என்னிடமாயுள்ள பொருள்களையுந் தந்து உங்கள் ஏவல் முறையில் நிற்பேனென்று-சொல்லி மறைந்தது. கோரக்கன் வீரக்கனை நோக்கி, இத்தெய்வங் கேட்டபடி பலிகொடுப்பதற் குரியவன் ராஜகுமாரனே

யன்றி வேறில்லை. நாமெண்ணியதும் அதுவே இவ்விடம் வந்ததுவும் நம்மதிர்ஷ்டமேயென மகிழ்ந்து பேசி வேடர் தலைவனிடம் வந்து புளிஞர் வேந்தனே தெய்வ கைங்கரிய விஷயமாயொன்று கேட்கிறோம். அனுகூலமாகும்படி செய்யவேண்டுமென்றனர். அரணியன் சுவாமிகளே! அடியேன் செய்யவேண்டிய ஊழியம் என்ன தெரியப் படுத்தினாற் செய்கிறேனென்றான், மாய வேடக்காரர் சாமளரூபி யம்மனுக்குத் தேனபிஷேக பூசை முதலியவைகள் இன்றிரவு செய்ய வேண்டியிருப்பதால் ஏவற் பணிவிடைகள் செய்வதற்குச் சேனாதி பதியின் புதல்வர்களை யிருக்கச்சொல்லவேண்டும். பூசை காரியங் களை முடித்துக் காலையிற் சேரி கொண்டுவந்து சேர்க்கிறோமென்றனர். அரணியன் சற்று யோசித்து பாலர்களைவிட்டு நீங்க மாதர்கள் சம்மதிப்பார்களாவென்று மௌனமா யிருந்தனன். வீரியமைந்தர் அவர்கள் கூறிய வார்த்தையைக் கேட்டு எங்கள் பிதாவைப்போன்ற வேடராஜனே யோசிக்கவேண்டாம் நாங்கள் இவர்களிடமிருந்து அம்மன் பூசைக்குரிய பணிவிடை புரிந்து காலையில் வந்து சேருகிறோம். நீங்கள் சேரி செல்லுங்களென்றனர். மைந்தர் வார்த்தையைக்கேட்ட மாதாக்கள் மனம்பதறி அடா கண்மணிகளே! இவர்களிடம் உங்களை விட்டுப்போக மனஞ் சகிக்குமாவென்று சந்யாசிகளைப்பார்த்து ஆ! ஆ! இவர்கள் பாலரைக்கேட்பது ஆதியில் நம்மை மோசம்பண்ண வெண்ணியதைப்போலல்லவா தோன்றுகின்றது. ஒருவன் நம்மைக் கூட்டி வந்தவன்போல் தோன்றுகின்றான். செய்யப்போகிற வேலையும் அப்படித்தானிருக்கிறது. நமக்கேன் இந்தத் தொல்லையென்று சுவாமிகளே எங்கள் மைந்தர்கள் பணிவிடை ஊழியங்கள் செய்யமாட்டார்கள். செய்கிறோமென்று சொன்னாலும் நாங்கள் விட்டுப் போகமாட்டோமென்று கூறினர். அம்மொழியைக் கேட்ட மைந்தர்கள் அன்னையரே! அஞ்சவேண்டாம். இவர்களோ மகா சாதுக்கள். இவர்களுக்கு ஊழியஞ் செய்வதைவிட வேறு தவமொன்றிருக்கிறதா? சகலவித்தை புத்தகமெல்லாங் கற்று மேன்மையானது இவர்களி லொருவராகிய பரிபூரணானந்த முனிவரால்லலவோ அவரைப்போன்ற இவர்களாசீர்வாத பலனும் புவனேஸ்வரியருட்பிரசாத மகிமையும்பெற்று காலையில் உங்களை வந்து காண்கிறோமென்றனர். பொல்லாதவர்களும் ஓ புண்ணியவதிகளே! நாங்கள் மூவாசையை யொழித்து மேலான தெய்வவருளை நாடியிருக்கிறோம். எங்களால் உங்கள் மைந்தருக்கு என்ன தீங்கு நேரிடும். ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம். பாலர்களை நாளைக் கொண்டுவந்து ஒப்பித்து விடுகிறோமென்றனர். அரணியனும் அம்மணிகளே! ஏன் யோசிக்கிறீர்கள். நமது மைந்தர்கள் பெரியோர்களுக்குப் பணிவிடை புரிந்துவரின் நன்மையே அல்லாமல் தீமை யுண்டாமோவென்று செப்பினான். வேடன் கூறியதையும் வீர மைந்தரியம்பியதையும் கேட்ட மீனவன் பத்தினிகள் வேதநாயகி சந்நிதியிற்சென்று

விமலானந்த சுரூபி அன்று எங்களைக் காத்ததுபோல் இன்று எங்கள் மக்களைக் காப்பதும் உன் கடமை. அவர்கள் உனக்கடைக்கலமென்று இருகரங் குவித்து வணங்கினர். வேடன் செய்வதையெல்லாஞ் செய்து முடித்துப் புறப்பட்டான். பாலகரிருவரும் தாய்மாரையும் வேடனையும் வணங்கிச் சேரி செல்வீர்களென்று செப்பிச் சந்யாசிகளிடம் சார்ந்திருந்தனர். தாய்மார் உயிரைவிட்டு உடல்கள் செய்வதுபோல் வேடர்களுடன் சேர்ந்து அரணியசேரி சென்றிருந்தனர்.

திருவாலயத்திற் பாரமுடிவேந்தன் பாலருடனிருந்த கோரக்கன் வீரக்கனைநோக்கி நீங்கள் மூவரும் இவ்விடமிருப்பீர்களேயானால் நான் போய் அதேசவிருக்குந் தெய்வத்துக்குச் செய்யும் பூசைகளைச் செய்து வருகிறேன். அதற்குள் சூரியனஸ்தமாய்விடும். பின்பு சாமளரூபிக்குச் செம்பவேண்டிய தேவதா பூசையைச் செய்வோமென்றான். வீரக்கன் அப்படியே செய்து வருவீரென்றான். கோரக்கன் அடா மந்திரரூப தேவதை முன்போய் முறைப்படி சகல காரியங்களையுஞ் செய்துகொண்டிருந்தான். வீரக்கனும் வேந்தன் புதல்வர்களும் ஆலய முன்பாக இருந்த சமயம் கபடன் சற்றே அயர்ந்து நித்திரை போனான் அரசன் மைந்தரெழுந்து அங்கு உலவி அகிலாண்டவீஸ்வரியாலய உட்பிரகாரங்களைச் சுற்றி யாங்குள்ள விநோதங்களைப் பார்த்து கீழ்புறஞ்சென்று தென்புறந்திரும்பி நிருதி மூலையில் வந்தனர். அங்கு மாணிக்கப் பதுமையொன்று மகா வுன்னத அலங்காரமாயிருக்க அதன் லட்சணத்தைப் பார்த்து இதுபோல் எங்கு மிருக்கமாட்டாதென்று பேசிக்கொண்டு நின்றனர். பதுமை கலகலவென்று சிரித்தது. சிரித்த பதுமையைப் பார்த்துச் செகவேந்தன் புதல்வர் வியப்படைந்து, பதுமையே! நீ உயிரற்ற கல்லாற் சமைந்திருந்தும் உயிருள்ள மனிதரைப்போல் எங்களைப்பார்த்து நகைக்கவேண்டிய காரணமென்னவென்று கேட்டனர் பதுமை பகருகிறதாவது சிறுவர்களே நீங்கள் ஓர் வீரியன் மைந்தராயிருந்தும் உங்களைக் கொல்லத் துணிந்த வஞ்சகர் செயலைக் கண்டறியமாட்டாமல் தலைக்குவரும் வெட்டை யறியாமற் பூசாரி தோள் மாலையைக்கண்டு மகிழும் ஆட்டுக்குட்டிகள்போ லிருக்கிறீர்களே. அந்தப் புன்மையான மதியை யெண்ணிச் சிரித்தேனென்றது. இவ் விபரீத வார்த்தையைக்கேட்ட செல்வ ரிருவருந் திகைத்து சந்யாசிகள் நம்மைச் சதிசெய்ய வெண்ணியதாய்த் தெரிகின்றதென மதித்து பதுமையை நோக்கி எங்களை யாதரிக்கவல்ல பதுமையே! எங்களுக்கிவ்விடத்திலென்ன விபத்து நேரப்போகின்றது. அதைச் செய்பவர் யார்? அதனைச் சொல்லவேண்டுமென்று வணங்கிக் கேட்க சாமளரூபி யருளாற் பேசப்பட்ட தனிப்பாதுமை மணிவாய் திறந்து சொல்லத் தொடங்கியது. இளங்கன்று பயமறியாதென்னும் பழமொழிப்படி யின்றூர் வார்த்தைகளையுங் கேளாம லிங்கிருக்

கும் ராஜகுமாரர்களே! உங்களைத்தேவிபணிவிடைக்கென்று இவ்விட மிருக்கச்செய்தவர்களில் ஒருவன்பெயர் கோரக்கன் ஒருவன் பெயர் வீரக்கன். மலையாளதேசத்தி லுள்ளவர். அதர்வணவேதத்திற் கூறியபடி மாந்தரீகத்தொழில் நடத்திவரப்பட்டவர். கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையுங் கற்றவர் அவர்களில் கோரக்கன் சிலகாலத்திற்கு முன் இவ்விடம் வந்து இவ்வாலயத்திற்கு ஈசானியதிசையிலிருக்கும் அடா மந்திரரூபதேவதையிடஞ் சென்று அதையும் வசப்படுத்தி அதனிடமாயுள்ள ஆயுதம் பொருள்களையுங் கைவசப்படுத்த அது கேட்டுக்கொண்டபடி தலைச்சூலாயுள்ள ஓர் பெண் பலிகொடுக்கநிச்சயித்து உலகெலாந் தேடித்திரிந்து ஊர்விட்டுவந்த உங்கள் தாய்மாரைப் பலிகொடுக்கவெண்ணியதில்! சாமளரூபியருளாற்றப்பி வேடசேரி சென்று உங்களைப் பெற்றனர். கோரக்கன் மலையாளஞ்சென்று வீரக்கனையுங் கொண்டுவந்து உங்களிலொருவனைப் பலிகொடுக்க முயற்சி செய்து ஓமகுண்டமும் வளர்த்துவருகிறான் கோரக்கன் உங்களில் மூத்தவன் சிரசை வெட்டி உடலை யந்தரத்திலெறியவும், வீரக்கன் பருந்துடலிற்புகுந்து வானத்திற்பறந்து பிடித்து உதிரத்தை யோமகுண்டத்தில் வீழும்படிசெய்யவும், எண்ணியிருக்கின்றனர். நீவிர் வல்லவர்களானல் தப்பித்துக்கொள்வீர்களென்று சொல்லி பதுமை வாயை மூடிக்கொண்டது.

செம்பதுமை கூறிய வாக்கியங்களைக் கேட்ட செயப்பிரகாசன் இருவிழிசிவந்து பல்லை நறநறவென்று கடித்து சீற்றமுடையவனாய்த் தம்பியை நோக்கி தம்பி பார்த்தாயா பாதகர்செயலை இவர்களெண்ணம் தெரிந்தல்லவா; நமதன்னையர் இவர்களிடம் நாமிருக்கக்கூடாதென்று கூறினர் இதோபோய் அவர்களிருவரையும் மந்திரவாளால் வெட்டி யெறிவோம் புறப்படுவாயென்றான். தம்பியானவன் அண்ணா சற்றே பொறுப்பீர்கள் அவர்கள் மாயா தொழிற்காரரென்றும் கூடுவிட்டுக் கூடுபாயப்பட்டவர்களென்றும் பதுமை சொல்லத்தெரிகிறது. எதிர்த்தோமானற் பின்னம் வந்தாலும் வரும். அதற்கான யுக்திசொல்லுகிறேன். அதாவது ஓமகுண்டம் வளர்க்கிற கோரக்கன் வந்தழைப்பான். நான் திரேக சவுக்கியமில்லை யென்று இருந்து கொள்கின்றேன். தேவரீர் அக்கினிகுண்டம் முன்போய் நிற்கவேண்டும். அதுசமயம் நான் இங்குள்ள ஓர் பெரும்பறவை மேற்கொண்டு அந்தரத்தினின்று ஒந்தியொன்றை யவன்பக்கத்தில் எறிவேன் அவன் திரும்பிப் பார்க்குஞ்சமயம், சிரசை ஒரே வெட்டாய் வெட்டி உடலை அந்தரத்திலெறிந்தால் நான் தலைகீழாய்ப் பிடித்து உதிரத்தை விடுகிறேன். மற்றவன் சீறுவானேயானற் பார்த்துக்கொள்வோ மென்று கூறினன். தம்பி கூறிய யுக்திவார்த்தையைக்கேட்ட தரணிகாவலன் தலையை யசைத்து அப்படியே செய்வோமென்று

மாதேவியை வணங்கி ஆலயவெளியில் வந்தனர். ஒரு கழுகு வானத்திற்பறந்துபோகக்கண்டு மதிப்பிரகாசன் பாசக்கணையை ஏவி அதனைத் தன்னிடங் கொண்டுவரும்படிச் செய்து கட்டிய கட்டுடன் ஓரிடத்தில் வைத்துவிட்டு வீரக்கனிடம் வந்தனர். அவன் நித்திரை தீர்ந்து நீங்கள் எங்குபோய் வருகிறீர்களென்றான். நாங்கள் அம்மன் தெரிசனஞ் செய்து வருகிறோமென்று செப்பியிருக்குமளவில்வானெலாம் பரவிய ஜோதிச்சுடரோன் பாதகரெண்ணத்தைக் கண்டு பயந்து போனவன்போல் மேற்றிசைக் கடலிலாழ்ந்தான். மாலையானவுடன் கோரக்கன் அட்டாமந்திரரூபதேவதை முன்செய்யவேண்டியமுறைகளையெல்லாஞ்செய்து இவர்களிடம் வந்து வாருங்கள் அட்டா மந்திரரூப தேவதையை வணங்கிச் சாமளரூபியாலயம் வருவோ மென்றனன். மதிப்பிரகாசன் உடம்புக்குச் சவுக்கியமில்லை. மூவரும்போய் அத்தேவதைக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்துவருவீர்களேயானால் அம்மனுக்கான பணிவிடையில் நின்றுகொள்கிறேனென்றான் செயப்பிரகாசனும், நம்பியிருந்தாலிருக்கட்டும். நான் வருகிறேனென்றெழுந்தான். பாதகரிருவருஞ் சம்மதித்துச் செயப்பிரகாசனை யழைத்துச்சென்றனர். அவன் அவர்களுடன் சென்றுபார்க்க அட்டாமந்திரரூபதேவதை யிருக்கிறகோரமும், குண்டத்தில் அக்கினியெரியும் விநோதமும் கும்பமுதலியவைகளிருக்குங்காட்சியும் அரிவாள் சாத்தியிருக்கிற நேர்த்தியுங்கண்டு தீர்க்க மனமுடையவனாய் நிற்க. கோரக்கன் சேனைபதி குமாரனே உன் ஆயுதங்களை யெல்லாங் கழற்றிவைத்துவிட்டு கரண்டியால் நெய்யை அள்ளி அக்கினியில் விட்டுக்கொண்டிருப்பாயென்றான். மன்னன் மகனுந் தன்னாயுதங்களைக் கழற்றி யருகில்வைத்து நெருப்பில் நெய்யை விட்டுக்கொண்டு எச்சரிக்கையாய் நின்றான். வீரக்கனும் முன்னமே ஆயத்தப்படுத்திய பருந்தினுடலைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு தீயிற் சமித்துகளைப் போட்டுக்கொண்டிருந்தான். மதிப்பிரகாசனும் தான் கட்டுப்படுத்திவைத்திருந்த பறவையை தன் மனப்படி அந்தரத்தில் நேரோடவும், வட்டமிடவும் வசஞ்செய்து ஒந்தியொன்றைக் கரத்திற்கொண்டு அதன்மேலமர்ந்து அந்தரத்திலுலாவினான். அது சமயம் கோரக்கன், வீரக்கனுக்கு சைகைசெய்ய அவன் பருந்தினுடலிற் றன்னுயிரைப்புகச்செய்து வானத்திலெழுந்தான் பருந்து வருங் குறிப்புத் தெரிந்த பாரரசன் திருமகன் பச்சோந்தியைப் பாதகன் பக்கத்தில் விழும்படி யெறிந்தான் அவன் இதென்ன விழுந்ததென்று திரும்புகையில் செயப்பிரகாசன் சாத்திய வாளையெடுத்து அவன்சிரசை வெட்டி யுடலை அந்தரத்திலெறிந்தான் கழுகின்மேலுலவுமிளையவன் தாவிப்பிடித்து தலைகீழாய் உதிரமெல்லாம் அக்கினியில் விழும்படிச்செய்தான். பருந்தாய்ப் பறந்த வீரக்கன் கழுகைவந்து தாக்க. மதிப்பிரகாசன வலக்கரத்திற் பிடித்த உடலை இடக்கரத்திற்பிடித்து வாளாற் பருந்தினுடலைத் துணித்தான். பருந்தினுடல்

கூருகித் தீயில் விழுந்தபோது வீரக்கன் தன்னுடலிற் பாய்ந்தெழு ந்துபார்க்க மாண்டவன் சிநேகன். நின்றவன் ராஜகுமாரனுயிருக்கக் கண்டு வானத்திற் கழுகின்மேலுலவுபவன் இளையவனுயிருக்கலா மென மதித்து இவனையுங்கொன்று, அவனையுங்கொன்று பொரு ளெலாம் நாமே கொள்வோமென்று செயப்பிரகாசன் கரத்திலிருக் கும் வாளைப் பறிக்கவந்தான் செயப்பிரகாசன் அவனையும் ஒரே வெட்டா யிரண்டுதுண்டாக வெட்டி அக்கினிகுண்டத்திலிட்டான் மதிப்பிரகாசனும் உதிரமெல்லாம் வடிந்ததின்பின் கோரக்கனுடலைக் குண்டத்திலிட்டு ககனத்திலிருந்து கழுகைவிட்டுக் கீழே குதித் துத் தமையனை வணங்கிநின்ருன். கடியவரிருவரும் காலமுடிவா னமையால் வேறுடலிற் பாய்ந்தெழுவதற்கின்றிக் காலபட்டணம் போய்க் கண்டார்கள். செயப்பிரகாசன் பாதகர் செய்யத்துணிந்த பாதகச் செயலையும் அப்பாதகங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற தெய் வத்தின் குரூரவச்செயலையுஞ் சித்தத்திலெண்ணி மனம் வெம்பி ஓமாக்கினியைப் பார்க்கிலும் கோபாக்கினி கொழுந்துவிட்டெரியச் சிறநகை செய்து, அடா தம்பி, பார்த்தாயா! அடாமந்திரரூபதேவ தை அடாதசெயலை பொருளாசைக்காரபுல்லர் ஒன்றுசெய்ய நினைத் தால் இத்தெய்வம் அப்பொல்லாத காரியத்துக்குடன்படலாமா ஜீவ காருண்யமற்றதையும் தெய்வமென்று சொல்லலாமா? இப்படியே இது நரபலியை ஏற்குமானல் என்ன அக்கிரமம் நமதன்னையரையும் அம்மாந்தரீகர் மோசப்படுத்த வெண்ணியதாகவும், இத்தெய்வம் அம்மோசத்தை யுகந்ததாகவும் பதுமைசொல்லக் கேள்விப்பட்டோ மல்லவா? இதோபார் என் கைக்கணையால் பலிபீடங்களையெல்லாம் பேர்த்துக் கடலிற்போடுகின்றேன். இதன் நிலையமாகிய கோரவிக்கிர கத்தையும் ஆயிரஞ் சுக்கலாயுடைக்கிறேன் சூட்சமரூபத்துடன் எந்த உலகங்களிற் போய்ப் பதுங்கினுலும் போய்ப் பிடிக்கும்படி மந்திராஸ்திரம் தொடுக்கிறேன் பாரென்று வரிவெஞ்சிலைதாங்கி அம் பறாத்தூணி முதுகிலணிந்து அடங்காத கோபத்துடன் வில்லை வளைக்க ஆரம்பிக்குங் காலையில் அடாமந்திரரூபதேவதைப் பார்த்து அங்கம் நடுங்கி ஆகா இவர்கள் பராசத்தியருளும் பரிபூரணனந்த முனிவர் ஆசீர்வாதபெலமும் பெற்றவர்கள். நினைத்தபடி முடிப் பார்களென்று மானிடரூபமாய் ராஜகுமாரன் முன்பாகவந்து நின்று சத்தியவானே கோபியாதே! தனிவீரனே கோபியாதே! மெஞ்ஞா னச் சோதிச்சுடராய் விளங்கிய முனிபுங்கவரருளிய மந்திரவல்லமை க்குமுன் அற்பப் பேயினமாகிய நாங்களெதிரிற்போமா? உன் அஸ் திர வல்லமையைத் தாங்க எனக்குச்சக்தியுண்டுமா? கெடுவான் கேடு நினைப்பானென்னு மொழிப்படி உங்களுக்குத் தீங்குநினைத்த அவர் களே மாண்டுபோனர்கள். அவர்களுதிர பெலியையும் உகந்து கொண்டேன். என்னிடமாயுள்ள ஆயுதம் பொருள்களை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் இதுமுதல், நரபெலியையும் நிறுத்திக்

கொண்டேனென்று வேண்டும்போது சாமளரூபியுங் கோமளமாகிய கோலந்தலங்ச்சிங்கவாகனத்திற் பார்வேந்தன் பாலர்முன் பிரசன்னமானாள். பச்சைமரகதகோலமாயெழுந்த அகிலரக்ஷணியை ஆனந்தரூபியை, அங்கயற்கண்ணியைக் கண்ட காவலன்புதல்வர் ஆனந்தக்கண்ணீர்பாயச்சரணாரவிந்தங்களிற் சாஷ்டாங்கமாய் விழுந்தெழுந்து பலவாறு துதித்தனர். பரமநாயகி! பாலர்களைப் பக்ஷமாய்ப் பார்த்தருளி, அடாமந்திரரூபதேவதையைக் கோபியாதீர்கள் வேண்டிய வரமுடன் சர்வாயுதங்களையுந் தருகிறேனென்று அடாமந்திரரூபதேவதையாற் புதையலாயுதங்களைக் கொண்டுவரும்படிச்செய்து வில், அம்பு, வாள், வேல் முதலியவைகளும் தேவாஸ்திரங்களும், வச்சிரக்கவசமும் கரங்களாலெடுத்து வாழ்த்திக்கொடுத்து இவ்வகிலலோகங்களில் வாழ்ந்துவரும் அரக்கர், அசுரர், அமரர், அரசர் முதலிய யாவரும் உங்கள் பாணங்களுக்கு முன்னிற்க மாட்டார்கள். சுகமே உங்கள் தாய்மாரிடஞ் சேருங்களென்று அருளிச்செய்து சராசரங்களைத் தந்த பராசத்தி மறைந்தருளினாள். பொருளனைத்தையும் இஷ்டப்படி எடுத்துக்கொள்வீர்களென்று கொண்டுவந்து குவித்து அடாமந்திரரூபதேவதையும். மற்றத்தேவதைகளும் மறைந்தன.

சந்திரகுல வள்ளல்கள் சந்தோஷமுடையவர்களாய்த் தயாபரி தந்தருளிய சர்வாயுதங்களையுந்தரித்து அணிவர்க்கமணிந்து செங்கதிரோனுதயத்திற் சேரிசேர்ந்து தியங்கியிருந்த தாய்மார்கள் சேவடியிற் பணிந்தனர். வரப்பிரசாதத்துடன் வந்துபணிந்த மைந்தரை வாரியெடுத்து உச்சிமுகந்து உத்தமர்களே வந்து சேர்ந்தீர்களா? புதிய ஆயுதங்கள்பூண்டு திவ்யகோலமாய் வந்திருக்கிறீர்களே? அங்கு நடந்த காரியமென்னவென்று கேட்டுக்கொண்டிருக்க வேடர் தலைவனும்வந்தான். அவனையும் பணிந்து இராத்திரி நடந்தவிர்த்தாந்தங்களையெல்லா மெடுத்துக்கூற. மன்னவன் பத்தினிகளும் வனவேடர்கூட்டங்களும், அளவில்லாததுன்பமும்இன்பமுமுடையவர்களாய் எருமைக் கடாக்கள் பூட்டிய சகடவண்டிகளிற் புதையற் பொருள்களை யேற்றி சேரியிற் கொண்டுவந்து குவித்து நம்மைப்போற் செல்வர்கள் யாவரெனப் பூரித்திருந்தனர். கமலசவுந்தரியுங் கனகவல்லியுங் கலந்து பேசிச் சரியான துணைசேகரந் தெரிந்து பாண்டிநாட்டுச் சங்கதியைப் பகருவோமென்று மைந்தர் முகம் பார்த்து மகிழ்ந்திருந்தனர்.

முதல் அத்தியாயம் முற்றிற்று

இரண்டாம் அத்தியாயம்

அரணிய சேரியில் அரசபுத்திரர் வேடர் புத்திரருடன் சேர்ந்து வேட்டையாடித் திரிந்தும் கிரிசரனுடன் இணைபிரியாமலிருந்தும் அரணியனைத் தந்தைபோற் பாவித்தும் அன்னையர் சொற்படி கேட்டும் வளர்ந்து வருங்காலத்தில் ஒருநாள் ஐந்துபேர் வெள்ளித்தடி பிடித்துக் கூரான ஆயுதங்கள் தாங்கி இளைப்புடையவர்களாய் அரணிய சேரி வந்து அரணியனைக் கண்டனர். அவன் நீங்கள் யார்? இவ்விடம் வந்ததென்னவென்று கேட்க, வந்தவர்கள் ஐயா நாங்கள் வடதேசம். எங்கள் மன்னனாட்டில் கோடாகோடி மிருகக் கூட்டங்கள் கூடிப் பயிர்ப்புலங்களை யழித்துவிடுகின்றன. அவைகளை வதைப்பதற்கு மலைகளில் வசிக்கும் வேடர்களை யழைக்கும்படி பல விடங்களிலும் வேவுகாரர் சென்றிருக்கின்றனர், நாங்களும் நீங்களிருக்கும் புலன் தெரிந்து அழைக்கவந்தோமென்றனர். தூதர் வார்த்தையைக் கேட்ட வேட கூட்டங்கள் ஆனந்தங்கொண்டு அளவிறந்த மிருகவேட்டை வாய்க்குமென்று தலைவன் மொழியை எதிர்பார்த்து நின்றனர். அரணியனும் நாங்கள் வருகின்றோமென்று கூறி வேட்டையாட எல்லாரும் புறப்படுவீர்களென்றான். வேடர்களெல்லாம் பிரயாண மாயினர். மன்னன் புதல்வர் மாதாக்களை வணங்கி வேடருடன் சென்று வேட்டையாடிவர விடை யருளவேண்டுமென்றனர். பணிந்த மைந்தரின் துணிந்த வார்த்தையைக் கேட்ட அன்னையர் வேடருடன் சேர்ந்து வேட்டையாடிவந்து சேருவீர்களென்று விடை கொடுத்தனர். இவர்களும் பிரயாணமாயினர். வனவேடரும் மன்னன் மைந்தருந் தங்கள் தங்கள் ஆயுதங்களைத் தாங்கி நாயினங்களும் ஆயுதம் வலைகளேற்றிய வண்டில்களும் எங்கணும் பரவ மேக கர்ச்சிதம்போல் வேட்டுவப்பறை முழங்க விருதுக் கொடிகள் நிறைய தாங்கள் வேட்டைக்குப் புறப்பட்டுவிட்ட செய்தியைச் சகல தேசங்களுக்குந் தெரிவிப்பதுபோல் வாங்கா கொம்பு முதலியவைகள் சப்திக்க இராசதூதர் பின் சென்றனர். சிலை விஜயனுடன் போர்புரிந்து விளையாடச் செல்லுஞ் சிவ வேடனைப்போல் அரணியன் செல்ல வானரங்கள் மத்தியிற் செல்லும் ஸ்ரீ ராமலட்சுமணர்களைப்போல் ராஜகுமாரர் செல்ல தங்குமிடங்களிற்றங்கி இரண்டுநாள் கடந்து அதிட்டபுரங் கண்டனர். முன்னோடிச் சொல்லிய தூதர் சொல்லால் வேடர் வரவு தெரிந்த கொங்கண ராஜனும் மந்திரி பிரதானிகளுடன் கோட்டை வெளிப்புறம் வந்திருந்தான். மற்ற வேடர்களும் வந்து நிறைந்தனர். தலைமையான வேடரெல்லாம் போய் அரசனைக்கண்டு வணங்கினர். அமுதகுலோத்துங்கன் அவர்களைநோக்கி வேடர் தலைவர்களே நமது நாட்டின் வடதிசையாயுள்ள தண்டகாரண்ய வனத்திலுள்ள மிருகக் கூட்டங்கள் நாட்டிற்

புகுந்து விளை புலங்களை நாசப்படுத்தி விடுகின்றன. நாம் பலதரஞ் சென்று வேட்டையாடியும் அழிவுபடாமல் படைவீரர்களைக் கொன்றழித்து விடுகின்றன. ஆகையால் உங்களை யழைத்தேனென்ருன். வேடர்கள் மண்டலாதிபதி நாங்கள் நாளையே சென்று விலங்கினங்களை வேரோடழித்து விடுகின்ருேமென்றனர். அரசன் வந்தவர்களுக்கெல்லா உண்டி முதலியனவைகள் விசாரிக்கும்படி காரியஸ்தர்களை நியமித்து அரண்மனை சென்ருன். மன்னன் மைந்தரும் வேடர்களுடன் உணவாதிகளுண்டு துயின்றனர். மறுநாள் அரசனுத்தரவால் சகலரும் வடதிசை நோக்கி யெழுந்தனர். அமுத குலோத்துங்கனும் புதல்வனுடன் பொற்றேரேறிச் சேனைகள் சூழப் புறப்பட்டனன்

வேடர்படைகளும் வேந்தர் படைகளுங் கலந்து தென்கடல் பொங்கி வடகடல்மேற் போர் செய்யப்போவதுபோல் நாடு கடந்து காடு கண்டன. அங்குள்ள மிருகங்களை வேட கூட்டங்கள் கொன்று சுட்டுத் தின்று தண்டகாரணியஞ் சென்றனர். விரிந்து குவிந்து நெருங்கிவந்த வேட கூட்டங்களைக் கண்ட விலங்கினங்கள் அணியணியா யெழுந்தன. கொங்கணராஜன் வேடர்களை வேட்டையாடும்படி யேவி ஓர் சோலையிலிருந்தான். அறிஞன் தேயத்தரசன் மைந்தரும் அச்சோலையி லொருபுறமிருந்தனர். அரணியன் மகன் கிரிசரனும் அமுதகுலோத்துங்கன் மகன் பாகாங்கனும் அவர்களுடனின்றனர். வேடகூட்டங்கள் நாலா திசைகளிலும் பரவி வலைகளைப் பரப்பியும் ஆயுதங்களை எறிந்தும்அம்பினங்களை யேவியும்வேட்டையாட. விலங்கினங்கள் மீறிப் பரப்பிய வலைகளைப்பீறி எவிய அம்பாயுதங்களைச் சட்டை பண்ணுமல் பாய்ந்து வதைக்க வேட கூட்டங்கள் பின்னிடைந்தன. பலாட்டியரான வேடர்கள் பாலா முதலிய ஆயுதங்களால் குத்தியும் வெட்டியுஞ் சில மிருகங்களை மாய்க்க பெரிய மிருகங்களாகிய யானை, புலி, சிங்கம், பன்றி முதலியவைகள் மூர்க்கமுடையவர்களாய் அநேக வேடர்களை மாய்த்துவிட்டன. அதனல் வேட கூட்டங் களஞ்சி வேந்தனிருக்குமிட மோடிவந்து மகாராஜப்பிரபூ இவ்வனத்திலுள்ள விலங்கினங்களை வேட்டையாடிக் கொல்ல எங்களால் முடியாது. அநேகர் மடிந்துபோயினர். எங்கள் பெண்ஜாதி பிள்ளைகள் முகத்தில் விழிக்க விடை யருள வேண்டுமென்றனர். கொங்கநாடன் அவர்கள் கூறிய வார்த்தையால் வாட்டமடைந்து இவ்வளவு வேட கூட்டங்களால் விலங்கினங்கள் அழிக்கப்படாமற போகுமேயாயின் நம் நாடு என்ன கதியாகிறதென்று பதிலுரை பேசாதிருந்தான். அரணியன் அரசனுளக் குறிப்பைத் தெரிந்து மகாராஜனே எங்களிடம் இருவீரர்களிருக்கின்றனர். அவர்களா லிம்மிருகங்கள் அழிவு படுமென்ருன். அரசன் அவர்களை யழைத்துவா வென்ருன். அரணியன் ஒருவனைவிட்டழைக்கக் கொங்கநாடனை கொற்கைத்துறையான் குமரர் சென்று

கண்டனர். வந்து நிற்கும் ராஜகுமாரர்களின் வடிவ லட்சணங்களைக்கண்டு இவர்களோர் மன்னன் மைந்தர்களாகும் வேட்டையாடி வந்தபின் விசாரித்துக் கொள்வோமென்று துணிவாய் வில்லேந்தி நிற்குஞ் சுந்தரர்களே! உங்களால் இங்குள்ள விலங்கினங்களைத் தொலைக்க முடியுமா வென்றான். அரசன் குமரர் வணங்கி அரசர் பெருமானே நாங்கள்மட்டுந் தனியே போகும்படி உத்தரவு கொடுக்கிறதாயிருந்தால் இவ்வனத்திலுள்ள கொடிய மிருகங்களை யெல்லாம் நிர்மூலஞ் செய்து விடுகிறோமென்றனர். அரசன் அவர்கள் சொற்சாதுரியங்களைக்கண்டு மகிழ்ந்து அப்படியே செய்து வாருங்களென்று விடைகொடுத்தான். அரசன் மகனும், வேடன் மகனும், சாங்கனும் போய் விலங்கினங்களை யழித்து வருகின்றோமென்று தம் தம் தந்தையிடம் விடைபெற்று ராஜகுமாரர் பக்கம் நின்றனர். நான்கு பேர்தவிர மற்றவர்களெல்லாம் தம் தம் இருப்பிடம் போகலாமென்று கூறி அரசன் சேனைகளுடன் பட்டினம் வந்து சேர்ந்தான். வேடர்களும் தம் தம் சேரி சென்றனர்.

தீரவீரராகிய தென்னர் கோன்திருமைந்தரும் கொக்கண குமரனும் வேடன் மைந்தனும் வரிவெஞ்சிலைதாங்கி வடதிசை நடக்கும்போது ஆங்காங்குள்ள மிருகக்கூட்டங்கள் அளவில்லாமல் திரண்டு வந்தன. சதுர்வீரர்களுந் தனுக்களை வளைத்துச் சரமாரி பெய்து அவைகளைக் கண்டங்களாக்கி மேல்நடந்து கண்ட மிருகங்களை வால்களைப் பிடித்தடித்தும் கரகரவென்று சுழற்றியும் வானத்திலெறிந்தும் அவைகள் கத்திக்கொண்டு ஆகாயத்திற் போகும்போது கைகொட்டிச் சிரித்தும் பலராம கிருஷ்ணர்களைப்போல் பலத்த யானையுடன் கைப்போர் புரிந்து விளையாடியும் ஓடுகிற மானை யோடிப் பிடித்தும் எருமைகளின் கொம்புகளைப்பற்றிப் பன்றிகளை மோதியும் பலவாறாய் விளையாடிவருங் காலையில் மலைப்பக்கமான விடங்களிலுள்ள விலங்கினங்கள் கோடாகோடியாய்த் திரண்டு மறித்தபோது வீரர்கள் விற்களை வளைத்து வெய்ய பாணங்களை யேவி மடித்துக்கொண்டு போயினர். பாகாங்கன் பாணங்களுக்குத் தப்பி வரும் விலங்கினம் கிரிசரன் கணையாற்கெடும் கிரிசரன் கணைகளுக்குத் தப்பி வரும் மிருகங்கள் மதிப்பிரகாசன் வாளியால் மாளும் மதிப்பிரகாசன் வடிக்கணைகளுக்குந் தப்பிவரும் வனசரங்கள் செயப்பிரகாசன் செங்கணைகளால் தீய்ந்துபோகும் இவ்விதமாய்த் துணித்து வருவதால் கோடிக்கணக்கான மிருகங்கள் மாண்டன. மாளாத விலங்கினங்களஞ்சி ஓர் மலைக்கணவாயில் ஓடின. இவர்களும் அக்கணவாயிற் சென்றனர். ஓடிய மிருகங்களும் ஆங்குள்ள பெரும் பாம்புகளுஞ் சீறி யெழுந்தன. செயப்பிரகாசன் தீக்ஷண்யக் கணைகளேவிப் பஸ்மீகரமா யெரித்துக்கணவாயைக்கடந்து மைதானவெளியில் வந்தனர். பல வர்ணப் புஷ்பங்களாற் பிரகாசிக்கும் விருக்ஷங்களையும் மற்று விநோதங்களையுங் கண்டு விளையாடி ஒரு தாய்வயிற்றுப் பிள்

ளேகள்பேரல் சிறிதுதூரம் நடந்து தண்ணீர்த் தாகமுண்டாக ஆலா விருக்ஷமும் பொய்கையு மிருக்கக்கண்டு அதனிற்சென்று நீருண்டு ஆலாவிருக்ஷ நிழலில் வந்திருந்தனர். அப்படி யிருக்கும்போது செயப்பிரகாசன் ஆலாவிருக்ஷத்தை அண்ணார்ந்து பார்க்க ஆங் கோர் மரக்கிளையில் ஒருவன் இறங்குவதுபோற் காணப்பட்டான். இறைவன் மகன் யார்? மரத்திலிருந் திறங்குவதென்றான். அவன் ஈன சுரத்துடன் இறங்கிவந்து சொல்லுகிறேனென்று இறங்கிவந்து மிகுந்த வாட்டமுடையவனாய் ஐயமார்களே! நானிருப்பது வடக்கே அமரபுரம், ஜாதியில் பிராமணன், ஆசாரசீலன் என் பெயர். பத்து வயதுள்ள என் மகனுடன் தீர்த்த யாத்திரையாய் பலவிடஞ் சென்று நேற்றுப் பகல் இவ்விடம் வந்தேன். சிங்கம், புலி, பன்றி, எருமையாகிய நால்வகை மிருகங்களும் நாற்புறத்து மிருந்துவந்தன அவைகளைக்கண்டு அஞ்சி நான் முன்னும், என் மகன் பின்னுமாய் மரத்தில் ஏறிக்கொண்டிருந்தோம். சிங்கங்களிற் றலைமையான ஓர் சிங்கமானது ஒரே பாச்சலாய்ப் பாய்ந்து சிறிதுதூரம் ஏறிய என் மகனைக் கொன்றுவிட்டது. நான் அக்கோரத்தைக் கண்டு குலை குலைந்து உயர ஏறி இறங்கின் இறந்துபோவோமென்று அன்னாகாரமின்றி ஓர்நாள் இரவு பகலிருந்து உங்களைக்கண்டு இறங்கி வந்தேனென்றான். பாண்டிநாட்டு வள்ளல் பழமறை வேதியரே பயப்படவேண்டாம். விலங்கினங்களை வதைத்து உம்மை இக்காடு கடத்திவிடுகிறேனென்றான். வேதியன் நீ விலங்கினங்களைக் கொல்வதும் பெரிதல்ல, நான் ஊர் போவதும் பெரிதல்ல. என் மகனை நான் கண்ணாற் பார்த்துக் கலங்கும்படி அலற அலறக் கொன்ற கொடிய சிங்கத்தைப் பிடித்துவந்து இவ்வாலா விருக்ஷத்தடியில் உன் செங்கை வாளால் கண்டங் கண்டமாய் வெட்டுவாயானல் அதைப்பார்த்து என் மனமும் ஆறிப் பழியுந்தீர்ந்து ஊர்போய்ச் சேருவேனென்றான். படையாளன் ஐயரே! அச்சிங்கத்தின் அடையாளஞ் சொல்வீரேயானல் அப்படியே கொண்டுவந்து உமது கண்முன்னே வெட்டுகிறேனென்றான். வேதியன் வீரனே அது சிங்கங்களெல்லாவற்றிலும் பெரியதாகவும், பல வர்ணங்களுடையதாகவும், மிகுந்த வீரிய வேகமுடையதாகவு மிருக்கும் அதுவும் மற்றவைகளும் வருகிற நேரமுமாயிற்று. நான் சாதியிற் பிராமணனுகவும், ஆயுதமில்லாதவனுகவும் இருப்பதால் ஆயுதபாணிகளாகிய உங்களுடன் நிற்குந் தகுதியில்லாதவ னுகின்றேன். சிங்கத்தை வதைத்தபின் இறங்குகிறேனென்று கூறி மரத்தி லேறிக்கொண்டான். திடவீரர் நால்வரும் செஞ்சிலை நாணேற்றி மிருகங்கள் வரவு பார்த்திருக்கும் போது நான்மறையோன் சொல்லியபடி நான்கு திசைகளிலும் நால் வகை மிருகங்கள் வந்தன. நான்கு வீரர்களும் தனித்தனி சென்று மிருகங்களை வதைத்து இவ்வாலா விருக்ஷத்தில் முன் வந்தவர், பின் வருபவர் வரும் வரையிலிருந்து வேதியர் கோரியதையு முடித்து

ஊர்போய்ச் சேருகிறதென்று முடிவுபேசி நடந்தனர். அவர்களில்
செயப்பிரகாசன் சிங்கங்கள் வரும் வடதிசை சென்றான். மதிப்பிர
காசன் வேங்கைகள் வரும் மேற்றிசை சென்றான், பாகாங்கன் எரு
மைகள் வரும் தென்றிசை சென்றான், கிரிசரன் பன்றிகள் வருங்
கீழ்த்திசை சென்றான். இப்படிச் சென்றவர்களிற் செயப்பிரகாசன்
திரண்டு குவிந்து வருஞ் சிங்கக் கூட்டங்களுக் கெதிர் சீறிச்செல்
லும் உக்ரவீர ஆண்சிங்கம் போலவும் அச்சிங்கங்களை வாரிக்கொண்
டோடுதற்குச் செல்லும் சரபப்பட்சியைப் போலவுஞ் சென்று
தனுசை வளைத்து லடங்கார வோசை காட்டிச் சரமழை பொழிந்து
எதிர்த்துப்பாயுஞ் சிங்கங்களின் வாய்கள் கிழியவும் நெற்றிவகிரவும்
கால்கள் வால்கள் தறியவும் உடல் கண்டங்கண்டமாகவும் செய்து
முன்னேறி நடந்தான்.

இவனைக் கண்டு பயந்து சீயக் கூட்டங்களெல்லாம் பலதிசை
களிலுஞ் சிதறியோடத் தலைப் பட்டன. அப்படி மடங்கியோடு
மடங்கல்களி லொன்று மறையோன் சொன்ன அடையாள முள்ள
தாய் வடதிசை நோக்கியோடியது. மன்னவன் குமரனும் இன்னது
தான் பார்ப்பான் சொல்லியதென்று பாய்ந்து பிடிக்கத் தொடர்ந்
தான். அச்சிங்கம் மலைச் சிகரங்களிற் றாவியும், சோலைகளிற் றுள்
ளிக்குதித்தும் மகாவேகமுட னோடியது. செயப்பிரகாசனும் மாய
மானைத்தொடர்ந்த மழைவண்ண ராமன்போல் தன்காற் கதியைக்
காட்டித் தீவிரமா யோடிப்பிடிக்க வெண்ணியதில் அது அவன் கரங்
களுக்கு அகப்படாமல் சரவேகமா யோடியொரு பொய்கையைச்
சார்ந்தது அரசன் மகனும் அப்பொய்கை சென்று பார்க்க பொய்கை
மத்தியில் மாளிகைபோலொன்று தோற்றப்பட்டு அதற்குங் கரைக்கு
மரத்தினாற் செய்த பாலமொன்று இணைத்திருக்க அப்பாலத்தின்
மேல் தான் தொடர்ந்துவந்த சிங்கம் போகக்கண்டான் தானும் அவ்
வழியாய் நடந்துசெல்ல சிங்கமானது மாளிகையில் நுழைந்துவிடத்
தானும் நுழைந்து பார்க்கப் பலகைகளாலும் தகடுகளாலும் அறை
களும் மூன்று தட்டுகளுமாயமைந்து மேற்றட்டிற்கு ஏணி சாத்தி
யிருக்கக் கண்டான் சிங்கங் காணப்படவில்லை. மன்னன் மகனும்
இன்னது மரமாளிகைதான் தொடர்ந்த சிங்கமும் இதிலுள்ளவர்
வளர்க்கப்பட்டதாயிருக்கலாம் அவர்களையும் அதனையும் காண்போ
மென்று கீழிடமெல்லாம் பார்த்து ஏணிவழி மேற்றட்டிலேறினன்.
அவ்விடத்தும் பார்த்து ஒருவருமில்லாததால் அதற்கு மேலான
தட்டிலேறினன். உடனே கீழ் அடைப்புகள் கதவுகள் சாத்தப்பட்
டன. உடனே செயப்பிரகாசன் றிகைத்து யாரோ நம்மை உயர
ஏறும்படிசெய்து கதவுகளைச் சாத்துகிறதாய்த் தெரிகின்றது வந்
தாற் பார்த்துக் கொள்வோமென்று ஆங்கோராசனம் இருக்கக்கண்டு
அதில் துரைப்பாங்காய் வீற்றிருந்து ஓடிவந்த இளைப்பையாற்றிக்

கொண்டிருந்தான். மாளிகைபோலிருந்த அது அசைந்து தண்ணீரில் உலாவலானது உலாவவேண்டிய காரணமென்ன வென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது அது அந்தரத்திலெழுந்து பறந்தது - கமலப்பொய்கையி லிருந்தது ககனத்திற் பறந்து போவதைக் கண்ட கன்னிநாடன் மகாவியப்புடையவனாய்இதென்ன கரையிலிருந் பார்க்கும்போது மாளிகைபோலிருந்து ஏறிப்பார்க்கும்போது கப்பல் போலுலாவி இருந்து பார்க்கும்போது விமானம்போல் வான்வெளியிற் பறந்துபோகின்றதே இதுபோவது தெய்வலோகமோ விஞ்சையலோகமோ கந்தருவலோகமோ தெரியவில்லை எந்தலோகம் போனாலென்ன எவர்கள் வந்தெதிர்த்தாலென்ன பார்த்துக்கொள்வோமென்றிருந்தனன். விமானமானது பூமிகள் கடல்கள் கடந்து ஓர் தீவினிடமாய் வந்திறங்கியது அத்தீவில் ஓர்பெரிய மலையிருக்கக்கண்டான் செயப்பிரகாசன் இது எவர்கள் வசிக்கப்பட்ட இடமோ வென்று நான்கு திசைகளையும் பார்த்துக் கொண்டிருக்க அடைபட்ட கதவுகள் பலகைகளெல்லாம் பட்டுப் ட்டென்று திறக்கப்பட்டன. கிரீடியைப் போன்றவன் கீழ்த்தட்டி லிறங்கிப்பார்க்க முன்கண்டசிங்கமானது விமானத்தினின்றுகீழேகுதித் தாடக்கண்டவன்உடனேவரிவெஞ்சிலையுடன் மண்ணிற் குதித்து இது மாயமாயிருப்பதாற் கொன்றுவிடுவதே நலமென்று கோதண்டத்தை வளைத்து அம்புதொடுக்க எத்தனிக்கும்போது அச்சிங்கம் மலைமாங்களெல்லாம் நடுங்க இடிபோலே கர்ச்சித்தது. உடனே அம்மலையிலிருந்து சில சிறுமலைகள் கால்கரம் பெற்று வருவதுபோல் அக்கினிக்கோளங்கள் போன்ற கண்களிற் றீப்பொரி பறக்க ஆரடா வருகிறவன்ஆரடா வருகிறனென்றதட்டி அரக்கர்களோடிவந்தனர். சிங்கம் ரகசியமாயவர்களிடஞ்சென்றுஒன் றுசொல்லிற்று அவர்கள் நாற்புறங்களிலும் வளைந்து பாசங்களைப்பரப்பிப் பிடிக்கும்படிநெருங்கினர்நிருபர்சிகாமணிசற்றே புன்னகையுடையவனாய் நெடுஞ்சிலை வளைத்துக் கொடுங்கணைகள் பூட்டியெய்து அவர்கள் பரப்பிய பாசங்களையும் ஏவிய ஆயுதங்களையும் தூள்படுத்தி சிரங்களையுங்கொய்து ஒருவரு மீண்டுபோகாமல் மடித்துச் சிங்கமெவ்வழி போகிறதென்று பார்க்க அது ஓர் மலைக் குகையில் நுழையக்கண்டான் இத்தீவு ராட்சதாள் வசிக்கப்பட்ட இடமாகும்-சிங்கமும்-ராட்சத சம்மந்தமாகவே யிருக்கலாம் சென்று பார்ப்போம், மாயாவரக்கர் வந்தெதிர்த் தாலும் - உலகமெலாமீன்ற அம்மையருளிய வரமிருக்கின்றது பார்த்துக்கொள்வோமென்று மதயானைபோல் நடந்து சிங்கம் நுழைந்த குகையிற் சென்றான். அக்குகை வழியானது பாடற் குறிப்பறியாதலோபியருள்ளம்போ லிருண்டு இருளா யிருந்தபோதிலும், மனிதர்கள் நடக்கப்பட்டு சீர்திருத்தமான பாதையாகப் பாதங்கள் படுந்தோறுந் தெரியப் பட்டது. வச்சிர வாளுங் கேடகமு மேந்திச் சிறிது தூரஞ் சென்றான். சிறிது வெளிச்சந் தோன்றி தென்சாயலாகவும், வடசாயலாகவும் இரண்டு

பாதை பிரிந்து மத்தியிலுள்ள செங்குத்தான கல்லிற் சில வெழுத்
துக்கள் எழுதி யிருக்கக் கண்டான். அவ்வெழுத்துக்களை வாசித்
துப் பாாத்தபோது ஆடவர் தென் சாயற் பாதை போகலாம், வட
சாயற் பாதை போகக் கூடாது, போனால் உயிரிழக்கப் படுமென்
றிருந்தது. அதனைக்கண்ட அரசற் பெருமான் ஆச்சரிய முடையவ
னாய் போகக் கூடாதென்றிருப்பதில் என்ன விருக்கின்றது பார்ப்
போமென்று இரண்டடி யெடுத்துவைத்தான்; ஆரடா வருகிறவ
னென்றதட்டி விகார வடிவுடைய இரண்டு ராட்சசப் பெண்கள்
சூலங்களை யேந்திக் குத்தும்படி யோடிவந்தனர். திருமகள் தங்கு
ந்தோளான் இருவர் சூலங்களையும் வயிர வாளாற் கண்டஞ்செய்து
அவர்கள் சிரங்களையும் வெட்டி உதிரப் பிரவாகம் பொங்கி மறிக்க
அது படாதபடி தாண்டிச் சிறிது தூர்ஞ்சென்றான். தரையிற்சென்
ற வழி மலைமேனோக்கியதாய்ப் படிகளாயிருக்கக் கண்டு அப்படிக
ளின் வழியாகவே யேறி மலைமேல் எங்குஞ் சமவெளியா யிருக்கக்
கண்டான். அந்நேரம் ஓராயிரங் கதிர்க்கரங்களை யுடைய தேவனும்,
மேலை மலையி லுலவி மறைந்தான். மன்னன் மகன் மாலையிருள்பரவி
யாதொன்றுந்தோன்றாமல் நாம் எங்கு செல்கிறதென்று யோசித்துக்
கொண்டிருக்கும்போது தான்நிற்கு மிடத்திற்குமேற்கில் அநேகசூரிய
ருதையம்போலவும், பல்லாயிரம் இரத்தின ராசிகள் பிரகாசிப்பது
போலவும், சோதிப் பிரபை தோன்றக் கண்டு இச்சோதியைப் போய்
அறிவோமென்று சமலச் சீரடி பெயர்த்து கனகச் சோதி வழியே
நடந்தான். இவன் நடந்து செல்லச்செல்ல அச்சோதி சிறிதுசிறிதா
ய் மறைந்து முற்றிலும் மறைந்துவிட்டது மன்னன்மகன் இன்னதெ
ன்னமாய்ச்சோதியா யிருக்கின்றது, தூரத்திற் றோன்றிய சோதி
வரவரக்குறைந்து முற்றிலுமறையவேண்டிய தென்னவென்றுநெருங்
கி யுற்றுப் பார்க்க ஓர் இருப்பு மதில் நட்சத்திர மண்டலம் வரையுய
ர்ந்திருக்கக்கண்டான் இதுமதில் இம்மதிலி னுள்ளிருக்கும் மாளிகை
யின் சிகர சோதியே தூரத்திற் றெரிந்து அடுத்துவர மறைந்துவிட்
டதெனத் தீர்மானித்தான். சப்த சாகரஞ்சூழ்ந்த தீவில் மலைமேற்
கோட்டை கட்டி மாளிகை யமைத்து வசித்து வரப்பட்டவர் அரக்
கரோ அமரரோ தெரியவில்லை. பரமகுரு தந்தசரங்களும் பராசத்தி
தந்த வரங்களும் இருக்கின்றன, பார்த்துக் கொள்ளுவோ மென்று
துணிந்து வாசற் றிறப்பெவ்விட மிருக்கலாமென்று சற்றே யுலாவி
னான். திடீரென்று கதவுகள் திறக்கப்பட்டு உள்ளிருந்த சோதி வெளி
யே பிரகாசித்தது, செயப்பிரகாசன் சுயப்பிரபை வாயல் வழி நுழை
ய யெத்தனிக்கையில், மானிட நாற்றம் ! இங்கு ஏதடாவென்று ஒன்
றுக்கொன்று பேசி யிரண்டு பூதங்கள் சட்டித் தலையில் தீப்பற்றி
யெரிவதுபோற் செம்பட்ட மயிரிலங்க கோரைப் பற்களுள்ளவாயை
த்திறந்து சிரித்துக் காலசூலமேந்தி வந்தன. காவலன் மைந்தன்
டுங்கணை யிரண்டேவி அவற்றின் சிரங்களைக் கரகரவென் றறுத்துக்

தள்ளியுட்சென்றபோது எங்கும்செகச்சோதியாய்பூமரங்களெல்லாம் பொன்மரங்களாகவும், கரும்பொன் கோட்டையினுட்புரம் அரும் பொன்னிறமாகவும் பசும்புற்றரையெலாம் தங்கப்பீதாம்பரங்களைப்பா ப்பியது போலவும். பிரகாசிக்கக் கண்டமன்னர் பெருமான் இம்மாளி கையின் புறச்சோதியே. இவ்வண்ணமிருக்குமாயின் அகத்திலுள்ள அழகு எவ்வண்ண மிருக்குமோ வசிக்கப்பட்டவர் எவ்வளவுதவ த்துக்குடையவரோ போய்த்தெரிவோமென்று சிறிதுதூரம் நடந்தா ன் அங்கேதிருப்பாற்கடல் விளைந்துகிடப்பதுபோல்நீர்ப்பெருக்கால் நிரம்பியிருக்கும் ஓர்பொய்கைவிளைந்திருக்ககண்டான்கரையெல்லாமல ரினங்கள் விரிந்துங்குவிந்தும்இன்னஜாதிச்சலசரங்களென்றுகணிக்க முடியாதபடி.பொன்னிறமேபொருந்திமகரமச்சமுதலியினங்களுலவி யும்- கற்றுத்தெளிந்தோர்.தமதுஅபாரக்கல்விவல்மையைத். தமக்குள் அடக்கிக் காட்டுவதுபோல் மாளிகையுருப்பின்சாயலைத்தனக்குள் அடக்கியும்விளங்குந்திருவாவியைகண்டதென்னன்மகன்இன்னதைக் கடப்போர் ஏழுகடலையுங் கடப்பாரென்று சற்று மேல்பக்கஞ் சென் றான். தெற்கு முகமாயிருந்து வடபக்கமாய்ப் பளிங்குக் கற்களாற் கட்டப்பட்ட பாதையொன்று வர அதன் வழியே நடந்து நீர்த்துறை சென்றான். அங்கு ஓர் இருப்புப் பாய்ச் சுருள் சுருண்டிருக்கக் கண்டு இது சுருண்டிருக்க வேண்டிய தென்ன வென்று திருவடிப் பெருவிரலால் தள்ளினன், வலப்புறம், இடப் புறமாக இரண்டு சர்ப்பங்கள் சிறித்தலைக்கு மேற்படம் படம்விரித்துநின்றன மன்ன வன் அன்னவையிரண்டையுஞ் செங்கைவாளால்வெட்டிப் பொய்கையிற்றள்ளிச் சற்றே நிமிர்ந்தபாயலில் ஓரடியெடுத்துவை க்க அதுநிமிர்ந்ததுமற்றோரடியெடுத்துவைக்க அப்படியேநிமிர்ந்தது பெருமான் பேராச்சரிய முடையவனாய்ப் போகப்போக நிமிர்ந்து நீர்மேற்படரும்பாயலில் நடந்து அக்கரை சேர்ந்தான். பாயலுஞ் சுருண்டே யிக்கரையடைந்தது. வலப்புறமாகவும் அப்படியே ஓர் சுருளிருந்தது. இச்சுருள்கள்தான் இப்பொய்கையைக் கடப் பதற்கான சாதனமாகுமென்றெண்ணி அப்புறஞ்செல்லும்போது இருபக்கங்களிலிருந்து இரண்டு வேங்கைகள்பாயும்படி பதுங்கி யெழுந்தன. கைலாகுகொண்டு விலகி அவைகள்தூரத்திற்பாய்ந்து திரும்பும்போது இரண்டம்புகளாற் போக்கி யப்புறம் மாளிகையரு கிற்சென்று மாணிக்கக்கதவு அடைத்திருப்பதைக்கண்டு அஸ்திரத் தைத் துவாரவழி செலுத்தித் தாழ்ப்பாளைத்தள்ளித் திறக்கும்படி செய்து உட்சென்று கதவைமூடி அங்கு சென்றுபார்க்கையில் தங் கத்தால் தளவரிசைகளும், சுவர்க்கால்களும் இடைக்கிடையே ரத் னதீபங்களும் இரும்பாற்செய்த அடுப்புகளும் சோதிமயமான சமையற்பாத்திரங்களும் மதிற்றுளை வழியாய்ப் பொய்கைத்தண்ணீர் பாயுஞ்சூத்திரக் குழாய்களும் மற்றுமுள்ள சாமான்களுமிருக்கக் கண்டு. இங்கிருப்போர் யாவரோவென வியந்து. இரண்டாந்தள

மேறினான் அங்கு விதவிதமான வட்டிகளுஞ் செம்புகளும் ஆசனங்களு மிருக்கக்கண்டு. மூன்றாந்தளமேறினான் அங்கு சிறியவடிவான தெய்வ விக்கிரகங்களும் பூசைச்சாமான்களு மிருக்கக்கண்டு இங்கிருப்போர் தெய்வபக்தியுடையோரா யிருக்கலாமென்றெண்ணி நான்காந்தலமேறினான் அங்கு பெண்வடிவமான பதுமைகள் ரத்னதீபங்களை யேந்திநிற்க மத்தியில் பளிங்காசனமும் தங்கலைச்சுவடிகளிருப்பதையுங்கண்டு இங்கிருப்போர் தெய்வபக்தியுடன் கல்வி விற்பனர்களாகவு மிருக்கலாமென்று. ஐந்தாந்தலமேறினான், அங்கு தம்புரு, வீணை; பிட்டில்முதலிய வாத்தியக்கருவிகளிருக்கக்கண்டு ஆறாந்தலமேறினான். சுவர்க்கால்தோறுங் கண்ணாடிகள் பதிக்கப்பட்டு அதற்குமேல் சித்திரப்படங்களும் வரைந்து புனுகு, சவ்வாது, களபகஸ்தூரிகள்நிரம்பிய பாத்திரங்களிலங்க வாடாத பூமாலைகள்துலங்க மகாசிறப்பாய் விளங்கக்கண்டான் அனுபவிக்கப்பட்ட பொருள்களெல்லாமிருந்தும் அனுபவிப்போரை யிதுவரை காண்கவில்லையே யென்று. ஏழாந்தலமேறினான். அங்கு, சகலமானவஸ்துக்களும், மாயபூபதியுந்துணைவருந் துறைமுகப் பட்டணங்களிலமைத்த வர்த்தகமளிகைகளிலுள்ள பொருள்களைப்போல் இருக்க, சாளரங்களிலிருந்து வருந்தென்றல் திருமேனியிற்பட பரப்பியசந்திரகாந்தக்கல்விற்பாதங்கள்பட்டு திரேகத்திற்கு ஆரோக்கியத்தைக்கொடுக்க இவ்வளவு வைபவங்களையுங்கண்ட மன்னன்மகன் இதனைத்தவிரவேறு சொர்க்கமுமுண்டோ. இயற்றிய வல்லவனு மிரண்டாவது பிரமாவாயிருச்கலாம், இதிலிருந்து போகங்களை யனுபவிக்கப்பெற்றவன், எவ்வளவுதவத்துக்குடையவனோ, என்ன அதிகாரஞ்செய்யப்பட்டவனோ தெரியவில்லை. ஆனால் இதுவரை ஒருவருந்தோற்றப்படவில்லை. யின்னும்பார்ப்போ மென்று சற்றுஉலவிப்பார்க்க நவமணிக்கோவைகள் நாற்புறத்துமிலங்க பொன்மயமேற்கட்டி மேலேதுலங்க தங்கச்சங்கிலிகள் கோர்த்துத் தனியேஆடும் மஞ்சத்தைக்கண்டான். சத்துரு மித்துருவாகிய இருவகையில் ஒருவகையை இங்குகாணலாமென்று பொன்னடி பேர்த்து அன்னவூஞ்சல் அருகிற்சென்று பார்க்க. ஈரேழுவுலகங்களில் இல்லாதலட்சணமாய், பஞ்சலட்சணங்களையும் பார்த்தறிந்த வித்துவான்கள் தங்கள் கல்விவல்லமையால் வர்ணித்தாலும், வர்ணிக்க முடியாதவர்ணமாய், அகிலலோகமெலாம் பரவியிருந்த அழகெலாங்கூடி அமைந்த அழகாய் சூரிய சந்திர நட்சத்திரங்களிலுள்ள ஒளிவுகளிற்சிறிது சிறிதாயெடுத்துச்சேர்த்ததுபோல் இலங்குஞ் சோதியாய், மேனிச்சோதியுமஞ்ச மணிச்சோதியும் வேற்றுமையின்றிக் கலந்து பிரகாசிப்பதால், உயிருள்ள பெண்ணோ, உயிரற்ற பதுமையோவென்று சந்தேகிக்கும் பொருளாய் விளங்கும். ஓர் பெண்ணலங்கனிசயனகோலமா யிருப்பதைக்கண்டான். கண்ணுக்கடங்காதசோதிச் சொரூபங்கண்ட அரைமகன் சித்தம்பிர

மித்து; ஆ. ஆ. இதென்ன காட்சி இம்மாளிகையில் அமைத்த சூட்சியால் ஆடவரின்றிய மஞ்சத்தில் ஒருவர் கூட்டுறவுமின்றி தனியே ஒரு பெண் சொரூபச்சோதி சயனித்திருக்கும் பாவனையாய்த் தோன்றுகின்றதே இது ஓர் தேவதையா அல்லது பொற்பதுமையாவென்று சற்றே எட்டநின்று உற்று நோக்கும்போது வண்ணத் தலையணையிற் பொருந்திய கருங்குழலாகிய கருமேகமீது கலைமதி வட்டம் பிரகாசிப்பதுபோற் றிருமுக மிலங்க அழகாகிய கடலிலெழுந்த இரு குமிழிகளைப் போன்று சரிகைக் கச்சுப்பூட்டுடன் தனங்கள் துலங்க திருமுகமாகிய திங்கட்சோதியை விரும்பியிரு செங்காந்தள் மலர் காத்திருப்பனபோல் தலையணையிற் சாத்திய கரங்கள் விளங்க கற்பகக்கொம்பில் தோயும் இளஞ்சூரியன் கிரணம்போன்ற பொன்துகிலானது இடையிலிருந்து பாதம்வரை விரிந்துகிடக்க எங்களுக்கு உன் மேனிச்சோதியைச் சிறிது தரவேண்டுமென்று பாதத்தைப் பூண்டு கிடப்பனபோற் செஞ்சிலம்பு தண்டை காலாழி பீலி முதலிய அணிகள் மின்ன நித்திரைசெய்யுங் கோலத்தை நிமைதட்டாமல் நோக்கி இது தேவதையுமல்ல பதுமையுமல்ல பெண்தானென்று தீர்மானித்து இப்பெண்கனி வானுலகத்துள்ளதா மண்ணுலகத்துள்ளதா வென்று கவனித்தால் சூடிய நறுமலர் வாட்டத்தாலும் மூடிய இமையின் நாட்டத்தாலும் மண்ணுலகத்தினுள்ளதுதான் எம்மன்னன் தவப்பேற்றினுதித்ததுவோ எட்பாக்கியன் கைவசப்பட்டிருக்கின்றதோ இம்மா மாளிகையில் ஒருவருமின்றித் தனியே துயில வேண்டியதென்ன எழுப்பித்தான் தெரியவேண்டுமென்று காதல் வெள்ளம் பொங்க அருகில் வந்து தொடும்படி யானைத்துதிக்கை போன்ற தன் கையை அவள் மேனிக்கு நேர்நீட்டினான். உடனே இவன் கைக்கும் அவள் மேனிக்கும் இடையே அக்கினி குபீரென்றெழுந்து பரவியது நிம்பமலர் மாலையான் நீட்டிய கையை மடக்கி நெடுந்தூரம் பின்னுக்கிடைந்து இஃதென்ன எக்காலத்திலும் எங்குமில்லாத அதிசயம் மானிடவடிவமுந் தெய்வீக வல்லமையும் அமைந்த இது எங்கு உள்ளதோ இங்குவர வேண்டியதேனோ தொடுமுன் இப்படியானால் தொட்டால் என்ன கதியாவோமோ வென்றஞ்சி நின்றான். அங்கு துயின்றவள் அக்கினி மத்தியில் ஓர் தீபம் போலெழுந்து குவளைக்கண் விழித்துப் பார்க்க அநேககோடி மன்மதர்கள் ஓருருவாகிக் கையிற் கோதண்டமேந்திநின்ற பாவனைபோல் விளங்கும் ராசகுமாரனைக் கண்டாள். சந்திரகாந்தி தளும்புந் திருமுகமும் குவிந்து திரண்ட விருபுயவரையும் அகன்ற மார்பும் நீண்ட கரமும் வீரக்கழலணிந்த தாளும் தன்னையே பார்க்குங் கருணைக் கண்ணும் கண்டறியாத காட்சியாய்விளங்கக்கண்டு ஆ ஆ! இதென்ன ஆச்சரியம் இந்தமணி மாளிகையீல் எவ்வளவு மட்டடங்கா வீரனாயிருந்தாலும் வரத்தகாததாயிருக்க இவ்விரவில் தனியே துணிவாய் வந்து நிற்கிறானே இவன் தேவனோ மானுடனோ அரக்கர் கொண்ட

வேடமா தெரியவில்லை பாதம் பார்பொருந்தி பனிக்கண்ணிமைப்ப தால் மானிடவகுப்பாய்த்தானிருக்கலாமென்றுமதித்து பேரழகைப் பார்த்துப்பார்த்துப் பிரமைமேற்கொண்டுஉள்ளங்கனிந்துகாதற்பார் வையாய்ப்பார்க்க இடையிலெழுந்த அக்கினியுமாறிவிட்டது.

உடனே அவள் குபீரென்றெழுந்திருந்து மஞ்சத்தை விட்டிற ங்கி மைமுகிலிற் சென்று மறையும் வான் மின்னலைப்போல் தூண் மறைவிற்போய் நின்று நாணம்பெருகத் தலைகவிழ்ந்து தனிவீரனைக் கடைக்கண்ணால் நோக்கி யிவை கூறுவதாயினள்.

கமலாசனக் கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட மானிட வகுப்பில் மாணிக்கம் போல் வந்துதித்து ஒருசுகமுங்கண்டறியாத இப் பாலிய வயதில் இவ்விடத்தில் உயிரை யிழக்கும்படி வந்து நிற்கும் நிர்ப்பாக்கியனே நீயார் அழகுக் கேற்றபடி நீண்ட ஆயுளைக்கொடாத அப்பிரமன் மதியை என்னவென்று சொல்லுவேன். புவியில் ஒரு வரும் படையாத அழகைப்படைத்து எவரும் தாங்காத ஆயுதங் களைத் தாங்கி ககனதேவர்களுங் கடந்துவாராத காவலைக் கடந்து கொடிய பேய்களும் இடம்பெயராத இக்கரியஇருளில் யாவரும் வராத மாளிகையில் வந்து நிற்கின்றாய் நானோ முன்சென்மத்திற் செய்யாப் பாவங்களைச் செய்து மாயக்காரர் வையாச் சிறையில் வைக்க இனசனங்களை யிழந்து இவ்விடத்திற்றனியே என் கர்ம வினைகளைப் போக்குகின்றேன். அவ்விதமாகிய நான் நீ சற்று நேரத் திற் பதைபதைத்து மாண்டுபோகும்படியான கொடுமையையும் பார்க்கும்படியாகின்றேனே இந்தப்பேரழகு இவ்விடத்திலா சிந்து கிறதென்று கூறிச் செவ்வரிக் கண்ணினின்று பொழிந்தநீர் சேவ டியை நனைக்க நெடிதயர்ந்து நின்றாள். அரசன்றிருமகன் அக்கினிக் காவல்மாறி மஞ்சத்தை விட்டிறங்கிப்போய் நின்று கூறுங் கனி மொழியையும் காதற்குறிப்பையும் கவலையையும் கண்டு இவளோர் காவலன் மகளாயிருந்து கடியவரிடுங் கடுஞ்சிறையிற்பட்ட காரண மாய்த் தெரிகிறதென்று கருத்தில் மதித்து அவள்கூறிய இனிய வசனத்தால் இன்பம் பொங்கக்காற்று வெயிலினுக் கிரந்தாக்காமலும் மாந்தர் மகளிர் கண் திருஷ்டிபடாமலும் இம்மாளிகையில் ஒழித் திருக்குந் தெய்வப்பொற்பதுமைபோன்ற தேனே என்னைக் குறித் துக் கவலைவையாதே என்னைச் செயிப்போர் ஈரேழு பதினான்கு லோகங்களிலும் கிடையாதென்று வெண்கல மணியோசையிட்டது போல் விளம்பினன். உடனே கோடைகாலப் பேரிடிகள் குமுறியிடி த்ததுபோல ஆரடா அங்கு பேசுகிறவனென்றதட்டி அம்மாளிகை மேல்வாசல் நான்கிலும் நானூறு இராட்சதர்கள் ஆயுதங்களேந்தி ஆர்ப்பரித்து வந்தனர். அவர்கள் வருங்கோரம் கண்ட அமுதமொழி மங்கை யிரு கரம் நெறித்து இவ்விபரதைத்தானே சொன்னேன். எவ்வாறு தப்புவிக்கப் போகிறேனென்று கருங்குழல் சோரக் கண்

ணீர் சோரப் பெருமூச்செறிந்து நின்ருள். அவள் வாட்டங்கண்ட நாட்டரசன் மகன் சிறுநகை செய்து காதலங்கனியே என் வீரத்தைப் பாரென்று நாலடி நடந்து நளினக் கைபாற் கோதண்டத்தை வளைத்து நான்கு சுழற்பாணங்களை விட்டான். அப் பாணங்கள் பிரசண்ட வாயுவைப்போற் கிளம்பி அரக்கர் கூட்டங்களை வெளியே தள்ளி ஆகாயத்திற் பர்பரம்போற் சுழற்றி நூறு யோசனை தூரம் கொண்டுபோயின. அரக்கர்கள் பாணவேகமடங்கித்திரும்பி வருமுன் செயப் பிரகாசன் ஓர் வாசல் வழி சென்று மாளிகையுச்சியிற் ருவியேறி அடாஅரக்கர்களே இவ்விடம் வாருங்களடாவென்று வில்வளைத்தான். ராட்சதர்கள் இதேது ஒரு நாளுமில்லாத திருநாளாய் இன்று சோரன் புகுந்து விட்டானென்று நாற்புரங்களிலும் நெருங்கி அம்புகளைத் தொடுத்தும், ஆயுதங்களையேவியும் போராடினுர்கள். அரசிளங்குமரன் அணங்கரசி முன் போகவேண்டுமென்கின்ற ஆத்திரத்தால் அபாரக் கணைகளேவி அவர்களேவியவற்றை யெல்லாம் பொடிப் படுத்தி சிரங்கள் வேறு காங்கள்வேறு கால்கள் வேருகக் கண்டித்துப் பொய்கையில் விழும்படிச் செய்தான். அத்துண்டங்களை யங்குள்ள மச்சங்களும் முதலைகளும்விழுங்கி விட்டன. செயப்பிரகாசன் மாளிகைச் சிகரத்தினின்றிறங்கி வாசல் வழி மாதரசியிருக்குமிடம் வந்தான். வேந்தன் மகன் வரும் வீரிய கோலாகலத்தை விழிகுளிர மனங்குளிரக் கண்ட மின்னிடைக் கன்னி தன்னிரு கண்களிலும் ஆனந்த நீர்பொழிய நெக்கு நெக்கா யுருகி இருகரங்களையும் சிரமேற் குவித்து என் சிறை நீங்குங்காலம் இன்றுதானே வென்று எதிர் சென்று ஆகாயக்காவல் அரக்கர் கூட்டங்களை அதாகதஞ் செய்த ஆண்சிங்கமே வருக வருக வென்று வாழ்த்திக் கொண்டாடினள். அப்படிக் கொண்டாடிய போதிலும்; கொண்ட அச்சமுற்று மாருமல் சிறிதச்ச முடையவளாய்ச் செப்புகிறதாவது.

ஆருங்காணுமல் அர்த்தராத்திரிவந்து தெரிசனந்தந்ததெய்வம் போன்ற தீரவீரமே-நீர் இப்போதுசெய்த சிறு வெற்றியில் சந்தேகமெலாம் நீங்கி மகிழ்ச்சி பாராட்டமாட்டேன். ஏனென்ருல் என்னைக் காத்திருக்குமூலபெலங்களில் இப்போதுமாண்டது கோடியிலொருபங்காகாது என்னையிச் சிறையில்வைத்து எல்லர்க்காவலுமேற்படுத்திய தலைவனைச் சங்காரஞ் செய்தாலல்லவோ- நான்உமக்குப்பாரியாவதும்; நீர் எனக்கு மணவாளனுவதும் நிச்சயம். அதற்கிடையில் நான்எவ்வித உரிமைகொண்டாடியபோதிலும் நிலைக்குமாவென்று நெஞ்சிற் கவலையோடு நிகழ்த்தினுள். அஞ்சனக்கண்ணி கொஞ்சினவார்த்தையாய்க்கூறும் இன்சொலைக்கேட்ட செஞ்சேவகன்- மஞ்சினநகண்டாடுமெயிலே இன்பரசக்குயிலே-நெஞ்சிற் கவலைவையாதே- நீ சொல்லிபவன் எவ்வளவுவரம்பெற்ற அரக்கனுனலென்ன, அசுரனுனலென்ன, படைகளெத்தனைகோடி யிருந்தாலெ

ன்ன எதிர்த்தவர்களை யெல்லாம் எமலோகத்திற்கு அனுப்புந் திறம் என்னிடம் பூரணமா யிருக்கின்றது என்தாய் சாமள ரூபி யருளிய வரமு மப்படியே யென்று சாற்றினன் ஓடைமலர்க் கண்ணாள் உள்ளங்குளிர்ந்து ஒருவழிப்பட்டுச்சொல்லியபடிமுடிக்குஞ் சுத்த வீரமிருக்கின்றது இல்லாவிடிற் கடல் கடந்து காவல் கடந்து இங்கு வரமுடியுமா ஆரடா வென்று வந்த அரக்கர் அந்தரத்திற் பறந்து அரை நொடியில் மாண்டதே தக்க சாட்சி யென்று துணிந்து காந்தள் மலர் போன்ற தன் கையால கமல மலர் போன்ற காவலன் கையைப் பற்றி மஞ்சத்திற்கொண்டு வந்து இனிதிருக்கச் செய்து வைத்த கண் வாங்காமற் பார்த்துப் பார்த்துப் பேசுவதெல்லாம் பின்புபேசுவோமென்று கீழ் மாளிகை கொண்டு வந்து தன்கையால் நீராட்டி சட்சுவையுடன் அன்னம் படைத்து ஆருந் தலம் வந்து வாசனைத் திரவியங்களை யள்ளிப் பூசி மலர் மாலையை யெடுத்து மன்னவன் தோளி லணிந்து நீரே யெனக்கு நாயகன் நானே யுமக்கு நாயகி அடியாள் அறியாமற் சொன்னவைகளை யெல்லாம் ஆண்டவரே மனம்பொறுக்க வேண்டுமென்று பலதரம் பணிந்து கரங்களைக் கோர்த்து மேல் மாளிகை வந்து ஆடுகிற மஞ்சமேலமர்ந்து வீரிய லட்சணங்களை வெகுவாய்ப் புகழ்ந்து பேசுவதின்னதென்றுதோன்றுமல்தன்னை மறந்து சந்தோஷக் கடலி லாழ்ந் திருந்தாள் தரள நகை மங்கை.

சந்திர வதனக் கன்னி செய்துவரும் வந்தனைவழிபாடுகளைத் தெரிந்தும் திவ்ய லட்சணங்களைக் கண்களாற் கண்டும் மதுரமொழிகளைச் செவிகளாற் கேட்டும் சொற்காதி போகங் கண்டவன் போற் பேரின்பத்துடனிருக்கும் ஏந்தலானவன் இருகரங்களாலு மணைத்து செகதல மெங்குந் தேடினலும் கிடையாத தெய்வப் பசுங் கிளியே, இவ்வேழடுக்கு மாளிகையிற் றனியே யிருக்கும் உன் மனத்துணிவை யென்னென்று சொல்லுவேன் நீ பிறந்த தேசமெது உன் தாய் தந்தையரின் நாமமென்ன அரக்கர் தலைவன் உன்னைச் சிறையெடுத்த தெவ்விதம் நான் தொட வரும் போது அக்கினி யெழுந்ததென்ன பின்பு மாறியதென்ன எல்லாவற்றையுஞ் சவிஸ்தாரமாய்ச் சொல்லக் கடவாயென்ன தரள நகை மாது சாற்றலாயினள்.

அன்னை தந்தையை நீங்கி அலைகடற் றீவில் ஆருங்காணு மாளிகையில் அருஞ்சிறை யிருக்கு மென்னைவந் தடைந்தருளிய இன்ப நாயகமே கேட்பீராக. அமலக்கங்காவளம் பெருகிய விமலா தேசத்திற் கமலா புரியென்றொரு பட்டணமுண்டு அப்பட்டணத்தைச் சோம காந்தனென்றொரு மன்னன் சோமகாந்தியென்னும் மனைவியுடன் ஆண்டு வந்தான். அவ்வரசனுக்கு நான் புத்

திரியாய் வந்துதித்தேன் நான்பிறந்தவுடன் என் மேனியிலுள்ள சோதியே வீடெல்லாம் பிரகாசித்துக்கொண்டிருந்தது. எனது தந்தையார் வந்து என்மேனியிலுள்ள பொற்சோதியைக் கண்டு சுவர்னப் பிரபையென்று நாமகரணமிட்டார் ஊர்ச்சனங்களெல்லாம் இராஜாவுக்குப் பொன்மயக் குழந்தை பிறந்திருக்கிறதென்று கூடிப் பேசிப் பார்க்கவருவார்கள். என் தாயார் திருஷ்டி படப் போகிறதென்று அதற்கான முறையுடன் திருஷ்டி கழித்து அந்தப்புர மாளிகையில் வளர்த்து வந்தாள். நாலு ஐந்து வயதாகிச் சிற்றாடை கட்டிசசிறுமிகளுடன் சேர்ந்து தெருவில் விளையாடித் திரியும்போது மறுதேச மன்னர்கள் என் தந்தையைப் பார்க்க வருவதுபோல் வந்து என்னைப் பார்த்துப் போவார்கள். இப்படியாக அரசர்கள் வந்துக்கொண்டிருப்பதையெனது தந்தையார் கவனித்து நமதுமகள் உலகமெச்சிய பெண்ணாகவிருக்கின்றாள். சிறு வயதிலேயே இப்படி வநது பார்ப்பாராயின் சரியான மங்கைப் பருவத்தில் எப்படி விரும்பமாட்டார்கள் பலவர்சரும் வந்து பெண்கேட்பார்கள் மறுத்தாற் சேனைகளுடன் வந்து போர் புரிந்து பலாத்காரமாய்க் கொண்டு போயினும் போவார்கள். ஒருவருக்குக் கொடுக்கிறதானால் பலபேர் பகைவரும் கடைசியில் ராச்சியத்திற்கே மோசம்வருமென்று மந்திரிமார்களுடன் யோசித்து குலகுருவாகிய யோகசாந்தமுனிவரிடங்கூறினர் அவர் அக்கினிக்கவச மந்திரயாகஞ்செய்து அவ்வக்கினியை என்மேல்ஸ்தாபித்துதேவர் அசுரர் மானிடர்எவராயிருந்தாலும் ஆடவராயுள்ளவர் இவள் விருப்பமில்லாதபடி வலியத் தொடுவாராயின் அக்கினி தகித்துவிடும்படியாகவும் இவள் சேரவேண்டுமென்று விரும்பியவனைத் தகியாதிருக்கவும் இக்கனற்கவசம் கணவனையடையும்வரை யிருந்து நீங்கவும் வரங்கொடுத்து பதினாறும் வயதில் உலகெலாஞ்செயிக்கத்தக்க சுத்தவீரனாகிய ஓர் ரசகுமாரனை மணப்பளென்று ஆசீர்வதித்தார் நான் கனற்கவசத்தைப்பெற்று சிறுவயதிலேயே சகலகலைகளுங்கற்று பனிரெண்டாம் வயதிற் பிரவிடையாகித் தாதியர் சகிதங் கன்னிமாடத்திலிருந்தேன் பலதேசமன்னர்வந்து தந்தையிடம் பெண் கேட்டனர் அவர் என்மகள் யாரைவிரும்பு கின்றனளோ அவருக்கு மணமுடிப்பதன்றி என்னால் ஒன்றுஞ்செய்ய முடியாதென்று சொல்லி விட்டனர். வந்தவர்கள் வேறிடங்களிலிருந்து தூதுவிட்டும் சிபார்சு செய்தும் நான் விரும்பாததைத் தெரிந்து போர் புரிந்து கொண்டு போன போதிலும் கனற்கவச முடையவளை நாம் என்ன செய்யக் கூடுமென்று போய்விட்டனர். நானும் நமது காந்தியழகுக்கேற்ற கணவன் கிடைக்கும்போது மணஞ்செய்துக்கொள்ளுவோமென்று கன்னிமாடத்திலேயேயிருந்தேன். ஒருநாள் தோழியருடனே பந்து

விளையாடிச் சோலையிற்போய்ப் பூக்கொய்து பங்கயப் பொய்கை
யிற் போய் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தேன் அப்பொய்
கையில் மரக்கலம்போல் ஒன்று மிதந்துக்கொண்டிருந்
தது. ஐந்து தோழிகளும்நானும் நீந்திப்போய் அக்கலத்திலேறி
அதிலுள்ள அதிசயங்களைப் பார்த்துக்கொண்டு நின்றோம் உட
னே திடீரென்று கதவுகள் சாத்தப் பட்டு நாங்கள் திக்குமுக்காடி
த் தியங்கியபோது அம்மரக்கலம் அந்தரத்திலெழுந்துசென்றது
அது செல்லும் வேகத்தால் நாங்களயர்ந்து மயங்கி நின்றோம்.
அதுசமையம் கருமேனியுஞ் செங்கண்ணும் சிவந்த மயிரு முடை
ய ஒரு ராட்சதன் வந்துஅஞ்சாதே பெண்ணேநான்தானுன்னைக்
கொண்டு போகின்றேன். அநேக வரப்பிரசாதங்களும் அளவ
ற்ற சேனை சைனியங்களும் உள்ளவன் தேவர் முதலானவர்கள்
அஞ்சும்படியான பராக்கிரமும் அதிகாரமு முள்ளவன்
கலகாசூரனென்று பேர்பெற்றவன் ஓர் பெண் வேண்டுமென்று
உலகமெலாந்திரிந்து கன்னிமாடத்தி லுன்னைக்கண்டு காதல்
கொண்டு நீ நீராடும் பொய்கையில் விமானத்தை நிறுத்திவந்து
ஏறியவுடன் கொண்டுபோகின்றேன் நானிருக்குஞ்சாகரதீவாந்
தரவரைப்பட்டணம்வந்து என்மனப்படியிசைந்திருப்பாயானால்
எல்லாச்சுகங்களுமனுபவித்து எல்லாமாதர்களுக்கும் அரசியாயி
ருப்பாயென்றான் அவனைநான் கண்டு காலனைக்கண்டவுயிர்போற்
கலங்கி யிவனிடஞ்சிக்கிக்கொண்டோம் என்னசொன்னாலுங் கேட்
கவுமாட்டான் ஆனால் நம்மை யென்னசெய்யக்கூடுமென்று பதில்
வார்த்தை பேசாமல் நின்றேன் அவன் அருகில்வந்து தழுவும்
படி நெருங்கினன் அக்கினிகிளம்பிஅவன்மேனிபற்றுக்க அஞ்சிப்
பின்சென்று மூர்க்கமுடையவனைப் பெண்ணே அக்கினியை மட்
டுப்படுத்திச் சேருகின்றனையா கடலில்விழும்படி விமானத்தை
கவிழ்த்துவிடவாவென்றான் அதற்கும் நான்ஒன்றும்பேசவில்லை
கன்னெஞ்சராட்சதன் தோழியர்களைத்தூக்கிதூக்கி கடலிலெறி
ந்துவிட்டான் அவர்கள் எக்கதியாயினரோ தெரியாது நான் நம்
மைத்தீண்டிக் கற்பையழிக்க வுயிரையழிக்க இவனாலும் எவனாலு
மாகாது செல்லுமிடஞ்செல்லட்டும்பார்த்துக்கொள்வோமென்
றிருந்தேன் விமானம் இம்மாளிகை மேற்றளத்தில்வந் திறங்கி
யது அரக்கன் இவ்விமானத்திலிருக்கிறாயா இம்மாளிகையிலிருக்
கிறாயா உன்தந்தையாவது உன்இனத்திலுள்ள ஓர் ராஜகுமார
னாவது வந்து மீட்பார்களென்பதைக் கனவிலுமெண்ணாதேயென்
றான் நான்அம்மொழியில்வரும்ராஜகுமாரனென்பதை ஞாபகப்
படுத்தினேன் அதாவது அக்கினிக் கவசங்கொடுத்த மகாமுனி
வர் சுத்தவீரனாகிய ஓர்ராஜகுமாரனைமணப்பளென்று சொல்லி
யிருந்தாரல்லவா அது பழுதுபோகாது வாய்க்கினும் வாய்க்கு
மென்று சொல்லியதாவது அரக்கர்வேந்தனே பெண்பாலாகிய

நான் ஓராடவனுக்குரியவளாகிறதே யொழிய வேறில்லை உம் மிடஞ்சிக்கிய எனக்கு வேறுகதியுமில்லை மூன்றேமுக்கால் வருடம் அக்கினிதேவ மந்திரவிரதம் அனுஷ்டித்துவந்தால் ருது காலதோஷ சென்மவினைத்தொடர்நீங்கி சகலலோக அதிகார வீரநாயகனை யடைவாளென்று எங்கள் குருசொல்லியபிரகாரம் அனுஷ்டித்து வருகிறேன் விரதந்தொடங்கிஐந்துநாளாகின்றது விரதகாலமெல்லாம் அக்கினியென்னுடற் காப்பாகவேயிருக்கும் அதுவரை பொறுத்திருந்தால் மனம்போல் நடந்துகொள்ளுகிறேன் இம்மாளிகையிலேயே யிருக்கிறேனென்றேன் அரக்கன் நான் சொல்லியபோக்கும் அக்கினியின்தாக்கும் சரியாயிருப்பதால் அப்படியே விரதமுடிந்தவுடன் மணஞ்செய்து கொள்ளுகிறேன். வேண்டிய ஊழியர்களை நியமிக்கிறேன். இம்மாளிகையிலிருப்பா யென்றான். நான் ஊழியர் ஒருவரும் வேண்டியதில்லை தனியேயிருந்து விரதம் அனுஷ்டிப்பே னென்றேன். அதையவன் ஒப்புக்கொண்டு விமானம் விட்டிறங்கி மாளிகையில் நான் வந்திருக்க அவனும் வந்திருந்து நான் கேட்டபடி சுத்தமான பதார்த்தங்களை யெல்லாங் கொண்டு வந்து நிரம்பும்படி செய்தும் அன்று தரக்கூடியவைகளைத் தன்னுடன் வரும் பெண்களை கொண்டு வந்து கொடுக்கும்படி செய்தும் கப்பல் மூலமாய் மானிடர்களும் தரை மலை வழியாய் உள்நாட்டு அசுரர்களும் ஆகாய மார்க்கமாய் தேவர்களும் வந்துகொண்டு போயினும் போவார்களென்று தீவைச்சுற்றிக் கடற்காவல் மலையைச்சுற்றித் தரைக்காவல் மலைவழிகளின் காவல் கோட்டைக் காவல் பொய்கைக் காவல் மாளிகைக்காவல் மாளிகைக்கு மேல்பாரணில் அரக்கர் காவல் ஆக இவ்வளவுகாவலு மேற்படுத்தி வைத்திருக்கிறான். தினமும் பகலில் வந்து சிலவசனங்கள் பேசிப்போவான். அவன் உத்திரவால் ஓர் பஞ்சவர்ணக்கிளி வந்து சில வசனம் வசனித்துப் போகும். நான் தனியாய்த்துயின்று இதிலுள்ளவைகளை யனுபவித்து) மாதம் நாற்பத்தைந்தும் பார்ப்போம். மனங்கொண்ட மணவாளன் வந்தாலாச்சுது இல்லையெனில் உயிரை மாய்ப்போமென்றிருந்தேன். சில காலத்துக்குமுன் வானவெளியில் வந்த தேவகணத்துக்கும் ஆகாயப்பாரணிலுள்ள அசுர கணத்துக்கும் கொடியபோர் நடந்து தேவகணத்தலைவனைச் சிறையிலிட்டதாகக் கேள்வி போர்நடந்த காட்சிகளைக் கண்டேன் இவர்களை யிப்பாடுபடுவாராயின் எவர்கள் வந்து மீட்பார்கள் இறப்பிடமு மிதுதானென்று எண்ணியிருந்த போதிலும் வல்லாளன் காவலும் மாமுனிவன் செஞ்சொல்லும் எப்படியாகிறதோ முடிவுபார்ப்போமென்றிருந்தேன் நானிதுவரை செய்த தவமும் என்முன்னோர்கள் செய்த தவமும் ஒருருக்கொண்டு வந்ததுபோல் தேவரீர் வந்தடையப் பெற்றேன் அக்கினி யெழுந்த அரவத்தால்

எழுந்து தங்கள் தரிசனங் கண்டேன் மலரயன் கற்பனைப்படி யென்பனங்கொண்ட மணவாளப் பேருனதால் அக்கினிக்காவலு மகன்று விட்டது இதுதான் என்வரலாறென்று அன்னநடை மின்னுள் சொல்லி முடித்தாள்.

மாதரசி கூறிவந்த வரலாறனைத்து மன்னர் பெருமான் செவிகுளிரக்கேட்டு கற்பின் மகத்துவத்தைப் புகழ்ந்து தீராக் காதல் தீரும்படி லீலாவினோத வின்பம் பாராட்டி நித்திரை செய்து சூரியோதயத்திலெழுந்து காலைக்கடன் முடித்து மாதரசி படைத்த சாதவகையருந்தி இனிதிருக்கும்போது சுவர்ணப் பிரபை நாயகனைநோக்கி அருமை மணவாளரே அரக்கர்கோன் வருவானே என்ன கருத்துக் கொண்டிருக்கிறீ ரென்றாள். செகமேழினுங் கிடையாத திரவியமே நீ கிடைத்ததே தெய்வ பாக்கியம் உன்னை அவன் கொண்டு வந்ததுபோல் நான் கொண்டு போனாலும் என் வீரத்துக்கழகல்ல அவனைக் கொன்ற தில் நமக்கென்ன ஆகப்போகிறதென்று போகத்துணிந்தாலும் உன்னையும் என்னையுங்கொண்டு வந்த விமானங்களைத் தவிர வேறொன்றாற் கடல் கடந்து காவல் கடந்து போகமுடியாது அரக்கர் கூட்டங்களையொழித்தாலொழிய விமானங்கள் கைவசப் படமாட்டாது ஆனதாற்சிறிதுநாளிருந்து அசுரர்கோன் வரம் பலம் உயிர்நிலை முதலியவற்றை உன்மூலமாய்த்தெரிந்து யுத் தத்துக்குத் துணியலாமென் றெண்ணுகிறேனென்றான். மன்ன வன்மகளும் அன்னதுதான் எனதெண்ணமும் ஆனாலும் இப் போது அவன் வருகிறதாயிருப்பதால் தேவரீர் அதோதோன் றும் ஆசாயப்பரணில் அமர்ந்திருக்கவேண்டும் அதிலிருந்து உருவினகத்தியை உறையிற் போடாதபடி காவல்காத்த நா னூறு ராட்சதர்களும் நமனுலகஞ்சென்று விட்டனரென்றாள் அரசர்பெருமான் அப்படியே இருந்துவருகிறேனென்று மேல் வாசல்வழிசென்று வானிற்றாவி பரணினின்று பார்க்க பிரம் மாண்ட இருப்புத் தூண்களிற்பரப்பிய வயிரச்சட்டங்களும் கனத்தமரப்பலகைகளும் மேலெடுத்த மாளிகையும் ஆசனங்க ளும் சுற்றி மேகங்கள்மின்னி மழைபெய்யும் வினோதமும் மற் றுமுள்ளவைகளையுங கண்டு புன்னகையுடையவனாய் ஒரு பெண் ணுக்கு இவ்வளவுகாவல் வைத்தானே என்னயிற்றென்று நாற் புறங்களும் நோக்கினான் சமுத்திரங்களும் தீவுகளும் மலைகளும் அங்கங்கேதெரிய சாகர தீபாந்தரவரைப் பட்டணமானது அந் தரமத்தி பாதாளமாகிய முப்புவனங்களிலுங் காணக்கூடாத லட்சணமாய் ஐஸ்வரியத்துடன்விளங்க மேன்மாடங்களில் அசுரர் அரக்கர் ஸ்திரிபூமான்களாயுலவ மாடங்களிலுள்ள ரத்தின சோதி வானசோதிகளினொளிவைக்கெடுக்க தோன்றுந் தோற்றங்

கண்ட சுவர்ணப்பிரபை நாயகன் சுடர்முடியசைத்து இலங்கா
தீபத்தை வர்ணித்த வான்மீகி போதாயனர் முதலியவித்வான்
கள் அதுபோன்ற மலைமேற்பட்டணமாகிய விதனைக்கேள்விப்
பட்டிருந்தால் எவ்வாறு வர்ணித்திருக்கமாட்டார்கள் இந்நகர்த்
தலைவனும் அந்த ராவணன் போலிருக்கிறனென்பதற்கு
யாதோராட்சேபனையுமில்லை அவனைச் சயித்தவீரனோ 72 வெள்
ளம் வானரங்கள் 24 படைத்தலைவர்கள் அனுமார் விபூஷணர்
இளையபெருமாள் முதலானோர் உதவிபெற்றுப் போர்புரிந்த
வனயிருக்கிறன் நாமோ ஒண்டியாயிருக்கிறோம் எல்லாவற்றிற்
கும் ஆனந்தமய அம்மனிருக்கின்றளென்றெண்ணி அரக்கன்
வரவை எதிர்பார்த்தொருபுறமறைவாய் நின்றான். கலகாசூரன்
சாகர தீபாந்தரவரைப் பட்டணத்திலிருந்து பலவகை மேள
தாள முழவுகப் பாவையர் ஆடல்பாடல் செய்துவர அரக்கர்
சூழப்பட்டுக் குடைநிழற்றத்தெற்குக் கோட்டைவாசல்வழிவந்து
பொய்கைப்புறம் சகலரையும் நிறுத்தி இரண்டு கன்னியருடன்
இருப்புயந்திரப் பாயலில் நடந்து கதவைத்திறப்பாற்றிறந்து
உட்சென்று ஏழாந்தலமேறி தானிருக்கும் ஆசனத்திலிருந்
தான் கலகாசூரனைக்கண்டு கலக்கமடைந்த கன்னல்மொழியாள்
நன்னயமாகப்பேசவெண்ணி கண்ணீர்விட்டேங்கி வாட்டமுடைய
வள்போல்நின்றாள் அரக்கன்பார்த்து ஆரமுதம் போன்றவளே
ஒரு நாளுமிப்படிவாடி யிருந்ததில்லையே சஞ்சலம் வந்ததென்
ன வென்றான் இளங்கொடிபோனறவள் இளம்பருவத்திலெடுத்
துவந்து இந்நாள்வரை காத்துவந்தஇராக்கதர்தலைவனே உம்மு
டையகாவலில் என்றைக்கு மில்லாதது இன்று நூதனமாய்ப்
புகுந்துவிட்டது வைத்தகாவலை யிதுவரையில் நம்பியிருந்தேன்
இனி நீர் என்னசொனனுலும் நம்பவேமாட்டேன் ஏனென்றால்
நான் வழக்கம்போல் மஞ்சத்தில் நித்திரை செய்துக்கொண்டிருந்
தேன் ஆகாயக்காவல்அரக்கர் தலைவன் கர்மாக்ஷன் கீழிறங்கிவந்து
தொட்டுத் தழுவ எத்தனித்தான் என்காவலான அக்கினியே
கற்பைக்காத்தது அக்கினிவெப்பத்தால் அவன் பின்னுக்கிடைந்
தான் அரவத்தால் நான்விழித்தெழுந்து அடாகாவற்காரா காவல்
செய்ய வந்தாயா, கற்பழிக்க வந்தாயா நாளையரசனிடம்
சொல்லுகிறேனென்றேன் அவன் நானூறு ராட்சதர்களையும்
அழைத்துக்கொண்டு எங்குபோனனே தெரியாது இவ்வசுரர்
துஷ்டத்தனத்தைத் தெரிந்தல்லவா ஆண்பால் பெண்பால் ஒரு
வரும் ஆகாதென்று உம்மிடஞ் சொல்லியிருக்கிறேன். உம்மு
டைய ஆணைபுறத்திலும் எனனுடைய அக்கினி அகத்திலு
மிருக்கக் காவல்தா னெதற்கு இனி ஆகாயக்காவலும் வேண்டிய
தில்லை யென்றாள் வஞ்சியர்க்கரசி கூறிய வஞ்சக வார்த்தை
யைக்கேட்ட வஞ்சகன் ஆகா இதுவரையிப்படிக் கொஞ்சிப்

பேசினதில்லையே காவல் காத்தபயல் வேலிக்கிட்ட முள்ளு காலுக்குத் தைத்ததென்னும் பழமொழிபோலாய் விட்டானே யென்று ஆக்கிரமங்கிளம்ப அதனை யொருவிதஞ் சாந்திசெய்து அன்னமே, யோசியாதே அவர்களெவ்வுலகம்போய்ப் பதுங்கி னாலும் தேடிப்பிடித்து வரும்படி வீரர்களையனுப்புகிறேன் அவர்கள் சிரங்களை நீகாணும்படியாக வெட்டுகிறேன் பாரென்று வீரவார்த்தை புகன்றான் ஆட்டம் பயிலு மயில் போன்றவள் வாட்டம் நீங்கிய தன்மைகாட்டி அசுரேந்திரா அப்படியே முடிப்பதற்கென்ன தடை தாங்களே அதிகாரஸ்தலத்தில் தெண் டித்தாற் போதுமென்று புன்னகையுடன் புகன்று அவரைக்கண் டறிவோமென்று மதித்துக்கொண்டாள். கலகாசூரன் இன்று பேசிய விசேஷவார்த்தைகளாக மகிழ்ந்து ஆகாயக் காவலை நிறுத்தி விடுகிறேனென்றெழுந்து மாளிகையைக் கடந்துவந்த கூட்டத்துடன் தனதரண்மனை போய்ச் சேர்ந்தான்.

பொருப்புக்கோட்டையிற்சென்று இருப்புக்கோட்டையைக் கடந்து நெருப்புக்கோட்டை சூழவிருந்த நேரிழையின் விருப்புக் கோட்டை வசமான அருப்புக்கோட்டை யரசனாகிய செயப்பிர காசன் அரக்கர்கோன் வந்துபோனதைக் கண்டு ஆகாயப்பரணை விட்டிறங்கி அணங்கரசி முன்வந்தான். மதயானைபோல் நடந்து வருமணாளனை இதமுடன் பணிந்துபாதகனிடம் பேசியதெல்லாம் பேசி விதவிதமான ராகங்களுடன் வீணைகள் மீட்டி யினிய கதை களைப்பேசியிருவருங் கைகோர்த்து ஆருந்தலம்வந்து ஆங்காங்கு வரையப்பட்டிருக்கும் கதை காவியங்களிற்கூறிய தேவர் மனிதர் அரக்கர் அசுரர் முதலானோருருவங்களைப்பார்த்து வருங்காலை யில் ஓர்பக்கத்தில் சீதாலட்சுமண சமேதராய் எழுதப்பட்டிருக் கும் ஸ்ரீராமபிரான்றிருவுருவப்படத்தைக் கூர்ந்துபார்த்த செயப் பிரகாசன் கண்ணுமனமுஞ்சுழல ஸ்மரணைதப்பி அடியற்றபனை போற் சாய்ந்துவிட்டான் மங்கையர்க்கரசி யீதென்னவிந்தை யென்று செங்கையாலணைத்துப் பன்னீர்தெளித்து விசிறியால் வீசிக்களையாற்ற நிம்மலர்மாலையான் செம்மலர்க் கண்விழித்துத் தம்பியே யென்றெழுந்து தாரை தாரையாகக் கண்ணீர்பெருக அடாஎன் அன்புக்களஞ்சியமே ஆருயிர்த்துணையே ஆரணியத்தில் வேங்கை வேட்டையாடி மீண்டுவந்து வரவுபார்த்திருந்தனையோ எவ்விடந்தேடிச் சென்றனையோ என்னையின்றி அன்னையரிடஞ் செல்ல மனம்வராதே நாம் ஒருநாளறுபது நாழிகையில் அரை க்ஷணம் பிரிந்ததில்லையே பெண்ணாசையால் மறந்துவிட்டேனே யென்று பெருந்துயரிலாழும் பெருமானை மருவார்குழலிபார்த்து வருந்தி யிவர்யார்பெற்றமகாரு உடன்பிறந்த சகோதரரை யெவ் விடம்பிரிந்தனரோ கடல்கடந்துவந்த காரணமுந்தெரியவில்லை

கண்டவுடன் காமவின்பத்தைக் கருதினேமேயொழிய வரலாறு கேட்கும்கருத்தில்லாமற் போய்விட்டோமேயென்று கசிந்தமன முடையவளாய் எனதாசைக் கொழுந்தாகிய நாயகமே நீர் எம் மன்னனுடைய புத்திரர் என்றீர்கள் நாமமென்ன தம்பியை எவ்விடம் விட்டுவந்தீர்விபரமாய்ச் சொல்லியருளவேண்டுமென்க விளம்பலானன் பெற்றார்பிறவாநினைவெலாமோட்டி யிதழமு தூட்டிப் பெருமயல்பூட்டிப் பெரும்போர்மூட்டி காமன்வினையி லாட்டி விட்டசீமாட்டியே கேட்பாயாக நான் நீ மதித்துச் சொல்லியபடி பூமியாட்சிக்குடைய அரசகுமாரனல்லன் ஜாதி யில் சத்திரியன்தான் எனது தந்தை பாண்டி நாட்டரசனிடஞ் சேனதிபதியாயிருக்கப்பட்டவர் வீரமார்த்தாண்டனென்னுந்திரு நாமம் பெற்றவர் எங்களன்னையரிருவரும் ஐந்துமாதகர்ப்பமு டையவர்களாய் தந்தை போர்புரியப்போனசமயம்வீட்டாருடன் மனஸ்தாபமாய்வந்த பிணி தீர்வதற்குத் தலயாத்திரையாய் வந்ததில் வேடசேரிவந்து வேடர்கோனுதரவும்பெற்று, எங்களைப் பெற்றனர். பரிபூரணனந்தமுனிவரால் செயப்பிரகாசன், மதிப் பிரகாசனென்று நாமமிடப்பெற்று சகலகலையுங்கற்று மோசமாய்ப் பலியிடத்துணிந்த மாந்தரீகரைக் கொன்று சாமளரூபி யருட்பெற்று கொங்கநாடன் நாட்டில் வேட்டையாடவந்ததில் வேடன்மகன் வேந்தன்மகனுடன் வேட்டையாடி ஓர்பொய்கையிற் றண்ணீரருந்தியிருக்கும்போது நாற்றிசையினும் நால்வகைமிரு கங்கள்வந்தன. மூவருந் தனித்தனி சென்றனர் நான் யாத்திரை வந்த பிராமணன் மகனைக்கொன்ற சிங்கத்தைப்பிடிக்கும்படியவன் சொல்லால்தொடர்ந்து சிங்கங்களைவதைத்துவந்தேன் அவ்விராச சிங்கம் ஓர் பொய்கையிலுள்ள மாய்விமானத்திற் புகுந்தது. நானும் நுழைந்தேன் அவ்விமானம் அந்தரத்திற் பறந்து இத் தீவிலிறங்கியது அச்சிங்கம் குதித்தோட நானுங் குதித்துக் கொல்ல வில்வளைத்தேன் அதற்குதவியாக அரக்கர் வந்தனர் அவர்களையும் வதைத்து சிங்கநுழைந்த குகைவழி நுழைந்து போகக்கூடாதென் றெழுதியிருந்த எழுத்து வரம்பையுங் கடந்து வடசாயற் பாதைவந்து அரக்கிகளைக் கொன்று மலைமீதேறி நீயிருக்கு மாளிகைசோதி வழியாய் இருப்பு மதிலைக் கண்டு பூதங்களைவாட்டி சூத்திரப்பால நாகங்களை வெட்டி வேங்கைகளை மாய்த்து கதவுதிறந்து புகுந்து உன்னைக் கண்டேன். உன்னுசை யால் யாவரையும் மறந்தேன் இதோ தோன்றும் ஸ்ரீராமபிரான் திருவுருவப்படங் கண்டவுடன் ஸ்ரீராமபிரானருகில் லட்சுமணன் இருப்பதுபோல் நமதருகில் நமது தம்பியுமிருப்பவனல்லவா வென்று அவன் ஞாபகம் வந்து புலம்புகின்றேன்நேரிழாயென்று நிருபர் சிகாமணி நிகழ்த்தினன். காதற்கணவன் கூறிவருங் காரணங்களைக் கேட்ட மாதர்க்கரசி வருந்தவேண்டாம் தம்பியைக்

காண்கிற காலங்கண்டு கொள்ளலாம். அசரசங்கார முடிவைத்தான் எதிர்பார்க்கவேண்டுமென்று இருகரங்களாலு மணைத்து உபசாரஞ் செய்தாள் மங்கை, கொங்கை, செங்கை மேனியிற்படலால் சகோதரமயக்கமெலா மொழிந்து காமமயக்கமே மேலாகிக் கலவி பாராட்டிக் களித்திருந்தான் கன்னிநாடனாகிய தென்னர் பெருமான்.

இவர்களிப்படியிருக்க முன் சிங்கரூபமாய்ச் சென்ற மாயாசிங்கன் சிங்கரூபத்தை மாற்றிச் சுபரூபமாய்ச் சாகரதீபாந்தரவரைப் பட்டணம்புகுந்து கலகாசூரன் தேவி சரையைவசிக்கும் அந்தப்புர மாளிகை யடைந்து அவளை வணங்கி அம்மா நீ உத்தரவு செய்தபடி செல்வமகள் ஆரணியவல்லி யழகுக்கேற்ற அழகனாகிய ஓர் ராஜகுமாரனை விமானத்தில் தந்திரமாய்க் கொண்டுவந்தேன். மலைத்துவார வழிக்காவலர் இருபதுபேரை எமலோகமேற்றிவிட்டான் என்போன்ற ஆடவர்களுக்கு அடங்குகிறவனல்லன் அரசனறியாமற் செய்கிற வேலையானபடியால் போர்விளையும்படி செய்யக்கூடாது அந்தப்புரப்பெண்களை யனுப்பி ரகசியமாய் வசப்படுத்தி மகளிடஞ்சேர்த்துக்கொள்வாயென்று செப்பித் தனது மனைசேர்ந்தான் சரையை ஆரணியவல்லியை அழைத்து அம்மா உன்மனப்படி நமது மந்திரி மகன் மாப்பிளை கொண்டுவந்திருக்கின்றானாம் அழகனும் மலைத்துவாரவழி வருகின்றானாம். வீரனும் ஆடவர்போனாற் கொன்றுவிடுவானாம். உன் தோழியர்களையனுப்பி இதஞ்சொல்லி யழைத்துவரச் செய். உத்தமகுண ஆடவன் பெண்கள்மேல் ஆயுதமெடுக்கமாட்டானென்று அரக்கன் மனைவி கூறினள் ஆரணியவல்லி அடங்காமகிழ்ச்சியுடையவளாய் உயிர்போன்ற தோழியர்களை அப்படியேகொண்டுவரும்படி பிரயாணப்படுத்தி யனுப்பிவிட்டு சர்வாபரணமும் பூண்டு கணவன் வரவை எதிர்பார்த்திருந்தாள். தோழியர் ஊர்கடந்து மலைத்துவார வழிக்கடைசிவரை வந்துபார்த்து ராஜகுமாரனைக் காணாமையால் திரும்பித் தலைவியிடஞ்சென்று செப்பினர் அவள் தாயிடம் வந்து சொல்ல சரையைப் பெண்களால் மாயாசிங்கனை யழைத்து நீர் கொண்டுவந்த ராஜகுமாரனைக் காணகவில்லை யென்று கன்னியர்கூறுகின்றனரே அதென்ன காரணமென்றாள் மாயாசிங்கன் சற்றுலோசித்து வந்தவன் எங்கே போவான் நீங்கள் அதைப்பற்றி யோசிக்கவேண்டாம் எத்தனைநாட்சென்றாலுங் கொண்டுவந்து சேர்க்கிறேனென்று அவர்களிடம் விடைபெற்று சூரியனஸ்தமயமாய்விட்டபடியால் தனியே சென்று மலைத்துவாரவழிபோய் விமானமிருக்கு மிடமெல்லாம் பார்த்துத் திரும்பி வடசாயற்பாதை போய் விட்டானோ வென்று அப்பாதையை எட்டிப்பார்த்தனர். அரக்கிகள் மாண்டுகிடந்தனர். அச்சமேலிட்டவனாய் அவ்வழி சென்று இருப்புக்கோட்டைக் கீழ் வாசற்பூதங்கள் மாண்டு கிடக்கக்கண்டான். கண்டவுடன் நடுங்கி இவ்வரசகுமாரன் நமதரசன் கொண்டுவந்தும்

வைத்திருக்கும் ராசகுமாரத்தியிடம் போனதாகத் தெரிகின்றது. வெளிக்காவலை யழித்தவன் உட்காவலில் எப்படிச் சென்றானோ? இது வெளியானால் அரசன் மாணுக்கினை செய்தே விடுவான். ஆகாய க்காவலர் கண்டாலுங் கண்டுகொள்வார்கள். நாம் இவ்விடம் நிற்கக் கூடாதென்று தனது மனைவந்து மறுநாள் தெருவில் உலாவிய போது ராசகுமாரத்தியை தொட்டணைக்கத் துணிந்த காமாக்ஷனை யும் அவனைச்சேர்ந்த நானூறு ராட்கதர்களையும் போய்ப் பிடித்து வரும்படி அரசனுத்தரவாற் செல்லும் வீரர்களைக்கண்டு சங்கதி விசாரித்து சரி நாம் எண்ணியபடி மன்னன் குமரன் மங்கையிடஞ் சென்றதால் இவ்விதக் கலாபனைச் சொல்லுண்டா யிருக்கிறதென்று இரவி மறைந்தவுடன் பக்ஷிரூப மெடுத்து மேகமண்டலத்திற் பறந்து ஆகாயப் பரணில் வந்திறங்கி மாளிகையில் நடக்குந் தன்மைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். சூரியப்பிரகாசமாய்ச் சொலிக்குந் தூய மணிமாளிகையில் சோமன் குலத்து மன்னனும் சோமகாந்தன் கன்னியும் இனிய சட்சுவை யன்னமருந்தி தாம்பூலந் தரித்து சாஸ் திரங்கள் படித்தும் வியாக்கியானங்கள் விரித்தும் சம்யோக விலைகள் புரிந்தும் புண்ணிய லோகபோகங்களை யனுபவித்திருக்கப் பறவையி னுருவாயிருந்த மாயாசிங்கன் வார்த்தையின் சார காரணங்களையெல் லாந் தெரிந்து வியந்து நாம் எவளுக்காகக் கொண்டுவந்தது. எவனிடஞ் சேர்ந்தது. இரவில் இவ்வண்ணமிருப்பவர்கள் பகலில் எவ்வண்ணமிருப்பார்கள். அதனையும் பார்ப்போமென்று அவ்விடமே யிருந்துகொண்டான். புது மணப்பெண்ணும் புது மணவாளனும் இவ் விரவு அநேக நாழிகை நீடித்திருக்கக் கூடாதா விடிந்துபோயிற்றே யென்று வெறுக்கும்படி சூரியனுதயமானான். சற்றுநேரம் சென்று கலகாசூரன் வருஞ்சமயம் செயப்பிரகாசன் ஆகாயப்பரணில் வந்தி ருந்தான். மாயாசிங்கன் இவ்வுளவைக்கண்டு இவர்களின் சேர்க்கை யும் இருப்பும் இப்படியா யிருக்கின்றதெனறு இருளானகாலந் தன் னிருப்பிடம் வந்து விமானத்தை விமானசாலையிற் சேர்த்து பலவாறு யோசித்து ராசகுமாரன் வரவு நம்மாலேற்பட்டு தனக்கென்று வைத் திருந்த ராசகுமாரத்தியைச் சார்ந்திருப்பதால் வெளியானல் நமக்கே மோசம் வெளியாவதற்குமுன் ராசகுமாரனை வேறு பிரித்துவிட வேண்டும் ஆரணியவல்லிக்குச் சமயம்போல், சாந்தமான ஒருவனைக் கொண்டுவந்து கொடுக்கலாமென்று இரண்டுமூன்று நாளா யோசி த்து அசுர தச்சனிடம்போய் ஆகாயப்பரண் மாளிகை வடிவாய் ஓர் விமானம் உண்டுசெய்யும்படி செய்து ஓர்நாளிரவிற்போய் ஆகாயப் பரண் மாளிகையை அசையாமற் போர்த்து வேறிடத்திற் கொண்டு போய் வைத்துவிட்டுப் புதிதாயுண்டுபண்ணிய சூட்சிய விமான மாளிகையை அதில்வைத்துமாயமாய்மறைந்திருந்தான் மாயாசிங்கன் செயப்பிரகாசனுஞ் சுவர்ணப்பிரபையும்காமலீலையால் இரவைக்கடத் திப் பகலில் கீழுமேலுமான விடங்களி லிருப்பவர்களானதால் அசு

ரின் வருங் குறிப்பைத் தெரிந்து அரசன்றிருமகன் அந்தரப் பரணி லமர்ந்து இரவு நித்திரையின்றி யிருப்பவனுதலால் தன்னை மறந்து நித்திரை போனுன். மாயாசிங்கன் இதுதான் சமயமென்று விமான மாளிகையை அசையாம லந்தரத்திலெழுப்பி மேகமண்டல வழி யாய் வடதிசை நோக்கி அநேகந் தீவுகள் கடல்கள் கடந்து ஓர் தீவு தோன்ற அதனருகில் விமான வடிவப்பலகைப் பொருத் தைத் தட்டிவிட்டான். பலகை கவிழ்ந்து செயப்பிரகாசன் கட லே கதியாய் வீழ்ந்தான். மாயசிங்கன் விமானமூர்ந்து சென்று மரமாளிகையை முன்போற் பரணில் வைத்துவிட்டுத் தன் மனை சேர்ந்தான். செயப்பிரகாசன் திடீரென்று கடலில் விழுந்து கண்களை விழித்து இதென்னமாயம் ஆகாயப்பரணிற்றுயின்ற நாம் இங்கு விழவேண்டிய காரணமென்ன? ராட்சதமாய்கையாகுமென மதித்து மலைபோல் வரும் அலைமேல் மிதந்து நீந்திச் சுவர்ணப் பிர பாய் சுவாணப்பிரபாயென்று கூவி கைகாலயர்ந்துஆனந்தரூபி அபி ராமி சிவகாமி யெனையாளு மனேன்மணி பராசத்தி பாலனைக் காப் பாய் பரமேட்டி யென்று ஓலமிட்டுக் கடலில் உழன்றலையும்போது காரானையைக் காத்தோன் பேரான தங்கையருளால் உடைபட்ட கப் பற்பலகை யொன்றுவர அதன்மீதேறி ஆகாயத்தைப் பார்த்து ஒரு வரையுங்காணுமல் எதுவும் ஊழின்படி நடக்குமெனத் தெறி ஏறிய பலகையை அலையானது தள்ள ஒதுங்கிய ஒருதீவினிடமாய்ப்போய்ச் ச்சேர்ந்தான்; செயப்பிரகாசன் இங்கே சுவர்ணப்பிரபையானவள் அரக்கன் போனதின்பின் அவனிடம் கேட்டசெய்தியை ஆசை நாயக னிடம் சொல்லவேண்டுமென்கிற விருப்பமுடையவளாய் அண்ணாந்து பார்த்துக்கொண்டேயிருந்து அண்ணல் வராததால் தியக்கமுண் டாகி அரக்கன் மாளிகையைக் கடக்குமுன் வந்துவிடுவாரே தாமசப் படவேண்டியதென்ன தூங்கிவிட்டனரோ எனத் தன் மெல்லிய குரலாலழைத்து பதில்மொழியில்லாததால் மனம்பதறிப் பாவி ராட் சதர்கள் மோசஞ்செய்து விட்டனரே என்று கலங்கி மயங்கி மூர்ச் சையாகி தானே தெளிந்து கையை நெறித்துக்கண்ணீரோட அழகு குலாவிய திருமுகம் என்று பார்ப்பேன். சாதுர்யவசன மென்று கேட்பேன் காட்டிமறைத்த செயல்போலாச்சே. அழியாத அக்கினிக் கவசத்தையும் அழித்து என்றும் கண்டறியாத ஆனந்தத்தையுந் தந்து ஆருத்துயரில் அழுந்தும்படி விட்டுப்போன அண்ணலே! இனி எவ்விதக் காவலால் என் கற்பைக்காப்பேன் காலம் பலவாய் கருதியிருந்தபொருள் கைக்கு வந்தும் கடந்துபோய்விட்டதே எனக் கசிந்துருகி ஒருவாறு தேறி ஆதியிற்கொண்ட நிர்ணயப்படியிருப் போம் அசுரராஜனுக்குச் சொன்னநாளைக்குள் வந்தாலாச்சுது வரா விடில் உயிரைவிடுவது உத்தமமென்று துணிந்து உயிர்நீங்கிய உடல் போல் ஏக்கமுற்றிருந்தாள் சுவர்ணபிரபை.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

தெண்டிரைக் கடல்சூழ்ந்த தீவுசென்ற செயப்பிரகாசன் தெய் வமேயெனக் கரையிலேறி வஸ்திர ஈரத்தை உள்ளடங்கிய காமவெப் பமே யுலாத்தப்பித்தம்பிடித்தவன்போல் அயர்ந்து எண்ணுதஎண்ண மெல்லாம் எண்ணி யெண்ணி எனக் கானந்தத்தேனை யருளிய தெய் வமலரை உள்ளமெலா மினிக்கும் ஆரமுதை பார்க்கப்பார்க்கப் பிர மானந்தந் தரும் போகக் களஞ்சியத்தை நான் இப்பிறவியிற் கண் டடைந்த பாக்கியத்தை மாணிக்கமாளிகையிலிருந்த மரகதத்தை மாசுபடாக் கற்பின் மகத்துவத்தை என்று காண்பேன். என்றுசோக மாறுவேன். இருப்பிடத்தும் படுக்கையிடத்தும் சற்றுவிலக மனம் பொருதவள் ஆகாயப் பரணிற்போயிருந்த நான் இவ்வளவு நேரம் வரை வாராததைக்கண்டு என்ன நினைந்தனளோ! எத்துன்ப மடைந் தனளோ! ஆவியை விட்டனளோ! பாவியாகிய என்னாலல்லவோ கற் பைக் காத்திருந்த கனற் கவசமும் போய்விட்டது. வேலியில்லாப் பயிர்போலானளே அவளிருக்குந் தீவு இன்னதிசையென்று தெரிய வில்லையே பரணிலிருந்த நம்மைத் தூக்கி யெறிந்தவர் யாரோ அறி யாமற் போயினேனே? அவள் போகக்கடலிற் களித்து பின்பு ஏகக் கடலிலமுந்தி இப்போது சோகக்கடலில் மயங்கிசோர்கின்றேனே? இக்கடல் கடப்பதற்கோ ராதரவையுங்காணேனே? நித்திரை சத் துரு வென்பது நிசமாய்ப்பலித்ததே. என்று பலவிதமாய்ப் புலம்பு வான். சமுத்திரக் கரையிலுலாவுவான் விருக்ஷ நிழலிலிருப்பான். ஆங்கு இணையிணையாய்த் திரியும் பறவைகளைக் கண்டு நாம் இனம் பிரிந்து போனேமேயென ஏங்குவான். அவள் இதழ்போன்ற பவ ளங்களையும், நகைபோன்ற முத்துக்களையும் கடற்கரையிற்கண்டு கண்ணீர் விடுவான் இவ்வித சோகதாபத்துடனிருக்கும் ஏந்தலான வன் சற்றுதூரஞ் சென்று பார்க்க விருக்ஷஞ் செடி கொடிகளடர்ந்து பல பிராணிகளும் நிறைந்து மனிதர்களே யில்லாத நிர்மானுஷயத் தீவாயிருக்கக்கண்டான். மனிதசஞ்சாரமில்லாத அவ்விடத்தில் மயக்கமுந் தியக்கமு மென்மேல் வளர யாதொன்றுந் தோன்றும லயர்ந்து நிற்கும்போது கீழ்திசையிலிருந்து மேல்திசையை நோக்கி இரண்டு மனிதர்கள் வேகமாயோடி வருகின்றனர். அவர்களைத் தொடர்ந்து இரண்டு காபிரிகள் பருத்த தேகமுடையவர்களாய் மான்களைத்தொடரும் வரிவேங்கைகள்போல் ஓடிவருகின்றனர். அவ் வாறோடிவருவதைச் செயப்பிரகாசன் கண்டு சித்தத்தில் யாதொன் றுந் தோற்றுமல் அறிவோமென்று அப்பக்கமே நடந்தான் பின் னேடிவரும்; காபிரிகள் நெருங்க நெருங்க முன்னேடும் மானுடர் கள செத்தோம் செத்தோமென் றலறியோடிவந்தனர். அதனைக் கண்ட அரசன் மகன் இப்பாதகர்களால் இவர்களுக்கு ஆபத்தல்ல வோ விளைந்திருக்கின்றதென்று விரைந்துசென்று முன்னேடுகிறவர் களை அஞ்சாதீர் அஞ்சாதீர்களென்றும் பின்னேடி வருபவர்களை நில்லுமின் நில்லுமினென்றும் கூறினன். அவ்வார்த்தை உயிரை

நம்பாமலோடுகிறவர்களுக்கு அமிர்தம்போலிருந்தபடியாய் அவர்கள் ராசகுமாரனைத் திரும்பிப்பார்த்து சற்று பயமகன்று நின்றனர். பின்னேடித்தொடரும் மூர்க்கர்கள் அவ்வார்த்தையில் தடைபடாமலும் ராசகுமாரனைச் சட்டைபண்ணுமலும் சீறிப்பார்த்து அவர்களைப் பிடிக்க நெருங்கினர் உடனே உத்தமன் உடைவாளை யுருவி இரக்கமற்ற பாவிகளை இரண்டிரண்டு துண்டாகும்படிவெட்டியெறிந்தான்

வாலிபரிருவரும் வள்ளல் பதாம்புயத்தில் தீர்க்கதண்டமாய் வீழ்ந்து எங்கள் உயிர்காத்த குலதெய்வமே சற்றுநேரம் தாமரைக்கண் பார்வைப்படா திருக்குமாகில் எங்கள் கதி ஏதாகுமோவென்று கண்ணீர்சொரிந்தழுது நின்றனர் அவர்கள் நடுக்கத்தையும், ஓடுக்கத்தையுங்கண்ட நல்லையூராளி ஓ நிர்ப்பாக்கியர்களே நீங்கள் எந்தத் தேசம். இந்தத்தீவுக்கு வந்ததென்ன இக்காட்டுமிராண்டிகள் உங்களைப் பக்ஷிக்கும்படி தொடரவேண்டியதென்ன? செப்பக்கடவீர்களென்ன அவர்கள் சிரமேற் கரங்குவித்து செப்பலாயினர் திங்களைப் போன்ற கோரப்பற்காரரிடஞ் சிக்கி மாளும்படியான. எங்களைக் காத்தருளிய இறைவனே கேட்டருள்வீர் நாங்களிருப்பது மருதாலயமென்னும் பட்டணம் மாதவசிங்குவினுடைய மைந்தர்கள் அங்கன் துங்கனென்று எங்கள்பெயரைச் சொல்வார்கள் கடற்றுறை முகமாகிய அரங்கபட்டணத்தில் தயாளசிங்குவினுடைய குமாத்திகளை மணமுடித்து மாமனார் வீட்டில் விருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தோம் தீவாந்தரவாசிகள்போற் சிலர் வந்து இன்றிரவு கடற்றுறைக் கட்டிடத்தில் பல அதிசயங்கள் காட்டப்படும் பார்க்க வருவோர் யாரும் வரலாமென்று பறைசாற்றினர். நாங்கள் அவைகளைப் பார்க்கும்படியான விருப்பமுடையவர்களாய் ஆரங்கபட்டண ஆடவருடன் சேர்ந்து துறைமுகவீடுதி சென்று ஆசனங்களிலமர்ந்து காட்டும் அதிசயங்களைப் பார்த்துக்கொண்டிருக்க அச்சமயம் இருவர் நீங்கள் இதுவரை சாப்பிட்டிராத வஸ்து சாப்பிட்டுப்பாருங்களென்று பளிக்குப்பாத்திரத்தில் ஓர்விதப் பானக்கத்தைக் கொண்டு வந்து கொடுத்தனர். வந்தவர்களெல்லாம் வாங்கிச் சாப்பிட்டபடியால் நாங்களும் வாங்கிச் சாப்பிட்டோம். அது தித்திப்பாயிருந்து சற்றுநேரத்தில் ஓர்வித மயக்கத்திலாக்கியது உடனே அங்கு பரப்பிய மேசைகளிற் படுத்துவிட்டோம். பின்பு என்ன நடந்ததோ? தெரியாது விடிந்துபார்க்கக் கருங்கடலிலோடும் கப்பலிலிருக்கத்தான் கண்டோம் கரையிலிருந்து கப்பலுக்கு வந்தமாயந் தெரியவில்லை. அக்கப்பலில் வாலிபரான ஜனங்களைக்கண்டோமேயொழிய வேடிக்கைபார்க்கவந்த முதியரும் இளையருமாகிய ஜனங்களைக்காணவில்லை. கப்பலிலுள்ள ஜனங்கள் கலக்கமடைந்து கூட்டங் கூட்டமாய்க் கூடிக் கூச்சலிடும்போது மூர்க்கர்கள் ஆராடா பேசுகிறவர்கள் பேசினுற் கடலிற்றூக்கி யெறிவோமென்றனர் ஒருவரும்பேசவில்லை

வேளைக்கு வேளை சிறிது கோதுமைரொட்டியும் தண்ணீரும் கொடுப்பார்கள் வாங்கிச் சாப்பிட்டு நேருங்கதி இன்னதென்றறியாமலிருந்தோம். இரண்டுநாள் இரவுபகலோடிய கப்பலை இத்தீவருக்குக் கொண்டுவந்துநங்கூரம்போட்டு நிறுத்தித் தலைமையானஜங் கொடியவர்கள் எங்களுடன் மூன்றுபேரையும் ஒருவள்ளத்திலேற்றி கரைசேர்த்து தீவளர்த்து மூன்று தீயவர்கள் மூன்று மனிதரைத் தடிகொண்டடித்துப் பதைபதைத்து குற்றுயிராயிருந்து கதறக் கதறத் தலைகீழாய்ப் பிடித்துத் தீயில்வாட்டினர். இரண்டுபாதகருப் எங்களையும் அவ்வண்ணஞ்செய்ய எத்தனித்தனர் நாங்கள் அக்கோரங்களைக்கண்டு குலை நிலைந்து குடல்கலங்கி இத்திசை யோடிவந்தோம் ஆயுசுப்பலத்தால் ஆண்டவன் அவர்கள் காற்கதியைக் குறைவாக்கி எங்கள் காற்கதியை யதிகமாக்கித் தங்கள் திருக்கண்பார்வைபடும்படி செய்தான் வாசல்வரை வந்து மறித்தமனைவியரை நினைக்க நினைக்க மனமெல்லாம் நெக்குநெக்கா யுருகுகின்றன. கூடவந்தவரைக் கோவென்றலற அக்கினியில் வாட்டுங்கோரத்தை நினைக்கஆவியெல்லாங் கலங்குகின்றன அண்ணலேயென வருந்திக்கூறினர். பதட்டமுடையவர்கள் கூறிவரும் பரிதாபவார்த்தையைக் கேட்ட பாண்டிநாடன் சிந்தையிலிரக்கமுஞ் சீற்றமும் பொங்க இத்தகைய கொலைபாதகரு மிருக்கின்றனராவெனறிசைத்து ஆலோசனைசெய்து உமாருங்கள் மணவாளப்பிள்ளைகளே பதறவேண்டாம் கொடியவரெவரையுஞ் சங்காரஞ்செய்துவிடுவேன். ஆனால் இத்தீவோ மனிதசஞ்சாரமில்லாத இடமாயிருக்கின்றது மனிதர்கள் வசிக்கப்பட்ட இடங்களுக்குப் போய்ச்சேர அக்கப்பலைத் தவிர வேறொன்றுமில்லை காப்பிரிகள் மனிதர்களைக்கொண்டு போகுங் காரணமுந் தெரியவில்லை அதனையுங் கண்டறியவேண்டியதாயிருக்கின்றது.

ஆனதால் அதற்கோருபாயஞ் சொல்லுகிறேன். அதாவது நீங்கள் வெட்டுண்ட காபிரிகளுடையை யணிந்துகொள்ள வேண்டியது. நான் உங்களிலொருவனைப்போல் வருகிறேன். அவர்களிடம் மாலை நேரஞ் செல்வோம். இன்னொருவனை யெங்கேயென்று கேட்டால் மலைப்பாம்பு விழுங்கிவிட்டதென்று சொல்லுங்கள். பின்பு அவர்கள் நோக்கங்களைக் கவனித்துக்கொள்வோ மென்றனன். அவர்கள் அப்படியே காப்பிரிக ளுடைகளைப்பூண்டு செயப்பிரகாசன் முன்னடக்க நடந்து பகலவன் மறைந்து மாலையான சமயம் பாதகர்களைக் கண்டனர். மூவரையும் சுட்டு தனித்தனி விலாப்புடைக்கத் தின்றுகொண்டிருந்த பாவியர் மூவரும் இவர்களைக்கண்டு என்னடா காற்கதி யற்றவர்களே! அற்ப மானிடர்களை யோடிப்பிடிக்க இவ்வளவு நேரமா? இன்னொரு மனிதனை யெங்கே யென்றனர். காப்பிரி வேடக்காரர் சிநேகிதரே எங்களுணவா யேற்பட்டிருந்த மனிதரை யோடிப்பிடிக்கத் தொடர்ந்ததில் அகப்படாமல் அதோ தெரிகிற

f.

மலைக்கணவாய் வழியேயோடினர். ஒருவனை மலைப்பாம்பு விழுங்கிவிட்டது. இவனையும் பிடித்தோம். அங்குள்ள கனிவர்க்கங்களருந்திப் பசியுந் தீர்ந்து கொண்டோம். கொல்லாமற் கொண்டுவந்தோமென்றனர். அவர்கள் சரியென்று ஒப்பி ஆக ஆறுபேரும் வள்ளத்திலேறிக் கப்பல் சேர்ந்தனர், அங்கன் துங்கனாகிய இருவரும் காபிரிகளுடைகளை மாற்றித் திங்கள் குலச்செல்வ னருகிலிருந்தனர். செயப்பிரகாசன் அங்குள்ள வாலிபரனைவரையுங்கண்டு வருந்தி எத்தனை மாதர்கள் நமது மாதாக்களைப்போல் வாடுகின்றனரோ. எத்தனை மங்கையர் நமது தேவியைப்போல் தியங்குகின்றனரோ பாவிகள் இவர்களை எதற்காகக் கொண்டுபோகின்றனரோ. எல்லாம் போய்ப் பார்ப்போமென்றிருந்தான். அரக்கர்களால் விடப்பட்ட அக்கப்பல் இரண்டு மூன்றுநாள் இரவு பகலாயோடி ஓர் தீர்வையடைந்தது. தலைவர்கள் சனங்களை வள்ளங்களி லிறக்கிக் கரையிற் கொண்டுபோய்ச் சேர்த்து சுற்று மதிலும் நடு மாளிகையுமாயுள்ள ஓரிடத்தி லமர்ந்திருக்கச் செய்தனர். செயப்பிரகாசன் அங்கன் துங்கனாகிய இருவரும் பக்கத்தில் வர ஆங்குளளவைகளைக் கண்டு மாலையான சமையம் அங்குள்ள ஓர் மாளிகையைப் போய்ப் பார்த்தான். அங்கு தீபசோதி யிலங்க ஐந்து புருஷர்களிருக்கக் கண்டான். இவர்கள் யார் மானிட வகுப்பாயிருக்கிறதே யென்று சற்று நெருங்கி நீவீர் யாவரென்றான். ஐவரிலொவனாயிருந்தத் தம்பி அண்ணா வந்தீர்களாவென்று எழுந்தோடிவந்து தாரை தாரையாய்க் கண்ணீர் பொழிய தாமரைக்கமலம்போன்ற சேவடியில் வீழ்ந்து புலம்பினன். தன தருமைத் தம்பியைக்கண்ட சமரசன் புதல்வன கமலக்கண்ணீர் வழிய பொருமியேங்கி யிருகரங்களாலு மெடுத்து மார்புடனணைத்து சகோதர வாஞ்சையென்னுங் தடங்கடலிலாழ்ந்து கண்ணீரால் அவன் உடல் நனைய உடை நனைய என் பெருந்துணையே. என் பெருந்தவமே. எங்கு சென்றாய் இங்கு எப்படி வந்தாய். நமது தோழன் கிரிசரனெங்கே. பாகாங்கனெங்கே. விட்டுப்பிரியாத உன்னை வேட்டைத்தலத்தில் விட்டுவிட்டு பெண்ணாசையால் மறந்த பெரும்பாவியானேனே என்று பிரஞையற்று நிலத்தில் விழுந்து மயங்கி அங்கன் துங்கன் தேற்றத்தெளிந்து தம்பியைப் பலதரந் தழுவி என்னைப்பிரிந்து இவ்விடம் வந்ததைச சொல்லையா வென்று கேட்க, உத்தமத் தம்பி யுரைக்கலாயினன். திருமுக மென்று காண்போமென்று தியங்கி யிருக்கும் ஏழையைத் தேடி வந்து கண்ட அண்ணா கேட்கக்கடவீர், நாம் பொய்கையிலிருந்து சொல்லிப் போனபடி நாங்கள் மூவரும் மூன்று திசைகளிலும்போய் புலி யெருமை பன்றிகளைப் போக்கி முன் பின்னாக ஆலாவிருக்ஷத்தில் வந்து தங்கள் வரவை எதிர்பார்த்திருந்தோம். தாங்கள் வரவில்லை. மரத்திலிருந்த மறையவனைப் பார்த்தோம். அவனுமில்லை. பின்பு நாங்கள் மூவரும் தேவரீர் சென்ற வடதிசையை நாடி வந்

தோம். ஓர் சிங்கம் பின்சென்றதாக அடி அடையாளங் கண்டு ஓர் பொய்கைவரை வந்தோம். பின்பு அவ்வடையாளமுந் தெரியவில்லை, பின்பு அடியேன் வருந்தி இருவரையும் நோக்கி நீங்களிருவரும் ஊர் போய்ச் சேருங்கள். நான என் தமையனைத் தேடிக் கண்டு பிடித்து வருகிறேனென்றேன். அதற்கவர்கள் நீ போகிற இடங்க ளெல்லாம் கூடவந்து கொற்றவனைக் கண்டு பிடிப்போமே யொழிய ஓர்போதும் உங்களைவிட்டு ஊர் போகமாட்டோமென்று சொல்லினர். நாங்கள் மூவரும் ஒன்றுபட்டு வனம் வனாந்தரங்கடந்து காரணவா சிப் பட்டணம்வந்து ஓர் சத்திரத்தில் தங்கினேம். சத்திரத்துள் ளார் எங்களிளைப்பை யறிந்து அன்னம் படைக்கச் சாப்பிட்டிருக் கும்போது நான் இவ்வூரிற்போய்த் தமையனை தேடி வருகிறேனெ ன்று அவர்களை யங்கிருக்கச்செய்து காரணவாசிப் பட்டணக் கடைத் தெரு மற்றத் தெருக்களெல்லாம் போய் ஓர் ராசகுமாரன் வரக்கண் டீர்களாவென்று விசாரித்துத் திரியும்போது ஓர் பஞ்சகல்யாணிக் குதிரை யுலவிக்கொண்டிருந்தது. அங்குள்ளவர்களிடம் இது யாரு டைய குதிரையென்று கேட்டேன். அவர்கள் இக்குதிரை எவ் வுலகத்துள்ளதோ யாருடையதோ தெரியாது, இங்குவந்து உலவு கின்றது. ஏறினவரை மறுபடி காண்பதில்லை. வன மார்க்கமாய் ஓடு கின்றது. ஏறினவனொழியக் குதிரைதான் வருகின்றது முறையே. இவ்வூர் தலையாரிமகன், சேனாபதிமகன், மந்திரிமகன், அரசன்மகன் ஆக நான்குபேரு மேறினர். அவர்களைக் காணோம். பின்பு ஒரு வரு மேறுகிறதில்லை. உலவுகின்ற தென்றனர். நான் யோசித்த தாவது, தேவரீரும்இவ்விடம்வந்துஇவ்வாசியிலேறி யிருக்கலாம் அல் லது இதன் சூட்சியையாவது கண்டுபிடிக்கலாமென்கிற எண்ண முடையவனாய் அப்பரியிலேறினேன். அது பூமியிற் சிறிது தூரம் நடந்து வானத்திற் பறந்து கடல்கடந்து இவ்விடங் கொண்டுவந்து இறக்கிவிட்டு மறைந்தது. நான் இவர்களைக்கண்டு விசாரிக்க முன் சொல்லிய காரணவாசி மன்னன்மகன் மந்திரிமகன் சேனாபதிமகன் தலையாரி மகனென்பதாகத் தெரிந்து தேறுதலை சொல்லித் தேவரீ ரைக் காணுத்தியக்கமே மென்மேலும் பெருக இவ்விடமிருக்கிறேன். தெய்வச் செயலாய் வந்து சேர்ந்தீரென்று செப்பினான். தம்பி கூறி வந்த சங்கதிகளனைத்துங் கேட்ட தமிழ் வளநாடன் தான் போய் வந்த சங்கதிகளனைத்தையுஞ் சவிஸ்தாரமாய்ச் சொல்லி இடையில் வந்தது. எப்படியானலு மாகட்டும் உடன்பிறப்பாகிய நீ வந்து சேர்ந்ததே போதும் இனிவருங் காரியங்களைப் பார்த்துக்கொள் வோமென்று இருவரும் பேசி இத்தீவினுள்ளவர்கள் மானிட வர்க் கங்களை உபாயமாய்க் கொண்டுவந்து சேர்க்குந் தன்மை தெரிய வில்லை. அவர்கள் நோக்கப்படி நடந்து பார்த்தாற்றான் தெரியுமென் று சந்திவந்தனைத் தொழில் முடித்து தாகசாந்தி செய்து மனிதர்க ளுடன் அம்மாளிகையிற் றுயின்றனர். பகலவனுதித்துச் சகலரு

மெழும்போது இவர்களுமெழுந்து பார்க்கத் தங்கள் தனுசு நுனியில் ஓலைச்சுருள் கட்டித் தூங்கக்கண்டனர். இஃதென்ன காரணமென்று அதனை யவிழ்த்து வாசித்துப் பார்க்க நீங்கள் இன்னுஞ் சிலதூரஞ் சென்று ஒரு பெரிய சிறைச்சாலையி லடைக்கப்படுவீர்கள். அதினின்று தப்பவேண்டுமானல் அச்சிறைச்சாலை யீசான்யதிசையில் ஓர் படலைக்கல் மூடப்பட்டிருக்கின்றது. அதனைப் புரட்டினல் ஓர் சுரங்கவழி போகும். அவ்வழியே சென்று தப்பித்துக்கொள்வீர்கள். இந்த ரகசியத்தை யொருவரிடமும் சொல்லக்கூடாதென்று எழுதியிருந்தது. அதனை யுணர்ந்த அரசமைந்தர் ஆச்சரியப்பட்டு எல்லாம் போயறிவோமென்று அரக்கர் சொற்படி நடக்கும். மனிதருடனே நடந்து ஓர் காவற் கட்டிடத்தைக் கண்டனர். அன்னதில் அவர்களுடன் சென்று நோக்கத் தங்களுக்கு முன்னதாக வந்திருக்கும் அநேகஞ் சனங்களைக் கண்டனர். அவர்களிடம் சனங்களை யடைத்துவைக்கும் விர்த்தாந்தந் தெரியுமாவென்று தனித்தனி கேட்க அவர்கள் கண்ணீர்விட்டு எங்கள் கதியை என்னவென்று சொல்லுவோம். கடற்றுறைப் பட்டணங்களாகிய எங்களூர்களில் நாட்டு மனிதர்களைப்போல் வந்து நாடகம் நடத்தியும் யாபாரமுறை செய்தும் பல பொருள்களைக் காட்டியும் மயக்கிக் கப்பலில் வந்தேறும்படி செய்தும் உணர்வில்லாம லிருக்கும்போது தூக்கிவந்தும் மாயக் கப்பலிலேற்றி வஞ்சகர் இங்கு கொண்டுவந்து விட்டனர்!

நீங்களும் எங்களைப்போல வந்தவர்களாய்த் தெரிகின்றது. என்ன செய்ய எண்ணி யிருக்கின்றனரோ தெரியாதென்றனர். அங்குள்ள காரியக்காரர்கள் உணவு கொடுப்பவரும் கணக்கெடுப்பவருமாயிருந்தனர். காவலன் மைந்தர் கதிரோன் மறைந்து கடுஞ்சிறைப் பட்டவர்யாருங் கண்ணயர்ந்து நித்திரையான சமையமெழுந்து ஓலைச் சீட்டிற் கண்டபடி வெளிப்போந்து இதன் விர்த்தாந்தங்களை விசாரிப்போமென்று ஈசான்யதிசை வந்து அங்கு மூடியிருக்கும் படலைக் கல்லைப் புரட்டி சுரங்கவழி சிறிதுதூரம் நடந்து அடைப்புக்கல்லைத் தள்ளி மேற்றரை வந்தனர். அங்கு தெய்வரம்பையர் போன்ற இரு மாதர்கள் அவ்வனவெளியில் கலை நிலாவொளியில் பால்போன்ற வெண்ணிறப் பரி யிரண்டிலமர்ந்து உல்லாசமா யுலாவிக்கொண்டிருந்தனர். செயப்பிரகாசன் இவர்கள் எவ்வுலக மாதர்களோவென்று எண்ணிக்கொண்டு நிற்கும்போது அம்மாதர்கள் அரசன்றிருமைந்தர் முன்பு ஆவலாய்வந்து ஆசை மணவாளர்களே வந்தீர்களா? உங்கள் வரவை யெதிர்பார்த்தே இவ்விடங் காத்திருக்கின்றோம். எங்கள் காமவேட்கை நீங்கக் கலந்தின்பந் தருவீர்களேயானல் உங்களை அகண்ட மண்டலாதிபதிகளாக்கி விடுவோமென்றனர். அவ்வார்த்தையைக்கேட்ட செயப்பிரகாசன் தம்பியை நோக்கி இவர்கள் யாராயிருக்கலாம் தெரியுமா வென்றான். மதிப்பிரகாசன் அண்ணு

நான் நால்வருடன் கடற்றுறை மாளிகையிலிருக்கும்போது இவர்கள் என்னிடம் வந்து மணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லினர். நான் மறுத்துவிட்டேன். சென்றனர். இவ்விடம் வந்து அதனையே சொல்லுகின்றன ரென்றனன். செயப்பிரகாசன் இவர்கள் ரூபம் தெய்வலக்ஷணமா யிருந்தாலும் அரக்கர் குலப்பெண்களாகவே யிருக்கலாம். இவர்கள் குல ஆடவரையே நம்ப முடியாதிருக்க இவர்களை நம்பி என்ன வார்த்தை பேசுகிறது. என்ன உளவு கேட்கிறது அகற்றிவிடுவா யென்றான். மதிப்பிரகாசன் ஓ மாதர்காள் உங்கள் விருப்பத்தை கடற்றுறை மாளிகையிலேயே மறுத்துவிட்டேனே. திரும்பவும்வந்து சொல்லலாமோ வென்றனன். மங்கையர்கள் வலியவருஞ் சீதேவியைக் காலாலே தள்ளாதீர்கள். மணத்தை மறுத்தால் உங்களுக்கு வருவது மரணந்தானென்றனர். செயப்பிரகாசன்எங்களுக்கு மரணம்வரும்போது பார்த்துக்கொள்வோம். நீங்கள் நின்று பேசுகிறதாயிருந்தால் உங்களுக்கு நிச்சயமாய் மரணம் நேருமென்றான். - மாதர்கள் மறு வார்த்தைகள் பேசாமல் வாம்பரிகளூர்ந்து மறைந்தனர். இரு வீரரும் அவ்வனத்திற் சிறிதுதூரம் கடந்து சென்றனர். அங்கு ஓர் சோலை தோற்றி ஓர் பெண்ணினுடைய அழு குரலோசை கேட்டது. அவ்வண்ணன்றம்பி யிருவரும் இவ்வோசையை அறிவோமென்று அவ்வோசை வழியே சென்று பார்க்க அச்சோலை மத்தியில் ஒரு பெண்ணனவளிருந்து கூந்தலவிழ்ந்து தரையிற்புரள கண்ணீர் கமல முகமெலாம் வழிந்தோட ஆசைத் துரையே! அழகிய சீமானே! பாசக்கடலே! காணாத தேசத்தில் வந்து கை தவரவிட்டுப் போயினீரே. நானென்ன செய்வேனென்று ஏங்கி அழுதுகொண்டிருந்தாள். இராசகுமாரர் அருகாக வந்து மானிடப்பெண்ணாக விருக்கக்கண்டு கனனல்மொழி மானே நீ இருப்பது எந்தத் தேசம். இங்கு வரவேண்டியதென்ன. கணவனுக்கு வந்த தீங்கென்ன? சொல்வா யென்றனர். துவரிதழ்க் கன்னி அவர்களை நோக்கி அரக்கர்கள் மாயமா? உள்ளபடி மானிடர்கள்தானோ வென்று ஐயுற்று அழுகுரலாக நீங்கள் யாரென்றாள். செயப்பிரகாசன் நாங்கள் ஓர் மன்னன் மைந்தர்கள். மாயக்காரர் மாயக்கப்பலிற் கொணர்ந்து சிறையிலடைக்க அதினின்று தப்பி இவ்விடம் வந்தோம். எங்களைச் சந்தேகிக்கவேண்டாம். உண்மையைச் சொல்வா யென்றனன். அவ்வார்த்தையைக்கேட்ட மடமங்கை சற்று திடமுடையவளாய் வாருங்கள் என தினங்களே! எங்கள் நகர் மதுகற்பகாட விளைத்தைச்சார்ந்த தாலபுரமாகும். அந்நகராசன் தாலகேது அவனுடைய குமாரன் தமனியகோலன், அவன்தான் எனது நாயகன். என் பெயர் கற்பகவல்லி. கலியாணஞ்செய்து களித்திருக்கும்போது கணவன் தீபாந்தர வளம் பார்க்கப் புறப்பட்டார். நான் அவர் பிரிவைச் சகிக்கமாட்டாமற் கூடத்தொடர்ந்தேன். பலதரந் தடுத்துஞ் சம்மதப்படாததால் இருவரும் போகும்படி யிசைந்து எங்கள் வழி

வழிச்சிநேகமாய் மதுகற்பகாடவி வனத்தில் வசித்துவரும் செம்பதி
சம்பதி யென்னுங் கழுகரசர் துணையாகவும் வாகனமாகவும் அமைய
நாங்களிருவரும் ஓர் பக்ஷியிலமர்ந்து பலபூமி கடல் தீவுகள் பார்த்து
இத்தீவில் வந்து ஓர் விருக்ஷத்தடியிலிறங்கி யிருந்தோம். அங்கு
மிருகம் பறவைகளைப் பிடித்துக்கொண்டிருந்த ராக்ஷதர்கள் எங்க
ளைக கண்டுபிடிக்கும்படி நெருங்கினர். எனது நாயகன் அம்பு வில்
லேந்தி அரக்கருடன் போராடி அபஜயப்பட்டுப் போயினர். கழு
கரசருங் கடுங்கணைகட் காற்றாது பின்னிடைந்தனர், பாதகர் என்
புருஷனைக் கயிறுகளாற் பிணித்துக்கொண்டு போயினர். என்ன
செய்தனரோ தெரியாது, அழுது பின்சென்ற என்னை இரண்டு
ராக்ஷதர்கள் மறித்துப் புருஷனை மீட்டித் தருகிறோமென்று நய
வார்த்தை கூறி இசசோலையி லழைத்துவந்து சேருவா யென்றனர்.
நான் கற்பைக் காப்பதற்கோ ருபாயந்தேடி அரக்கர் தலைவர்களே!
நீங்களோ ராக்ஷத புருஷாள். நானோ மானிடச் சிறுபெண். ஒரு
வருக் கிணங்குவதே கஷ்டம். இருவரும் விரும்புவது ஞாயமா
வென்றேன். அவர்களில் ஒருவன் தம்பி இப்பெண் எனக்குத்தான்
வேண்டுமென்றான். ஒருவன் அண்ணன் இப்பெண் எனக்குத்தான்
வேண்டுமென்றான். இப்படியாக இருவரும் வாதாடி வாளை யுருவிப்
போராடி ஒருவர் வெட்டு ஒருவர்பேரிற் பட்டு சுந்தோப சுந்தரர்
போல் மாண்டனர். என்னைக் கழுகரசர் வந்து தேற்றி கணவன் கதி
யிப்படியாச்சுது உன் மாமனிடஞ் சேர்த்து விடுகிறோம் வருகிறாயா
வென்றனர். நான் கணவனிறங்க நாட்டி லிறப்பேனே யொழிய வர
மாட்டேன். அவர் நிலையை யறிந்துதான் பின் காரியத்தை யோசிக்க
வேண்டியவளா யிருக்கிறேனென்று கூறிக் கவலைப்பட்டிருக்கிறே
னென்றாள். அதுசமயம் கழுகரசரும் வந்து காவலன் மைந்தரைக்
கண்டு கலந்து பேசி இவள் நாயகனை அரக்கர்கள் எங்கு கொண்டு
போயிருக்கலாமென்னு யோசிக்கும்போது மதிப்பிரகாசன் அண்ணா
நாம் சென்று விடுபட்ட சிறைச்சாலையிலேயே இவ்விராச குமாரனை
யும் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறதாய்த் தெரிகிறது. அரக்கர்
கள் மானுடவர்க்கங்களைச் சேர்த்து வைத்திருப்பதை யோசிததால்
ஓர் பெரிய விருந்தில் புசிக்கவோ யாகஞ்செய்யவோ தெரியவில்லை
யென்றான். அம்மொழியைக்கேட்ட செயப்பிரகாசன் சீற்றங்கிளர்
இருவிழி சிவந்து பல்லை நறநறவென்று கடித்து தம்பி எழுந்திரு.
சிறைச்சாலை சென்று அரக்கர்களைவென்று சிறைப்பட்ட மானுட
வர்க்கங்களையும் இவள் புருஷனையு மீட்போம் புறப்படுவா யென்
றான். தம்பியானவன் அண்ணா சற்றே பொறுப்பீர்கள், அரக்கரசு
ரர்கள் அநேகமாய் மாயா தொழிற்காரர்களென்று கதை காவியங்க
ளிற் பார்த்திருக்கிறோம். நாமும் அவர்கள் மாயா விநோதங்களிற்
சிக்கி இதுவரை கண்டறிய முடியாதவர்களா யிருக்கிறோம். அவர்
கள் வரம் திரம் இருப்பிடம் தெரிந்துதான் யுத்தத்தில் தலையிட

வேண்டுமென்றான். தொடுத்த மலர்மாலையான் எடுத்த கோபத்தை மாற்றி வாட்டருடையவள் வதனத்தை நோக்கி நமது தேவியுமிப் படித்தா னிருப்பாளென்று ஏக்க மேலிட்டுக் கண்ணீர்புரள அம் மணி உன் புருஷனை நிச்சயமாய் மீட்டித் தருகிறோம் அஞ்சாதே யென்று கமுகரசரிடம் தங்கள் விர்த்தாந்தங்களைச் சொல்லிக்கொண் டிருந்தனர். காவலன் மைந்தர் வீரியத்தைக் காண வருபவன்போற் கதிரவன் கருங்கடலி லுதையமாயினன். சூரியனுதையமாகிச் சற்று நேரஞ்சென்று பார்க்கச் சிறுவயதான இரண்டசுர குமாரர்கள் மிகு ந்த பயங்கரமுடையவர்களாய் பின்காற் பிடரியிற் படும்படி மிகுந்த வேகமாயோடி வருகின்றனர். அவர்களைத் தொடர்ந்து சிறிது தூரத்தில் கருமலைமேற் றீப்பற்றி யெரிவதுபோற் செம்பட்ட மயி ரிலங்க மலை குலுங்குவதுபோற் பாரமுலை குலுங்க அடா பயல்களே உங்களை விட்டுவிடவா போகிறேனென் றதட்டிக் கூறுகிற ஓசை யால் அண்டங்கலங்க ஓர் அரக்கி ஓடிவரக் கண்டனர். இவர்களை அவள் துரத்தி வரவேண்டிய தென்னவென்று யோசித்துக்கொண் டிருக்கும்போது பயந்தோடி வந்தவர்கள் ஒருபுறம் சோலைக்குள் நுழைந்து அடர்த்தியான செடிக்குட் பதுங்கினர். அதனைக்கண்ட செயப்பிரகாசன் தம்பியை நோக்கி அவர்களை அழைத்துவா வர லாறு கேட்போமென்றான். மதிப்பிரகாசன் சென்று புதர்களிற் பதுங்கி யிருக்கும் அவர்களைக் கண்டுபிடித்து அசுர குமாரர்களே! ஏன் மறைகிறீர்கள். அதோ இருக்கும் என் தமையனிடம் வாருங்க ளென்றான். அவர்கள் ஓ மானிடனே அப்புறம் போய்விடு எங்களை வதைக்கிற காலதேவதை அதோ வருகிறாள். காட்டிக் கொடுத்து விடாதே இப்போது பேசவும் முடியாது. புதரைவிட்டுப் பேரவு முடியாதென்றனர். அவர்கள் பயங்கரங்கண்ட இளையவன் அஞ்ச வேண்டாம். அவளைச் செயித்து உங்களைக் காப்பாற்றுகிறோமென் றனன். இராக்கத மைந்தர் எங்களைக் காப்பாற்ற உங்களால் முடி யுமா? அதோ வருபவள் ஆயிரம்யானைப் பலமுடையவள். தெருச் சண்டையில் மடிந்த ஆடவர் இதுவரை யாயிரம்பேரிருக்கலாம். கண்டால் கால்விரலால் நசுக்கிக் கொன்றுவிடுவாள். நீங்களும் ஓடிப் பதுங்கிக்கொள்வீர்களென்றனர். இளையவன் எங்களை நீங்கள் எளி தாக எண்ணவேண்டாம். அவளைப்போல் எத்தனை யாயிரம்பேர் வந்தாலும் வெல்லவுங்கூடும். கொல்லவுங்கூடும். எழுந்து வாருங் ளென்றான். அசுரமைந்தர் ஏதேது இவன் போகிறதாகவுந் தெரிய வில்லை. விடுகிறதாகவுந் தெரியவில்லை. வீரன்போலவும் பேசுகிறான். கொடுமைக்காரி இவர்களைப் பிடித்துக்கொண்டு நம்மை விட்டாலும் விட்டுவிடுவாளென்கிற எண்ணம் உடையவர்களாய் எல்லாம் போய்ப் பார்ப்போமென்று மதிப்பிரகாசன் பின்பாக நடந்து செயப் பிரகாசனை வந்து கண்டனர். அவாகள் வாட்டத்தையும் மனப் மதட்டையுங் கண்ட வழுதியர் கோமான் செழுமலர்க்கரம் நீட்டி

உட்காருவீர்களென்ருன். நிசாசரன் மைந்தா நாம் செத்தவர்கள் தானே. இவர்களால் என்ன ஆகப்போகிறதென்று மானிடர்களே அதோ வருங் கொடுமீலியால் நாங்கள் மாள்வதுதான் நிச்சயம் நீங் களும் மாளும்படி மாட்டிக்கொண்டதே யென்றனர். கயற்கொடி யுடையான் பயப்படாதீர்கள். உங்களைப் பகைத்துவரும் பாதகியை வாட்டி உங்களை ரக்ஷிக்கிருேமென்றனன். அவர்கள் சிறிதுபயந் தவிர்ந்திருந்தனர். அரக்கி மிருகசாலங் களஞ்சி நாற்றிசையிலும் ஓட பறவைகள் பயந்து வானத்திற் பறக்க ஓங்கார சப்தமிட்டு மன் னன் மைந்தரிருக்கும் மலர்ச்சோலை நோக்கி வந்தவள் சில விடங் தேடிக் காணுமல் அவர்களிருக்குமிடம் கண்டுவந்தாள். பறவை யர சர்கள் இவளிடமாய் இவர்கள் வல்லமையை யறிந்துகொள்ளலா மென்றெண்ணினர். கற்பக வல்லியும் இவளும் ஒரு பெண்ஜென் மந்தானு வென்றஞ்சினள். மைந்தர் குடல் கலங்கினர். அவள் ஆங் கார தாரைபோல் வந்து அரசமக்கள் முன்பிருக்கும் அசுரமைந்த ரைப் பிடிக்க நெருங்கினள். செயப்பிரகாசன் தீர வீரம் அமைந்த வளே அவர்களைப் பிடியாதே சற்று நில்லென்ருன். அவள் இவர்க ளைப் பிடிப்பதற்குயாரடா தடைசொல்லுகிறதென்று சீறிப்பாய்ந்து பிடிக்க எத்தனித்தாள். சமரசிங்கம்போன்றவன் தம்பியைக் கண் காட்ட அவன் குபீரென்றெழுந்து அரக்கி இடுப்பில் ஓர் உதை உதைத்தான். அவ்வுதையால் அவள் தரையில் விழுந்து கடகட வென்று புரண்டு அடா! மானுடப்பயல்களே! உங்களையுங் கைப் பிடியாகச் சேர்த்துப் பிடித்துப் போகிறேன் பாருங்களடா வென்று எழுந்திருக்க ஆரம்பித்தாள். உடனே செயப்பிரகாசனெழுந்து தனது சேவடிப் பெருவிரலால் உந்தினுன். அவள் அந்தரத்தில் துந்துமி யெனும்புபோ லெழுந்து வருணமண்டலம் வாயுமண்டலங் கடந்து நக்ஷத்திர மண்டலம்வரை போய் திரும்பி வருகையில் சேவகன் செம்பதியை நோக்கி இவளை அந்தரத்திற்பிடித்து ஆட்டு வாயென்ருன். செம்பதி சேணிற்பறந்து அவள் செம்பட்ட மயிரை வாயிற்கௌவி சூத்திரப் பதுமைபோல் சுற்றி வரும்படி ஆட்டியது அரக்கி கால் கரங்களை யுதறிக்கொண்டு ஐயோ! என்னைக் கழுகு அந்தரத்திற் கொல்லுகிறதே யென்று கூச்சலிட்டனள். அச்சம் பவங்கண்ட அசுரன் மைந்தர் அரசன் மைந்தரடியில் வணங்கி அர சிளஞ் சிங்கமே இவள் எங்களைக் கொல்லவந்த கொலைபாதகியாயிருந் தாலும் பத்துமாதஞ் சுமந்து பெற்று வளர்த்த பாசத்தை நினைக்க அந்தரத்தில் ஆடி யலறுவதைப் பார்த்த எங்களுக்கு மனஞ் சகிக்க வில்லை இறக்கிவிட் டருளவேணுமென்றனர். பாலர்கூறிய பக்ஷ வார்த்தையைக் கேட்ட பார்த்திபன் இளநகைதோன்ற இவள் உங் களை யீன்று பாலமிர்தம் ஊட்டி வளர்த்த மாதாவா வென்று சிறிது பரிதாபமுடையவனுய் மெதுவாயிறக்கி விடுவாயென்றனன். செம் பதி அப்படியே இறக்கிவிட ராட்சதநங்கை அகங்காரவலி யெலாம்

ஒடுங்கி நாணமுடையவளாய் ராசகுமாரர்களைக் கீழ்க்கண் பார்வை யாய்ப் பார்த்து நின்றனள். செயப்பிரகாசன் அவள் நிற்கும் நிலை யைத் தீர்க்கமாய் நோக்கிப் பெற்ற பிள்ளைகளைக் கொல்லும்படி துணிந்துவந்து நிற்கும் பிசாசுபோன்றவளே! அதோ தோற்றுகிற பட்டணம் யாருடையது. இத்தீவார் மானிட வர்க்கங்களைக் கொண் டுவந்து அடைத்து வைத்திருக்க வேண்டியதென்ன? உனக்கு இம் மைந்தர்பேரில் இவ்வளவு வைராக்கியம் வந்து துரத்தி வரவேண் டிய காரணமென்ன. எல்லாம் விபரமாய்ச் சொல்லக்கடவாயென்று சொல்லியபோது அரக்கி அவர்கள் ஆற்றலை வியந்து உண்மையை உரைக்கலானாள்.

காலனுங் காலெடுத்து வையா இந்நாட்டிற் கைச்சிலையேந்தி நின்ற காளை வீரர்களே! இத்தீவு விரிகண்ட தீவாகும் அதோ தோற் றும் நகரம் இத்தீவுக்குத் தலைமையான காலாந்தகப்பட்டணம். அப் பட்டணத்திலிருந்து இத்தீவனைத்தும் ஆண்டு வருபவன் காலகேசரி யென்னும் அரக்கன் அளவிலாச் சேனுபலம் புயபலமுள்ளவன் சீவ மிர்த்திகாவென்னுந் தன் குலதெய்வ உத்தரவுப்படி சர்வ சீவமேத மென்னப்பட்ட ஓர் யாகஞ்செய்ய நிச்சயித்து விசேஷமான சீவராசிக ளில் வகைக்கோராயிரங் கொண்டுவரும்படியாகவும் மானிடவர்க்கத் தில் வாலிபர்களா யுள்ளவர்களை ஆயிரம்பேர் கொண்டுவரும்படி யாகவும் அரக்கரசுரர்களுக்கு உத்தரவு செய்தான். அவர்கள் மற் றச் சீவராசிகளை யெளிதிற் பிடித்து கப்பலிற்சென்று மானிடர் வசிக்கப்பட்ட இடங்களில் நாடகக்காரர்போலவும் வர்த்தகர்கள் போலவும் குதிரை யுருவங்கொண்டும் பலவாறாய் வாலிபர்களை யேமாற்றிக்கொண்டுவந்து ஓர் பெரிய சிறைச்சாலையி லடைத்துவைத் தனர். என் பெயர் கடகி, என் புருஷன்பெயர் கடகன், எங்களுக்கு ஆறு மைந்தருண்டு. என் புருஷன் காவற்சாலையைக் காத்துவரும் காவல் வேலையிலுள்ளவன் இதற்கு முன்னதாகவே சீவமித்திகா தேவதையாலயமுன்பு பிரமாண்டமான யாகசாலை யமைத்து அக் கினி வளர்த்து லக்ஷக்கணக்கான ராட்சதப் பிராமணுள் மந்திரங் களை யோதிக்கொண்டிருக்க, யாகம் நடந்து பலியிடுந் தினம் இன் றானபடியால் அடைத்திருந்த உயிர்வர்க்கம் அனைத்தையும் அங்கு கொண்டுபோய் எண்ணிக்கை பார்க்க எல்லாச் சீவராசிகளும் ஆயிரம் ஆயிரமாயிருந்து மானிடர் மட்டும் இரண்டுபேர் குறைந்து தொளா யிரத்துத் தொண்ணூற்றெட்டுப்பே ரிருந்தனர். காலகேசரி காவற் கூடத்தில் காரியக்காரர்களை தனித்தனி யழைத்து விசாரணை செய் ததில் முன் குறைவாயிருந்து நேற்றுக் கொண்டுவந்து சேர்த்த மனி தருடன் சரியாய் ஆயிரஞ்சேர்ந்து அந்தப்படியே கணக்கெடுக்கப் பட்டதென்று கணக்கர் கணக்கைக் காட்டினர். உணவு கொடுப்போர் இருவர் ஆயுதமுடையோரா யிருந்தனர், அவர்கள் தான் இக்கூட்ட

த்திலில்லை யென்றனர். காலகேசரி என் கணவனை நெருப்புப் பறக்கப்பார்த்து உன் காவற் சோர்விலல்ல. வா இரவு இருவர் தப்பிவிட்டனர். அவர்களை இதுசமயம் தேடிப் பிடித்துக்கொண்டுவந்து சேர்க்க முடியாது. உன் மைந்தர் அறுவரில் இருவரைப் பதிலுக்குக் கொண்டுவந்து சேர்த்துவிடு. இல்லையெனில் உன் குடும்பம் அதாகதமாகித் தொலைந்துவிடு மென்றான். அச்சொற்கேட்ட என் கணவன் அச்சமடைந்து வீடுவந்து என்னிடம் சங்கதியைச்சொல்லி நமது மைந்தராறுவரில் கைக்குதவியான மூதத மைந்தரிருவரையும் விட்டுவிட்டு எந்த மைந்தரைக் கொண்டுபோவோ மென்றான். நான் பக்ஷமாய் வளர்த்துப் பள்ளிக்கூடத்திற் படித்துவரும் இளையமைந்தரிருவரையும் விட்டுவிட்டு மற்ற எந்த மைந்தரையுங் கொண்டுபோவென்றேன். நாங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த நடுப்பிறந்த மைந்தர்கள் எப்படியோ மறைந்துவிட்டனர் அவர்கள் அவ்விடம் இல்லாமற் போனபடியால் நான் மூத்தமைந்தர்களைக் கொண்டுபோகவேண்டுமென்றும் அவன் இளைய மைந்தர்களைக் கொண்டுபோவேனென்றும் விபகாரமுதிர்ந்து எங்களிருவரையுஞ் சேர்ந்த பந்துக்கள் வந்து கூடி கக்ஷிப்பிரமாதமாகி கலகம் விளைந்து இருதரப்பிலும் சிலர் மடிந்தும்போயினர் சில பெரியமனுஷாள் வந்து கலகத்தை யமர்த்தி ஓடிப்போன மைந்தர் தாம் பலிக்குடையவர்கள் அவர்களை இருவருந் தேடிக்கொண்டு வரவேண்டியது. பிதுரார்ச்சிதம் சுயார்ச்சிதமான சொத்துகளெல்லாம் தந்தை கொண்டுவந்தால் மூத்தமைந்தர்களுக்கென்றும் தாய்கொண்டுவந்தால் இளையமைந்தர்களுக்கென்றும் இருவராலுங்கொண்டுவர முடியாவிட்டால் இருவகை மைந்தரிலும்இருமைந்தர்களைப் பலிக்குக்கொண்டுபோகிறதென்றும் தேடிவரும்வரை மற்ற நாலுமைந்தரும் தக்க பாதுகாப்பிலிருக்கிறதென்றும் தீர்ப்புச் சொன்னார்கள். எனது நாயகன் வடதிசைபோயிருக்கிறான் நான் கீழ்திசை வந்தேன் ஊருக்குவெளியான ஓரிடத்திற் பதுங்கியிருந்தவர்கள் என்னைக்கண்டு ஓடிவந்தனர் நான் தொடர்ந்துவந்தேன். இவ்விடத்தில் நடந்தும் இனிமேல் நடக்கப்போவதுமான சங்கதிகளெல்லாம் இதுதான் தெரிந்துகொள்ளக்கடவீர்களென்று கடகி சொல்லி முடித்தாள் கடகி கூறிவருங்காரணமனைத்துங் கேட்ட கன்னிகாடன் சிந்தைமுடிபசைத்து தம்பியை நோக்கி தம்பி இவர்களுக்கேற்பட்ட நிபந்தனையும் மைந்தர்கள் பேரில் பக்ஷமும் அபக்ஷமுமான நினைவும் எப்படியிருக்கிறது பார்த்தாயா வென்று இராக்கதச் சிறுவரைப் பார்த்து ஈன்றாள் சொல்லி வந்ததெல்லாம் உண்மைதானா? உங்கள் பெயரென்னவென்றான் அவர்கள் அண்ணலடிபணிந்துபெற்றவள்கரம்படாமற்காத்தகொற்றவள்ளலே எங்கள் ஜென்மவினையால் முன்பின்னின்றி நடுவேபிறந்தோம். எங்களை திசாமுகன் விசாலகன் என்று பெயரிட்டழைத்ததும் இவளும் இவள் புருஷனுந்தான் ஆளுக்கிருமைந்தரை யெடுத்

துக்கொண்டு எங்களை அந்நியமாக்கி ஊர்கடந்துபோனாலும் விடுகிற தாயில்லை எமனைப்போல் வந்து நிற்கிறாள் என்னசெய்வோமென்றனர். கடல்வளை நாடன் கடகியை நோக்கி உனக்கும் உன்புருஷனுக்கும் உரிமையில்லாத இம்மைந்தர் எங்களிடம் வந்தனர் ரக்ஷிக்கிறோமென்று சொல்லியிருக்கிறோம். ஆனதால் இவர்களுக்குப் பதிலாக நாங்களே வருகிறோம். உனது நாயகன் காவலைக்கடந்துபோனவர்களும் நாங்கள்தான் உன் கருத்தென்னவென்றனன் மன்னர்பிரான் வார்த்தையின் திறத்தையும் வீரக்குறிப்பையுந் தெரிந்த கடகியானவள் இவர்களால் அரக்கர்கூட்டங்களுக்கு அழிவுகாலம் நேரும்போல் தெரிகிறதென்று மதித்து உங்கள் மனம்போல் வார்கடவீர்களென்றாள் செயப்பிரகாசன் கழுகரசரைத் தங்கள் முன்னேவரும்படிச்செய்து தானும் தம்பியும் ஏந்திய ஆயுதமனைத்தையும் அவர்கள் முன்வைத்து இவ்வாயுதங்களை நாங்கள் ஏந்தி யாகசாலைவந்து நாங்கள் எதுசமடங்கேட்போமோ அதுசமயம் கொடுக்கவேண்டுமென்றனன். கழுகரசர் காவலன் மைந்தராயுதமனைத்தையும் கனத்த ரோமபந்தியிலடக்கஞ்செய்துகொண்டனர். அடல்கெழுந்தோளான் கடகி மைந்தரை நோக்கி நாங்கள் யாகசாலைபோய் வரும்வரை இம்மாதரசியை இம்மலர்ச்சோலையில் காத்திருப்பீர்களென்று தானுந் தம்பியும் எழுந்து கடகிமுன் நடந்தனர். கழுகரசர் ககனத்திற் பறந்தனர் கடகிமுன் சென்ற காளைவீரர் காலாந்தகப்பட்டணவீதி செல்ல அவர்கள் காந்தி லக்ஷணங்களைக்கண்ட அந்நகர ஆடவர்களுமாதர்களும் அளவில்லாமல் வந்து கூடி ஆச்சரியமாய்ப் பார்த்து இவ்வருமையான பிறவிகள் யாக பலிக்காகவா அமைந்தன இரவு தப்பிய இவர்களை இக்கடகி என்னவிதமாய்க் கண்டு பிடித்தனளென்று பலவாறுபேசினர். அதுசமயம் ஓர் பெண்ணானவள் வந்து கடகியிடம் உன்னையும் இவர்களையும் எங்கள் எஜமாட்டிகள் அழைத்துவரச் சொல்லினரெனறாள் கடகி ராசகுமாரர்களை நோக்கி அவள் பிறகே செல்வீர்களென்றாள். அவர்கள் அப்படியே செல்லுகிறோமென்று அம்மாதர்கள் முன்பின்னாக நடக்க மத்தியில் நடந்து ஓர் உன்னதமான மாளிகை சேர்ந்தனர் அங்கு விலைமதிக்க முடியாத சுவர்ண மணிப்பணிகள் மின்ன இருதிரு மடந்தையர் இரத்தினாசனத்திலிலங்கும் பாவனைப்போல் விளங்கும். மாதர்களைக் கண்ட மன்னன் மைந்தர்கள் இவர்கள் சுரங்கவாசலிற் கண்ட தோகையர்களல்லவாவென்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு நின்றனர். நின்றவரழகை நிமைதட்டாமல் நோக்கிய நேரிழையர் திவ்யலக்ஷணமமைந்த செல்வர்களே நாங்கள் கூறிய காதலான வார்த்தையை கடற்கரை மாளிகையிலும் சுரங்கவாசலிலும் மறுத்துவிட்டீர்கள் அதனால் உங்களுக்கு மரணநிலை ஏற்பட்டு விட்டது இப்பவும் எங்கள் கருத்துப்படி இணங்குவீர்களேயானால் மர

ணத்தினின்று நீக்கிவிடுகிறோம் என்ன சொல்லுகிறீர்களென்றனர். செயப்பிரகாசன் சிறுநகை செய்து நாயகர் நாட்டமாய் நிற்கும் நங்கையர்காள் நாங்கள் யாகசாலை சென்று கடகி நாயகனுக்கேற்பட்டிருக்கும் நிபந்தனையை மாற்றிவிட்டு உங்களையேற்றுக்கொள்ளுகிறோ மென்றனன். மாதர்கள் நீங்கள் யாகசாலை சென்றால் பலிகொடுத்து விடுவார்களே எப்படி மீளுவீர்கள், எப்படி மணஞ்செய்வீர்கள் அங்கு செல்லவேண்டாம் இங்கிருப்பீர்களேயானால் உங்களுக்குப் பதிலாக நாங்களே சென்று மன்னனைக் கண்டு வேறுபலி யேற்படுத்தியாவது வேறுவிதமாவது செய்துவருகிறோ மென்றனர் மன்னன்மகன் இன்னவளுக்குச் சொல்லியபடியாகசாலைபோய்தான்வரவேண்டியதாயிருக்கிறது. நீங்களவ்விடம் வந்து எங்களை விலக்கிக் கொள்வீர்களென்றான். செப்பிய வாய்மையை ஒப்பிய துப்பிதழ்க் கன்னியர் அப்படியே செய்கிறோ மென்று அசுவங்களூர்ந்து சென்றனர். கடகியுங் காவலன் மைந்தருங் கன்னியர்மனை கடந்து நடந்தனர். கனகமணி மாடங்களிலுள்ள கன்னியர் இருவீரரைக் கண்டு ஒருமாரன் கணையால் நொந்து இவர்களை யாகத்தில் வதைக்கும்படிகொண்டு போகிற கடகி நமது போகத்திற்கிசையக் கொடுக்க மாட்டாளா வென்று பேசிக்கொண்டனர்.

கடகி ராஜகுமாரர்களைத் தன்வீடு கொண்டுவந்து இருக்கச் செய்தனள். கடகன் வடதிசையெலாம் ஓடி நடுமைந்தரைக் காணுமல் நடுங்கித்திரும்பி இன்றுஎம்மைந்தர்கள் யாகத்தில் மாளுவார்களோ எம்மைந்தர்கள் சொத்துக்களை வைத்து ஆளுவார்களோ என்கிற எண்ணமுடையவனுய் தனது வீடுவந்தான் அங்கு சூரிய சந்திரர்போல் விளங்கும் ராஜகுமாரர்களைக் கண்டான் அவர்களைக் கண்டு ஆச்சரியமுடையவனுய் கடகி இவர்களை எங்கு கண்டனை நேற்று ஆயுதபாணிகளாய் காவற்சாலையில் நுழைந்து இரவு என்காவலைக் கடந்து போனவர்களல்லவா எப்படி உனக்கு அகப்பட்டார்களென்று சந்தோஷ வார்த்தையாடினுன். கடகி நமது மைந்தர் ஆறுபேருக்கும், நீண்ட ஆயுளை ஆண்டவன் கொடுத்திருந்தபடியால் நடுப்பிறந்த மைந்தர்களைத்தேடிப்போனவிடத்தில் இவர்களைக் கண்டுபிடித்து ஆயுதங்களைப் பறித்தெறிந்துவிட்டுக்கொண்டு வந்தேனென்றனள். மற்ற மைந்தர் நால்வரும் துள்ளினர் அண்டைவீட்டுக் காரரெல்லாம் இவள் அடங்காத நீலியானதால் ஆடவவீரர்களை அடக்கிக்கொண்டு வந்தனளென்று பேசிக்கொண்டனர். கடகி கடகனைநோக்கி இவர்களை இராஜாவிடம் கொண்டுபோய் நிறுத்தி நமக்கேற்பட்டிருக்கும் நிபந்தனையைமாற்றி அவ்விடம் நில்லாமல் வந்துசோக் கடவாய்

ஏனென்றால் நமதரசன் தனது குடும்பம் பிழைக்க அந்நியர் பெற்ற மைந்தரை வதைக்கிறான். அக்கொடுமையை நாம் பார்க்கக் கூடாதென்றாள். கடகன் அப்படியே வந்துவிடுகிறேனென்று ராசகுமாரர்களை அழைத்துக்கொண்டு யாகசாலை சென்றான். ராசகுமாரர்கள் விஸ்தாரமான அவ்யாகசாலையில் ..லை மலையாய்க் குவிந்திருக்கும் ஜமித்துக்களையும் சிறுசிறு குளங்கள் போல் நிரம்பியிருக்கும் நெய்ச்சால்களையும் கண்டனர். ஓர் பக்கத்தில் பந்திபந்தியாய்க் கட்டியிருக்கும் மிருகக் கூட்டங்களையும் பஞ்சலோகங்களாற்செய்த பஞ்சரங்களிலடைத்திருக்கும் பறவைசாலங்களையுங் கண்டனர். ஓர் பக்கம் இறங்கிய தலையுடையவர்களாய்க் கண்ணீருங் கம்பலையுமாய் நிற்கும் மானுடகூட்டத்தையும் பார்த்தனர். யாகதம்பங்களுயர்ந்து காட்ட யாககுண்டத்தில் மேகமண்டலவரை அக்கினிசுவாலித்தெரிய பிரமலோகம்வரைபோய்க் கரும்புகை நிறைய சமுத்திர கோஷ்டம்போல் ராக்ஷதப் பிராமணுள் மந்திரங்களை ஜெபிக்க விளங்கும் யாகசாலையைப் போய்க் கண்டனர். ராக்ஷதப் பிரபுக்களாய் ஸ்திரிபூமான்கள் ஆங்காங்கு ஆசனங்களிலிருக்க காலகேசரி கனகமணி யாசனத்தில் கெம்பீரமாய் சகலரும்சூழ்ந்திருக்க வீற்றிருக்கும் சபையலங்காரத்தையுங் கண்டனர் இப்படி ஆங்குள்ளவைகளைக் கண்டு கண்டு செல்லும் ராசகுமாரர்களை கடகன் காலகேசரிமுன் கொண்டுபோய்நிறுத்தினன். காலகேசரி ராசகுமாரர் வாட்டமில்லாமல் ஊக்கமுடன் நிற்கும் நிலையைக் கண்டு இவர்கள் வல்லவர்களானதினுற் றப்பிவிட்டனர். கொண்டுவந்தவனும் மகா வல்லவனுகுமென்று கடகனுக்குக் கடகக்கங்கண முதலிய ஆபரணங்களுங் கொடுத்து உன் நிபந்தனையும் மாறிவிட்ட தென்றான். கடகன் கடகிசொற்படி அவ்விடத்து நில்லாமல் தனது வீடுபோய்ச் சேர்ந்தான். அரக்கர்கோன் சொற்படி சேவகர் புண்ணியர் கரத்திற் பொன் விலங்கிட்டு மானுடர் நிற்குமிடங்கொண்டு போயினர். அங்குள்ளவர்கள் இன்றுதினம் நமதாவி போய்விடுமே பாவிகள் பலிகொடுக்கத் துணிந்துவிட்டனரே யென்று தாய் தந்தையரை நினைத்தும் மனைவிமைந்தரை நினைத்தும் கண்ணீர்விட்டுக் கலங்கி ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துத்தியங்கியு மயங்கியுமிருந்தவர்கள் ராசகுமாரர்களைக் கண்டு தாஷ்டீகர்களே நாங்கள்தான் தப்பமுடியாமல் சாகப்போகிறோம். தப்பிப்போன நீங்களாவது ஓடிவிடலாகாதா வென்றனர். ஜெயவேந்தன் மைந்தர் தப்பினுலுந் தலைவிதி விடுமோவென்று அன்றலர்ந்த செந்தாமரைபோற்றிருமுகமிலங்க நின்றனர். அவர்கள் முகவுல்லாசத்தையும் கம்பீரத்தையுங் கண்டு இவர்கள் அசுரப்படைகளை ஒருகை பார்ப்பார் போற்றெரிகிறது ஆனால் ஆயுதமில்லாதவர்களால் என்ன செய்யக் கூடுமென்று பேசிக்கொண்டனர். அங்கன் துங்கன்

காரணவாசி மன்னன் புதல்வன் முதலானோர் அவர்களைக்கண்டு ஆவலுஞ் சோகமும் அதிகரிக்க எப்படியாவது இவ்வாபத்தி னின்று நீக்கிவிடுவார்களென்று சற்று திடமாயிருந்தனர். ராஜ குமாரர்கள் மற்றவர்களை நோக்கி அரக்கர்கள் பலிக்காக அழைத் தால் முதலாவது எங்களைக்கொண்டு போகும்படி எல்லாரும் ஏகோபித்துச் சொல்லுங்களென்று சொல்லி நின்றனர். அது சமயம் அசுரப்பிராமணன் அரக்கர்கோனிடஞ் சென்று எந்த ஜீவராசிகளிலும் மானிடமே வுயர்வுபெற்றதால் பிரதமத்தி லிரண்டு மானுடப்பலி கொடுக்கவேண்டு மென்றனர் காலகேசரி காலதூதர்போன்ற இருவரைநோக்கி இரண்டு மானிடர்களைக் கொண்டு வாருங்களென்றனன். அவர்களப்படியேசென்று சோடி யாய் விலங்கிட்டு நிற்கும் இருவரை யிழுத்தனர் அவர்கள் அரக் கர் கோமான்களே நாங்கள் யாகபலியால் மாண்டு நற்கதியடைய வேண்டியதாயிருப்பதால் தெய்வதுதி செய்துகொண்டிருக்கி ரோம். முடிவுபெறும விருக்கிறது. அதோ நிற்கும் இருவர் களைக்கொண்டு போவீர்களென்று காவலன் புதல்வரைக் காட்டி னர். அப்படியே கடியவரிருவருஞ் சென்று ராஜகுமாரர் விலங்கு கரங்களைப்பற்றி யிழுத்தனர். தீரர்களிருவருஞ் சிறுநகைசெய்து நீங்கள் இழுக்கவேண்டாம் நாங்களே வருகிறோமென்று நாலடி நடந்து ஞாலமெல்லாம் பெற்ற அம்மையை உள்ளத்தில் நினைத்த காலையில் பூட்டிய விலங்கு படீரென்று தெறித்துவிழ இருவர் கரவாள்களையும் பற்றிப்பிடித்து இருவர் சிரங்களையும் வெட்டித் தள்ளினர் கொண்டுவரப் போனவர்களை பலிக்கானவர்கள் வெட் டிவிட்டனரென்ற சப்தமே யாகமண்டபமெல்லாம் ஒலித்துக் கொண்டிருந்தது அதுசெய்தி தெரிந்த காலகேசரி இருநூறு வீரரை ஏவி அவர்களைப் பிடித்து வரும்படிசொல்ல அவர்கள் ராசகுமாரர்களை வந்துவளைந்தனர். பிடித்த கரவாளால் ஜெயப் பிரகாசன்நூற்றைம்பதுபேரையும் மதிப்பிரகாசன்ஐம்பதுபேரை யும் வெட்டிஉதிரப்பிரவாகமாக்கி உலவினர்போனவர் மாண்டசே திதெரிந்த பொல்லாவரக்கன் சீற்றம்பொங்க பலிக்காகவந்த ஆட் டை பிடிக்கப்போய்அதுபாய்ந்து மாண்டகதைபோலல்லவா ஆயி ற்றென்றுபகர்ந்து பக்கத்திலுள்ளபடைத்தலைவர்களைநோக்கி நீங் கள்படையுடன் சென்று மீறிநிற்கும்இருவர்களைப்பிடித்துவாருங் களென்றான் அவர்கள் லக்ஷக்கணக்கான படைகளுடன்புறப்பட்டு மானுடர் நிற்குமிடத்தினில் வந்தனர் அப்படைக்கூட்டம் வரு வது தெரிந்த ராஜகுமாரர்கள் வானத்தைப் பார்க்க அங்குலவிக் கொண்டிருந்த கழுகாசரிறங்கி முன்னின்று ஆயுதங்களைத்தந்த னர். இராஜகுமாரர்கள் சாமளரூபியருளிய வச்சிரக்கவசம்பூண்டு அம்பறாத்தூணி முதுகிலணிந்து வரிவெஞ்சிலைதாங்கி மற்றஆயு தங்களையுந்தரித்து அக்கழுகாசரையே வாகனங்களாகக்கொண்டு

கருணைத்திரு நெடுமாலும்அவர்மருமகனும் கருடவாகனத்திலும் மயில் வாகனத்திலும் அமர்ந்துலவுங்காட்சிபோல் வானவீதியிலுலவினர் வந்தப்படைத்தலைவருஞ் சேனைகளும் வானவெளியிலும் புவியிடத்தும் வளைந்துக்கொண்டகாலையில் செயப்பிரகாசன் செங்கைவில்லைநாணெறிந்தான் அவ்வோசையால்அகிலலோகங்களுங் கலங்க அரக்கர்கூட்டங்களும் நடுங்கப்பிரமாதமாகியது யாகசாலையிற் பெரும்போர் விளைந்ததென்று அரக்க வீரர்கள் ஆங்காங்கு போர்க்கோலங் கொண்டு புறப்பட்டனர் படைவீரர் பல்லாயுதங்களையேவி நெருங்கியபோது வில்லாளிகள் சரமாரி பொழிந்து அவ்வாயுங்களனைத்தையுந்தடுத்து அவர்கள் தலை வேறு உடல்வேறுகும்படி கண்டித்துத்தள்ள படைவீரரும் படைகளும்மாண்டொழிந்தனர். இவ்விசேஷந்தெரிந்த காலகேசரி திகைத்து யாகத்திற்கு விக்கினம் வந்ததுபோற்றெரிகிறதே பெரும்போராடித்தான் அவர்களைப்பிடிக்கவேண்டியதாயிருக்கிறதென்று கனகமலைபோன்ற ரதத்திலேறிப் புறப்பட்டான் தம்பியருந் தனயரும் படைத்தலைவருஞ் சேர்ந்து கரிபரியிரதவாகனரூடர்களாய்புறப்பட்டனர் கோடிக்கணக்கான அரக்கர்கள் கூறிய ஆயுதங்களைத்தாங்கி நடந்தனர் போர்ப்பறைமுழங்க சகலசிவகோடிகளுமயங்கக் கருங்கடல்பொங்கி வருவதுபோல் வருங் கடும் படையைக்கண்ட காவலன் மைந்தர் கழுகுவாகனங்களைக் ககனத்திற்கடவியெதிர்த்தனர் வானத்துலவும் பறவைகள்மேற் கோதண்டபாணிகளாய்விளங்கும்ராசகுமாரர்களைக்கண்டராக்கத வீரர்கள் எக்காலத்தும் எவ்விடத்தும் இப்படியான வீரர்களை கண்டதில்லையென்று வியந்து தம் தம் வாகனங்களைச் செலுத்தி வானம் பூமியிலும் நிறைந்து நாற்புறமும் வளைந்து சக்கரம் முசுண்டி பிண்டி பாலம் வேலாயுதம் சூலாயுத முதலிய ஆயுதங்களை ஏவியும் அம்புகளைத்தொடுத்தும் போராடினர் கழுகரசர் எவரெவர் வாகனங்களைச் செலுத்தி எவ்வளவு உயர்ந்தனரோ அவ்வளவுக்கு மேலாகப்பறந்து உயர்ந்து அவரவர் தலைக்குமேலுலவினர் செகவீரர் சேடன்பணமகுடம் நெறியச்செஞ்சிலையை நாணெறிந்து சாமளரூபியருளிய சரங்களைச் சோனமேகம்போற் சொரிந்தகாலையில்அக்கணைகள்காளகூடவிஷங்களைக்கக்கிக்கொண்டுபோய்அரக்கரேவியஆயுதங்களைக்கண்டங்கண்டமாக்கி அம்பினங்களைப்பஸ்மீகரப்படுத்திமதயானைகளை ஊடுருவிவாசிகால்களையறுத்து ரதங்களையுடைத்து அரக்கர்கள்கரம்வேறு சிரம்வேறு கால் வேறு உடல் வேறாகத் துண்டித்துத் தள்ளியபோது எங்கும் பிணமலைகள்குவிய வானத்திலிருந்தற்று விழுவோர் கரங்கள் கால்கள் ஆயுதங்கள்பட்டு யாகமண்டபத்திலிருப்போர் மடியஅற்றுவிழுஞ் சிரங்களாற் பூரண கும்பங்களுடைய உதிரப் பிரவாகம் பெருக்கெடுத்தோடி யாககுண்டத்திற் பாய்ந்து அக்

கினியை அவித்து நிரம்பியபடியால் ராக்ஷதப்பிராமணாள் அவ்வெள்ளத்தில் நீந்தி உயிர்பிழைக்க யாகவஸ்துக்களெல்லாம் உதிர வெள்ளத்தில் மிதக்க யாகத்திற்காகக் கொண்டுவந்த காட்டானைகளும் போருக்காகவந்த நாட்டானைகளும் ஓர்பக்கம் போர் புரிய பலிக்கமைந்த சிங்கம் புலி முதலிய மிருகங்கள் பயந்தோடி வரும் ராக்ஷதர் மேற்பாய்ந்து கொன்று தின்ன நாய் நரிமுதலியவைகள் பிணங்களைத்தின்று இழுத்துத்திரிய பறவைப்பஞ்சரங்கள் பரவையிற்றிரியும் பாய்மரக்கப்பல் போல் உதிரக்கடலில் உலாவித்திரிய யாகபலியை விரும்பி வந்த பூதவேதாளப் பேய்க்கூட்டங்கள் நிணமாமிசங்களைத் தின்று அரக்கர்கோன் இவ்வளவு பலிகொடுக்க மாட்டானென்று நெடுஞ்சிலை வீரரை வாழ்த்தி நிர்த்தனஞ்செய்ய வானரங்கள் குருதிவெள்ளத்துக்கஞ்சி யாக தம்பத்திலேறிக் கொள்ள மானுடவர்க்கம் மன்னவர் செய்யும் வீரியங்களைக்கண்டு மகிழ்ந்தொருபுறம் நிற்க அரக்கியர் பிள்ளையைக் காணோம். புருஷனைக் காணோமென்று அலறியோட யாக மண்டபமெல்லாம் இடிந்துபொடியாக வந்து வந்து வளைந்த படையெல்லாம் மடிந்து விழுந்தன. காலகேசரி புதல்வருந் துணைவரும் பொங்கி தம் தம் ஊர்திகளை வானவெளியிற்கடவி நீண்ட விற்களை வளைத்து அம்பினங்களைச் செலுத்தியும் தேவாஸ்திரங்களை ஏவியும் ஆயுதங்களை யெறிந்தும் கடும் போர் புரிய செயப்பிரகாசன் செகதீஸ்வரி தந்த கணைகள் ஒன்று பத்து நூறு ஆயிரம் ஆகத்தக்கவைகளைத் தெரிந்து தொடுத்து அவர்களேவிய படைவர்க்கங்களை யெல்லாந் தடுத்து வாகனங்களைச் சின்னபின்னமாக்கி அவர்கள் சிரங்களையும் அறுத்துத் தள்ள அனைவருமாண்டனர். போன படைகளும் புதல்வருந் துணைவருமாண்டு யாகசாலை போர்க்களமாகிப் புள்ளரசர் மேலுலவித்திரியும் போர்வீரரைக் கண்ட பொல்லாவரக்கன் கோபாக்கினி கொழுந்துவிட்டெரிய எழுந்து அளவற்ற அரக்கர் படைசூழ கனகத்தேரேறிக் காவலர் முன்வந்து அடா யாகபலிக்குவந்த அற்பர்களே உங்களையு மடித்து யாகத்தையும் முடித்துவிடுகிறேன் பாருங்களென்று தீமுகக்கணைகளேவினான் அக்கணைகள் ராசகுமாரர்க ளணிந்திருக்கும் வச்சிரக்கவசத்திற்பட்டு கூர்மழுங்கி விழுந்தன. தீயவரக்கன் அதனைக்கண்டு சீறி வர்னம் புவிமறைய அம்பினங்களைத் தொடுத்தான். செயப்பிரகாசன் தம்பியைப் பின்னிற்கும்படி சொல்லிசெஞ்சிலை நாண்செவியிற்படவளைத்துகோடிக்கணக்கான அம்பினங்களைத்தொடுத்து அவனேவிய ஆயுதம் அம்பினங்களைத்தடுத்து அம்மையின்திருவடியைச் சிந்தித்துபிரமன்கணையைச்செலுத்தினான் அக்கணையானது வில்லிலிருந்துவிடுபட்டுகோடையிடிபோற்குமுறியிரைந்து அவனேவிய தேவாஸ்திரங்களையெல்லாம் ஒழித்து மார்பிற்பாய்ந்துருவி உயி

ரை கவர்ந்து பாற்கடலி னீராடிப் பார்த்திபன் துணிவந்தடைந் ததுவானவர் பூமாரிபொழிந்தனர் மன்னன் புதல்வர்-வண்ணக்கழு குவாகனத்தைவிட்டிறங்கிப்பலியேற்குந் தேவதையாலயஞ் சென் றனர். அங்கு ஒதுங்கியிருந்த ராக்ஷதப்பிராமணரும் மற்றவரும் கோட்டையேறிக்குதித்தோடினர். பூசைசெய்வோர் மூலஸ்தா னத்திற்பதுங்கினர். ராஜகுமாரர்கள் அங்குள்ள காட்சிகளைக் கண்டுவரும்போது கோரரூபமாய், நூறடியுயரத்தில் ஆண்பெண் ணுருவமாய் வைத்திருக்கும் விகாரவிக்கிரகங்களைக்கண்டு கொலை பாதகங்களுக்கு மூலமான இவைகளைத் துகள்படுத்துவோமா வென்று கருதி நின்றகாலையில் அத்தெய்வங்கள் நடுநடுங்கி மானு டரூபமாய் மன்னவர்முன்தோன்றி அண்ணல்களே கோபியாதீர் கள்அகிலாண்ட ஈஸ்வரியின் அருள்பெற்ற தீரர்கள் உங்கள் சினத்தைப் பொறுக்குஞ் சக்தி எங்களுக்கில்லை இனி மானுட பலியை ஏற்பதில்லையென்று கூறிமறைந்தன செயப்பிரகாசன் ஓரிடத்தில் வந்துநின்று தம்பியைநோக்கி விலங்குக் கரத்துடன் நிற்கும் மானுட வர்க்கங்களைக் கொண்டுவரக் கடவாயென்றான் அவன் அப்படியே சென்று அவர்களிடம் ஜெயசெய்தியைச் சொல் லிவிலங்குகளைத் தகர்த்து அண்ணனிடம் வருவீர்களென்றான் அவர்கள் போனவுயிர் மீண்டு வந்ததுபோல் ஆடிப்பாடி ஆனந் தக் கண்ணீர்பாய வந்து நாங்கள் எத்தனை பிறவிபிறந்தாலும் இந்நன்றியை மறப்போமா தலைக்குவந்த வெட்டை மாற்றிய தயாளகுணவல்லல்களேஎன்று செயப்பிரகாசன்சேவடியில்தீர்க்க தண்டமாய்விழுந்து வணங்கிசண்முகவேல்வள்ளல்சமுகங்கண்டன கவிவாணர்போற்களித்துநின்றனர் அவர்களுக்கெல்லாம்உபசாரஞ் சொல்லி ஆங்குள்ளஆசனங்களில் வரிசையாயிருக்கும்படி செய்து தானுந் தம்பியும் நடுவே இரண்டாசனங்களில் ஸ்ரீராமலட்சு மணர் போல் வீற்றிருந்தனர். அரக்கர் சம்மாரமெல்லாம் பக் கமே யிருந்து பார்த்துக்கொண்டிருந்த கடகனுங் கடகியும்வந்து வீராதிவீரன் திருவடியில் வீழ்ந்து எங்கள் பிழையெல்லாம் பொறுத்தருள வேண்டுமென்று பணிந்து நின்றனர் வேந்தன் மகன் உங்கள்பேரில் யாதொரு துவேசமுங் கிடையாதுசோலையி லிருக்கும். உங்கள் மைந்தரையும் மாதரசியையும் அழைத்துவரு வீர்களென்றான். அவர்கள் அப்படியே சென்று அழைத்துவர திசாமுகன் விசாலகன் ஆகிய இருவரும் எங்களுயிர் காத்தபுண் ணியமேயென்று இறைவன் திருவடியில் வணங்கி நின்றனா களிமயில்போல் வந்துநின்ற கற்பகவல்லியைக் கற்பகாடன் புகழுங் காவலன் நோக்கி கற்புடையவளே உன் கணவன் இக் கூட்டத்திலிருக்கின்றனரா வென்றான். அம்மங்கைமனைவி வந்த தனளென்று மகிழ்ந்து ஓர் புறத்திலிருக்குந் தமனியகோலனைச் சுட்டிக்காட்டினள். அரசர்பிரான் ஆசனத்தை விட்டெழுந்து

போய் அவன் செங்கரத்தைப்பற்றியழைத்துவந்து ராஜகுமாரகா உன் மனைவி அரக்கரிடஞ் சிக்கியபோதிலும் கற்பைக்காப்பாற்றியது தீரமாகும் ஒப்புக்கொள்வா யென்றனன் தமனியகோலன் தலைமேற்கரங்குவித்து தாய்வயிற்றிற்பிறந்த சனனம்போய் புதுச்சனனமாகி மறுமணஞ் செய்விக்கப்பட்ட தேவரீர் திருவாக்குக்கு மேலொன்றிருக்கிறதா தேவரீர் திருவுளம் பற்றிபபடி ஒப்புக்கொண்டேனென்றான் கழுகரசரிருவருஞ் சிநேகனைக்கண்டு சங்கதிகளைச் சாற்றிக்களித்தனர் கணவனையடையப்பெற்ற கற்பகவல்லி பிரமானந்தமாகி சமரசன் மைந்தரை நோக்கி என்மனம் போல்உங்கள்மரபெல்லாங்குளிர்ந்திருக்கக்கடவதென்றாள் அதுசமயம் சௌந்தரவதிகளான இரு மாதரும் வந்து ராஜ குமாரர்கள் எழுந்தருளியாயிருக்குந் திருவோலகத்தை விழிகுளிரததரிசித்து திருமுன் நின்றுசேவித்து நாணம் பொங்க அயலொதுங்கி சுந்தரர்களே எங்கள் மாளிகையில் எங்களுக்குத்தந்த திருவாக்கை நிறைவேற்றி ரக்ஷிக்கவேண்டு மென்றனர் செயப்பிரகாசன் அப்படியே செய்கிறோம் நீங்கள்யார் வலியமாப்பிள்ளை தேடவேண்டிய காரணமென்ன வென்றான் அதற்வகர்கள் நாங்கள் காலாந்தர் பட்டணத்தையாண்டு உங்கள் கைக்ணையால் காலனூர் கண்ட காலகேசரி யென்பவனுக்குக் காந்தர்வஸதிரி யிடமாகப்பிரந்தவங்கள் மஞ்சாள தேவகி செஞ்சொல்வாசகர் என்று எங்கள் பெயரைச் சொல்வார்கள் கன்னிப்பருவமடைந்து எங்கள் தந்தையிடம் எஙகளிஷ்டம்போல் கணவனைரடுத்துக்கொள்வோமென்று சொல்ல அவர் நான் சர்வஜீவமேதயாகஞ்செய்யப்போகிறபடியால் அந்தயாகத்திற்கு மானுடவாலிபர்களைக்கொண்டுவரப்படும் அவர்களில் உங்கள் கண்ணுக்குத் தகுந்தவர்களை யெடுத்துக்கொள்வீர்களென்றனர்நாஙகள் அப்படியேசெந்துகொள்ளுகிறோமென்றுகப்பல் மூலமாகவும் மற்றுவிதமாகவும் வருபவர்களை நாங்கள்கண்டு சோதனை செய்வதற்காய் கடற்றுரை மாளிகையிற்றங்கும்படியாகவுஞ் செய்து விரும்பிய மணவாளர்கள் எங்கள் நோக்கத்திற்கு இசையாமற் போனவர்களேயானல் அடைக்கப்படும் சிறைச்சாலையி லிருந்து தப்பி வரும்படிசெய்து வசமாக்கிக்கொள்வோமென்று சுரங்க வழியுஞ்செய்து வைத்தோம் அப்படியிருக்க நீங்கள் இருவரிலொருவர் அசுரமியக் குதிரையில் வந்தீர் நாங்கள் வந்து எங்கள் காதலைச் சொல்ல மறுத்துவிட்டீர் பின்பொருவர் கப்பலில் வந்து இருவரும் கடற்கரை மாளிகையில் நித்திரை செய்து கொண்டிருந்தீர்கள் அச்சமயம் நாங்கள் வந்து நித்திரையில் எழுப்பிச் சொன்னல் இணங்கமாட்டீர்க ளென்று சுரங்க வாசல் வரும்படி சீட்டெழுதி வில்நுணியில் கட்டிச் சென்றோம். அப்படியே வந்தீர்கள் முன்னதாக வந்து எதிர்பார்த்து நின்ற நாங்கள் விருப்பத்தைச் சொல்லியும் நீங்கள் இணங்கவில்லை கடகி

பின்வந்த உங்களை எங்கள் மாளிகைக்கு வரும்படி செய்து காதலைத் தெரிவித்ததில் சம்மத பாவனையாய்ச் சொன்னீர்கள் உங்கள் வாய்மைப்படி பலிகொடுக்கப் போகுஞ்சமயம் விலகிக்கொள்வோமென்று எங்கள் தந்தையின் பின்புறம் உங்கள் நாட்டமாகவே நின்றோம். ஒன்று நினைக்க ஒன்றானது போல் அரக்கர் கூட்டங்களெல்லாம் உங்களால் ஒழிந்துபோய் விட்டன முன்பு ஏழைகளைப்போலிருந் தீர்கள். இப்போது புவனசக்ரேஸ்வர நிலையிலிருக்கிறீர்கள் நாங்கள் ராஜகுமாரத்திகளா யிருந்தாலும் அக்காலமேஎங்கள் வார்த்தை செல்லவில்லை இக்காலஞ் செல்லுமா எங்கள் கருத்தைத் தாழ்மையோடு தெரியப்படுத்திக் கொண்டோம் அங்கீகரிக்க வேண்டுமென்று வணங்கினர் அவ்வாய்மையைக் கேட்ட அரசன் திருமகன் அசுரர்கோன் செல்வமனைத்தையும் ஆளவந்த அரசிகளே உங்கள் வார்த்தையைக்கடல்மாளிகையிலும் சுரங்கவாசலிலும் மறுத்திருந்த நாங்கள் உங்கள் மாளிகைவந்தவுடன் உங்கள் கருத்துக்கிசைந்து சொல்லியது உங்கள் இதோ நிற்கும் கடகிமைந்தரிருவரும்கொண்டு போகவந்த தாய்க்குப் பயந்து எங்களிடம் அடைக்கலம் புகுந்தனர் எங்கள் சகோதரராகவே ஏற்றுக்கொண்டோம். ஆனதால் இவர்களுக்கு உங்களை மணஞ்செய்து வைக்கவேண்டு மென்றெண்ணியே உங்கள் அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டோம் இப்பவும் நீங்கள் நாங்கள் வேறு இவர்கள் வேறு என்று எண்ண வேண்டாம் நால்வரும் ஒரே சகோதரர்தான் இவர்கள் உங்களுக்கு நாயகராகப் போவதுமன்றி இவ்விரிகண்ட தீவுக்கு அரசராகப் போகின்றனரென்று சொல்லினன் வண்டணி குழலியர் மண்டலாதிபதியின் திருமகனே திருவாக்குப்படி நடந்துகொள்ளுகிறோமென்றனர் பூபாலன் யாவரும் புடைசூழப் போர்க்களஞ் சென்றான். அங்கு கணவரையிழந்த காதலியர் ஒப்பாரியிட்டு அழும் அழுகுரல் உள்ளத்தையிளக்கப் பலவிடம் பார்த்து ஓரிடம் வந்துநின்று கடகிமைந்தரைநோக்கி அடைபட்டிருக்கு மிருகம் பறவையனைத்தையும் விடுதலை செய்வீர்களென்றனன். அவர்கள் அரக்கர்சிலருடன்சென்று சகலஜீவராசிகளையும் விடுதலை செய்தனர் சமஸ்த பிராணிகளுக்கும் நல்லறிவுதோன்றி செகவேந்த செய்தநன்றியைத்தெரிந்து திருமுன் வந்துநிறைந்தனசிங்கம்புலி,மான்,மரை,ஆடு,மாடு,பரிமுதலாகிய நாற்கால் விலங்கினங்களெல்லாம் முன் கால்களைமடக்கிவணங்கினயானைகள் நீண்ட துதிக்கையால் தழைகளையும்,மலர்களையும் பறித்துவந்து ராஜகுமாரர்கள் சிரசிற் பொழிந்தன வானரங்கள்கனிவர்க்கங்களைக் கொணர்ந்து பாதகாணிக்கையாய் வைத்து வணங்கின நாகங்கள் ரத்தினங்களையுமிழ்ந்து திருமுன்வைத்துப் படம்விரித்தாடின. குயில்கள் கூவின. மயில்கள் மாதர்கள்போல்நடனஞ்செய்தன. கிளிகளும் நாகணவாய்ப்பக்ஷிகளும், ராஜகுமாரர்களே நீங்கள் பல்லாண்டு பல்

லாண்டுகாலம் வாழ்ந்திருக்கக்கடவீர்களென்றுவாழ்த்தின. அண்டரண்டப்பக்ஷிகள்சரபப்பக்ஷிகள், யானையுராஞ்சுப்பட்சிகளாகியபெரும் பறவைகளெல்லாம் ராஜகுமாரர்கள் தலைக்குமேலுயர்ந்து பெரிய ரெக்கைகளை விரித்துப் பந்தரிட்டன. சில பறவைகள் திருமேனி வியர்வை போகும்படி ரெக்கைகளைக்கொண்டு வீசின சிலபறவைகள் கடலிற்றோய்ந்து நீரள்ளிவந்து தெளித்தன. இவ்விதமாய் சகல ஜீவராசிகளாலும் பூசிக்கப்பட்ட ராஜாதிராஜனாகிய செயப்பிரகாசன் தம்பியுடன் சமஸ்தபிராணிகளும் நிறைந்துவரக்காலகேசரியின் அரண்மனைசென்று வீற்றிருந்து கடகி மைந்த ரிருவருக்கும் கனகமுடி சூட்டிக் கன்னியரிருவரையும் மணமுடித்து சகலரும் போற்றி யுபசரிக்க வெளிப்போந்து ஊர்கடந்து வெளிப்பிரதேசமான ஓரிடத்தில் சகல ஜீவகோடிகளும் சூழ்ந்து நிறைந்திருக்க அவைகளின்மத்தியில் நின்று இதனைச் சொல்வதாயினன். நித்திய நிராமய நிராலம்ப நிர்க்குண சச்சிதானந்தமாய் விளங்கிய ஆதிகடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட மானுடவர்க்கங்களே மிருக வர்க்கங்களே பறவை வர்க்கங்களே ஊர்வனங்களே சகலரும் கேட்பீர்களாக நாங்கள் படைப்பில் மனுவர்க்கங்களைச் சேர்ந்தவராயிருந்து நமக்கெல்லாம் மூல மாதாவாகிய சாமளரூபியருளினால் இவ்விடத்தில் உங்களுக்கு ஏககாலத்தில் நேரும் மரணத்தில் நின்று ரக்ஷித்தோம் அதற்குப் பிரதியுபகாரமாக நீங்கள் நாங்கள் நாடிக்கொண்டிருக்கும் நாட்டத்தை நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோமென்றனன் அவ்வுரையைக் கேட்ட சகல பிராணிகளும் உருகியசிந்தையுடையவைகளாய் சராசரங்களை யெல்லாந் தற்காக்குந் தயாள குணவள்ளல்களே தாங்கள் நாடியகாரியம் எங்களால் முடிகிறதாயிருந்தால் எங்கள் உயிரைக் கொடுத்தாவது முடித்துத் தருகிறோமென்றன தரைவேந்தன்சாகரதீவாந்தரவரைப்பட்டணமென்பது ஒன்று மலைமேல் கடல்சூழ்ந்த தீவிலிருக்கிறது அன்னதில் என்னுயிர்க்காதலி அருஞ்சிறையி லிருக்கிறாள் அந்நகர் யாருக்காவது தெரியுமா தெரிந்தாற் சொல்லவேண்டு மென்றனன்.

தனிவீரன் கூறிய இனியமொழியைக் கேட்ட சகல சீவராசிகளுங் கண்ணீர் சொரிந்து இப்புண்ணியனுக்கு இத்தன்மையா யேற்பட்டிருக்கின்றதென்று இரக்கமுடையவைகளாய் தேவவதாரசொரூபர்களே தாங்கள் செப்பியபடியான நகரைக் கண்டதுமில்லை கேட்டதுமில்லையென்று சொல்லின மானுடர்களும் அரக்கர்களும் அப்படியே கூறிவிட்டனர் செயப்பிரகாசன் தம்பியை நோக்கி இதற்கென்ன செய்யலாமென்றான் தம்பியானவன் அண்ணா தாங்கள் கூறிய இடம் சமுத்திர மத்தியிலிருப்பதால் கண்டுபிடிக்க

விலங்கினங்களாலும் மனிதர்களாலும் ஆகாது. பறவையினங்களாற்றான் ஆகுமென்றனன் அம்மொழியைக் கேட்ட பறவையினங்கள் இனம் இனமாயெழுந்து கர்த்தனே எங்களுக்கு உத்தரவு கொடுத்தால் நாங்கள் கடற்பரப்பு பூமிப்பரப்பெல்லாம் பறந்துசென்றுசெப்பிய நகரையுந்தேவியையுங்கண்டறிந்துவருகிறோமென்றுசெப்பின செயப்பிரகாசன் செம்பதி சம்பதியாகிய கழுகரசரை நோக்கி உங்கள் சகாயத்தால் இவ்விடத்து அரக்கர் கூட்டங்களையழித்து சகலத்தையும் ரட்சித்தோம் மாதரசியை வைத்திருக்கும் வன்கண்ணரக்கரையும் இப்படியெ தொலைக்க வேண்டியதாயிருக்கின்றது நீங்களோ என்னைப் போன்ற ஓரரச குமாரனை யேற்றுவந்தவர்களாயிருக்கிறீர்கள் கருத்தென்ன சொல்லு மென்றான் கழுகரசர் கண்ணியம் பொருந்திய புண்ணியனே தமனியகோலன் கற்பகவல்லியாகிய இவர்களைத்தாங்கி வந்தபோதிலும் எங்களினமுடன் பலவினங்களையும்காத்தருளிய தேவரீருக்கு மற்றப்பறவைகள் செய்கிறபடி நாங்கள் ஊழியஞ் செய்யாமற் போவோமா செல்லு மனிதருடன் ஸ்திரீபூமான்களாகிய இருவருஞ்சேர்ந்து ஊர்போய்ச்சேரும்படி செய்வீர்களேயானல் நாங்களும் பறவைகளுடன் சென்று பத்தினியிருக்குமிடம் பார்த்து வருகிறோ மேன்றனர். மதுமலர்த்தாரான் புதுவரசரைநோக்கி இம்மானிடக் கூட்டங்களுக்கு யாதொரு இம்சையும் ஏற்படாமல் கப்பல்களிலேற்றி அவரவர் இருப்பிடஞ்சேரும்படியனுப்பிவிடுவீர்கள்என்றனன்அவர்கள் அசுரர்களுக்குகண்டிப்பான உத்தரவுசெய்து கப்பலிலேற்றி எந்த எந்த இடத்திலுள்ளவர்களாக அவர்கள் சொல்லுகிறார்களோ அந்த அந்த இடங்களிற் சேர்த்துவிட்டு வாருங்களென்றனர் மானுடர் தனித்தனி மன்னவர் பொன்னடிகளிற் பணிந்து கடகிமைந்தர் கொடுக்கும் கனகமணிப்பொருள்களுடன் கப்பலிலேறிக்கடல் கடந்து தங்கள் தங்கள் ஊர்சென்று மனைவி மைந்தரைக் கண்டு ராசகுமாரர்கள் செய்த நன்றியை மறவாமல் அவர்கள் தேவியைக் கண்டு சேமமடையும்படி கடவுளைத் தொழுது சுகமேயிருந்தனர் செயப்பிரகாசன் தம்பியுடன் கலந்து பலவாறு சிந்தித்து தேவியிருக்குமிடம் தென்பக்கமாகவே யிருக்கலாமென்பது சில குறிப்பால் தெரிகிறதென்று செம்பதி சம்பதியைத் தனித்தழைத்து மங்கையின்மேனிப் பிரகாசலக்ஷணத்தையும் மற்றும் அடையாளங்களையுந் தெரியச்சொல்லி திருவாழி மோதிரமுங் கொடுத்து தென்றிசை சென்று தேடிவருவீர்களென்றும் மற்ற மூன்று திசையிலும் போய்த் தேடிவருவீர்களென்றும் சகல பறவைகளுக்கும் விடைகொடுத்தான் பறவை யினங்களெல்லாம்பார்த்திபன்மொழி

யைச் சிரமேற்கொண்டு அம்மனைக்கண்டு வருகிறோம் ஆண்டவனே யென்றுபணிந்து திசைக்குக் கோடிக்கணக்காய்ப் புறப்பட்டு அந்தரத்திற் பறந்து சென்றன ராசகுமாரர்கள் சகல விலங்கினங்கட்கும் பறவைகளுக்கும்விடைகொடுத்தனுப்பிவிட்டு அசுரகுமார்களால் உபசரிக்கப்பட்டு ஓர் ஏகாந்த மாளிகையில் பறவைகளின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

நான்காம் அத்தியாயம்

தென்றிசை சென்ற செம்பதி சம்பதியாகிய கழுகரசர் பல பறவைகளுடன் பரவைகளைத்தாண்டி பற்பல தீவுகளிலிறங்கிக் கனிகளையு மச்சங்களையும் புசித்தும் இரவுகாலங்களில் விருக்ஷங் களிற்றங்கியும் பகற்காலங்களிற் பறந்தும் சஞ்சரித்துத் திரியுங் காலத்தில் ஓர் தீவினிடஞ் சென்று ஓர் விருக்ஷத்திலிறங்கி யிரவானசமயம் மன்னர்பிரான் சொன்ன நகரைக் காண்கிலோமே யென்று வருந்தியிருக்கும்போது ஓர் தீபவொளி தோன்றியது அவ்வொளி வழியே கழுகரசருங் கிளியரசாகிய அஞ்சுகனுஞ் சென்றுபார்க்க ஓர் உப்பரிகையிலேந்து பெண்களிருந்தனர் அஞ்சுகன் கழுகரசை நோக்கி நமதரச கன்னிகை இவர்களி லொருத்தியாயிருக்கலாமா வென்க செம்பதியவர்கூறிய அடையாளமும் லட்சணமுமிவர்களிடத்திலில்லை வரலாறு கேட்பது நலமென்று கூற அஞ்சுகனுகிய கிளி மாதர்கள் மத்தியிற் சென்றது பச்சைக் கிளியைக் கண்ட கச்சணி தனக்கன்னியர்கள் இச்சையாயேந்தி மனிதர்வளர்த்த கிளியானதால் நம்மிடம் வந்ததென்று மதித்து உன்னை வளர்த்தவர்யார் இங்கு வந்ததென்ன வென்றனர் கிளி யென்னை வளர்த்துக் காப்பாற்றினேன் பெருமை கூற யாவராலுமுடியாது அவன் தோய்ந்து பிரிந்த சுவர்ணப் பிரபையென்னுந் தோகையர்க் கரசியைத்தேடி நானும் என தினமும் வந்திருக்கின்றே மென்றது சுவர்ணப்பிரபை யென்ற வாக்கியத்தைக் கேட்ட மங்கையர்கள் காதல் பொங்கக் கண்ணீர் வழிய வந்த கிளியை மார்புடனணைத்து சுவர்ணப்பிரபை யென்றொருத்தி பெயர் கூறினையே அவள் யார்மகள் நாயகன் கிடைத்ததெப்படி தேடி வரவேண்டியதென்ன சொல்வா யென்றனர் மென்கிளி யின்னவர் மன்னவன் றேவிபாலின்பம் பாராட்டுவதால் புலன் தெரியலாமென்று சங்கதியனைத்தையும் ஆதியோடந்தமாய்ச் சொல்லியது அவர்களளவற்ற மகிழ்ச்சியுடையவர்களாய்

ஓ பச்சைக்கிளியே சுவர்ணப்பிரபையின் தோழியானவர்கள் நாங்கள்தான் நாங்களும் தலைவியும் நீராடும் பொய்கையில் வந்த மாயக்கப்பலிலேறி அரக்கனுல் கொண்டு போகப்படும்போது அவன் கருத்துக்கு அவளிசையாததால் எங்களைத் தூக்கிக் கடலிலெறிந்துவிட்டான் நாங்கள் கடலில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருக்கும்போது அரக்கர்கோன் பணியாளராய் விமானத்தின்பின் வந்து கொண்டிருந்த ஐந்தரக்கர்கள் எங்களைத் தூக்கிக் கொண்டுவந்து இத் தீவில் வைத்துவிட்டு ஊர் சென்ருர்கள் நாங்கள் பொய்கைக் கரையிற் கவலையோடிருக்கும்போது ஓர் பிரமராக்ஷச முனிவர் வந்து எங்கள் வரலாறு வினவ வர்த்தமானங்களைச் சொல்லி எங்களுக்கும் எங்கள் தலைவிக்கும் விமோசனமாகுமா எக்காலஞ்செல்லு மென்ருேம் அவர் சொல்லியதாவது சிலகாலஞ்சென்று உங்களரசி ஓர் ராசகுமாரனுற் சிறைமீட்கப்படுவாள் உங்கள் சிறையு மீட்கப்பட்டு அவளிடஞ் சேருவீர்களென்றனர் நாங்கள் ஐயா முனிவரே எங்களரசி கனற்கவசமுடையவளானதாற் கற்பழியமாட்டாள் நாங்கள் எதைக்கண்டு அரக்கரிடம் அழியாமலிருக்கப் போகிருேம் அரக்கரைச் சேர்ந்த எங்களை இனத்திற் சேர்க்கமாட்டார்களே யென்ருேம் அவர் சொல்லிக் கொடுத்ததாவது நான் ஒருநாள் இப்பொய்கைக் கரையில் மந்திரஞ் செபித்துக் கொண்டிருக்கும்போது அசுரப்பெண்கள் ஐவர்வந்து நீராடிக் கொண்டிருந்தவர்கள் மோகமுடையவர்களாய் கலவிக்கான குறிப்புகளைக் காட்டியும் நான் பேசாததால் நீரின்மூழ்கிக் கால்களைப் பற்றியிழுத்தனர். உடனே நான் சினந்து மரப்பாவைகளாகப் போகக் கடவீர்களென்று சபித்தேன் அவர்களப்படியே யாயினர் நான் பாவைகளை அரசமரப்பொந்தில் வைத்திருக்கிறேன் இப்போது உங்களிடந் தந்து மந்திரமுபதேசிக்கிறேன் பெற்றுக் கொள்ளுங்கள் மறைவாய் வைத்திருந்து அரக்கர் வந்து காமலீலையைக் கருதும்போது இம்மந்திரஞ் சொன்னல் உங்களைப்போன்ற கன்னியராய் விடுவர் என் சாபவல்லமையால் முன்னைய நினைவுவந்து வேறிடம் போகமாட்டார்களென்று இரண்டு மந்திரங்களையும் உபதேசித்துப் பாவைகளையுந் தந்து போயினர் ஊர்சென்ற அரக்கர்கள் மயனைக் கொண்டுவந்து ஐந்து உப்பரிக்கைகளும் அறைகளுமமைத்து எங்களையிருக்கச் செய்தனர் நாங்களும்இதிலிருந்து முனிவர் சொற்படியே அரக்கர் வந்தவுடன் பேசுவதெலாம் பேசி அணியணியச் செல்வதுபோல்அறைக்குட்சென்று பாவைகளைப் பாவையராக்கி யனுப்பிவிடுவோம் அவர்கள் தோய்ந்து பாவையறைக்குள் வந்தவுடன் பாவைகளாக்கி வைத்துவிட்டு நாங்கள் சென்று பல வார்த்தைகள் பேசுவோம் அரக்கர்கள் பகலெலாம் அரசசேவையிலிருந்து இரவு வருவார்கள் இப்போது வருநேரமும்

ஆயிற்றென்றனர். செம்பதி இப்போது வரும் அரக்கரிடம் சாகரதீபாந்தரவரைப் பட்டணத்தின் காவல்கட்டு முதலியவை கேட்பீர்களென்றனன் மங்கையர்கள் அப்படியே கேட்கிறோ மென்றிருக்க ஐந்தரக்கர்களும் வந்தனர் மாதர்கள் வழக்கம்போல் பேசுவதைப் பேசி யெங்களை யித்தீவில் வைத்திருக்கிறீர்களே நாங்கள் எத்தனை நாளைக்கு மனிதசஞ்சார மில்லாதவிடத்திலிருக் கிறது நீங்கள் வசிக்கும் ஊரிலாவது கொண்டுபோய்ச் சேர்க்க லாகாதா அங்குள்ள கட்டுக்காவலென்ன சொல்லவேண்டு மென் றனர் அவர்கள் மாதரசிகளே நாங்கள் உங்களை யிவ்விடங் கொண்டுவந்து வைத்துச் சேர்ந்துவருவது எங்கள் தலைவனுக் தெரியாது உங்கள் தலைவி நோன்பு முடிந்து அவளை அவன் சேர்ந்திருக்குங் காலம் உங்களை ஊர்கொண்டுபோய் வைத்து வாழலாமென்றெண்ணி யிருக்கிறோம் காவலோ பெரிது கலகா சூரனுத்திரவால் தீவைச்சூழ்ந்த சமுத்திரமெல்லாம் திமிங்கிலம் திமங்கில கிலமீன்கள் வாயைத் திறந்துகொண்டேதிரியுமெந்தப் பிராணியும் வாய்முடிவைக் கடந்துபோக முடியாது போக வேண்டுமானல் வாயிற்புகுந்து பெருகிய தண்ணீரிற் கிடந்து வாயைமூடிச் சுவாசம் விடும்போது கொடிறுகளின் வழியாய் நீரிற் கலந்துதான் செல்லவேண்டும் அப்படிப்போக எவைக ளாலு முடியாது புகுந்து நீருடன்சென்றாலும் ஊரில் நுழைய முடியாது காவல் கடுமையாயிருக்கு மென்றனர். பாவையர் பாவையர்களையனுப்பிப் போகத்தைத் தீர்த்து அவர்கள் போன தின்பின் பறவைகளைக் கண்டு சங்கதிகளைக் கேட்டீர்களாவென்க அவைகள் நாங்களறிந்து கொண்டோம் அதற்கான முயற்சி செய்கிறோமென்று வேறிடத்தில் வந்திருந்து யார் யார் போகிறதென்று ஆலோசனை செய்தன செம்பதி சம்பதி யாகிய கழுகரசர் நாங்கள் போய்வருகிறோ மென்று சொல்ல ஆனையுராஞ்சிப் பக்ஷியும் நானு வருகிறேனென்றது அஞ்சுக ளுகிய கிளியும் பத்தினியைப் பார்க்க நானும் வருகிறேனென் றது. அப்போது மூன்று பறவைகளும் கிளியைப் பார்த்து உன்னல் வரமுடியுமா தண்ணீர் பட்டால் உன்னுயுருநீங் தவிர்ந்து போகுமே வேண்டா மென்று கூறப் பச்சைக்கிளி பகரலானது வெம்புகாடவி யென்னும் வனத்திற் சம்புகேசனென்னும் ஓர் முனிவன் கும்பபயோதரி யென்னு மங்கையுடன் தவ விரதங் களை அனுஷ்டித்திருந்தான் நான் அவர்கள் ஆச்சிரமத்துக்கருகி லுள்ள ஆலா விருக்ஷத்தில் வசித்து வரும் ராசகிளியின்பிள்ளை ரிசி ரிசிபத்தினியிடம் பழகி அவர்கள் பேசும்பாஷைகளனைத் தையுங் கற்றுக் கொண்டேன் அவர்கள் தேசசஞ்சாரிகளாய்ப் புறப்பட்டனர் நானுங்கூடச் சென்றேன் சம்புகேசர் மனிதர்கள் வசிக்கப்பட்ட வூர்களுக்குப் பெண்ணைக் கூட்டிச் சென்றால்

தன்னை மதிக்கமாட்டார்களென்றும் வாலிபர்களைக்கண்டால் பெண் தன்னைவிட்டுப் போய்விடுவாளென்றும் எண்ணி கமண்டலம்போல் ஓர் மரக்கூடுசெய்து உள்ளிருப்பவள் பார்வைக்கு வெளியிலுள்ள பொருள்கள் தெரியவும் வெளியிலிருந்து பார்ப்பவர் பார்வைக்கு உள்ளிருப்பவள் தோன்றாதிருக்கவுமான ஓர் விதக் கண்ணாடியிடையிலே பதித்து அவளை அக்கூண்டிலிருக்கச் செய்து தோளில் மாட்டி நடந்தார் நான் அவர் வேணுகாதண்டத்திலிருந்து கொள்வென் அவர் ஊர்களிற் சென்று பிச்சை வாங்கிச் சத்திரஞ்சாவடிகளிற்றங்கப் பெண்ணை வெளிவரும்படி செய்து இஷ்ட போகங்களனுபவித்துக் தேசசஞ்சாரஞ் செய்யுங்காலத்தில் ஓர் நாள் ஓரூருக்குப்போய்க் கொண்டிருக்கும் போது அப்பாதையில் ஓர் வாலிபன் திடகாத்திரனைய்க் கூடவே நடந்து வந்தான் அவன் முனிவரைப் பார்த்துச் சுவாமிகளே இவ்வழியிற்றாங்கள் நடப்பதே பிரயாசம், அதிலும் ஒரு பெரிய மரக்கூண்டைச்சுமந்து செல்கிறீர்களே அதில் என்னப்பொருள் இருக்கிறதென்றான் முனிவர் ஈதிற்றான் நான் தேடிய பொருளிருக்கினறது சுமந்து செல்கிறேனென்றார் அவன் இவர் தபோநிதியாயிருப்பதால் பூசைக்குரிய பொருள்களை வைத்திருக்கலாம் அதைச்சற்று சுமந்து சென்றால் புண்ணியங் கிடைக்குமென்று மதித்து சுவாமிகளே, நான் சுமந்து வருகிறேன் தருகிறீர்களா வென்றான் இவருஞ் சுமையை மாற்றினாற் சிறிது தூரம் லகுவாய் நடந்து போகலாமென்று அக்கூண்டை அவனிடங் கொடுத்தார் அவன் வாங்கி தோளில் மாட்டி நடை தளர்ந்து பின்பட்டு இதென்ன ஓராட்சுமையாயிருக்கிறதென்றான் கூட்டில் இருந்த குயில் கனத்துக்கேற்றபலன் கிடைக்குமென்று மெதுவாய்ச் சொல்லினள் அதனைக்கேட்ட வாலிபன் கூண்டிலிருப்பவள் பெண்ணென்று தெரிந்து சொற்குறிப்பையு முணர்ந்து ஊக்கமுடையவனாய் முன் நடந்தான் நான் கூண்டிலுந்தண்டிலு மாறி மாறி யிருந்தமையால் நடந்த வர்த்தமான மறியலானேன் நாங்கள் போகும் வழியில் ஓர் ஆறுகுறுக்கிட்டு வெள்ளம் போய்க் கொண்டிருந்தது வருபவரை எதிர் பார்த்திருந்த ஓடக்காரன் ஆட்கள் சேர்ந்தவுடன் ஏற்றி ஓடத்தை யாற்றில்விட்டான் மாலையான அச்சமயம் நாங்களும் வாலிபனும் அவ்வோடத்திலிருந்தோம் முனிவர் ஓடத்தினோரமுயர்ந்த பலகையிலிருந்தார் நான் அவர் தோளிலிருந்தேன் வாலிபன் கூண்டினோரமாயிருந்தான் கூண்டிலிருந்தவள் தள்ளென்றாள் பாதகன்முனிவரை ஆற்றிற் றள்ளிவிட்டான் அவர் நீரோட்டத்தில் வீழ்ந்து மூழ்கிச் செஞ்சடைக்கற்றை நீரிற்பரவப் பெண்ணே என்னைவிட்டுப் போகிறாயோ பெண்ணே என்னைவிட்டுப் போகிறாயோ வென்று கூவியுழன்றார். நான் அவர் தலையிற்றாவி உச்சிச்சடை

மயிர் கால்களைப் பின்னிக்கொண்டபடியால் வேறுபோக முடியாமல் முழுகும்போது முழுகி எழும்போதெழுந்து கஷ்டப்பட ஆற்றுவெள்ளம் பலவாறுய்ப் புரட்டிக்கொண்டோடியது நான் சுவாமிகளே இருளோ அந்தகாரமாயிருக்கின்றது. நீர்ப்புரட்டலோ அகோரமாயிருக்கின்றன நான்பிழைக்கும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டு மென்றேன் அதற்கவர் நீ எவ்வித நீரில் மூழ்கினாலும் மரணமடைய மாட்டாயென்று வரங்கொடுத்தார் அவ்வரவல்லமையால் எனக்கு நீராற்சேதமில்லை மிதந்துகொண்டுபோன முனிவரை நீரானது தென்கரையிலொதுக்கியது நாங்கள் கரையேறிச் சூரியோதயத்தில் போகும்படி குறிப்பிட்டிருந்தவூருக்கு வந்து பெண்ணை வாலிபனெங்கு கொண்டுபோயிருப்பானென்று பிச்சையேற்பவர்போல் வீடுவீடாய் நுழைந்து பார்த்துவர அங்கோர் வீட்டில் பெண்ணானவள் வாலிபனுடன் மஞ்சத்திலிருக்கக் கண்டு எங்கள் முனிவருக்கு வயிற்றெரிச்சலுண்டாகிப் பாதகிஉன்னைத்தரையில்விட்டால் தண்டைக்கால்நோகு மென்று சுமந்ததற்கோ இவ்வுபகாரஞ்செய்தாய் இச்செய்கை கடவுளுக்குப் பொறுக்குமா வென்றார்அத்துஷ்டன் ஆண்டிப் பயலே என்ன சொன்னாய்அப்புறம் போகிறாயா அரிவாளைக்கொண்டுவீசிவிடவா வென்றெழுந்தான் அப்பெண் என்னைச் சுமந்ததற்காக மன்னிக்க வேண்டுமென்றாள் முனி புங்கவர் யாதொன்றும் பேசாமல் வீட்டை விட்டு வெளியில்வந்து ஊர்கடந்து பெண்ணாலடைந்த பயன் போதும் போதுமென்று என்னை உன் கருத்துக் கிசைந்த விடம் போய்ச் சேரென்று சொல்லித் தவத்துக்குப் போய் விட்டார் நான் கிளிகளுக் கரசாயிருந்து தீவுவளம்பார்க்க விரிகண்டதீவடைந்து அரக்கரிடஞ்சிக்கி அரசன் மகளால் விடுதலையடைந்து உங்களுடன் வந்துளேன் முனிவர் தந்த வர வல்லமையால் நீராலழிவுநேராது கூடவருவேனென்றது கிளிகூறிய வாய்வாரிமையாற் களி கூர்ந்த மூன்று பறவைகளும் கூடவருதி யென்று கூட்டிக்கொண்டுதென்றிசைநோக்கி அலைகடல்மேற்பறந்துசெல்ல அரக்கர்கூறியபடி மச்சங்கள் காணப்பட்டன மனிதரை விழுங்கு மீன்பனைமீன் அம்மீனை விழுங்குமீன்யானைமீன். அம்மீனைவிழுங்குவது திமிங்கிலம் அம்மீனைவிழுங்குவது திமிங்கிலகிலம், அம்மீனை விழுங்கக்கூடிய மீன்களும் சமுத்திரத்திலுள்ளன வென்று பன்னூல்களும் ஓசனைபுலப்பிலாத உடம்பமைந்து என்று கம்பராமாயணமும் சொல்லியிருந்தபடி பிரம்மாண்டமான திமிங்கில கிலகில மீன்கள் அடிவாய் தரையிலும் மேல் வாய் மேகமண்டலத்திலும் படும்படி வாயைத்திறந்திருக்கக்கண்டு வாய்முடிவைக் கடந்து சென்றால் சூரியவெப்பமெரித்து விடுமென்று செல்லும் பிராணிகளுடன் வாயிற் சென்று நீர்ப்பரப்பில் மிதந்து கொண்டிருந்தன மச்சங்கள் மாலையானசமயம் வாயை மூடிச்

சுவாசங்களைவிட எண்ணிறந்த கடற்பிராணிகளும் வானப்பறவைகளும் வயிற்றிற்செறிய சுவாசக் காற்றால் கொடிறு வழியெழுப்பப்படும் நீர்ப்பிரவாகங்கள் வானமண்டலங்களுக்குப் பாய்ச்சிய மடைத் தண்ணீரைப்போல் ஆகாயத்திலுயர்ந்தெழுந்து மடங்கி அநேகமாயிர யோசனை தூரங்களிற்போய்விழுந்தன கொடிறு வழியெழும் நீரோசையாற் புவனங்கள் செவிடுபட்டன உள்ளடங்கிய புள்ளினங்கள் நான்கும் தம் வல்லமையால் வயிற்றிற் புகாமலொதுங்கிக்கொடிறு வழியெழுந்து வெள்ளப்பெருக்கிற் கலந்து வாயு மண்டலவரை போய்நீர்வேகமடங்கியபின்கீழ்நோக்கிப் பறந்து கடல்மேலுலாவி இருளானதால் ஓர் திசை சென்று ஓர் தீவில் விருக்ஷங்களிருக்கக்கண்டிறங்கி ஆயாசமாறிக் கொண்டிருந்தன.

சூரியோதயத்தில் அஞ்சுகனுகிய கிளி அங்குள்ள பிரமாண்ட விருக்ஷக்கிளையிற்ருவி ஆங்குள்ளவைகளைப் பார்த்துவர ஓர் கிளையில் பறவைக்கூடொன்று பெரியதாகவும் மனிதர் குரலுடையதாகவுமா யிருக்கக்கண்டு அதில் நுழைந்துபார்க்க ஒரு பெண் ஓராடவனுடன் சரசவார்த்தைகள் பேசியிருக்கக் கண்டது கிளியைக்கண்ட அளிமலர்க்குழலாள் களிகூர்ந் தெடுத்துக் கையிலேந்தினள். பைங்கிளி செங்கமலைபோன்றவளே நாயகனுந் தானும் இவ்விடத்திலிருக்கிறீர்களே என்னகாரண மென்றது.

அப்பெண் எங்கள் நிலைமையை உன்னிடம் சொல்லியாவதென்ன எங்களிருப்பிடங் கொண்டுபோய்ச் சேர்க்க வல்லமையுண்டுமா வென்றனள். கிளி உங்களிருப்பிடஞ் சேர்க்க என்னால் முடியாவிட்டாலும் என்கூட வந்தவர்களால் முடியும் வரலாறு சொன்னல் அழைத்துவருகிறே னென்றது கன்னன் மொழிக் கன்னி கழறலானுள். நான் சாகரதீபாந்திரவன்ரைப்பட்டணத்தையாளுங் கலகாசூரனுற் கொண்டுவந்து வைத்திருக்கப்பட்டகன்னிமாளிகை யிருப்புக்கோட்டை காக்குங் காவலர் தலைவன் கடோதரன் புத்திரி ஒருநாள் மங்கையருடன் சமுத்திர தீரத்தில் நீராடிக் கொண்டிருக்கும்போது ஒரு பெரியயானை கருமலைபோல் வந்து மாதர்களைத் தூக்கி வாரியிலெறிந்து விட்டு என்னை முதுகில்வைத்துக் கொண்டு கடலிலிறங்கி நடந்தது கடல் நீர் அதன் அடிவயிறுவரையிருந்த தன்றி மேலில்லை இத்தீவு கொண்டுவந்திறக்கி யானையுருவை மாற்றிவேதாள் ரூபமாய்முன்னின்று பெண்ணே சேருவாயென்றது நான் அரக்கர் மகளாயிருந்தும் அதனைக் கண்டு சற்றேபயந்து தெளிந்து ஆறுமாதநோன்பு பிடித்திருக்கிறேன் தீர்ந்தபின் சேர்ந்துகொள்ளுகிறே னென்றேன் அது சம்மதித்துக் கனிவர்க்கங்களைக் கொடுத்து யானையுருவமாய் முது

தில்வைத்துதீவெல்லாம் சுற்றிவந்து இவ்வாலமரத்து நிழலில்நின்று போகும். அப்படிநிற்கும்போது ஒருநாள்நான் அண்ணார்ந்து பார்க்கஇவ்வாலிபன்கூண்டருகிலுள்ளகிளையிலிருந்துஎன்னைப்பார்த்தான்காண்சைகைசெய்தேன் இவன்மரப்பட்டைக்குள் இலைகளைப்பொதிந்துபொம்மைபோ லாக்கிமரநாரிற்கட்டிஎனக்கு நேர்விட்டான். அதனை அவிழ்த்து யானைமேல் வைத்துவிட்டு நாரைப்பிடித்து உயரவேறி இவனருகுவந்து நீயார் மகன் ? இக்கூட்டில் வந்திருக்கவேண்டியதென்னவென்றேன். இவன் சொல்லியதாவது நான் கடோதரனின் றங்கை மகன் சலதத்தனென்பது எனது பேர். கடோதரன் மனைவியின் தமையன் பராக்கிரமகேது மகன் உக்கிரனென்பவனோடு பால சிநேகமாய்ப் பள்ளிக்கூடம்போய்க் கல்வி பயின்றும் பலவிடங்கள் சென்று விளையாடியும் விட்டுப் பிரியாதவர்களா யிருந்தோம். ஒருநாள் எங்கள் மாமன் கடோதரன் வீட்டில் விருந்து நடந்த சமயம், என் தாய் தந்தையரும், அவன் தாய் தந்தையரும் மறறப் பந்துக்களும் விருந்து சாப்பிடப் போனோம். கடோதரர் எங்களிருவரையும் அருகே யிருக்கச்செய்து சபையை நோக்கி எனது மகள் இங்கித வசனியை இருவரில் யாருக்குக் கொடுக்கலாமென்றான். எங்களிருவர் தாய் தந்தையரும் தம் தம் மகனுக்கென்றனர். மத்தியமாய்வந்த ஓர் சோதிட சாஸ்திரி இங்கித வசனிக்கும் சலதத்தனுக்குமே பொருத்தம். பிரமலபியு மப்படித்தானிருக்கலாம். முடியுமென்றனர். மாமனார் பெண்ணு மாப்பிள்ளையும் பருவமாகுஞ் சமயம் பார்த்துக் கொள்வோமென்று கூற, யாவரும் எழுந்து சென்றனர். பராக்கிரமகேது என்னை மோசப்படுத்த எண்ணி பள்ளிக்கூடமிருந்து வரும்போது சில துஷ்டர்களை ரகசியமாய் ஏவ அவர்கள் என்னை நயவுபடுத்தித் தனியாய்க்கடற்கரைப்பக்கம் அழைத்துவந்து கத்தியை யுருவினர். நான் கலங்கி வெட்டவேண்டாமென் றழுதேன்: அவர்களுக்கு எப்படியோ இரக்கம் வந்து தூக்கிக்கொண்டுவந்து இத்தீவில் விட்டுப் போயினர். நான் தனியே அழுது திரியும்போது அண்டரண்டப் பக்ஷிகளெடுத்து வந்து இக்கூட்டில் வைத்து குஞ்சுகளோடு காப்பாற்றின. நான் பறவைக் கூட்டிலிருந்தே வளர்ந்து வருகிறேனென்றான். நான் சோதிடர் சரி சொன்னபெண் நான்தானென்று இரைக்குச் சென்றுவந்த பக்ஷிகளிடமும் சங்கதியைச் சொல்லி கலந்து வாழ்ந்திருந்தோம். மேகநீரைப் பிழிந்து முட்டையோட்டில் நிரப்பி கிளைகளிலுள்ள கனிவர்க்கங்களைப் புசித்து இங்கிருக்கிறதே யொழிய வேதாளத்துக்கஞ்சி வேறிடம் போகிறதில்லை அண்டரண்டப் பக்ஷிகளின் முட்டைகளை யுடைத்துவிட்டதென்று வந்தால் தலை வெடித்துச் சாகக்கடவாயென்று பக்ஷிகள் சாபமிட அது ஏற்றிருப்பதால் இவ்விடம் வரவுமாட்டாது. இது நிற்க, முன் நான் வஞ்சகஞ்செய்து இவ்விடம் வந்ததை யறிந்த வேதாளம் எடுத்த யானையுருவுடன் மூர்க்க வெறிகொண்டு பக்க மரங்களைச்

சாய்த்துத் திரிகின்றது. இதுதான் எனது வரலாறென்று சொல்லி முடித்தாள். இங்கிதவசனி கூறிவந்த சங்கதி யனைத்தையுங்கேட்ட பைங்கிளி நாயகனையும் உன்னையும் தந்தையிடஞ் சேர்த்துவிடுகிறோம். சாகர தீவாந்தரவரைப் பட்டணத்துள்ளும் மாதரசி யிருக்கு மாளிகைக் கோட்டைக்குள்ளும் உள்ள வளங்களை நாங்கள் போய்ப் பார்த்துவரும்படி உன் தந்தை யனுமதிவாங்கித் தருவாயா வென்றது. அவள் அங்கு சேர்த்துவிட்டால் வாங்கித தருகிறேனென்றாள். கிளி மூன்று புட்களிடமுஞ்சென்று சங்கதியைச்சொல்லி யழைத்து வந்தது. அண்டரண்டப் பக்ஷிகளும் வந்து சங்கதிகளைக்கேட்டு வந்த பறவைகளை யுபசரித்து இவர்களை நீங்கள் கடத்திக்கொண்டு போவீர்களானால் வேதாளம் வந்து மறித்துக்கொள்ளும். கொன்றாற்றான் கொண்டுபோகலாம். கொல்லுகிறதானால் அதனுச்சியி லுயிர் நிலை யிருக்கிறது. அந்த ஸ்தானத்தை நம்மிலொருவர் கொத்தி வானத்திற் றூக்கினால் வேறு ரூப மெடுக்கமாட்டாது. மற்றவர் கொத்திக் கொன்றுவிடலா மென்றது. உடனே யானையுராஞ்சிப் பக்ஷியாகிய அன்கம் வெழுந்து ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து உச்சியிற் கொத்தி மாய யானையைத்தூக்கி வானத்திலெழுந்தது. கழுகுகளிரண்டுங் கொத்திக்கொத்தி யெறிய வேதாளம் வேறுருவெடுப்பதற்கின்றி மாண்டது. இங்கித வசனியையும் சலதத்தனையும் அன்காமுதுகிலேற்றி அவர்கள் காட்டுகிற வழியே மூன்று பறவைகளும் பக்கத்தில் வரக் கடல்கடந்து மலைமேற்றாவி தடுப்போர்க்கெல்லாம் சலதத்தன் நமதினமென்று சொல்வதால் யாதொரு தடையுமில்லாமற் கடோதரன் மாளிகைமுன் சென்றிறங்கியது கடோதரன் மகளையும் மகளுடன் வந்தவனையும் சுமந்துவந்த பறவையையு மற்றப் பறவைகளையுங் கண்டு மகிழ்ந்து சங்கதியனைத்தும் விசாரித்து தங்கைவிட்டார்வர சோதிடசாஸ்திரி சொல்லியபடி முடிந்ததே யென்று பிரமானந்தமாய்ப் புள்ளரசருக்கும் மற்றவர்களுக்கும் விருந்து செய்துவந்த பந்துர்கள் சென்று தனித்திருக்கும்போது மகள் பறவைகள் வந்த கருத்தைக் கூறினள். கடோதரன் சற்றே மயங்கி எண்பத்துநான்கு நூறாயிரஞ் சீவன்களிலும எதையுங் கோட்டைக்குள் விடக்கூடாதென்ற ராசனுத்தரவு தலையிலிருக்க இவைகளையெப்படி விடலாமெனப் பலவாறு யோசித்துப் புள்ளரசரைநோக்கி நீங்கள் பட்டணத்திலுள்ள வளமெதைப் பார்த்தாலும் பார்த்து வாருங்கள். மருமகனையுங் கூட அனுப்புகிறேன். இருப்பு மதிலுக்குட் போய்வருகிறோ மென்பது சரியாய்த் தெரியவில்லையே. அரசனறிந்தால் என் குடியடங்கலும் போய்விடுமே யென்றான். பறவைகள் அப்படி வாராது நாங்கள் பல தீவுகள் பார்த்து இத்தீவு விசேஷமுள்ளதென்று கேட்டு வந்தோம். ஒன்றைப்பார்த்து ஒன்றைப் பாராது போனால் மனச்சம்மதமாகாது. மனுவர்க்கங்களுக்கும் எங்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நாங்கள் போய்வரும்படி

அநுமதி தரவேண்டுமென்றன. இங்கிதவசனியும் அநுமதிகொடுக்கத்தான் வேண்டும் அநுமதி வாங்கித்தருகிறதாக நான் முன்னமே சொல்லிவிட்டேனென்றாள். கடோதரன் ஒருமனப்பட்டு சூரியனஸ்தமாய் உதயமாவதற்குள்போய் வந்துவிடுங்க ளென்று ஓர் புறம் இருப்புக்கோட்டை வெளியினின்று உள்ளே போகும்படி சொல்லி யங்ஙனமேயிருந்தான், பறவைகள் நான்கும் பாரமதிலைத்தாண்டிஉட்பிரவேசித்து ஓரிடத்திலிருந்து கதவெலாம் பூட்டப்பட்டு விளங்கும் பொன் மாளிகையிலிருக்கும் பொன் போன்றவளிடம் நாம் எவ்வழி போகிறது விசாலமான இம்மாளிகையில் அவள் துயிலுமிடம்எவ்விடமோகாவலெப்படியோ வென்று யோசிக்கும்போது அஞ்சுகன் நான் போய்அறிந்து வருகிறேனென்று பறந்து பங்கயப் பொய்கைப்பக்கலிலுள்ள பல விருக்ஷங்களிற்றுவி வரும்போது ஓர் நாவல் விருக்ஷத்திலுள்ள வோர கூட்டில் தனதினமாகிய இரண்டு கிளிகளிருக்கக் கண்டு அதனைச் சார்ந்தது.

ஒருநாளும் வராத கிளி வரவைக்கண்ட கிளிகளிரண்டும் ஆச்சரியமுடையவைகளாய் உபசரித்து மடக்கொடியார் காத்திலுலவும் நீ கடக்க முடியாத காவலைக்கடந்து எப்படி வந்தாய். வரவேண்டிய தென்னவென்று கேட்க, சுந்தரன் றாதாய்வந்த அஞ்சுகம் என தினங்களே நான் எனது சொந்தக்காரியமாய் வந்ததல்ல. பல்லாயிரம் பறவை மிருகவர்க்கங்களை யெல்லாம் ரக்ஷித்த புண்ணியனொருவனுண்டும். அவன் காரியமாகவே வந்தேன். அதேதெனில் அவன் தன் வல்லமையால் இவிடம் வந்து ராசகுமாரத்தியைக் கலந்து அரக்கர் மாய்கையாற் பிரிந்து திசை தெரியாவிடத்திலிருந்து போய்ப் பார்த்துவரும்படி பலகோடி பறவைகளைப் போக்கி யிருக்கிறான். அவைகளில் நானொன்றாகும் கடோதரன் தயவுபெற்றுக் கோட்டை கடந்துவந்தேன். என்னுடன் வந்த மூன்று பறவைகள் கோட்டைக்குள் ஓரிடத்திலிருக்கின்றனவென்று கூறியது. அவ்வசனங் கேட்ட அங்குள்ள ஆண் கிளி பிரமகற்பனைப்படி காரியம் நடந்து விட்டபோதிலும் எங்களரசனுக்குத் துரோகமாக உங்களரசன் செய்தியைச் சொல்லலாமா வென்க, வந்த கிளி பொதுவாய்ப்பார்த்தால்எந்த சீவவர்க்கங்களும் மனங்கொண்ட விடத்தில் நிற்குமே யொழியக் கொள்ளாவிடத்தில் நில்லாது. உலகிலொருவரும் படையாதஅழகைப் படைத்த நங்கை தன்னினச் சுந்தரனையின்றி விகாரரூபஅரக்கனை விரும்புவாளா அரக்கனெண்ணம் உலகுக்கேற்குமா காவற்பொறுப்பில்லாத நீங்கள தனை யேன் கருதவேண்டும். நல்லவர் நோக்கத்திலிருப்பதே நன்மை யென்றது. அம்மொழியைக்கேட்ட ஆண் கிளி பெண் கிளியைநோக்கி மங்கையிடம் இவைகள் வந்த சங்கதியைச் சொல்லிவாவென்ன, அது பூவையிருக்கும் பொன் மாடம் நோக்கிச் சென்றது. அங்கு சுவர்ணப்பிரபை யெப்படி யிருக்

கிருளென்றால் ஆகாயப் பரண் சென்றவன் வாராததிலிருந்து அட்டதரித்திரன் அகண்ட செல்வத்தைப் பெற்றிழந்தது போலவும் பிறவியந்தகன் இடையிற் கண் தெரியப்பட்டு மறைந்ததுபோலவும் ஏக்கமுடையவளாய் அர்த்தராத்திரி காலத்தில் அரிய காவலைக் கடந்துவந்து ஆனந்தகோலமாய்த் துலங்கி அரைக்ஷணத்தில் அந்தர கரவத்காரரை அந்தரத்திலேற்றிச் சொல்லி யடங்காத சுகத்தைத் தந்த சுந்தரநாயகனை யெண்ணி யெண்ணி உணவாதிகளருந்தாமலும் துயிலாமலும் கண்ணீர் பெருக வுருகி யுருகி இந்திர நீலம்போலிருண்ட சலை ரோமபந்தியின் சோபிதமும் செந்தாமரை மலர்போன்ற திருமுக லட்சணமும் அண்டினபேரை யாதரிக்குங் கடாட்ச வீட்சண்யப் பார்வை யமைந்த கண்களின் வனப்பும் வானக மாதர் மனமெலாங் கொள்ளைகொள்ளும் புன்னகைப் பிரகாசமும் கோதண்ட நாணுலாவிய தோள்வரைக் காட்சியும் தன்னிரு தனங்கள் துன்னியழுந்தும் பொன்னொளி மார்பு விசாலமும் தாமரை யிதழ்ப்புறம் ஆணி முத்துகள் பதிந்தனபோல் நக விரலிலங்குஞ் செங்கரத்தேசும் வீரகண்டாமணிகள் கலீர்க்கலீரென்றொலிக்கச் செல்வ நடை நடக்குஞ் சேவடிச் சித்திரமும் அஞ்சாதே பெண்ணே யென்றணைத்துப் பேசிய வாக்ய ருசிகர மதுரமும் என்று மனங்குளிரக் கண்குளிரப் பார்ப்பேன் என்று செவிகுளிர இருதயங் குளிரக் கேட்பேன் என்று உடல்குழைய உள்ளங்குளிர அணைவேன் என்று பஞ்சணையிலிருந்து கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவேன் என்று பலவாறாய் நினைத்து நினைத்து நெடுமூசசெறிந்து அந்தர மாளிகை சென்ற சுந்தர நாயகனை எந்த நாளையிற் காண்பேன். பாவிகள் எந்தவிதஞ் செய்தனரோ. யுத்தம் நடந்ததாகவுந் தெரியவில்லையே. அரக்கர்கோன் வந்து பேசிப்போகும் வார்த்தைகளால் அரக்கரிடம் அகப்பட்டதாகவுந் தோன்றவில்லையே. வானகத்துலவும் வானக மாதர் வந்திறங்கி மாலையாய்ச் சபித்துத் தோளிற்போட்டு வானக லோகஞ் சென்றனரோ? மாயக்காரர் மாயமாய்த்தூக்கிக் கடலிலெறிந்துவிட்டனரோ? விதிவலியால் மாண்டனரோ? கரையேறித் தம்பியைக் கண்டுபிடித்துத் தன்பதி சென்றனரோ? நானெவ்விதங் காண்பேனென்று கையை நெரிப்பாள். கண்ணீர் பெருக அழுவாள். சாமளரூபி தனியருள் பெற்றேனென்று சாற்றி யிருந்தனரே. அம்மகாதேவி அவரைக் காப்பது நிச்சயம். அவருக்கருள்புரியுந் தெய்வம் எனக்குவந் தருள்புரியலாகாதா வென்று மஞ்சத்திற் சயனித்திருந்தபோது ஓர் தெய்வீக மங்கை என்றும் நீங்காத திருமங்கலம் கழுத்திலிலங்க கதிர்மணிப்பணி மின்ன வாசனை வர்க்கமணக்க வந்து மாதே வருந்தாதே! உன் கணவனையடைவாய். இன்று உன் கணவன் செய்தி கேட்பாயென்று சொல்லி மறைந்ததுபோற் கனவு கண்டு கண்டுயிலுங்காரிகை மஞ்சத்தில் பஞ்சவர்ணக்கிளி வந்திறங்கிச் சுவர்ணபிரபா யென்றழைத்தது. உடனே பாவையர்க்கரசி

திடுக்கிட்டெழுந்து பஞ்சவர்ணக் கிளியைப்பார்த்து பகல்வரும்
வழக்கத்தைவிட்டு இரவு வரவேண்டிய தென்னவென்று கேட்டாள்.
கிளி நானொரு சங்கதி தெரிந்துவந்தேன். அதைப்பார்க்க மனதி
லொன்றை வைத்து வாக்கிலொன்றைச் சொல்லி எங்களரசனை யே
மாற்றிவருவதாயிருந்தது. அதை யின்றுதான் அறியலானேன் காலம்
பல பழகியிருந்துங் கண்டுபிடிக்க முடியாத உன் கபடத்தை என்ன
வென்று சொல்லுவேன். எப்படியும் உன்மனம்போல் வாய்த்தது நல
ந்தானென்றது. அம்மொழியைக்கேட்ட செம்மொழி மடந்தை இது
இம்மொழி கூறவேண்டியதென்ன? நமது தன்மையைச் சுயபுத்தி
யாற் கண்டதோ ஒருவர் சொல்லத் தெரிந்ததோ. கலகாசூரான் சொற்
படி அவனுக்கிசைய வேண்டுமென்று போதித்துவரும் இக்கிளி
உன் மனம்போல் வாய்த்தது நலமென்று கூறியதால் கண்ட கன
வின்படி கணவன் செய்தி வந்திருக்கலாமென்று களித்து பகைவருக்
கிளையாத வீரன் மகளாயுதித்து யாவருநுழையாதவிடத்தில் நுழை
ந்து வருந்தும் என்னை அரக்கர்கோனிடம் சேருவாயென்று அடாத
சொற் கூறிவரும் அஞ்சுவர்ணக்கிளியே! உன்னை யறியாமல் எவனைக்
கண்டேன். சேர்ந்தேன். இவ்வாறு கூறவேண்டிய தென்னவென்று
கேட்கக் கிளி கடலினாழமுங் ககனத்தினீளமும் கண்டறிந்தாலுங்
கண்டறிய முடியாத உன் மன நிலையை அற்பப் பக்ஷியாகிய என்
னாற் கண்டறியலாகுமா? உன்மனங்கொண்ட வொருவன் தோய்ந்து
பிரிந்து தூதுவிட்டதாக எங்களினமான பறவை யொன்று வந்து
சொல்லத் தெரிந்துவந்தேன். இதுதான் இரவுவந்த காரணமென்
றது. அவ்வாய்மையைக்கேட்ட செவ்வாய்மடந்தை இவ்வளவுகாலஞ்
சென்றதோ என் புருஷன் செய்திகேட்க வென்று ஆனந்தம்பொங்க
எல்லாந் தூதுவந்த பறவையாற் றெரிந்துகொள்வோமென்று கஞ்ச
மலர்க் கரங்களாற் பஞ்சவர்ணக் கிளியை யணைத்து தாய் தமரொரு
வருமில்லாத் தமியேனுக் குன்னையன்றி யொரு துணையுமுண்டோ!
நீ யெப்படி வர்ணத்துக்கேற்றபடி நாயகன் கொண்டனையோ அப்
படியே நானுங்கொண்டது உண்மைதான். வந்த பறவையை அழை
த்துவரக் கடவாயென்று மலர்க்கரங் கூப்பினாள். பெண்கிளி நாவல்
மரத்தினிடம் வந்து நாடி வந்திருக்குங் கிளியிடம் நவின்றது. அஞ்
சுகன் மூன்று பறவைகளிருக்குமிடஞ் சென்று சங்கதியைச் சொல்
லியவைகளுடன் நாவல்மரம்வந்து பஞ்சவர்ணக் கிளியையும் அழை
த்துக்கொண்டு அது காட்டிய வழியே பறந்து பாவையர்க்கரசி
யிருக்கு மேனிலைமாடம் வந்திறங்கியது. பறவைகள் வரவை யெதிர்
பார்த்திருந்த பைந்தொடி வந்திறங்கிய வானப்பறவைகளைக்கண்டு
சிந்தையு வந்தெதிற்சென்று ஆருயிர்த்துணைவன் றூதுகளே' வாரு
ங்கள். அண்டபுவனமெலாஞ் சுற்றும் வேகங்களே வாருங்கள்.
எளியாளை ரட்சிக்கும் பறவையுருவத் தெய்வங்களே வாருங்கள்.
என்று பலவாறு புகழ்ந்து எனது நாயகன் என்னை நினைத்திருக்கி

ருரா? மறந்துவிட்டாரா? சுகமாயிருக்கிருரா? சொல்லவேண்டு மென்று சொல்லி நின்ருள். பறவைகள் நான்கும் பாவை யழகைக கண்டு மூவுலகத்தும் இப்படியான பெண்ணிருக்குமா? அந்தச் சேவ கனுக்கு இதைத்தவிர வேறென்றேற்பட்டாலும் பொருந்துமா வென்ற இதையங் களித்திருக்கச் செம்பதி அம்மா உன் கணவன் உன்னை மறப்பாரா? உன்னைப்போ லழகுள்ள வொரு பெண்ணை யுலகத்திற் காண்பாரா? அவருக்கு அனுதினமும் உன்னினைப்பே யன்றி வேறொரு நினைப்புமுண்டா? உன்னிருப்பிடங் கண்டுபிடிக்கும் படி புவனங்களெல்லாம் பறவை யினங்களைப்போக்கி யிருக்கிருர். உலகத்திலுள்ள பறவைசாலங்கள் மிருகசாலங்கள் மாலிடவர்க்கங் கள் அசுரவர்க்கங்களெல்லாம் அவர் உத்தரவைச் சிரசிலேந்தி யிருக் கின்றன. அவர் அவைகளைக்கொண்டு எதை முடித்தாலு முடிப் பார். எவற்றிற்கும் அதிகார கர்த்தனுயிருக்கிருர். ஆனல் இப்படி யெல்லாங்கூறிய எங்களை யரக்கர் மாயமென்றெண்ணுதே. அவர் கொடுத்த அடையாளம் பாரென்று ரோமபந்தியில் வைத்திருந்த மோதிரத்தை மூக்கா லெடுத்துக்கொடுக்க சுவர்ணப்பிரபை யிரு கரங்களையுநீட்டி வாங்கி யானந்தக் கண்ணீராற் கழுவிக் கனதனத் திற் கண்ணிலொத்தி இது கொண்டுவந்த வுங்களுக்கென்ன வுபகா ரஞ் செய்யப்போகிறேன, செய்தாலு மீடாகுமா. நீங்களிப்படி யெல்லாம்வர என்கணவன் உங்களை எவ்விடத்திற் கண்டார். என்ன வுபகாரஞ் செய்தார். ஆகாயப் பரணிலிருந்தவர் எவ்விதமாய்ச சென்ருர். எல்லாம் விபரமாய்ச் சொல்லவேண்டுமென்று சொல்லச் செம்பதி செப்பலானுன். உனது நாயகன் ஆகாயப் பரணிலிருந்து எப்படியோ அரக்கர் மாயத்தாற் கடலில் வீழ்த்தப்பட்டு நிர்மாணி ஷயத் தீவடைந்து காபிரிகளைக் கண்டஞ்செய்து அங்கன் துங்கனை ரட்சித்து கபடக்காரர் விடுங் கப்பலிற்சென்று விரிகண்ட தீவடை ந்து எமகண்ட ராட்சதர்களாற் கொணர்ந்து வைக்கப்பட்ட தம்பி யைக்கண்டு காலாந்தகப்பட்டணங் காவற்சாலை சேர்ந்து நீங்கி எங் கள் சகாயம் பெற்று வந்து கணவனை யரக்கரிடம் பறிகொடுத்துக் கலங்கிய கற்பகவல்லியைக் கண்டு காதலரைத் துறத்திவந்த கடகி வீறடக்கி யாகசாலைசென்று சர்வ சீவமேதயாகஞ் செய்யத் துணிந்த காலகேசரியை புத்திரமித்திர களத்திராதிகளுடன் அனைவரையுஞ் சங்காரஞ்செய்து ஆயிரக்கணக்கான மரனிடர் முதற் சகல சீவராசிக ளையுமீட்டிக்கடகிமைந்தருக்கு அப்பட்டணத்தைப்பட்டங்கட்டி உன் னிருப்பிடங் கண்டறிந்து வரும்படி வானஞ்சூழ்ந்த வட்டகை யெல்லாம் பறவை யினங்களை யனுப்பிக் காலாந்தகப் பட்டணமே யிருக்கிருர். அப்பறவைகளில் நாங்களும் நான்காகும் தென்றிசை வந்தோம். கலகாசுரனுற் கடலிலெறியப்பட்ட உன் தோழிய ரைவ ரைக்கண்டோம். கற்பழியாமல் அரக்கர் வசமிருக்கின்றனர். வந்த பறவைகளை நிறுத்தி நாங்கள் மச்சத்தின் வாயிற்புகுந்து கொடிமு

வழியெழுந்து வேதாள தீவிலிருந்த கடோதரன் மகளைக் கொண்டு வந்து சேர்த்து அவனனுமதியாற் கோட்டை கடந்து உன்னை வந்து கண்டோமென்று சொல்லி முடிக்க, வாடிய கொம்பு மழை யாற் றளிர்த்ததுபோல் மயிர்க்கூச்செரிய செய்த வீரப்பிரதாபங்களை யுந் திருத்தம்பியுடன் சேர்ந்துகொண்டதையும் பறவைகள் படை சேர்ந்த பலத்தையும் தோழியர் உயிர் பிழைத்திருக்கும் விர்த்தாந் தத்தையும் எண்ணி யெண்ணிப் பூரிப்படைந்து சொல்வதாவது தன்னந் தனியளாயிருந்த என்னை வந்தடைந்து வன்னிக்கவசத்தையு மாற்றி யுன்னைப் பிரியேனென்றணைந்தவு ஈதமனிடம் உடனே வந்து மீட்கவேண்டியதென்று சொல்வீர்கள். தூக்கிவந்து வைத்திருப்ப வனுக்குச் சொல்லியிருந்த நாற்பத்தைந்து மாதங்களில் நாற்பத்து நான்கு மாதங்கள் சேன்றன. மாதமொன்று தவறினல் எனது வாழ் நாளுந் தவறிவிடும். பின்பு, அவர் கங்கைக்கரையிற் சென்று செய் புங் கடன்களைச் செய்யவேண்டியதுதான். பட ைதைப்பார்த்துத் தம்பியை நினைத்துப் பரதவித்தவர் தம்பியைக் கண்டு கலந்திருப்ப தால் எண்ணம் எப்படியோ? அனுதிப்பெண்ணை ஆருமறியாமற் கண்டு கலந்திருந்தோம். அரக்கரைச் செயித்துக்கொண்டு போனு லும் உலகம் பலவிதஞ் சொல்லுமென்று வெறுத்துத் தம்பியுடன் சென்றாலுஞ் செல்லக்கூடும். ஆனதாற் பரவை யரசர்களே! நானி ருக்கு நிலையை யெல்லாமெடுத்துச் சொல்லிச் சிறைமீட்கச் செயவீர் களென்று செப்பக் கிளியானது அம்மா அப்படி நினையாதே. அவர் உன்னைவிட்டு ஒருபோதும் வேறு முகம் பார்க்கமாட்டார் சொன்ன வுடன் பறவைப் படையுடன் வந்திறங்கிப் பாதகரைச் செயித்து உன் பக்கத்திலிருக்கப்போகிறார். நாங்கள் பார்த்து மகிழ்வோ மென்றது. அன்கா, அம்மா நாங்கள் யானையை அந்தரத்திற் றூக் கிக்கொண்டுபோகுஞ்சாதி. என்னைப்போன்ற பறவை பலவிருக்கின் றன. உன் பத்தாவுக்குப் படை பலமில்லையே யென்று எண்ணுதே யென்றது. பறவை வாய்மைகளைக் கேட்ட பங்கயவதனப்பெண் தன பாரத்திற் கிடக்குஞ் சந்திராரத்தைக் கழற்றி மன்னர் பெருமானு க்கு அடையாளமாய்க் காட்டுவீர்களென்று கொடுக்கச் செம்பதி மூக்கால் வாங்கிச் சிறையடியிலடக்கிச் சகோதர ரிருவரையும் நாங் களே சுமந்துவந்து உன் சிறை தவிர்க்கிறோமென்று கூறி யவளிடம் விடைபெற்றுப் பறவைகளுன்கும் பஞ்சவர்ணக்கிளிகளிடமுங்கூறி யிருப்பு மதிலைத்தாண்டி கடோதரனிடம் நாங்கள் கோட்டை யுள் வளமெலாம் பார்த்துவிட்டோமென்று விடைபெற்று கடல்மேற் பறந்து மீன் களரவமில்லாததால் யாதொரு தடையுமின்றிப் பற வைகளிருக்குந் தீவில் வந்திறங்கிப் பறவைகளுக்கும் பத்தினி தோழி யருக்கும் போய்வந்த செய்திகளைக்கூறத் தோழியர்கள் எங்கள் சிறையையு மீட்கும்படி உங்கள் மன்னனிடஞ் சொல்வீர்களென்ற னர். அவர்களப்படியே சொல்கிறோமென்று அவர்களிடமும் விடை

பெற்று சகல பறவைகளும் அந்தரத்தெழுந்து வேந்தன் மகனிருக்கும் விரிகண்ட தீவைநாடித் தங்குமிடங்களிற் றங்கி வந்துகொண்டிருந்தன.

தென்றிசை சென்ற பறவை யினங்கள் திரும்பிவருமுன் மற்ற மூன்று திசைகளிலுஞ் சென்ற கண்டபேரண்ட சரபமாகிய பக்ஷி சாலங்களெல்லாம் பலகோடி தீவு தேசங்கள்சுற்றி மன்னன்மகன் சொன்னபடியான கன்னியையும் பொன்னகரையுங் காணாமல் இவ் வண்டத்திலில்லை வேறு அண்டத்திலுள்ளதோ வில்லையோ வென்று ஏக்கமுடையவைகளாய் முன் பின்னாய் வந்து அரசனடிக் கமலங்களில் வீழ்ந்து கண்ணீர்பெருக எங்களை ரக்ஷித்த புண்ணிய மூர்த்திகளே! தங்களுத்தரவுப்படி கிழக்கே உதையகிரிவரையும் மேற்கே அஸ்தகிரி வரையும், வடக்கே மகாமேருவரையும் போய்ப் பல தேசங்கள், பல தீவுகள், மலைச்சாரல்கள், மலை உச்சிகள் முதலிய விடங்களெல்லாந் தேடிப்பார்த்ததில் தாங்கள் கூறியபடி மைந்தமா நகரையுஞ் சோதி ரூபமான மங்கையையுங் காணவில்லையே யென்று சொல்லின. பறவைகளின் வார்த்தையைக்கேட்ட பார்த்திபன் தம்பியைநோக்கித் தம்பி இப்பறவை வர்க்கங்கள் மனிதர்கள் போகக்கூடாத விடங்களெல்லாம் போய்த் தேடியும் மாதரசி யிருக்குங் பட்டணந் தோன்றவில்லையாயின் நாம் என்ன செய்வதுமென்க. இளையவன் அண்ணா சாகர தீபாந்தர வரைப்பட்டணமிருப்பது தென்றிசையேயென்று எமதபிப்பிராய முன்னமே யிருப்பதால் தென்றிசை சென்ற பறவையினங்கள் வந்தால் தெரியுமென்று செப்பினன் செயப்பிரகாசன் தென்றிசை நோக்கிச் சித்தம் பலபலவாய்ப் பித்தம் யிடித்தவன்போல் தென்றிசை சென்ற செம்பதி முதலான பறவை யினங்கள் நாள் பல சென்றும் வரவில்லையே. தேவியைக் கண்டனவோ? தேடித் திரிகின்றனவோ? அரக்கராற் சிறைப்பட்டனவோ? கொலைப்பட்டனவோ? வேடர் பரப்பிய கண்ணிகளிற் சிக்கிக்கொண்டனவோ? என்ன சொற் கேட்பேனோவென்று எங்கியிருக்கும் காலையில் தென்றிசை யெங்கும் பறவையினங்களாய்ச் செறிந்து வருவதைக் கண்ட திறல் வேந்தர் தென்றிசை சென்ற பறவையினங்கள் வந்துவிட்டனவென்று செப்பியிருக்குமளவில் செம்பதி சம்பதி அன்கா அஞ்சுகமாகிய நான்கும் முன்னதாய் வந்து மன்னர் பெருமான் பொன்னடிக் கமலங்களில் வீழ்ந்து அண்ணலே பெண்ணலங் கனியைக் கண்டோம். ஆரமிர்தைக் கண்டோம். கற்பின் பொக்கிஷத்தைக் கண்டோம். உன் காதற்கொழுந்தைக் கண்டோங் கண்டோமென்று கூறப்பறவைகள்சொல்லிய வாய்மையைக்கேட்ட வில்லியர் திலதம்போன்ற வீரன் உடலெல்லாம் பூரிக்கக் களித்து பறவைகளைக் கரங்களாலணைத்து என்னுயிர்போன்ற ரஞ்சிதத்தைக் கண்டீர்களா? இருசெவியு மிதையமுமினிக்குந் தேனைக் கண்டீர்

ளா அம்புயப்பொய்கையி லுலாவாமல் அவிர்பொன்மாளிகையி லு லாவும் அன்னத்தைக்கண்டீர்களா கார்முகிலைக்கண்டாடாமல் என் னைக்கண்டு காமநடனஞ் செய்யுங் களிமயிலைக் கண்டீர்களா சேம மாயிருக்கிருளா அழியாத அக்கினிக்கவசத்தை யழித்துப்போன பாவியென்றேசினளா அன்பான வார்த்தை பேசினளா என்ன சொல்லிவிட்டாளென்றனன் செம்பதி அடக்கமாய் வைத்திருந்த சந்திராரத்தை மூக்காலெடுத்துக் கொடுக்கச் சமரசமகாராசன் புதல்வன் தாமரைக் கரங்களால் வாங்கிப்பார்த்துப் பார்த்துப் பிரமித்துத் தனபாரங்களிற் புரளுஞ் சந்திராரமெனத் தெரிந்து இந்திராதிபோகங் கண்டவன்போல் தனபாரமேவிளங் குங்கனஆரமேஎன்மார்பிலழுந்திவடுத்தந்தஆரமேநான்நீங்கிவிட் டதால் கலசமுலைமேற்கிடந்த வுன்னையும் நீக்கி விட்டாளோ ஒளியுலாவிய அவள் மார்பில் ஒளி வென்பதே யில்லாமற் கிடந்த நீ யிப்போது சூரியப்பிரகாசமாய்ச் சொலிக்கின்றனையே ஒரு வார்த்தை சொல்லமாட்டாயோ வென்று கண்ணீராற்கழுவி காதல் பெருக அவளைக்கண்டது போற்களிக்கும் பெருமானை மற்றப் பறவையினங்களும் வந்துபணிய அவைகளுக்காதரவு கூறிச்செம்பதிசொல்லின்மேற்செவிசாய்த்துக்கொண்டிருக்கச்செ ம்பதி நாங்கள்தென்றிசைசென்று அரக்கர்வசமருக்குஞ் சுவர்ணப் பிரபை தோழியரைக்கண்டு மீன்வாய் புகுந்து கொடிறுவழி யெழுந்து சகோதரன் மகளைச் சேர்த்து அவளாதரவால் இருப் புக்கோட்டைக்குட் சென்று பஞ்சவர்ணக்கிளி மூலமாய் எங்கள் வரவைத் தெரிவித்துக் கனகமணி மாளிகையில் கன்னிகா ரத்தி னத்தைக் கண்டுபேசினேங் கணையாழியுங் கொடுத்தோம் தேவ ரீர் சங்கதியனைத்தையுஞ் செப்பினேம் காதரக் கேட்டாள் களிகூர்ந்தாள் தூர்த்தனுக்குச் சொல்லியநாளெலாந்தொ லைந்து ஒரு மாதமிருக்கின்ற தென்ருள் அதற்குள் வந்தால் வரலாம் கடந்துவர வேண்டியதில்லை கங்காதீரத் திற்சென்று கடனெலாஞ் செய்துவிடச் சொன்னுளையா அமிர் தொழுகிய திருவாய்மொழியைக்கேட்டும் ஒளியுலாவிய திருமே னியழகைக் கண்டும் பரிவுகூர்ந்த பறவையினங்களாகிய எங்களுக் கே ஆனந்தம் பொங்குமாகில் அணைந்து சுகங்கண்ட ஆடவர்த் திலகமாகிய தங்கள் அவாப் பெருக்கைச் சொல்லலாமோ வென்று கூறியது நல்லையம்பதியான் நல்லது நல்லது நங்கை நல்லுயிர் வெறுத்தாயிருக்கிருளென்று வந்த பறவைகளை யிளைப் பாறும்படி யிசைத்துத் தம்பியை நோக்கி யினி நாம் செய்யவே ண்டியதென்ன வென்க, அவன் செய்தி கேட்டு தாமதிக்கக் கூடா து, புறப்பட வேண்டுமென்ருன். தெக்ஷணவேந்தன் பக்ஷிசால ங்களை நோக்கிப் படைத்துணை வரவேண்டுமென்ருன். ஆனை யுராஞ்சிப் புட்களும், அண்டரண்டப் பறவைகளும், சரபப்பக்ஷி

களும், கழுகினங்களும், கருடக் கூட்டமும், ராஜாளி வல்லூறு முதலானவைகளும் கோடிக் கணக்காய் வந்து நிறைந்தன. காவலன் புதல்வன் அவைகளைக் கண்ணுலே நோக்கி திசாமுகன் விசாலகனுகிய இருவரையும் நீங்கள் காலம் பலவாய்க் காலாந்தகன்பட்டணத்தை யாண்டிருக்கக் கடவீர்களென்று சாற்றி விடை பெற்றுத் தானுந் தம்பியுஞ் சர்வாயுதந்தாங்கி செம்பதி சம்பதியாகிய பறவைகள் மேலமர்ந்து பல பறவைகள் புடைசூழத் தென் திசை நோக்கிச் சென்ருன்.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாம் அத்தியாயம்

செக வேந்தன் புதல்வர் சேனைப் பறவைகளுடன் திரைக்கடல்மேல் பலதீவுகளைத்தாண்டிச் செல்லும்போது அங்கே பர்வதகாரமாய்த் தோற்றுவதைக்கண்டு இதென்ன கடலில் மலையினங்களெழுந்து போகும்வழியை மறைக்கின்றனவே யென்ருன் செம்பதியிவை மலையினங்களல்ல நாங்கள் வாயில் நுழைந்து கொடிறுத் துளையிலெழுந்த திமிங்கிலகில மீன்களென்ருன் செயப்பிரகாசன் சிலையை வளைத்து சிலீ முகங்களேவ அக்கணைகள் மேல்வாயைத்துளைத்தும் உடலையுருவியு மோட மீன்கள் துள்ளிப் புரண்டு துடித்து அநேக யோசனை தூரமோடியும் மாண்டன மீன்கள் வாயை மூடி மூச்சுவிட கொடிறு வழியெழுந்து வானத்திற்பாயும் நீறில் பறவைகள் நீராடியுலவின வேந்தன் மகன் வெட்டவெளியிற் படைகளைச் செலுத்தி வேதாளதீவைக்கடந்து சாகரதீபாந்தர வரைப்பட்டணவடதிசையாய் மலைமேலேறி யாங்கோர் சோலையிற் போய்தங்கிப் பறவைகளாற் பின்னித் தொங்கவிடப்பட்ட மரநார் மஞ்சத்தில் தம்பியுந்தானும் பறவைகள் சூழ மாதரசியிருக்குங் கோட்டை மாளிகை யிங்குதானுவென்று கிளியுடன் பேசியிருந்தான்.

ராசகுமாரர்கள் பறவைகளுடன் வந்திறங்கியிருப்பதைக் கேள்விப்பட்ட கலகாசூரன் அதிசய முடையவனுய் தனதுமகன் செயசித்தனையு மந்திரிமகன் மாயசிங்கனையும்போய் அவர்கள்வந்த காரணத்தைத்தெரிந்துபிடித்துச்சிறையிலடைத்துவாருங்களென்ருன்செயசித்தனும்மாயாசிங்கனும் சதுரங்க சேனைகளுடன்சென்றுநகரின் வெளிப்புறம்பார்க்க சோலையினங்களெல்லாம் பறவை

யினங்களாய்த் துன்னியிருப்பதைக்கண்டு இதுஎக்காலத்துங் கண்டறியாத விந்தையென வியந்து நடக்க அரசிளங்குமரர் அரக்கர் படைகளைக்கண்டு பறவையினங்கள் சூழப் பறவையரசர் மேலமர்ந்து வந்தெதிர்த்தனர் அரக்கர் படைகளுக்கும் பறவைப்படைகளுக்கும் பெரும் போர்மூண்டன செயசித்தன் ராச குமாரனை நோக்கி நீங்கள் யார் இவ்விடம் புள்ளினங்களுடன் வரவேண்டியதென்ன வென்று கேட்கச் செயப்பிரகாசன் எங்கள் குலப் பெண்ணை உங்கள் குலத்தலைவன் காணுமற்கொண்டு வந்து விட்டான் அது செய்தியைப் பறவைகள் மூலமாகவே கண்டறிந்து எங்களுக்குரியபடைகள் 'கடல்' கடக்கமாட்டாதென்று பறவைகளைச் சேர்த்து வந்திருக்கிறேம் பத்தினியை விட்டாலாவுற்று இல்லையெனில் உங்கள் வர்க்கங்களையெலாமொழித்துப் பெண்ணை கொண்டு போவோ மென்றனர் அரக்கர் தலைவன் அப்பெண்ணையெங்களரசன் கொணர்ந்து நாள் பலவாயின அவளிடம் போக்குவரத்தாகவேயிருந்து வருகிருன் அப்படியிருக்க அவளை மீட்டுக் கொண்டு போனுலும் உங்களினம் ஒப்புவார்களா வென்றனன் ராச குமாரன் அவள் எங்கிருந்தாலென்ன யார்போய்வந்தாலென்ன எவ்வளவு காலமானுலென்ன. அவள் கற்பைக்காக்குந் தேவன் அக்கினியாயிருப்பதனுல் உங்கள் தலைவனுல் ஒன்றுஞ் செய்யமுடியாது நாங்கள் கொண்டு போனுலும் யாரும் பழிப்பு வசனம் பகரார்களென்றனன் நிருதன் அப்படியானுல் நீங்கள் எங்களைச் செயித்தாலல்லவோ கொண்டுபோக வேண்டும் செயிக்க உங்களால் முடியுமா வென்றுன் நிருபர் கோமான் நெடுஞ்சிலைவளைத்து நெடுங்கணைகளேவ அக்கணைகள் அவன்தோளுமார்புந்துளைத்தது பாணதீக்ஷணங்களைக் கண்ட பகைவன் மந்திரிமகனைப் பார்க்க அவன் இவனை கடலிற் கொண்டுவீழ்த்த எப்படியோ தப்பி தம்பியையுங்கண்டுபிடித்துபறவைப்படைகளைத்திரட்டி வந்திருக்கிறுன் நமதெண்ணத்திற்கு ஆகமாட்டான் நமதரசன் மகனுல் இவனை மோசஞ் செய்து இளையவனைக் கொண்டு போய் ஆரண்யவல்லியிடங் கொடுப்பதே நலமென்று செயசித்தனை நோக்கி நீ மூத்தவனை தந்திரமாய்க்கொண்டுபோய் பாதாளமாயாதேவியாலயத்தி லடைத்துவிடு நான் இளையவனைக் கொண்டுபோய்ச் சிறைச்சாலையிலடைத்து வைக்கிறேன் பறவைகளையும்பிடித்தடைத்து வைப்போம் பின்பு நமதரசனுடன் யோசித்துக் கொள்வோமென்றனன் அவனப்படியே செய்வோமென்று படைகளை யிரணியாய்ப்பிரித்து செயசித்தன் செயப்பிரகாசனுடனும் மாயாசிங்கன்மதிப்பிரகாசனுடனும் போர் தொடுத்தனர் செயப்பிரகாசன் செயசித்தனுடன் கடும் போராடி வருகையில் அவன் இளைத்ததுபோல் பின்னேக்கியே செல்ல இவனும் செம்பதியைச்செலுத்தி அவன் சென்றவிட

மெல்லாஞ் செல்ல அவன் மலையுச்சியாய்க் கீழ்நோக்கிச் செல்லுங்குகையிற் குதித்தான் இவனும் செம்பதியை அவ்விடத்திருக்கும்படி செய்து அதிகத்துரிதமாய்ப் பாதகனைத் தேடிப்படித் துறைகளிலிறங்கி அக்கினிக்கணையா லங்குள்ள விருளைபோக்கிச் சில தூரஞ் செல்ல முன் போன ராட்சதன் ஓர் மாளிகையில் நுழைந்தான் ராசகுமாரனும் அம்மாளிகையில் நுழைந்துப்பார்க்க பல வரங்குகளுள்ளதாகவும் எங்கு பார்த்தாலும் ஒன்று போலவேயிருந்தது வாசல்களின்னவிடத்திலுள்ளன இல்லையென்பது தோன்றாமல் தாகமெலிட்டதால் அங்குள்ள பாத்திர நீரைப்பருகி மயக்க மேலிட்டுப் படுத்துக்கொண்டான் செயசித்தன் கதவினங்களைச் சாத்திவிட்டுப் போர்களம் வந்தான் மாயாசிங்கன் மதிப்பிரகாசனுடன் போராடி முன்னமைத்த சூட்சுமமாளிகையைக் கொண்டு வரும்படி செய்து ஓரிடத்தில் வைத்திருந்து மதிப்பிரகாசனை யதனருகு வரும்படியாய் பின்னேக்கியே சென்று மாளிகையில் நுழைந்தான் மதிப்பிரகாசன் சம்பதியை விட்டிறங்கி வாளையுருவியவனை வெட்டவேண்டு மென்றதில் நுழைய மாயாசிங்கன் சுற்றிவந்து கதவுகளையடைத்து அதனை யந்தரத்திலெழுப்பி ஆரணியவல்லியிருக்கு மாளிகையுப் பரிகையிலிறக்கி வைத்துச் சரையையிடஞ் சங்கதியைச் சொல்லிப் போர்க்களஞ் வந்து செயசித்தனுடன் கலந்து இருப்பு வலைகளைப் பரப்பிப் பறவை யினங்களனைத்தையும் பிடித்து ஓர் சிறைச் சாலையிலடைத்து வைத்துவிட்டுக் கலகாசூரனிடஞ் சென்று காரண மனைத்தையுஞ் சொல்லித்தங்களிருப்பிடஞ் சென்றனன் சரையைமகளிடஞ் சொல்ல அவள் அளவற்ற மகிழ்ச்சியுடையவளாய் உணவுப் பொருளேந்தியவுயிர்த் தோழியர் பக்கங்களில் வர பாடகந்தண்டையொலிக்க அன்னம் போல் நடந்து உப்பரி கையடைந்து மாளிகைக் கதவைச்சாவியாற்றிறந்து நடந்து வந்தாள் மதிப்பிரகாசன் பிடித்தவாளுட னறையிற் புகுந்து அடைத்த கதவொலியிற் றிகைத்து அந்தரஞ் செல்வதால் மயங்கி யரக்கர் மாயமா யிதிலடைத்து விட்டனர் இனி நடக்குங்காரண மேதோ வென்றெண்ணி யிருந்தவன். மடமயில்போல் வருமடந்தையைக்கண்டு இவள்யார் நமதினம்போற் றெரிகிறதே யறிவோமென்று நிற்க கன்னல்மொழி மான்மன்னர் பெருமானழகைக் கண்டு மகிழ்ந்து அருகில்வந்து பணிந்து அயலில் நாணமுடனின்றாள். நின்ற நங்கையை நிருபர்கோன் தம்பி நோக்கி லக்ஷணத்தைப் பார்க்க தெய்வகணமாகவும் கண்ணிமைபாதம் தோய்வதைப் பார்க்க மனுஷகணமாகவும் இருப்பிடத்தை நோக்க அரக்கர் கணமாகவும் எண்ணும்படி யிங்குவந்து நிற்குங்கோதாய் நீயார் மகள் இங்கு வர வேண்டியதென்ன வென்றனன். மாதரசி நான் அரக்கர்

குலமுமல்ல தெய்வகணமுமல்ல தங்களினமாகிய மனுஷகணந் தான் என் வரலாறு எனக்குத் தெரியாவிடினும் என்தாய் சரையையம்மாள் சொல்லத் தெரியும் அந்தப்படியே சொல்லுகிறேன் அதாவது சரையை தன் நாயகன் கலகாசூரனுடன் விமானமேலமர்ந்து சகல புவனஙகளையும் பார்த்து வரும்போது சம்புத் தீவில் கங்காநதியை யடுத்த காட்டில் ஓர் விருக்ஷத்தடியில் ஆறு மாதக் குழந்தையாய்க் கிடந்த என்னை எடுத்துவந்து தனக்குப் பெண்குழந்தை யில்லாததால் பாராட்டிச் சீராட்டி ஆரண்ய வல்லியென்று பேருமவைத்து அருமையாக வளர்த்து வந்தாள். நான் அசுரகுழந்தைகளுடன் சேர்ந்து பழகிக் கலைகள் பயின்று ஆயுதவித்தைகளும் கற்றுவளர்ந்து தன்னையறிந்தேன் அரக்கர சுரவர்க்கவர்லிபர் விரும்பிய போதிலும் இனம்இனத்தை நாடுமென்கிற பழமொழிப்படி என் தாயிடம் தாயே மானுடகண நாயகனொருவனைக் கொண்டுவரும்படி செய்து அவனும் நானும் களித்திருப்பதை நீயுங்கண்டு களித்திருக்க வேண்டுமென்றேன் அவளும் என்பேரில் வைத்திருக்கும் பாசத்தினால் மறுக்காமல் மந்திரிமகன் மாயாசிங்கனிடம் சிலநாளைக்கு முன்பாகவே சொல் லியிருந்தாள். அவன் சிறிது நாளைக்குமுன் ஒருவனைக்கொண்டு வந்து அவன் எப்படியோ தப்பிவிட்டா னென்று சொல்லி நாளைக்கடத்தி இன்றுதங்களைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறான். மணவாட்டியாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்றனள். அவ்வார்த் தையைக்கேட்ட மதிப்பிரகாசன் சற்றுநேரம் யோசித்து இவள் இவ்விடம் வந்திருப்பது ஓர் தன்மையாய்த்தான் தெரிகிறது. நமது தமையன் இத்தீவு வந்ததும் இவள் காரணமாய்த்தானி ருக்கலாமென்று இதயத்திலெண்ணி யிதனைக் கூறுகிறான். ஓ பெண்பாவாய் உன் வரலாறு தெரிந்துகொண்டேன். சரிதான் மணஞ்செய்து கொள்ளென்றுசொல்வது இதுசமயம்பொருத்தமி ல்லையேஏனெனில் நானும்எனதுதமையனும்ஒருபெண்ணினுக்காக உன்னை வளர்த்த இனத்துடன் பகைத்துப் போராடிப் போர்க் களத்தில் உதிரவாடையை மணந்து திரிகிறோமே உன்னை மணஞ் செய்து எப்படிக் கலந்திருப்பதென்று தங்கள் விர்த்தாந்தங்களை யெல்லா மெடுத்துக்கூற ஆரண்யவல்லியதனைக் கேட்டு சுவர் ணப்பிரபைக்கு எப்படி எண்ணமோ அப்படியே இத்துடுக்கர்களை விட்டு நீங்கவேண்டு மென்கிற வெண்ணமிருந்து கொண்டிருக்கி றது அவளைத் தங்கள் தமையனு ரொப்புக் கொண்டதுபோல் தேவரீரும் அடியாளை ஒப்புக்கொள்வீரேயானால் அரக்கர் செய்யு மாயச் சூட்சியையெல்லாம் அறிந்து சொல்வேன் அனுகூலமா யிருப்பே னென்றாள். மதிப்பிரகாசன் இது விதிச்செயலாகும் இவள் எண்ணப்படி நடப்பது அரக்கர் சங்காரத்துக்கு அனுகூல மாகுமென மதித்து உன் மனம்போல் நடக்கிறேன். போர்க்களத்

தில் என் தமையன் அரக்கனுடன் போராடிக் கொண்டிருந்தார்
வெற்றிதோல்விச் சங்கதிதெரியவில்லை அறிந்துவருகிறேனென்
றான். ஆரண்யவல்லி அங்கு இப்போது போகவேண்டாம் ஆள்
களைவிட்டு அறிந்துவரும்படி செய்கிறேன் பின்பு போகலாமென்
றாள். இளையவனுஞ் சரியென்று இசைந்து அவளுடன் ஓரறை
யில் வந்து இனியவார்த்தைகள் பேசியிருக்க ஆரணியவல்லி தோ
ழியர்களை ஏவிப்போர்க்களச் செய்தியையறிந்து வந்து சொல்லும்
படி சொல்லினள். அவர்களும் அங்குசென்று பலவிடங்களிலுந்
திரிந்துவந்து சொல்லுவதாவது சுவர்ணப்பிரபை காரணமாக
போருக்குவந்த ராசகுமாரர்களையும் பறவைகளையும் நமதரசன்
மகனும் மந்திரிமகனும் பிடித்து பாதாளமாதேவி யாலயமுன்
முகப்பு மாளிகையிலும் இருட்டறையிலும் சிறைச்சாலையிலும்
அடைத்து விட்டனர். நமதரசன் உத்தரவால் நாளைப் பாதாள
மாதேவிக்குப் பலியிடப் போகிறார்களாம். இதனைத்தான் ஊரெங்
கும் பேசிக்கொள்ளுகிறார்களென்றனர். அம்மொழியைக் கேட்ட
மதிப்பிரகாசன் அங்கம் நடுங்கி ஆவிபதறிப் பெண்ணே யென்
தமையனுக்கு இவ்வித ஆபத்து வந்ததே என்னசெய்கிறதென்
றான் ஆரண்யவல்லி அஞ்சவேண்டாம் ஆண்டிக்கோலமாய்ப் பா
தாளமாதேவி யாலயஞ்சென்று மயக்க நிவாரணப் பானக்கந்தரு
கிறேன் கொடுத்து மயக்கத்தைநீக்கி அரக்கர் சம்மாரஞ்செய்யக்க
டவீர்களென்று பானகமும்ஆண்டிவேடத்துக்குரிய ஆடைகளும்
பொருள்களுங் கொடுத்தாள். மதிப்பிரகாசன் அவைகளைப் பெற்
றுக்கொண்டு ஆயுதங்களெல்லாம் உள்ளடக்கி அதிக மகிழ்
ச்சியுடனே மேலே ஆண்டிவேடந் தரித்து அரண்மனை கடந்து
கேட்போர்களுக் கெல்லாம் ராஜபத்தினி யுத்தரவால் பாதாள
மாதேவிக்குப் பூசையெய்யப் போகிறேனென்றுகூறி ஆரணிய
வல்லிகூறிய அடையாள வழியாய்நடந்து குகைவாய் வழியே பல்
லாயிரம் படிகளைக்கடந்து பாதாள மாதேவி யாலயஞ்சென்றனன்
அங்கு மலைநடுவில் நவரத்தினச் சோதியாய் இருளேயல்லாமல்
எம்மாளிகையைப் பார்த்தாலும் ஒரே தன்மையாய் விளங்குவ
தைக் கண்டு உள்ளத்தில் வியந்து வெள்ளிமணி மாடஞ்சென்று
சென்று மாதரசி கொடுத்த சாவியால் வெளிப்பூட்டைத் திறந்து
உட்சென்று பார்க்க ஓரிடத்தில் தனியே துயிலுந் தமையனைக்
கண்டு தாரைதாரையாய்க் கண்ணீர் பொழியத் தடக்கரங்களாற்
றூங்கியெடுத்து இவா இப்படியான மயக்கத்திலிருக்கநான் இனிய
மடந்தையுடன் இன்பம் பாராட்டியிருந்த துரோகியானேனே
யென்று துயரங்கூர்ந்து அங்கவஸ்திரத்தால் வீசிக்களையாற்றி
னன் மன்னனுக்குச் சற்று உணர்ச்சிதோன்றிக் கண்களை விழித்
தனன். தம்பி பைந்தொடிதந்த பானத்தைக் கொடுத்தான் அவன்
வாங்கியருந்திச் சிறிது களைதீர்ந்து ஆரடா அரக்கனே யென்

றெழுந்தான் தம்பி அண்ணு நானிதோ வந்திருக்கிறே னென்ருன் சமரசன் புதல்வன் தம்பியை கமலக்கரங்களாற் றழுவி போர்க் களச்செய்தி யென்ன நான் றொடர்ந்து வந்த அரக்கன் இம்மாளி கையில் நுழைந்தவன் எவ்வழி போனானே தெரியவில்லையே உன் னுடனெதிர்த்தவனைச் செயித்தாயா இப்பாதாள மாளிகைக்கு எப்படி வழிகண்டு வந்தனை பறவைகளெவ்விட மிருக்கின்றன வென்று பரிதாபத்துடன் கேட்டான் முன்னவன் கேட்டகேள்வி யெலாந் தெரிந்தபின்னவன் சொல்லுகிறதாவது அண்ணு நமக்கு வருகிற துன்பவின்பங்களை யென்ன சொல்லலாம் கலகாசூரன் மகன் தங்களை யிம்மாளிகையிற் கொண்டுவந்து அடைத்துவிட் டான் மந்திரிமகன் என்னைக் கொண்டுபோய் ஓர் கன்னியிருப்பி டஞ்சேர்த்து விட்டான நான் அவளை விசாரிக்க அவள் மானிடப் பெண் குழந்தையாயிருந்து அசுரன் மனைவி யெடுத்து வந்து வளர்க்க வளர்ந்திருக்கப்பட்டவளாம் மானுடகணவன் வேண்டு மென்றபடி மந்திரிமகன்சேர்த்துவிட்டானும் மணந்திருக்கவேண்டு மென்ருள் நான்நமதுவிர்த்தாந்தங்களையெடுத்து சொல்லிஎவ்வா றுமணப்பேனென்றேன் அவள் அரக்கர் சம்மாரத்துக்கனுகூலமா யிருப்பேனென்ருள் நான்ஒப்புக்கொண்டேன் அவள்தோழியரால் தங்கள்கதியும் பறவைகள் கதியுந்தெரிந்துபாதாள மாதேவிஆலய வழியெலாங்கூறி யிவ்விடத்துக்கு அனுப்புவித்தாள்வந்தேனென் ருன் தம்பிகூறிவந்த வாக்கியங்களைக் கேட்ட தரணிவேந்தன் சந்தோஷசித்த முடையவனாய் தம்பி தீயவர் நம்மை யெவ் வளவுக்கெவ்வளவு மோசஞ்செய்ய எண்ணினரோ அவ்வளவுக் கவ்வளவு பயனடைகிறவர்களாகவே யிருக்கிறோம் இத்தீவில் எனக்கு வாய்த்ததுபோல் உனக்கு வாய்த்ததும் நலந்தானென் ருன் இப்போது நாமெவ்விடம் செல்வோமென் றிறைவன்கேட்க இளையவன் கூறுகிருன் அண்ணு நாமிருவரும் இல்லாச் சமயம் பாதகர் பறவைகளனைத்தையும் பிடித்து சிறையிலடைத்து வைத் திருக்கின்றனராம். அவைகளை மீட்டித்தான் பின்பு போர்விஷ யத்தை கவனிக்க வேண்டுமென்று சொன்னான். பறவைகள் சிறை யிலடைபட்டன வென்ற வாய்மையாற் பார்வேந்தனுக்குச் சீற்ற ங்கிளர தம்பிஎழுந்திருஇப்போதேபோய்மீட்டிவிட வேண்டுமென் ருன் அண்ணு சிறைச்சாலை பட்டணத்துக்குள்ளிருப்பதால் இருப் பிடமுந் தெரியவேண்டும் நம்மை யரக்கர்கள் தெரிந்துகொள்ள வுங்கூடாது ஆனதால் நான் தரித்த கோலத்தைத் தேவரீருந் தரித்துச்செல்ல வேண்டுமென்று காவிவஸ்திரமு மற்றவைகளை யுங் கொடுத்தான் காவலன் அவைகளை வாங்கியணிந்துகொண்டு இருவரு மாளிகையைக் கடந்து பாதாளமாதேவி யாலயமுன்பு வந்தனர் அங்கொரு கன்னிகை காவிவஸ்திரந்தரித்துப் பலிபீட முன்புநின்று தேவியை வணங்கி நின்ருள். அவளைக்கண்டு இவள்

யார் அறிவோமென்று அருகில்வர அக்கன்னிகை திரும்பிப்
பார்த்து ஆண்டிக்கோலமாய் வருபவர் யாரென்று அச்சமுடைய
வளாய் நின்றாள் ராசகுமாரன் நீயார் அர்த்தராத்திரி வந்து
தேவிதரிசனஞ் செய்யவேண்டிய காரணமென்ன வென்று கேட்க
அப்பெண் உங்களுருவம் ஆண்டிகளாகவும் வார்த்தையரசர்களாக
வுந் தெரிகிறதே உங்களுண்மையைச் சொன்னால் எனது உண்
மையைச் சொல்லுவே னென்றாள். மதிப்பிரகாசன் நாங்கள் ராச
குமாரத்தியின் பொருட்டாய் வந்துபோர் செய்யும் ராசகுமாரர்
களாகு மென்றான். அவள் அகமுமுகமு மலர்ந்து சொல்லுவ
தாவது என்பெயர் சிகரவல்லி கலகாசூரன் இளையமகன் சலவசந்
தன்றேவி என் மாமனார் சுவர்ணப்பிரபை யென்னுந்தோகையைக்
கொண்டுவந்து சுவர்ணமாளிகையில் வைத்திருப்பது என் நாயக
னுக்குச் சம்மதமில்லாமல் தந்தையிடம் அக்கினிக் கவசகாரி
யைச் சேரமுடியாது குலத்துக் கழிவுவந்தாலும் வருமென்று
புத்திசொன்னார். அது அவர் எண்ணத்துக்கு விரோதமாயிருந்த
தால் அச்சபைக்கு வராதேயென்று சொல்லிவிட்டார் என் கண
வன் வீடுவந்து ராசசபை போகாமலிருந்தார் என் விஷயமாய்
பகைகொண்டிருந்த செயசித்தன் முதலானவர்கள் மாதரசி மாளி
கைக் காவலான அரக்கர் அரக்கி பூதங்கள் மாண்டுபோயின
வென்றும் அது என் கணவனால் நடந்ததென்றும் பலசாக்ஷியங்க
ளேற்படுத்தி ராசவிசாரணை செய்யும்படி செய்து அவரைக்
குற்றவாளியாக்கிச் சிறையிலடைத்து விட்டனர் வீட்டிலிருந்த
என்னையழைக்கும்படி ஓர் பல்லக்கு வந்தது நான் அதிலேறிச்
சென்றேன் அது செயசித்தன் வீடேசென்றது நமது நாயகரா
ழைக்கிறாரென்று சொன்னதொருவிதம் கொண்டுசெல்வது ஒரு
இடமாய்த் தெரிகிறதே யென்று கணவன் செய்தியெல்லாம் விசா
ரித்துக்கொண்டு இனியிருப்பது ஞாயமில்லை யென்று துணிந்து
இறந்தவளைப்போல கண்களைமூடி மூர்ச்சையடக்கிக் கொண்டேன்
ஆவலாய் வந்த செயசித்தன் என்நிலையைக் கண்டு இறந்து
போனாளென்றெண்ணி மயானத்திற் கொண்டுபோய் அடக்கஞ்
கஞ்செய்து விடும்படி சொன்னான் அப்படியே தூக்கி வந்தவர்
கொண்டுபோய் மயானத்திற் புதைத்துவிட்டுச் சென்றனர் நான்
பாதாளமாதேவி கிருபையாலெழுந்து ஆண்டிச்சி வேடந்தரித்து
ஆருக்குந் தெரியாமல் அம்மனை வணங்கி யிங்குள்ள ஓர் கிரகத்தி
லிருந்து வருகிறே னென்றாள். மதுமலர்க்குழலாள் கூறிவந்த
வாக்கியங்களைக் கேட்டுப் புதுமையெனவியந்து உமக்குமெமக்கும்
பகையானவர்களை யெல்லாம் ஒழிக்கிறோம் உன் புருடன் அடை
பட்டிருக்கும் காவற்சாலையைக் காட்டுவாயென்றனர் அவள்
களிப்புடன் முன்னடந்தாள் இவர்கள் பின்னடந்தனர் குகைவழி
கடந்து ஊர்வீதி செல்லும்போது ஆண்டிச்சியும் ஆண்டிகளும்

செல்லுகின்றனரென்று பேசிக்கொண்டனர். ராசகுமாரர்கள் நகர வளங்களையெல்லாம் பார்த்துத் திரிலோகத்திலும் இதுபோலிருக்க மாட்டாது. இவ்வித அகண்ட செல்வத்தை வைத்து அநுபவிப்பவன் ஓர் பெண்ணாலே யழிந்து போகப்போகிறானே யென்றுப் பேசிக்கொண்டனர். சீகரவல்லி அவர்களிருவரையுஞ் சிறைச்சாலை யிருக்குமிடமே கொண்டுபோய்ச் சேர்த்து இதற்குள்ளிருக்குங் காதற் கணவனை மீட்டித் தருவீர்களென்று சொல்லி ஓர்புறம் நின்றாள். செயவீர ரிருவரும் வாசலுக்கு வாசல் பாரா பலமாயிருப்பதால் இது சமயம் அங்கு போகக்கூடாதென்று பக்கமாய்ச் சென்று கோட்டைதாண்டி யுள்நுழைவோமென்று பக்கங்களிலுள்ள மேல் தலங்களிலேறி யுலவிக்கொண்டிருக்கும்போது ஓர் பாதாள கெபி தோன்றியது. அதனை யறிவோமென்று சற்றிறங்கினர். உடனே பிரசண்டவாய்வு அதனின்றெழுந்து அடற்சிலை வீரரை அந்தரத்திற் றள்ளிகொண்டுபோக அக்காற்றோட்ட வழியே சென்றனர். செல்லும்போது வானத்தில் ஓர் விமானம் பம்பரம்போற் சுழன்றுகொண் டிருக்கக்கண்டனர். வீரர்கள் விமானத்திற்றாவிப் பார்க்க ஒருவன் ஒடுங்கிய மேனி யுடையவனாய் அதிலுள்ள ஓர் சிறு தப்பத்தை அசையாமற் பிடித்துக்கொண்டிருக்கக் கண்டனர். அவனைக்கண்டு ஆச்சரியமு நகைப்புந்தோன்ற நீ யார் இப்படிச் சுழலவேண்டியதென்ன வென்றனர். அவன் குகையிலெழுங் காற்றால் செத்தைபோல் வந்த சுத்தவீரர்களே விமானம் காற்றோட்டத்தை விட்டு விலகினாலல்லவோ வரலாறு சொல்லலாம். பேசலாம். இந்நிலையிலுள்ள நான் என்ன சொல்கிறதென்றான். செயப்பிரகாசன் விமான மத்தியில் நின்று திருவடிப் பெருவிரலை யூன்ற விமானம் உரைக்காற்று வேகத்தையும் அடக்கித் தரையை நோக்கி வந்தது. உடனே தடம்புய வீரர் சாகசத்தாற்றாவி விமானத்தைப் பிடித்திழுத்து வேறிடங் கொண்டுபோய் நிறுத்தினர். விமானமேலிருந்தவன் நடுக்கம் நீங்கி வீரர்களை வியந்து சொல்வதாவது ஐயன்மீர் நானிருப்பது விஞ்சையருலகம். அவ்வுலகிலுள்ள எங்களரசன் மகன் சிலாதரன் சில நாளைக்குமுன் சிலர்களுடன் விமானமேலமர்ந்து உலக சஞ்சாரஞ் செய்துவருங் காலையில் இத்தீவில் ஓர் பெண்ணிருக்கு மாளிகைக்குநேர் வந்தான். அவளுக்குக் காவலாயிருந்தவர்கள் தடுத்துப் போர்புரிந்து கூட வந்தவர்களை யெல்லாம் விட்டுவிட்டு தலைவனை மட்டுங் கொண்டுபோய்ச் சிறைச்சாலையி லடைத்துவிட்டனர். மற்றவர்க ளஞ்சி விமானமேலமர்ந்து விஞ்சையனிடம் வந்து சொல்லினர். அவன் மிகுந்த கவலையுடையவனானான். சிலாதரன் மனைவியான கன்னிகை என்னிடஞ் சொல்லி வருந்தி கூடப்போய் பாதகரிடம் ஒப்பித்து வந்தனை எப்படியாவது கொண்டுவந்தாலாச்சுது. இல்லையெனில் உயிரைப்போக்கி விடுவேனென்றாள். நான் பன்னெடுநாள் கடத்தியு முடியாமல் துணிந்து தனியேவிமானத்தை

பூர்ந்துவந்து சிறைச்சாலை யிருக்குமிடம் நிதானந் தெரிந்து விமானத்தை அந்தரமார்க்கமாய் இறக்கினேன். ஏதோ திடீரென்று இந்தப் பிரசண்டச் சுழற்காற்று வந்து விமானத்தை யுபாத்தள்ளிச் சுழற்றியது. மேலே போவதாயிருந்தால் ஓர் காற்றுக்கீழே யிழுக்கின்றது. கீழே போவதாயிருந்தால் வருங் காற்றுத்தள்ளிச் சுழற்றுகின்றது. ஆனதால் இச்சூழ்ச்சியைக் கடக்க முடியாமல் இருக்கிறேன். விமானம் சூயவன் சக்கரம்போலவும் ராட்டினம்போலவும் சுற்றிக்கொண்டே யிருக்கின்றது. நான் நமக்கின்று பலமான கண்டம் விடிந்தாற் பொல்லாதவர்களால் தோழன் கதியோ உயிர் தொலையுங்கதியோ வென்றிருக்கும்போது சுதர்மன் தொடுத்த சுழற்பாணத்தாற் சுழலும். அர்ச்சுனன் தேர்மேல் வந்தமர்ந்தருளிய அரிபரந்தாமனைப்போல் வந்து காப்பாற்றினீர் பிழைத்தேனென்றான். ராசகுமாரன் எங்களுடன் வருவாயானால் உன் தோழனை மீட்டித் தருகிறேனென்று அவனையு மழைத்துக்கொண்டு விமான மேலமர்ந்து வேறு வழியாய்ச் சென்று அந்தர மார்க்கமாய்ச் சிறைச்சாலை மத்தியிலிறங்கி நாற்புறமும் உலவிப் பார்த்தனர். ஓரிடத்திலோர் புருடன் கால் கரம் விலங்காற் பிணிக்கப்பட்டிருப்பதைக் கண்டு நீ யாரென்றனர். அவன் இவர்கள் யார் அரக்கரின மல்லவே. தேவமனுட கணமாய்த் திரிகிறார்களே அறிவோமென்று நீவிர் யாவர்களென்றனன். ராசகுமாரத்தி காரணமாய் வந்து போராடும். ராசகுமாரர்கள் நாங்களாகு மென்றனர். அவன் மகிழ்ச்சியுடையவனாய் வீரர்களே உங்கள் வீரியமெல்லாம் விசாரித்துக்கொண்டேன். அனல்மயமானபெண்ணை வைத்திருந்தால் வருங்கேடென்று சொன்னேன். என்றந்தை சினந்து இச்சிறையிலிட்டான் இருக்கிறேனென்றான். செயப்பிரகாசன் நீ கலகாசூரன் இளைய மகனா உன் மனைவியால் உன் விர்த்தாந்தமெல்லாந் தெரிந்துகொண்டோமென்று தம்பியால் விலங்கைத் தவிர்த்து கூட வரும்படி செய்து அவனால் விஞ்சையன் மகனிருப்பிடமுந் தெரிந்து மீட்டி யழைத்துக்கொண்டு பள்ளினங்க ளடைபட்டிருக்கும் இடங்களைப் போய்ப் பார்த்தனர். அவைகள் கால்கள் சிறைகள் பிணிக்கப்பட்டும் பெருங் கூடுகளில் அடைக்கப்பட்டும் அயர்ந்திருக்கக்கண்டு விடுதலை செய்தனர். அப்பறவை யினங்கள் அரசகுமாரர்களைக்கண்டு உள்ளங் குழைய மகிழ்ந்து அன்று காலாந்தகப் பட்டணத்திற் காத்தது போல் இன்றுங் காத்தீர்கள். என்றுஞ் சிரஞ்சீவியா யிருப்பீர்களென்று வாழ்த்தின. பின்பு அரசகுமாரன் உத்தரவால் அச்சிறைச் சாலையின் உள்வெளி பக்கச் சன்னல் சாளரங்கள் காற்றுப் போக்கிகளாகிய துவாரங் கண்டவிடமெல்லாம் பறவைகள் பறந்து வெளி சென்றன. ராசகுமாரர்கள் விஞ்சையன்மகன் அரக்கன் மகனுகிய இவர்களுடன் விமானமேலமர்ந்து வெளிவந்து சலவசந்தனை நோக்கி இங்கு கெபியானவிடத்திலிருந்து ஓர் சுழற்காற்று உண்டாக

வேண்டியதென்னவென்று கேட்க அவன் சொல்வதாவது, அண்ணலே சிறைச்சாலையின் காவற்றலைமையாக சூறை மாருதசுவாசபாரிடமென்னும் ஓர் பெரும்பூதமுண்டும். அது துயிலுமிடமிங்குள்ளது. அதன் சுவாசக் காற்றுப் போவதற்காக மேனோக்கிய வெளிவழி யமைக்கப்பட்டிருக்கிறது. அக்காற்று நேராயோடாது சுழன்றுகொண்டே செல்லும். அதற்கு நேராக மேகங்கள் வராது. காற்றுஞ் செல்லாது பறவையினங்களுஞ் சாராது. அகப்பட்டவைகள் மீளாது அக்காற்று அதுவாகுமென்றனன். அரசன் மைந்தர் அப்படியாவென்று அவனைப்பார்த்து அரக்கர் கூட்டங்களை யொழித்து இப்பட்டணத்தை யுனக்கே பட்டங்கட்டி வைக்கிறேன். மனையாளிருப்பிடஞ் சென்று நாங்களிருக்குமிடம் நாடிவரக் கடவாயென்று விடை தந்தனுப்பி விஞ்சையரையு மனுப்பிவிட்டு தானுந் தம்பியுஞ் செம்பதி சம்பதியாகிய பறவைகள்மே லமர்ந்து பட்டண மாடங்களின் மேலாகச் சென்றனர். பறவையினங்கள் போவதைக் கண்ட பல காவலரும் விழித்தெழுந்து பெருஞ் சப்தத்துடன் எழுந்து மறித்தனர். செயப்பிரகாசன் தீக்ஷண்யக் கணைகளேவியவர் சிரங்களை யறுத்துத் தள்ளக் கூச்சலுண்டாகிக் காவற்சாலையிற் கலவரம் விளைந்ததென்று ஊரெலாந் தெரிந்து சகலமான வீரர்களும் ஆயுதபாணிகளாய்க் கடலலைபோல் வந்துகொண்டே யிருந்தனர். சகல வீடுகளுந் திறக்கப்பட்டன. மாதர் மைந்தர் கூச்சலே மிகுந்தன. சிலர் பாதித்துயிலோடெழுந்தனர். சிலர் சொர்ப்பனம்போலெண்ணித் துயின்றனர். சிலர் மனைவியர் தடுக்க நின்றுவிட்டனர். சிலர் நித்திரை மயக்கத்தால் கண்களை மூடிக்கொண்டு வாசற்றெறியாமற் றடவித் திரிந்தனர். இப்படி அல்லோகல்லமா யெழுந்த அரக்கர் பெருங்கூட்டமாய்ச் செறிந்து பறவைகளையும் ராசகுமாரர்களையும் வளைந்து பலவாயுதங்களைச் செலுத்திய காலையில் பெரும் பறவைகள் அவற்றுக்கஞ்சாமற் பாய்ந்து கால் நகங்களால் உடல்களைக் கிழித்தும் மூக்காற் கொத்தியும் ரெக்கைகளால் மோதியும் சின்னாபின்னஞ் செய்தன. சரபப்பக்ஷிகள் சிங்கங்களையும் யானையுராஞ்சிப்பக்ஷிகள் யானைகளையும் அண்டரண்டப்பக்ஷிகள் குதிரைகளையும் மற்றப் புள்ளினங்கள் பல வாகனங்களையும் அரக்கர்களையுந் தூக்கிக்கொண்டுபோய் கடலிற் றாவியுங் கற்பாறைகளிற் போட்டும் மலைச் சிகரங்களினின் றுருட்டியுஞ் சிதைத்தன. பறவைக் கால்களாலிடுக்கப்பட்டு அலறும் அரக்கர் குரலே பட்டணமெங்கும் ஒலித்துக்கொண்டிருந்தன. திறலுடை அரக்கர் ஆயுதங்களாற் பறவைகள் பல மாண்டன. வரும் படைகளைக்கண்ட பெருங் கொடையாளனுந் தம்பியும் பிரசண்ட கோதண்டங்களை வளைத்து பெருங் கணைகளை மழைபோல் வருஷித்த காலையில் எதிரிகளேவிய ஆயுதங்களெல்லாமற்று அவரவர் கரஞ்சிரங்களுந் தறிந்து வாகனங்களு மழிந்து எவ்விடங்களிலும் பிணக்கு வியல்களுங் குவிந்து உதிரப்பெருக்

கழும் ஓடத் தலைப்பட்டன. மேலு மேலாய்ப் படைகளும் படைத் தலைவர்களும் கலகாசூரன் புதல்வருந் துணைவரும் வந்து வந்து போர் தொடுக்கச் செயவீரரிருவருஞ்செஞ்சரங்களைப் பொழிய கழு காசர் ஊர்ப்பரப்பெலாம் வட்டமிட்டு அவரவர் தலைக்குமேலுலவ அவரவர் தலைக்குமே விடியிடித்ததுபோல் நாணொலி முழங்க அநே கஞ் சூரியர்கள் உதயமானதுபோல் பாணவொளிகள் பிரகாசிக்க சாமளரூபி யருள்போற் பெருகுஞ் சரங்கள் ஒன்று பத்து நூறு ஆயிரங்கோடியா யுலவிக் கண்டகர்களைக் கண்டங்கண்டமாக்க படை வீரர்கள் வான வெளிகளில் வாகனங்களைக் கடவிப் பல வாயுதங்களை யெறிந்துந் தண்டால் மோதியும் உலக்கையாலிடித்தும் பாசங்களைப் பரப்பியும் போராடப் பராக்கிரமசாலிகள் பல தேவாஸ்திரங்களேவி யவர்கள் சிரங்களையு மறுத்துத்தள்ளினர். வானத்திலிருந்து விழும் கரம் சிரம் உரம் ஆயுத முதலியவற்றால் மாட மண்டபங்களிடி ந்து தகர்ந்தும் மாதர் மைந்தர்கள் நசுங்கி மாண்டும் உதிரவாறு தெருக்களெல்லாம் பரவி அநேகம் பொருள்களை யிழுத்துக்கொண் டோட இப்படிப் போர் நடக்குஞ் சமயத்தில் சூறைமாருத சுவாச பாரிடம் வாயைத்திறந்து துயில வாயினிடமாய்க் கனத்த அரக்கர் பிணங்கள் உதிரத்துடன் விழச் சுவைத்து உருசி தெரிந்து உண்டு விழித்துச் சிறைச்சாலையிற் பிரமாதம் விளைந்தது தெரிந்து திகாந் தமு நடுங்க வெழுந்து இருந்த மலையும் அழுந்த நடந்து ஆரடா வந்தது வந்ததென்றிரைய அவ்வோசை அண்டங்களெல்லாம் நிறை யத்திக்கெங்கும் பரவித்தொங்குஞ் செம்பட்ட மயிரை இருளானதால் ஆலவிழுதென்றெண்ணி மூக்காற் கௌவிச் சிறையாலணைத்துப் பறவைகள் தூங்கத் தண்டாயுதத்தைச் சுழற்றிக்கொண்டு ராச குமாரர்களை நோக்கி வந்தது. அதன் சுவாசக் காற்றாற் பறவை யினங்களெல்லாஞ் சுழலச் செம்பதியுஞ் சம்பதியும் இழுக்கப்பட்டுந் தள்ளப்பட்டும் ஒரு நிலையின்றி அலையவருங்கோரபூதத்தைக் கண்ட கோதண்டக் கையான் றம்பியை நோக்கி இப்பூதத்தைப் பார்த்தாயா இமயமலை கால்கரம் பெற்று வருவதுபோல் வருகின்றதே. இப் படியான பூதங்களையும் ராட்சதர்களையும் படை வலியாகப்பெற்ற கலகாசூரன் ஆற்றலையென்ன வென்று சொல்வோமென்று கழறி இருவரும் எதிரேறிச் சென்றனர். ஆங்காரபூதம் ஓங்கார சப்த மிட்டன. அவ்வொலியா லண்டபுவன சராசரங்களெல்லாம் நடு ங்க பறவை யினங்களெல்லாம் இன்னதிசைதான் போனதென்று தெரியாமல் ஓடி மறையத் தண்டாயுதத்தைச் சுழற்றி யடிக்கும்படி யோங்கியபோது மன்னன் புதல்வன் வச்சிரக் கணைகளேவி யதனைத் தூளாக்க பூதம் சூலத்தையேவ அது ஞாலத்தை விழுங்க வருவது போல் வரக்கண்டு கூரிய கணைகளாற் கண்டமாக்கப் பூதம் அகன்ற வாயைத்திறந்து நாவைநீட்டிச் சுழற்றி மேகத்தைப் பிடித்து உரு ஞ்சி ராசகுமாரர்கள் ஏவும் பாணங்களை யெல்லாங் கவர்ந்து பற்க

ளாற் கடித்து கடித்துத் தின்றுலவியது. பார்வேந்தன் தேவிருய ளிய தேவாஸ்திரங்களைச் செலுத்தினன். அவ்வஸ்திரங்கள் கால்வேறு கரம்வேறு சிரம்வேருய் வெட்டித்தள்ள உடனே பூதமாண்டது. உதிரப் பெருக்கங் கருங்கடலைச் செங்கடலாக்கியது. செயசித்தன் சிறைச்சாலையில் நடக்கும் போரைக் கேள்விப்பட்டு வயிரத் தேரேறி யரக்கர் புடைசூழ வந்து பெரும் போராடச் செயப்பிரகாசன் செங்கணைகளால் அவன் ருெடுக்குங் கணைகளையெல்லா மழித்து அர்த்த சந்திரக் கணையொன்ருல் அவன் சிரத்தை யறுத்துத் தள்ள அவன் மாண்டான். கங்குலில் நடக்கும் போர்த் திறத்தைத் தெரிந்த கலகாசூரன் கனகத் தேரேறிப் பலகோடி யரக்கர் புடைசூழ மந்திரி பிரதானி படைத்தலைவர் பலரும் வரப்படு களம்வந்து நெடுஞ்சிலை யேந்தி நிற்கும் நிருபர் சிகாமணிகளைக் கண்டு எக்காலமுங் கேளாத விந்தையா யிங்குவந்து மூளைத்தார்களே யென்று பெரு வில்வளைத்து பலகோடி பாணங்களை யேவினன். தம்புவிக் கிறைவன் கும்பு கும்பாய்ப் பகழிகளை யேவியவன் பாண வருடங்களைத் தடுத்து அவன் தலைவேறு உடல்வேருய் விழும்படியறுத்துத் தள்ளினன். அவைகள் திரும்பத் திரும்ப மூளைக்க செயப்பிரகாசன் சித்தமயர்ந்து தம்பியைநோக்கி யிவனை அறுக்க அறுக்கப் பிழைத்துக்கொள்வானேயானல் எவ்வாறு சங்காரஞ் செய்கிறது. எக்காலம் மாது சிறையை மீட்கிறதென்று கூறினன். மதிப்பிரகாசன் அண்ணு இவனுயிர்நிலை ஓரிடத்திலிருக்கிறதாய்த் தெரிகிறது. அவ்விடங் கண்டு உயிரை யழித்தாற்ருன் இவன் மாண்டுபோவான். அந்த ரகசியம் ராசகுமாரத்தி விசாரித்து வைத்திருப்பாளென்றனன். உடனே ராசகுமாரன அஞ்சுகனிடஞ்சொல்லி யறிந்து வரும்படி யேவினன். அப்பறவை அண்ணனுத்தரவுப்படி கடோதரனிடஞ்சென்று அனுமதிபெற்று கரும்பொன கோட்டையைக் கடந்து செம்பொன் மணிமாளிகையில் வீற்றிருஞ் செயிழைமுன் சென்றிறங்கியது. நங்கை நாயகன்றாதாய் வந்த நற்கிளியை நளினக் கரத்திலேந்தி நடத்த போர் விர்த்தாந்தங்களை யெல்லாங் கேட்டு மகிழ்ந்து வந்த காரணமென்னவென்று கேட்டாள். பைங்கிளி பாதகனுயிர் நிலை சொல்லியிருந்தாற் கேட்டு வரும்படி நமது ராஜா ஏவினுரென்று சொல்லியது. சுவர்ணப்பிரபை அவன் உயிர்நிலை அறிந்திருக்கிறேன். அதனைச் சொல்கிறேனென்று சொல்வதாவது நேற்றுப் பிற்பகல் அதாவது சாயங்காலம் கலகாசூரன் வழக்கம்போல் என்னிடம் வந்தான். அவனைப் பார்த்து நான அரக்கர் தலைவனே முற்பகல் வருகிற நீர் பிற்பகல் வரவேண்டியதென்ன வென்றேன். அவன் சொன்னது பெண்ணே உன்னினத்திலுள்ளவராம் ராசகுமாராகள். உன்னை மீட்டிக்கொண்டு போகும்படி பறவைப் படைகளுடன் வந்து போர் தொடுத்தனர். அவர்களையும் பறவைகளையும் எனது மகனு மந்திரி மகனும் போய்ப் பிடித்துச் சிறையிலடைத்து விட்டனர்.

அது சங்கதியைத் தெரிந்துவரலாமென்றிருந்துவிட்டேன். அதனால் காலமாறிவிட்டதென்றான். உடனே உள்ளே கவலைபெருக வெளிக்குக் காட்டாமல் ராட்சதர் சூட்சிகளை நாயகன் கடந்து விடுவாரென்று மதித்து நளின வார்த்தையாய் என்னை விரும்பி மீட்கும்படி யெவர்கள் வந்தாலென்ன, போர் கொடுத்தாலென்ன. அக்கினிக் காப்பையே காவலாகக்கொண்ட நான் ஆகியில் உம்மை நிர்ணயித்துக் கொண்டதை விட்டுவிட்டு வேறொருவரை நினைக்கவே மாட்டேன். ஆனால் சந்தேகமொன்றேற்படுகிறது. ஏனெனில் இதுவரை பகைவரென்கிறபேரைக் கேளாத நான் பகைவர் வந்து போர்செய்கிறாரென்பதைக் கேள்வியானவுடன் பயங்கரமடைகிறவளாகவே யிருக்கிறேன். வரம் பலம் உயிர்நிலை முதலியவைகளை யொழியாமற் சொல்லீரேயானால் நான் ஒருவழிப் பட்டிருப்பேனென்றேன். அவன் என்பேரிலிருக்கிற மோகத்தினாலுள்ளதைச் சொல்லியிருக்கிறான். அதாவது என் பட்டணமததியில் மலைச் சிகரமிருக்கிறது. அதிற் கீழ்நோக்கிய படிக்கட்டுகளுள்ளதான குகையுண்டு. அதன் வழி சென்றாற் பாதாள மாதேவியாலயம் பார்க்கப் பர்க்க விசித்திரமுடையதாயிருக்கும். அத்தேவதை எங்கள் குலதெய்வமாகும். தேவதையின் பலிபீடத்தினகீழ் ஓர் சிறு துவாரமிருக்கிறது. அத் துவாரத்தில் தூலசரீரிகள் செல்லமாட்டார்கள். சூட்சம சரீரிகள் தான் செல்வார்கள், அவ்வழி சென்றால் அடித்தல வெளியிருக்கிறது அவ்விடத்தில் ஓர் பொய்கையும் பொய்கை மத்தியில் மாளிகையொன்று மிருக்கிறது. மாளிகைச் சோதியா விருள்ளென்பதேயிராது, அம்மாளிகையில் பாதாள மாதேவி பரிவார தேவதைகளுடன் சுயரூபமா யிருப்பாள். மாளிகையறை யொன்றில் என்னுயிர் நிலையை தங்கக்கலசத்திலடைத்து அம்மன் பார்வையில் வைத்திருக்கிறது. என்னுயிரை யழிக்கவேண்டுமானால் என்னுடலைக் கண்டங் கண்டமாக்கி மூன்றேமுக்கால் நாழிகை அந்தரத்திற் சுழலும்படி செய்து அக்கலசத்தை யுடைத்தால் என்னுயிர் நீங்கி யழிந்து போவேன். அப்படிச்செய்ய வொருவராலு முடியாது. பாதாள வழி யறிந்துபோகவுமுடியாது, போனாலும் நிமலையின் நெற்றிக்கண்ணெருப்பால் நீறாய் விடுவர். சேனாபலம் மைந்தாதுணை பலம் யாரும் ஏறெடுத்துப் பார்க்க முடியாதது. என்னைக் குறித்தெண்ண வேண்டாம் ஏந்திழையே யென்று சொன்னான். இதனை யெனதிறைவனிடஞ் சென்றிசைப்பாயென்று சுவர்ணப்பிரபை சொல்லினள். ஆரணங்கு கூறிய வாய்மொழிகேட்ட அஞ்சுகன் கோட்டைக் கடந்துபோர்க்களம் வந்து கழுகரசன்மேல் விளங்கும் மகா புருஷன் காதில் தோளிலிருந்து சொல்லியது. கிளி மொழியைக்கேட்ட நளின மலர்க்கையான் நன்று நன்றென வியந்து செம்பதியை நடத்தி அடா அரக்கா உன்னுயிரை நாசப்படுத்துகிறேன் பாரென்றான். ராட்சதன் நீ என் கரவிரலாலழுத்திக் கொலலக்கூடிய மனிதன்

உன் வாகனம் கல்லைக் கண்டோடுங்குருவி பாண வல்லமையால் எங்கள் படை வர்க்கங்களையழித்த வீரனேயாயினும் என்னை உன்னால் என்ன செய்ய முடியும். நான் கொண்டுவந்த பெண்ணைக் கொண்டுபோகத் திராணியுண்டா. என்னைத்தவிர உங்களை யேறிட்டுப்பார்ப்பாளா உங்கள் வல்லமையறியச் சும்மாவிருந்தேன். கண்டங்கண்டமாக்கினீர்கள். என்ன கண்டீர்கள். வீணாகப் பேராடி மடியவேண்டாம். ஊர்போய்ச் சேருங்களென்றான் நானிலத்தலைவன் ராட்சதனே நீ நங்கையைக் கொண்டுவந்து நாலுவருடம் வைத்திருந்தாய். என்னசுகங்கண்டாய். அயன் கணவனாகஅமைத்த அவனுக்கேஅவள் கிடைப்பாளென்றான். கலகாசூரன கலகலவென்று நகைத்து உங்களுக்கு வானகமாதும் எனக்கு மண்ணகமாதுங் கிடைக்கும்படி செய்கிறேன் பாருங்களென்று சண்டமாருதம்போற் றேரைச்செலுத்திச் சரமாரிகள் பொழிந்து சம்பதி செம்பதி முதலிய பறவை வாக்கங்களுடலைத் துலைத்து வீரர்மார்பிலுமேவ அக்கணைகளை அம்மனளிய கவசத்திற்பட்டு அப்படியே யுதிர்ந்தன. வெய்யவன் தேரும் வீரன் பறவையும் வானப் பரப்பெலா முலாவக் கடும்போராடி வருஞ்சமயம் அரக்கன் இவனை அஸ்திர வல்லமையால் வெல்ல முடியாதென்று மறைந்தனன். ராசகுமாரர் எங்கு போயிருப்பானென்றுலவி யோசித்துக்கொண்டிருக்கப் பல்லாயிரம் பூதங்கள் பரிவர ஓர் பெரும்பூதம் வரக்கண்டனர். அப்பூதம் மகாகோரமாய் வந்து ஆரடா மானுடர் ஆரடாமானுடர் வாருங்களடா எடுத்து வாயிற்போடுகிறேனென்றது. பூதப்படையைக் கண்ட போர்வீரர் புள்ளினங்களைச் செலுத்திப் போர்க்கணைகளேவிப் பூதங்களைக் கண்டதுண்டமாக்கத் தலைமையாய்வந்த பெரும்பூதம் ஆவென்று வாயைத்திறக்கக் கற்றை கற்றையான அக்கினிகளெழுந்து பரவின. அரசன்மகன் அக்கினியைக் அவிக்கும்படியான கணைகளையேவி யவித்தபோதிலும் மகாபூதம்அடிக்கடி வாயைத்திறந்து ஊத அக்கினித் திறள்கள் நாற்றிசையினும் பரவி மேகநீரும் வறளச்சாகர நீரும் வற்றச் சகல சீவராசிகளும் வாடி வதங்கப் பறவை யினங்கள் அகப்பட்ட வெல்லாங் கரிந்து பொரிந்துபோக உற்பாகமான காலையில் உத்தமன் உள்ளந் திகைத்துத் தம்பியை நோக்கி தம்பி இக்கோரத்துக்கென்ன செய்யலாம். தேவாஸ்திரங்களைச் செலுத்திச் செலுத்தித் தீயை அவிக்க அவிக்கப் பெருகிக்கொண்டிருந்தால் எவ்வல்லமையால் இதனை யடக்குகிறது. அண்டபுவன சராசரங்களை யெல்லாம் அழித்துவிடும்போற் றெரிகிறதே. யார் ஏவலால் என்ன வரத்தினால் வந்ததோ தெரியவில்லை. யாரைக்கொண்டு அறியலாமென்றான்.

மதிப்பிரகாசன் அண்ணா அரக்கன் மறைந்து இது வந்தமையால் அவன் ஏவலாற்றான் வந்திருக்கலாம். அவனிருப்பும் இதன் வரலாறுஞ் சொல்ல இவ்விடத்தில் யாருமில்லை. சர்வலோக சரண்ய

வல்லியாகிய சாமளரூபி யருளாற்றான் தெரியலாமென்றான். செயப்பிரகாசன் அக்கினி மத்தியி னின்றபடி செம்பதிமேலிருந்து செங்கரஞ் சிரமேற்கூப்பி அகிலாண்டகோடி பிரமாண்டநாயகி ஆதிபராசத்தி அநாதரட்சகி சர்வபரிபூரணி சச்சிதானந்தரூபி பச்சை மரகதவல்லி அச்சுதன்றங்கையென வந்த அம்மையே பரமன் பாகத்துறையுந்தாயே இது சமயம் பாலனைக் காக்கக்கடவையென்று கண்ணீர் பொழியக்கசித்துருகித் தோத்திரஞ்செய்த காலையில் எங்கும் நிறைந்த என்றாய் சாமளரூபி பாலன் படும் பரிதாபந்தெரிந்து சிங்கவாகனமேலமர்ந்து கடலெல்லாங்கடந்து போர்க்களம வந்து அஞ்சாதேயென் மகனேயென்று அரசகுமாரன் முன்வந்து நின்றாள். மரகதந் தொழுந்தனைய திருமேனி சோதிதர மணித்துவா வாயிலங்க வான் கருணை பொங்க வந்து நின்ற உலகமாதாவை யொப்பிலாத் தெள்ளமுதைக்கண்டு உள்ளமெலாம் நெக்கு நெக்காயுருகித் தொழுது அகண்டபரிபூரணி அடியேன் ஒரு பெண்ணினுக்காகவந்து மகாராட்சதரைப் பகைத்துப் போராடுகின்றேன். இதோ அக்கினிப் பிழம்பைக் கக்கி நிற்கும் பிரளய காலபூத தேவதைமுன் என் வலியெலா மொடுங்கி நிற்கிறேன். நீ யருளிய தேவாஸ்திரங்களையும் சமனீகரஞ்செய்து விடுகின்றது. இதனைச் செயிக்க வரமும் அரக்கன் இருப்பிடமுந்தெரிய அனுக்கிரகஞ் செய்தருளவேண்டுந்தாயே யென்றான். அம்மன் இத்துஷ்டதேவதை அகிலங்களை யழிக்கும்படியான அக்கினியைக் கக்கும் சக்தியுடையதா யிருப்பினும் இயற்கைவலி யுடையதல்ல செயற்கை வலியுடையது. ஏனென்றால் கலகாசூரன் உன் கணைகளுக்கஞ்சி முன்னிற்க முடியாமற் பாதாளமாதேவி யாலயஞ் சென்று அத்தேவதையைப் பிரார்த்திக்க அத்தேவதை தோன்றி என்ன வரம்வேண்டுமென்று கேட்க, இவன்ராசகுமாரர்களை யழிக்கும்படியான வரம் வேண்டுமென்று கேட்டனன். அத்தேவதை அது கொடுக்க என்னால் முடியாது. சகாயஞ் செய்யும்படி கொள்ளிவாய்த் தேவதையை யழைத்துப்போவென்று சொல்லி மறைந்துவிட்டது. இவன் கொள்ளிவாய்த் தேவதையைத் துதித்து வரும்படி செய்து பாதாளமாதேவி பகர்ந்ததையும் பகர்ந்தான். அது அப்படியே அவர்களை யழித்து விடுகிறேன். நீ இவ்விடம் யாகசாலை யுண்டுசெய்து இடைவிடாமல் மந்திரஞ் செபித்துக் கொண்டிருப்பானல் மந்திர வல்லமையால் மாற்றாரை யெரித்து வருகிறேனென்று வந்திருக்கின்றது. நீ ஆங்கு சென்று அவன் மந்திர ஜெபத்தை நிறுத்தினால் இதன் வலி யொடுங்கிப்போகும். இம்மகா பூதத்தையும் ராட்சதனையும் செயித்து தேவி சிறைமீட்டிச் செல்லக்கடவாயென்றருள் புரிந்து பிரமசத்தியாகிய ஆயுதத்தையுங் கொடுத்து மறைந்தாள், சாமளரூபி சென்றபின் தரணிபாலன் தயபியிடஞ் சங்கதி யனைத்தையுஞ் சாற்றி சாக்கிரதையா யிருவென்று வில் நாணி பூத்து ஸடங்கார ஓசைகாட்டி வயிரக்கணைகளைப் பூட்டி மந்திர

பூதத்தை யெதிர்த்து வருணக்கணையை ஏவி தங்கள் பாதுகாப்பாக ஜலம் வருஷிக்கும்படி செய்து அக்கினி வெப்பமிஞ்ச வொட்டாமற் செய்து வாகனங்களைச் செலுத்தி மலைச்சிகரநோக்கிச் சென்றனர். ஆங்காரப் பூதம் இவன்யார் அடங்காத மன்னனயிருக்கிறு னென்று ஆர்ப்பரித்துப் பின்றொடர்ந்து அக்கினியைக் கொட்டிக்கொண்டேவர செயப்பிரகாசன் சிறிதுஞ் சலியாமல் மலைச்சிகரஞ் சென்றிறங்கி சரக்கூடத்தால் சிகரத்துக்கு மூடியிட்டதுபோல் மறைத்துச் செல்ல கொள்ளிவாய்த்தேவதை அவ்வழி போகமுடியாமல் ஊர்ச்சனங்கள் வரும் அவ்வழி வந்தெதிர்க்க செயப்பிரகாசன் தம்பியைப் பார்த்துப் பாதாளமாதேவியாலய பாங்கில் செபஞ்செய்யும் அரக்கனையணுகி அதனையழிப்பாயென்று கூற மதிப்பிரகாசன் சம்பதியைச் செலுத்தி ஓரிடத்திலிருந்து கண்மூடி உருச்செபிக்கும் இராக்கதனைக் கண்டு வாளையுருவி இரண்டுதுண்டாய் வெட்டினன். அவன் துண்டிரண்டாகச் செபிக்குமந்திரம் நின்றது. மன்னவனுடனெதிர்த்த மந்திரபூதத்தின் வலியெலா மொடுங்கி நிற்க வீரன் வெங்கணைகளால் அதனுடலைச் சக்கைச் சக்கையாய்ப் பேர்த்தெரிய அது அஞ்சி யர்சகுமாரனைப் பணிந்து உன் கணையைச் சகிக்கும் வலியென்பாலில்லை போகிறே னென்றோடிமறைந்ததுஇருதுணிவான அரக்கன் உருவாகிப் பார்த்து இவர்கள் இங்கும் வந்துவிட்டனரேயென்று இளையவன்மேற் சூலங்கொண்டெறியஅதுமார்பையூடுருவிப்போக அதனுல் அவன் சம்பதிமேற் சாய்ந்தான் அப்சிறையிலேந்தித் தமையனிடங்கொண்டுவந்தது பாதாளமாள்கைதேடிவந்து போர்புரியும் பார்வேந்தன் மைந்தரைக் கண்ட பாவிராட்சதன் பதைத்தெழுந்து ஆலகால விஷம்போற் சீறியகோரமா யம்புகளையேவி யெதிர்த்தான் செயப்பிரகாசன் தம்பி மயக்கத்தைக் கண்டு சற்றேதளர்ந்து சம்பதியை ஓரிடத்தில் வைத்திருக்கும்படி செய்து வில்வளைத் தம்புதொட்டு வெய்யவன் விடுஞ்சரங்களை விலக்கி வயிரக்கணைகளால் அவனுடலைக் கண்டங்கண்டமாக்கி வாயுவுக்கணையால் அக்கண்டங்களைச் சுழலும்படிசெய்து அம்மையருளிய சத்தியை விடுத்தான். அது பாதாளவுலகங்களெல்லாம் நடுங்கப் பலிபீடத் துவாரவழியூடுருவிப் பாதாளமாதேவி பார்வையில் ஓர் மண்டபத்திலிருக்குந் தங்ககலசத்தையுடைத்தெறிந்து விட்டு அங்குள்ள பொய்கையில் நீராடியம்புறுத்தூணியிலடைந்தது கலசத்தை விட்டுவந்த வுயிர்கண்டங்கண்டமாய்ச் சுழலும் உடலிற்றங்கமாட்டாமற் காலனூர் சென்றது. சலகாசூரன் மாண்டனன் பாராசன் வீரத்தைக் கண்ட பாதாளமாதேவி பரிவாரத்துடன் வந்து வேந்தர்கோனிடம் பலவார்த்தையாடி தம்பிமயக்கம் நீங்கும்படியாகவும் மாண்ட பறவைகள் வரும்படியாகவும் ராசகுமாரன் கேட்டுக்

கொண்டபடியெல்லாஞ்செய்து சலவசந்தனுக்கு சாகரதீபாந்த
வரை பட்டணத்தை யாளும்படி பட்டங்கட்டி தருமபத்தினி
யை மீட்டுக்கொண்டு போகக்கடவா யென்று சாற்றிச்சென்றது.
ராசகுமாரிருவரும் மகிழ்ச்சியுடையவராய் பறவைமேலமர்ந்து
அங்குள்ள அதிசயங்களைப் பார்த்து வரும்போது சலவசந்த
னும் சீகரவல்லியும் அரக்கரினத்துக்கஞ்சி வெளிப்படாமல்
ஓர் மாளிகையி லிருந்தவர்கள் ராசகுமாரர்களைக் கண்டு பொங்கி
யெழுந்த ஆனந்தமுடையவர்களாய்ச் சொல்லியபடி முடித்த
னர் நமது துயரங்களை யெல்லாந் தீர்த்தார்களென்று வணங்கி
நிற்க மன்னன்மகன் நன்னயமாய் நோக்கி நீதிபரிபாலனை உன்
தந்தை மாண்டுபோயினன் நாங்களிருக்குமிடம் வந்துசேருவா
யென்று நவின்று பாதாளவாசல்களைக் கடந்து பறவைவாகனர்
களாய் ஆலாவிருக்ஷம் வந்திறங்கினர் சிறையிலிருந்து மீட்கப்
பட்ட பறவை யினங்களெல்லாம் இரவுநேரம் அரக்கர் கூட்டம்
விளைத்த போரினாலும் ஆங்காரபூத சப்தத்தாலும்அஞ்சி நாலா
திசைகளிலுஞ் சிதறியும் செயசித்தன் கலகாசூரன் கணைகளாற்
கண்டமாகியும் கொள்ளிவாய்த் தேவதையுமிழ்ந்த கொழுங்கன
லால்வெந்தும் மாண்டனபோகமற்றவைகளெல்லாம் ராசகுமாரர்
களைக் காணாமல் கண்ணீர்வடித்தும் ரெக்கைகளைக்கொண்டு மார்பி
லடித்தும் இரைச்சலுடையவைகளாயஎங்குநிலையில்லாமற்றிரிந்த
வைகள் ராசகுமாரர்களைக் கண்டவுடன்ஆனந்தமுடையவைகளாய்
காணாமற் போன தம் தம் குஞ்சுகளைக்கண்டுவருந் தாய்ப் பறவை
கள் போல் வந்து வந்து சுற்றின மாண்ட பறவைகளும் பாதாள
மாதேவி யருட்பிரகாசத்தால் உயிர்பெற்றெழுந்து உத்தமன்
சமுகம் நிறைந்தன. வந்துவந்து பணிந்த பறவைகளுக்கெல்லாம்
கனிந்த வார்த்தைகள் கூறி யுங்கள் சகாயத்தாற் பகைதீர்ந்தே
னென்று பகர்ந்திருந்தனன். சலவசந்தன் தந்தைமேல் வீழ்ந்
தழுது சீகரவல்லி தேற்றத்தெளிந்துராசகுமாரர்களிருக்குமிடம்
வந்து பணிந்து அவர்களருள் பெற்றிருந்தான். போர்க்களம்
போனவரொருவரு மீண்டுவராமல் மாண்டுபோன செய்தி
தெரிந்த அரக்கரசுரர் பூதர் பசாசர் முதலானோர் பெண்களெல்
லாம்அலைகடல்பொங்கி யெழுந்ததுபோல்பேரிரைச்சலுடன்அழு
துபோர்க்களம் புறப்பட்டனர்.ஆரணியவல்லியும் அவர்களுடன்
வந்தாள். தலைவன்மாண்ட செய்திதெரிந்த சரையை தலைவிரி
கோலமாய் மானிடப்பெண்ணால் மாண்டுபோன மன்னவா எக்
காலங் காண்பேனென்று தாரைதாரையாய்க் கண்ணீர் பெருகப்
புலம்பி வந்தனள். யாவரும் போர்க்களம் வந்து அவரவர் நாய
கர் புதல்வரைக்கண்டு புலம்பிநிற்க சரையை மகளைநோக்கி மந்
திரிமகன் கொண்டுவந்து கொடுத்த உன் மணவாள னெங்கே
யென்றாள். அவர் போர்க்களச் செய்தி யறிந்துவருகிறேனென்று

போனவர் வரவில்லை பகைவரினமாயிருப்பதால் அவர்களிடம் சேர்ந்திருப்பாரென்று மதிக்கிறே னென்றுள். அவள் எங்கள் கதியெப்படியானாலுமாகுக உன்புருஷன்சுகமாயிருந்தாற்போதும் பார்த்துவருவோமென்று ராசகுமாரர்களிருக்குமிடம் வந்தனள். ஆரண்யவல்லி அருமைநாயகனை வணங்கி அவர் அண்ணனையும் பணிந்து ஒருபுறம் ஒதுங்கிநின்றுள். நாணி நின்ற நங்கையைக் கண்ட நாவலந்தீவான் இத்தீவில் நமக்குவாய்த்தது போல் நமது தம்பிக்கும் பெண் வாய்ந்தது நலமென்று களிகூர்ந்தான். அந்நேரம் மாயாசிங்கன்வந்து ராசகுமாரன் திருவடியில்வணங்கி அடியேன் செய்த அபசாரங்களை யெல்லாம் பொறுத்தருள வேண்டும் ஆண்டவனே யென்று அஞ்சியொடுங்கி நின்றுன் சரையையானவள் அங்கிருக்குந் திருமகனையும் மருமகளையும் மந்திரிமகனையும் இவர்களெல்லாம் பணிய வீற்றிருக்குந் துறைமகனையுங் கண்டு சித்தம் பிரமித்து எல்லாரும் நமது சொந்தமாக விருக்கின்றுர்களே பகையார் உறவார் எல்லாந் தெரிவோமென்று மாயாசிங்கனை நோக்கி மந்திரிகுமாரகா உன்னை மகளுக்கு நாயகன் கொண்டு வரும்படி சொன்ன கோலமென்ன வந்த மாப்பிளையால் எங்கள் குலமெலாம்அழிந்துபோன காலமென்ன சொல்வா யென்றனள். அவன் அம்மணி சொல்வேன் ஆனல் இதோ வீற்றிருக்கும் செகதீஸ்வரப்பிரபு செய்த குற்றங்களை மன்னிக்கிறே னென்று வாக்குக்கொடுத்தால் அச்சமில்லாமற் சொல்வேனென்றனன். சமரசன்புதல்வன் தன் முன்னேநிற்கும் அவனைநோக்கி நீ யார் அரக்கரனைவரும் என் கணையால் மாண்டிருக்க நீ தப்பியதெப்படி சொல்வதென்ன சொல்லத்தகுந்ததெல்லாஞ் சொல்லக்கடவாயென்று கூற அவன் சொல்வதாயினன். எங்களரசபத்தினியாகிய இந்தஅம்மாள் தன் வளர்ப்பு மகளாகிய ஆரண்யவல்லிக்கு நாயகன் கொண்டு வரும்படிசொல்லினள் நான் விமானமூர்ந்து தண்டகாரணியஞ் சென்று பார்த்ததில் நீங்களிருவருந் தோழரிருவருடன் வேட்டையாடிக் கொண்டிருந்ததைக் கண்டேன் ஆலமர பொய்கை நாடி வரும்போது வேறொரு பொய்கையில் விமானத்தை நிறுத்தி மரப்பாலமமைத்துவைத்துவிட்டுமறையவனாக ஆலமரத்திலிருந்து நீங்கள் வந்தவுடனிறங்கி மகனை மடங்கல் வதைத்துவிட்டது அதனை பிடித்து வந்து கொல்லவேண்டுமென்றுகூறி வடவிருக்ஷத்திலிருந்தபடியே வடதிசைசென்று சிங்கவுருவமாகி சிங்கம்பலவுடனும் மற்றுந்திசைகளிலும் பன்றியெருமை புலிகளுடனும் பொய்கையை வளைந்தேன் உங்களில் மூவர் தனித்தனி மற்றத் திசைகள் சென்றனர்தேவரீர்என்னைத் தொடர்ந்து சியங்களை வதைத்து வரும்போது நான் மரப்பால வழியாய் நுழைந்தேன் தாமும் அப்படியே வந்து நுழைந்தீர்

நான் விமானத்தை யித்தீவிற்கொண்டு வந்திறக்கிக் குதித்தேன் தேவரீர் குதித்து என்னைக் கொல்லும்படி வில் வளைத்தீர் நான் கர்ச்சனைசெய்தேன் அரக்கர் இருபதுபேர் வந்தனர் அவர்களி டம் தங்களை பிடிக்கும்படி சொல்லினேன் அவர்கள் பாசங்களை பரப்பிவளைய உடனே பரலோக மேற்றிவிட்டீர் என்னைத் தொடர்ந்து குகைவழி வந்தீர் எழுத்துவரம்பு கடந்து வடசா யல் வழிசென்று அரக்கிகளைவென்று பூதங்களைக் கொன்று மங் கையர்க்கரசியிடஞ் சேர்ந்து கொண்டீர் நான் சொல்லியபடி ஆரணியவல்லி தோழியர்களை விடுத்தாள் அவர்கள் குகைவழி வந்து தேவரீரைக்காணமற்றிரும்பி விட்டனர் நான் பறவை யுருவெடுத்துப்போய் மாதுடன் சேர்ந்திருக்கும் மர்மந் தெரிந்து யாவருமறியாமற் பிறித்துவிடவேண்டுமென்று சூட்சமமாளிகை யமைத்து ஆகாயப்பரணில் வைத்திருந்து தேவரீர்வந்து துயின்ற வுடன் மாளிகையை அந்தரத்தெழுப்பி அநேக தூரம் வட கடலிற் கொண்டுபோய்த் தீவருகுவந்து விழும்படி செய்து சென்றேன் தங்களாற் சிதைவுபட்ட காவல் விஷயத்தை யெப் படி மறைக்கலாம் விசாரணைக்கு வந்தால் நமதுபேரில் சாருமென றஞ்சியிருக்கும்போது இதோவிருக்கும் எங்கள் இளையராஜகுமா ரன் சலவசந்தனுக்கும் இவர் தமையன் செயசித்தனுக்கும் சீகர வல்லியென்னுந் தேன் போன்ற இப்பெண்ணால் விரோதம் ஏற் பட்டிருந்தது ஏனென்றால் இவள் தந்தை வீட்டிலிருக்கும் போதே அவன் இவளை விரும்ப அவனுக்கு இசையாமல் இளை யவனுக்கு மாலை யிட்டனள் இதனால் தம்பி பெண்ணை யெப்படி யாவது தான் கொண்டுபோக வேண்டுமென்று சமையம்பார்த் திருந்தவன் தந்தையிடம் அக்கினிக்காவலான பெண்ணைக் கொண்டு வந்திருப்பது தகாதென்று சொல்லி அவனால் வெறுக் கப்பட்டிருக்குந் தம்பியின் சங்கதியை யென்னிடங்கூறி யிது சம யம் தம்பியின்மேல் குற்றமேற்படுத்திச் சிறையிலடைத்துச் சீகர வல்லியைக் கைவச மாக்கவேண்டுமே யென்றான் நான் நம்மால் நடந்த காரணங்களை மாற்றுவதற்கு இதுதான் தருணமென்று வழிக்காவல் என்னவிதமாகவோ அழிந்துபோனதென்று கூறி யிருவருங்கலந்து சாக்ஷிகளேற்படுத்தி நியாயசபையில் விசா ரணை செயயும்படி செய்ததில் சலவசந்தன் குகைவாசலி லிரு பதுபேரைக் கொல்லப்பார்த்தோம் குறுக்குவாசலி லிருவரை மடிக்கப் பார்த்தோம் கோட்டை வாசற் பூதத்தைக் குறைக்கப் பார்த்தோம் கோட்டையுள் நுழையப்பார்த்தோ மென்பதாகச்சொ ல்லும்படி செய்ததில் அரசன் நாம் கொண்டுவந்த பெண் ணைத் தான் விரும்பியே இவ்வாறு புத்திச் சொன்னது போற் சொன்னனென்று சீறிச்சிறையிலடைக்கும்படி செய்தார் பின்பு தேவரீர் பறவைகள்சூழ இளையவருடன் வந்தீர் நான் உமது

85798

தம்பியை ஆரண்ய வல்லியுடன் சேர்த்து விட்டேன் செயசித்தனுடன் கலந்துபோருக்கு வந்த நான் அவன் மாண்டுபோனதைக் கண்டு மச்சமாகி வாரியில் மறைந்திருந்து வந்தேனென்று ஆதியோடந்தமா யெடுத்துச் சொன்னான் அவன் கூறிவரும் வாக்கியங்களனைத்தையுங் கேட்ட புவன வேந்தன் இவன் செய்கையினாலேயே எல்லாக்காரணங்களும் நடந்திருக்கின்ற தென்று தெரிந்து அமைச்சன் மகனே உன்னால் நாங்கள் பிரிந்தோம் பின்பு சேர்ந்தோம் பெண் பாக்கியங்களடைந்தோம் ஓர் குறைவுமில்லை எல்லாம் உன்னால் ஆயிருக்கிறதென்றான் மாயாசிங்கன் சலவசந்தன் தாள்களிற் பணிந்து செய்தப் பிழைகளைப் பொறுத்தருளவேண்டுமென்றான் அவன் நீயும் உனது தோழனும் எனக்குச் செய்ததீங்கு எங்கும் நிறைந்த பராபரனுக் கேற்காது இப்போது உன்னை மரண தண்டனை செய்யக்கூடிய தன்மை எனக்கிருப்பினும் இந்த மகானுபாவர்கள் உத்தரவை யேந்தும் ஊழியர்களிலொருவனாயிருப்பதால் ஒன்றுஞ் செய்யமுடியாமல் மன்னிக்கலானேன் அவர்கள் தங்களுக்குசெய்ததீங்கையெல்லாம் எண்ணாமல் நல்லவ னென்று கூறியதால் எனக்கும் நல்லவன்றா னென்றனன் சரயையானவள்மந்திரிமகனால்நடந்தசகலகாரியங்களையும் தெரிந்து பூமியில்விழுந்துபுரண்டு அடிஎன்கட்டிமகளே ஆரண்யவல்லிஉனக்குஎன்பேதமைபுத்தியால்நாயகன்கொண்டுவரச்சொல்லியென்குலத்தையெல்லாம்வேரோடொழித்தேன்நீயார்பெற்றமகளோஎன்ன காரணத்தாற்பிறந்தனையோஎச்செயலாற்காடுபுகுந்தனையோ கனற்பொறியையெடுத்துமுந்தானையில்முடிந்துவைத்ததுபோல் காட்டிற்கிடந்தவுன்னைக் கண்டெடுத்துவந்து வைத்திருந்தேன் அவ்வக்கினிநாளடைவிற்பெருகியெரிப்பதுபோல்நீவளர்ந்துசமைந்த பருவம்வந்தவுடன்எல்லாரையுஞ்சங்காரமாக்கிவிட்டனையென் கழுத்துத்தாலிகண்டுஉவந்திருக்கலாமென்றெண்ணினேன்என் கழுத்துத்தாலியில்லாமற்செய்துவிட்டனையேபெற்றபிள்ளைபெற்றபிள்ளைபிறவாபிள்ளை பிறவாபிள்ளை யென்பதைக் காட்டிவிட்டனையே அகண்டமண்டலாதிபதியான கணவன் போயினர் மைந்தர் போயினர் எல்லாம் போய் அனாதையாய்விட்டேனே யென்று உள்ளங்கலங்கி யுயிரற்ற ஓவியம்போல் மயங்கினள் அவள் துயரங்கண்டு சகிக்கமாட்டாமல் கண்ணீர் சொரியக்கமலமுகம்வீங்க ஏங்கி யேங்கிப் பொருமிப் பொருமி ஆரண்யவல்லியும் அழுதாள் புள்ளினங்களு மிரங்கின மகனு மருமகளும் ஓடிவந்து மாதாவைத்தாங்கி யெடுத்து உபசரித்து மயக்கமாற்றி வருந்த வேண்டாம் நீ தங்கையைக் கொண்டுவந்து வளர்த்ததனாற்றீங்கு ஒன்றும் நேர்ந்துவிடவில்லை கொண்டு வராதபெண் கோதுபடாத மணி அரியபிரமாதிகளாலு மணுகமுடியாத அக்கினிக் காவலாகிய அந்த அம்மாளை தந்தைகொண்டு வந்ததினால் சீதையால்

ராவணன்குலந்தீர்ந்தது போற்றீர்ந்துபோனதேயொழியவேறொ ன்றைவிளம்பவேண்டிய தென்னவென்று தேற்றினர் சிறையிலி ருந்த மகனும் செத்துப் போனனென்று போன மருமகளும் வந்து தேற்று மொழிகளைக்கேட்டு அவர் சங்கதிசளையுந் தெரிந்து ஆறுத் துயர் சிறிதாறினள் தரணிகாவலன் சகலரையு நோக்கி எக்காலத்தும் எவ்விடத்தும் தெய்வநீதியரச நீதிகளாகிய நீதிகள் தான் நிலைக்கும் அக்கிரமநிலையாது அக்கிரமத்தாலழிந்து போன உங்கள் முன்னோர் சரித்திரங்களை யறிந்திருப்பீர்கள் ராஜா ராஜ பத்தினியாகிய நீங்களிருவரும் எங்களினப் பெண்ணிரு வரைக் கொண்டு வந்தீர்கள் ஒன்று ஞாயமாகவும் ஒன்று அநீதமா கவும் இருந்தது நீங்கள் விரும்பியபடி நாங்கள் ஞாயமாய்க் கொண்டு வந்தபெண்ணைச் சேர்ந்து உங்கள் நட்பைப் பெற்றிருக்கக் கூடிய வர்களாயிருப்பினும் சம்மதமில்லாப் பெண்சிந்தனையால்மாறியிப் படியாய்விட்டது ஈசன் செயல்போல் முடிந்ததென்றுகூறி சலவ சந்தனை நோக்கி உன்தந்தைமுதலிய சகலருக்குஞ்செய்யுங் கிரியை களைச் செய்து வரக்கடவா யென்று கூறினன் அவன் அப்படியே அரக்கருடன் சென்று செய்து முடித்து வந்து வணங்கினன் அர சர் பெருமான் சரையை நோக்கி அரச பத்தினியே அரண்மனை செல்வாய் நாங்கள் அவ்விடம் வருகிறோ மென்றனன் அவள் அப்படியே அரக்கிகளுடன் சென்றனள் தராதல வேந்தன் சலவ சந்தனை நோக்கி மாதரசியிருக்கு மாளிகை செல்ல வேண்டாமா என்றான் அவன் மாயாசிங்கனிடம் விமானங் கொண்டு வரும்படி சொல்ல அவன் அப்படியே கொண்டுவந்து அரசகுமாரர் முன்னி றுத்தினன் இன்னிசைத்தமிழான் கன்னியைக்காணச் செய்த விமானமாவென்று களிப்புடனெழுந்து தானுந் தம்பியும் படி வழியேறி நடுநாயகத்திலமர்ந்திருந்தனர் ஆரணிய வல்லியுஞ் சீகரவல்லியுமேறி யொருபுறமிருந்தனர் மாயாசிங்கன் செலுத்த விமானம் அந்தரத்திலெழுந்து சென்றது பல்லாயிரமான பறவை சாலங்களெழுந்துநாற்றிசையினும்பரவி அவ்விமானத்தில் அநே கமாயிரவடங்களிட்டனபோலவும்மாயபூபதிஇளையசகோதரர் பழ னிச்சாமிபூபதியைச்சுற்றுஞ் சங்கவர்க்கங்கள் போலவும்நெருங்கி வரத்தேவர்கள் பூமாரிபொழியக்கண்டகண்ட அரக்கர்கள் கரங்கள் கூப்பஅரக்கியர்மேன்மாடங்களில் நின்று பார்க்கஏகாந்த மாளிகை யைநோக்கிவருஞ்சமயம்சுவர்ணப்பிரபை அஞ்சுகனென்னும் கிளி வந்துசெப்பிய நாயகன்வெற்றிப்பிரதாப மென்னும்ஆரமுதைச் செவிவழியருந்திப் பூரிப்படைந்திருந்தவள் பறவைகளின் சிற கோசையைக்கேட்டுஎழுந்துமேன்மாட ஜன்னல்வழி பார்க்கவிமா னத்தில் தம்பியொருபுறமிருக்கவீரகோதண்ட வில்லுடன் விளங் கும் பிராண நாயகனைக்கண்டு பேரானந்தம் பொங்க இவ்வளவு நாள் சென்றதோ ஃன்கணவனைக்காணவென்று ஆனந்தக் கண்

ணீர்பாய அரக்கர் தலைவனிடம் நோன்புபிடித்தேனென்று சொல்லிய சொல் பொய்யேபாயினும் அது மெய்யாகவே யிருந்து ஆருயிர்த்துணையைச் சேர்த்து விட்டதென்று நின்றனள் விமானமானது மேல் மாளிகை வெளியில் வந்திறங்கியது ஆடகக்கழலான் கூடவந்தவர்களுடன் விமானம் விட்டிறங்கி வந்தனன் பரமபதத்திலிருந்து விமானமேல் வந்த பரமபதநாதனைக் கண்டப் பத்தனைப்போற் பரவசமடைந்த பாவையர்க்கரசி ஆவலுடனெதிர்சென்று அண்ணலை வணங்கி நின்றாள். ஜெயவீரன் தீர்க்கமாய் நோக்கிச் சித்தமகிழ்ந்தான். இளையவன் வந்து வணங்க இவர் நமது கொழுந்தனராயிருக்கலாமென்றெண்ணிக் கொண்டாள் ஆரண்யவல்லி போய் வணங்கி யருகில் நிற்க அணங்கரசி யவளை நோக்கி யிவள் யார் நமதினம் போலவும் நம்மைப் போற் சௌந்தரவதியாகவு மிருக்கின்றாள் இவளை எவ்விடத்திற் கண்டு பிடித்தார்களோ வென்று திகைத்து நிற்கும்போது செயப்பிரகாசன் சித்தத்திலினிக்குந்தேனே இவள் என் தம்பிக்கு வாய்த்த செல்வமாகும் வரலாறு பின் சொல்கிறே னென்றான மாயாசிங்கன் வந்து மலரடியில் வீழ்ந்து தாயே சபித்துவிடாதே செய்த பிழையெல்லாம் பொறுத்தருள வேண்டுமென்று தாழ்ந்து நின்றான் வாசிக்குங்குழலாள் இவன் இப்படிசொல்ல வேண்டிய தென்னவென்று யோசிக்குங் காலையில் அண்ணலானவன் பெண்ணே இவன் செய்த உதவிபோல் நமக்கு ஈரேழு பதினான்கு வுலகங்களிலும் யார் செய்வார்களென்று அவனால் நடந்த காரணங்களனைத்துஞ் சொல்லினன் அவ்வசனங்கேட்ட அன்ன நடையாள் அகமகிழ்ந்து அன்பனே நீ முன்பின்னறியாதவனா யிருப்பினும் எங்களை யிணைத்துவைக்கும்பிரமகற்பனையால் வீசப்பட்ட கயிறுபோலாயினை உன்னை நாங்கள்எக்காலமும் நினைக்கக்கூடியவர்களாயிருக்கிறோ மென்றுரைத்துப் பக்கத்தில் நிற்குந் தங்கையைச் செங்கைகளாலணைத்து தங்காய் நாம் பிறந்து ஒரு தேசம் வளர்ந்தது ஒரு தேசமாயிருக்க நினையாமற் கடல் கடந்துவந்து நெடுஞ்சிறை நீக்கி நேயமாய்க் கரம்பற்றும் நாயகருடன் சேர்ந்திருக்கும்படி செய்த தெய்வக்கருணையை எவ்வாறு புகழ்வதென்றாள் சலவசந்தனும் சிகரவல்லியும் வந்து வணங்க மங்கை இவர்கள்யாரென்றாள் மன்னன் அவர்கள் வரலாறுஞ்சொல்ல மகிழ்ந்து தந்தை செல்வமனைத்தையுந் தாங்கி வாழக்கடவையென்று சாற்றினள், செயப்பிரகாசன்வந்தவர்களுடன் அந்தமாளிகைவளங்களை யெலாம் பார்த்துங் காட்டியும் மேன்மாட வெளி வந்தான்வானப்பறவைகளனைத்தும் தேனவிர் குழலாள் திருவழகைக்கண்டு செயவீரனுக்கேற்ற திருமகளிவள் தானென்றுசெப்பி மகிழ்ந்தன. வேந்தர்பெருமான் மேனகை போன்றவளுடன் விமானமேலமர்ந்து மற்றவருஞ் சூழ்ந்திருக்க மாயா சிங்கனை

நோக்கி விமானத்தை நகர்சுற்றி செலுத்துவா யென்றுகூற அவனுமப்படியே செலுத்தப் புரவலன் பூவைக்குப் போர்க்களச் சிறப்பும் பொன்னகர்ச் சிறப்புங் காட்டிக்கொண்டேபோக விமானம் கலகாசூரன் அரண்மனைமுன் வந்திறங்கியது தயாளகுணத்தான் சகலருடன் விமானம் விட்டிறங்கிப் பறவைசாலங்கள் பந்தவிட மண்டபம் வந்து மாதரசியுடன் மணியாசனத்தில் வீற்றிருந்தான். மற்றவரும் ஆங்காங்கிருந்தனர். சலவசந்தன் அட்டமங்கலப் பொருள்கள் அநேகரேந்திவரவந்து அரசனடிக்கமலங்களில் வைத்து வணங்கினன். இப்பூமானுக்கேற்கு மிப்பொன்னரசு நம்புன்மையான குலத்துக் கேற்குமாவென்று வந்தவர் பேசிக் கொண்டனர். சரையை அகண்ட மண்டலாதிபதி கண்டெடுத்து வந்த கானகவல்லியை என் கண்கள்போற் பாவித்து கருத்தெல்லாம் அவளிடம்வைத்து வளர்த்து வந்தேன். காகக் கூட்டில் வளர்த்த குயில் இனங்கண்டு கலப்பதுபோல் இக்குயிலும் இனத்தே கலந்துகொண்டது நீசர் வீட்டில் வளர்த்தபெண்ணென்று நீக்கிவிடாதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறே னென்றாள். நிருபர்கோன் அரிலோக கர்த்தன்றேவி எங்கள் ஆரண்ய வல்லி உங்கள் மகளாயிருப்பதால் நீ தாயைப்போன்ற மாமி சலவசந்தன் மைத்துனன் சீகரவல்லி தங்கை உங்கள் குலத்தை வித்தியாசமாயெண்ண இனியேற்குமா இல்லைஒப்புக்கொண்டோமென்றனன் கடோதரன் சலதத்தனுகியஇருவரும்வந்துவணங்கஅன்காவாகிய ஆனையுராஞ்சிப்பக்ஷிஅவர்கள்சங்கதியையெடுத்துச்சொல்லஅப்படியாவென்றுசலவசந்தனுக்குமகுடஞ்சூட்டிச் சகலரையும் அவன் சொற்படி கேட்டு நடக்கும்படியாகவும் மாயாசிங்கனையும் மந்திரியாகவுஞ்செய்துஓர்பெரிய மாளிகையிற் பின்னவனுடனும் பெண்களுக்கரசிகளுடனுஞ் சென்றிருக்க சலவசந்தன் அவர்களுக்குத் திவ்யபக்ஷணங்களால் விருந்துசெய்து பறவை சாலங்களெல்லாம் பக்ஷிக்கத்தக்க பழவர்க்கங்கள் மச்சவர்க்கங்கள் மாம்சவர்க்கங்கள் கொடுத்து உபசரித்தான். ராசகுமாரன் பத்துநாள் வரையிருந்து அவர்களிடம் விடைபெற்றுச் செம்பதிமேல் தானுஞ் சுவர்ணப் பிரபையும் சம்பதிமேல் தம்பியும் ஆரணியவல்லியும் அமர்ந்திருந்து பறவைகளுடன் தீவுகடந்து வரும்போது சுவர்ணப்பிரபை தோழியர் சிறைமீட்க வேண்டாமாவென்றுகூற மன்னன் மகன் அத்தீவு செல்வீர்களென்று பறவையரசரிடம் பகர அப்படியேசென்று பார்க்கும்போது மாளிகை மட்டுமிருக்க மாதர்களில்லை வல்லவன் அவர்களிங்கில்லாமற் போகவேண்டியதென்ன காரணமென்ன வென்று யோசிக்கத் தம்பியானவன் ராச்சத சம்பந்த முடையவர்களா யிருப்பதால் தப்பிவிட்டதாய்த் தெரிகிறது பின்புதான் கவனிக்க வேண்டுமென்முன். தலைவன் சரியென்று சமுத்திரங்கள்தாண்டிமதுகற்ப

காடவி வனத்தில் வந்திறங்கினன், ஓர் விருக்ஷத்தடியிற் கன்னியருடன் கனிவர்க்கமருந்தித் தம்பியுந் தானுமிருக்கச் சகலபறவையினங்களுமெங்களிருப்பிடஞ்செல்லவிடைதந்தருளவேண்டுமென்றன வேந்தர்பெருமான் விருப்பமாய் நோக்கி யுங்களால் மாதர்களைப்பெற்றுக்கொண்டோம் கழுகரசரால் எங்கள் சுயதேசம்போகிறோம். நீங்களிருப்பிடஞ்சென்று பேடைகுஞ்சுகளுடன் பெருகி வாழ்ந்திருக்கக்கடவீர்களென்று பேசி விடைகொடுத்தான். அவைகள் அரசர்களையும், அரசிகளையும் வணங்கி வாழ்த்தி அந்தரத்தெழுந்து தங்கள் தங்களிருப்பிடஞ்சென்று சுகமே வாழ்ந்தன. மன்னன் மைந்தர் கன்னியருடன் பத்துநாளிருந்து போகும்படி கழுகரசர் சொல்லியபடி அங்கிருந்தனர்,

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஆறாம் அத்தியாயம்.

ராஜகுமாரர்களும் ராஜகுமாரத்திகளும் கழுகரசராலுபசரிக்கப்பட்டு இரண்டுநாளிருக்க மூன்றாவதுநாளில் மதிப்பிரகாசனுக்குமதிமயக்கமுண்டாகி தமையன் பேசும் வார்த்தைகளையும், மனைவிபேசும் வசனங்களையும் கவனியாமற் பதில் வார்த்தைகள் சொல்லாமல் உணர்வற்றுப் பிரமையடைந்தான். தம்பியினிலையைக்கண்ட தரணி காவலன்சஞ்சலத்துக்குள்ளாகி யிப்படிவரக்காரணமென்னவென்றுதளர்ந்தான். ஆரணியவல்லியும் நமதருமை நாயகனுக் கிப்படிவந்ததே யாரிட்டசாபமோ வென்றேங்கினாள். சுவர்ணப்பிரபையும் நாம் பட்டனுபவித்த துன்பங்கள்போதாதா நமது கொழுந்தனுக்கு இப்படி வந்ததே யென்று வருந்தினாள். கழுகரசருங் கவலையானார்கள் இவர்களிப்படியிருக்க அவ்வழி கங்காஸ்நானஞ் செய்யும்படி வந்த சில தபோதனர்கள் அங்குவந்தனர். அவர்களைக் கண்ட மன்னவனெழுந்து வணங்கிச் சுவாமிகளே! என்றம்பிக்கு இப்படி வரவேண்டியகாரண மென்னவென்றான். மகான்கள் ராசகுமாரகா! இவன் மந்திரஜெபஅனுஷ்டானத்திலிருப்பவரை வெட்டியிருப்பான் அதனாலிப்பிரமையேற்பட்டிருக்கின்றதென்றனர். மன்னவனுஞ்சரி மந்திரஜெபத்திலிருந்து யாகஞ்செய்த கலகாசூரனை மந்திர ஜெபத்தை நிறுத்தும்படி வேறு முகாந்தரத்தாற் செய்யாமல் வெட்டிவிட்டானல்லவா? அவன் பாவியாயிருந்தாலும் இவன்செய்தது

தெய்வநீதிக் கேற்காததாலிப்படி வந்ததென்றெண்ணி சுவாமிகளே! இது நீங்குவதற்கு யாதுசெய்யவேண்டு மென்றான். இருடிகள் ஒரு வருஷம் கங்காஸ்னானஞ் செய்துவந்தால் நீங்குமென்றுரைத்துப் போயினர் காவலன் கங்கையை அடுத்த அவ்விடத்திற் கழுகாச ருதவியால் இரண்டு பன்னகசாலை யுண்டுசெய்து ஒன்றில் தானும் தன்பத்தினியுமிருந்து ஒன்றில் தம்பியுந் தம்பிபத்தினியுமிருக்கச் செய்து தினந்தினம் தம்பியையழைத்துப்போய்க் கங்காதீர்த்தமா டித் தெரிவையிருவருடன் கழுகாசர் காவல்செய்ய வருடகாலங் கடத்தி வருகிறநாளில் வருங்கதைகளைச் சொல்லுகிறேன். அக் கங்கையைச் சேர்ந்த ஓர் நாட்டில் வாரங்கபுரிப்பட்டணமென்றொரு பட்டணமுண்டு. அதில் போரங்கனென்னு மரசன் கோரங்கனெ ன்னு மந்திரியுடன் அரசாண்டுகொண்டிருந்தான். ஒருநாள் வேட்டையாடும்படி மந்திரி பிரதானி சேனைகளுடன் புறப் பட்டு வனங்களிற்சென்று வேட்டையாடி விடாய்ப்பட்டுக் கங்கா நதி வந்து தீர்த்தமருந்தித் தழைத்த மரமொன்றில் இளைப்பாறி யிருக்கும்போது புதிதாய்த் தோன்றும் பன்னகசாலையைக் கண்ட போரங்கன் கோரங்கனை நோக்கி இதிலிருக்கும் இருடிகள் யாவர் போயறிந்து வருவாயென்றான். அவன் அப்படியே சென்று ராஜ குமாரர்களையும் ராஜகுமாரத்திகளையுங்கண்டனன். செயப்பிரகாசன் அவனைப் பார்த்து நீயார் இங்கு வரவேண்டியதென்னவென்றான். கோரங்கன் நான் போரங்கராஜனுடைய மந்திரி வேட்டைக்குவந்து அச்சோலையிலிருந்து உங்களை விசாரித்துவரச் சொன்னார் வந்தே னென்றான். ராஜகுமாரன் நாங்களிருப்பது தென்றேசம் மாதர்க ளுடன் தீர்த்தயாத்திரையாய் வந்து தம்பி பிரமை நீங்குவதற்காக இவ்விடமிருக்கின்றோ மென்றனன். மந்திரி மங்கையழகையும் மற் றவரியல்பையுந் தெரிந்து விடைபெற்றுத் தனதரசனைச் சார்ந்து வணங்கினன். போரங்கன் போய் வந்ததென்ன அங்கிருபபோர் யாரென்றனன் கோரங்கன் கூறுவதாவது அகண்டமண்டலாதி பதியே நான் அங்குசென்று விசாரிக்க தென்னாட்டிலுள்ளவர்களாம் தீர்த்தயாத்திரை வந்தவர்களாம் இளையவனுக்குப் பிரமைதோன்றி விட்டதாம். அது தீருவதற்காக இருக்கிறார்களாம் இப்படி விசா ரித்துக்கொண்டிருக்கும்போது பன்னகசாலைக்குள்ளிருந்து மின்னற் சோதி தோன்றியது இது என்னவென்றுபார்க்சப் பெண்ணுகவே விளங்கியது. பதாதிகேசம்வரை பார்த்தவனுயிருந்தபோதிலும் எதனைச் சொல்லத்தான் திறமையுடையவனுயிருக்கிறேன், படைத்த பிரமன் வல்லமைதோன்ற பார்த்த முனிவர்கள் தவங்களழியப் பாரில் வந்தவள் பாரமுடிமன்னவர் மாளிகையிலிராமல் யாத்திரை வாசியுடன் வந்ததற்காக ஆத்திரப்படுகிறேன். அம்மணிப்பாவை மணிவாய்திறந்து உடையவனிடஞ் சில வசனங்கள் செப்பியது அவ் வமுதவெள்ளம் என் செவியாகிய கால்களின் வழியாய் உள்ளமலர்ப்

பொய்கையிற் பாய்ந்து நிரம்பி இன்னுங்குறையாதபடியேயிருக்கிறது இதுவரை இரு தேவியர்க்குடைய தேவர்களாயிருந்த முத்தொழிற் குடைய தேவர்கள்இப்பெண்ணமிர்தைக் காண்பாராயின் மூத்தேவிய ருடையவராகவே முயற்சிப்பார்களென் றெண்ணுகிறேன், இது ஒருசமயம் வானகமாதர் வர்க்கமாயிருந்து பறந்துபோய்விட் டதோ இருக்கிறதோ தெரியாது அவளுக்குரியவன் நாடு களிலிருந்தால் வல்லவர் கவர்ந்துகொள்வாரென்று இப்படி யான காடுகளில் வந்திருப்பதாய்த்தெரிகிறது. இளையவனுக்கு வந்த மயக்கமும் இப்பெண்ணெண்ணத்தினால் வந்திருக்கலா மென்றெண்ணுகிறேன். இதுதான் நான் போய் கண்டுவந்தஅதிசய மென்றான். கோரங்கன் கூறிவந்த வார்த்தையைக்கேட்ட போரங்க னுள்ளம் பம்பரம்போற் சுழன்றது. மாரன்கணைகள் பாய்ந்தன. மதிமருண்டது. மந்திரி நீ சொல்லிய சொர்ணப்பதுமையை நான் ஒருதரங் கண்டாலும்போதும் காமக்கலியெலாம் விலகும். இப் போதே காணுவோம புறப்படுவாயென்றனன். மந்திரி மகாராஜனே பொறுக்கக்கடவீர். ஆத்திரப்படாதீர் அவளுக்குரியவன் ஆயுதந் தரித்த வீரன்போற் காணப்படுகிறான் பகலிற்சென்று கலவரஞ்செய் யக்கூடாது இரவானவுடன் சென்று எப்பக்கமுஞ் சேனைகளை நிறு த்திப் போர்விளைத்தாவது தந்திரத்தினாலாவது கொண்டுபோகலா மென்றனன். போரங்கன் சரியெனச் சம்மதித்துச் சோதிச்சூரியன் கடலில் வீழ்ந்து தொலையமாட்டானோவென்று பார்த்தவண்ணமா யிருக்க இரவியங்கடவுள் இவனிப்படியெண்ண நாமேனிருக்கிறோ மென்று போய் மறைந்ததுபோல் மறைந்தான். இரவி மறைந்து சற்றிருளானசமையம் அரசனும் மந்திரியும் படைகளை அரவமில்லா மல் நடத்திப்போகும்போது போரங்கன் மந்திரி நம்படைகளைப் பக்கங்களில் நிறுத்திவைத்துவிட்டு நாமிருவருஞ் செல்வோம் நித் திரையாயிருந்தால் மாதை மெதுவாய்த்தூக்கி யிரதத்தில் வைத்து வந்துவிடுவோம் விழிப்பாயிருந்தால் ஆடவனுடன் நீ போர்கொடு நான்பெண்ணைப்பலாத்காரமாய்த் தூக்கிவேறுபடுத்திவிடுகிறேன் பின் பிருவரும் போராடி யவனைச்செயித்து பெண்ணுடன் ஊர்போய்ச் சேருவோமென்றனன். மந்திரி மகாராஜாசித்தப்படியே யென்று செல் லுங்காலையில் ராஜகுமாரர்கள் பன்னகசாலை யிருபக்கங்களிலுள்ள இரு விருக்ஷங்களிலிருந்து சாமத்துக்கொன்றாய் பெரிய பிராட்டி யுடன் துயிலும் பெரிய பெருமாளைச் சுற்றி வட்டமிட்டுவருங் கருட தேவனைப்போல் வட்டமிட்டுக் காத்து வருங் கழுகரசர் வரும்படை களைக்கண்டு சரேலென்று பாய்ந்து அரசன் மந்திரி மார்புகளில் மூக் காற் கொத்திக்குடைந்து ரெக்கைகளாற் புடைத்தன. அவர்கள் அஞ்சி நடுங்கி ஆயுதங்களையெல்லாங் கைநழுவவிட்டு இதென்ன அந்த :விடிபோலிருக்கிறதே சென்றால் ஆயுசைக் கண்டுகொள்ள மாட்டோமென்று படைகளையெல்லாந் திரும்பும்படிச்செய்து அங்

கிழுக்கும்பாவையாசையைப் பறவை யடிமடக்கிவிட்டதனுற் பட்டணமே வந்து சேர்ந்தான்.

வெய்யோனுதயத்தில் வீரக்கழலணிந்ததாளான்ஆரமுலேமங்கையுடனெழுந்து வீற்றிருந்த சமடம் பறவை யரசர் இரவில்வந்த வஞ்சகவேந்தனைச் செஞ்சிறையாற் புடைத்துத் திருப்பிவிட்டசெய்தியைச் செப்பினர். சிரியோன் சிற்றங்கிளர பெண்ணை நேற்றுவந்து போன மந்திரி சின்னமுகைக் கண்டு சொல்லியபடியால் அந்த நிட்டூரன் இரவு மோசமாய்க் கொண்டுபோகவந்ததாய்த் தெரிகிறது. நீங்களிவ்விடமிருப்பீர்களே யானுல் நான் செம்பதிசகிதஞ் சென்று அவன் சேனைகளையுஞ் சிதைத்து அவனையும் வதைத்துவருகிறேனென்றுன். பூவையர்க்கரசி போர்ச்சிங்கமே உலகெலாமடக்கியாண்ட வொருவனுக்கமையாப் பொருள் அற்றனுகிய இவனுக்கமையுமா பறவையடியாற் பாதிராத்திரியிற் பயந்தோடிப்போன பேடியுடன்போராடச்செல்வது ஆடவர் திலகமாகிய தங்களுக்கழகாவென்றனள். பறவைவேந்தரும் கொல்வதானுற் கொன்றிருப்போம் ஓரறையாற் றிரும்பியபடியால் விட்டுவிட்டோம். இச்செய்தியை அந்நேரஞ் சொல்கிறதாயிருந்தால் தங்களுக்கு நித்திரைபங்கம்வருமேயென்று சொல்லாதிருந்துவிட்டோமென்று சொல்லின. ஏந்தல் எடுத்த கோபத்தை மாற்றி யினியமொழி பேசியிருந்தான்.

போரங்கன் தன்னகர்சென்று மந்திரிசொல்லிய மங்கைமேல் வைத்த காதல்மாருமல் மென்மேல் வளர மந்திரியைப்போல் நாமும் போய் கன்னியமிர்தத்தைக் கண்குளிரக்கண்டு வராமற்போனேமே யென்று கவலைபெருகச் சபாமண்டபம் புகுந்து மந்திரியை நோக்கி வனத்திலுள்ள மாதரசியைக் கொண்டுவரவேண்டும். நமது நால்வகைச் சேனை படைத்தலைவர்யாவரையும் பிரயாணப்படுத்தென்றுன் கோரங்கன் அவனைக்காத்திருக்கும்காட்டுப்பறவையே இப்படிவாட்டுமெனில் வில்லேந்திய வீரன் வெளிப்பட்டால் நாம் என்னபாடுபடுவோம். நம் படைபலம் அவனிடம் செல்லாது அவனிடம் உறவு பாவனையாயிருந்து பெண்ணைக்கொண்டு வரலாமே யொழிய வேறு வீரத்தாற் கொண்டுவரமுடியாதென்றுன் போரங்கன் புனிதநதிக் கரையிலுள்ள பூவையைக் கொண்டுவருபவர்களுக்கு பதினறுகிராமம், பதினறுலட்சம்பொன் கொடுக்கிறதென்று பறையறையச் செய்வாயென்று பகர்ந்தான். கோரங்கமந்திரி வள்ளுவனை வரவழைத்து மன்னன் சொன்னபடி டறையறைவாயென்றுன். அவன் வாரங்கபுரி பட்டண வீதியெலாம் அறைந்துவர அந்நகரார் அரசனுற்கொண்டு வரமுடியாத பெண்ணை நம்மாற் கொண்டுவரமுடியுமா வென்று பேசியிருந்துவிட்டனர். அவ்வூரில் வசித்துவரப்பட்ட இணைவசி என்னும் ஓர் பிராமணப்பெண் சிறுவயதாயிருக்கும்போதே மணமுடித்த

நாயகன் தேசயாத்திரை சென்று தாய்தந்தையர் காலமுங்கடந்து தனியே அன்னவஸ்திரத்துக் கவலைப்பட்டிருந்தவள் பறையோசையைக்கேட்டு பலவாறு யோசித்து அரசன் கோரிய பெண்ணைக் கொண்டுவந்து சேர்த்தால் செல்வங்கிடைக்கும். செல்வ வன்மையினல் தேசாந்திரஞ் சென்ற கணவனைக்கொண்டுவரும் படிச் செய்து க்ஷேமமாய் வாழலாமென்று தீர்க்கமாயெண்ணி ராஜசமுகம் வந்து மன்னவனைக்கண்டு கன்னியைக்கொண்டுவருகிறேனென்று தரும் பொருள்களுடன் விடைபெற்றுபோய் வந்தவரிடம் புலன்விசாரித்துக்கொண்டு வாரங்கபுரிப் பட்டணத்தைக் கடந்து வனம் வனந்தரங்கள் நீங்கிச் செல்லும் போது ஓர் முனிவராச்சிரமமிருக்கக்கண்டு அதனிற் சென்று ரிஷியையும் ரிஷிபத்தினியையும் வணங்கினள் அவர்களிவளை நோக்கி அணங்கே ஆரணியத்தில் தனியே வரவேண்டிய தென்ன வென்றனர் பார்ப்பினி என்னைச் சிறுவயதில் விவாகஞ்செய்த கணவர் தேசாந்தரம் போனவர் வருஷம் பதினைந்தாகியும் வரவில்லை. தங்களைப்போன்ற மகான்கள் சேவையிலிருந்தாலும் இருப்பாரென்று தேடிவந்தேனென்றுள் பராங்குமுனிவரும், சுராங்கியாகிய அவர் தேவியும் பார்ப்பினியைப் பக்ஷமாய்ப் பார்த்து உன் நாயகனை இவடம் வருகிற ரிஷிகளிடம் விசாரிக்கிறோம் சிலநாளிருப்பாயென்று செப்பினர் அவளும் அக்கருத்துக் கிசைந்தவள் போல் சுராங்கியின் தோழியாயிருந்து வந்தாள் ஒருநாள் ரிஷிபத்தினியுடன் இப்பிராமணப் பெண் நீராடும்படிபொய்கைசென்றுபார்க்க பொய்கைக்கரை யெப்பக்கமும்மனிதவுருவமான கற்சிலைகளே நிற்கக்கண்டாள் பார்ப்பனமாது பத்தினியைப் பணிந்து அம்மாஇப்பொய்கைப்பாங்கெலாம்ஆடவருபமானகற்சிலைகளமைந்திருக்க வேண்டிய தென்னகாரண மென்று விளம்ப சுராங்கி மனிதர்கள் தான் சாபகாரணத்தாலிப்படி யாயின ரென்றுள் அந்தணர் மாது அது விபரஞ் சொல்லவேண்டு மென்று கேட்க அவள் சொல்லலானுள் கேளாய் பார்ப்பனப்பெண்ணே சில நாளைக்கு முன் நானும் எங்கள்தெரிசனம் நாடிவந்திருந்த ஓர் ராசகுலப்பெண்ணும் இப்பொய்கையில்நீராடிக்கொண்டிருந்தோம்எதிர்கரையில்சிலர் கூட்டங்கூட்டமாய்க்கூடியழுது பிரலாபித்துக் கொண்டிருந்தனர் அது கண்ட நான் அவளை நிறுத்தித் தனியே சென்று சங்கதி விசாரிக்கக் கூட்டத்திலுள்ள வொருவன் சொல்லியதாவது எங்கள் ராஜகுமாரன் வேட்டையாட வந்தவர் விடாய்ப்பட்டுத் தண்ணீருந்த இப்பொய்கை யருகிற் குதிரையை விட்டிறங்கிவரும்போது பாய்பு தீண்டி விஷந்தலைக்கேறி அவஸ்தைப்படுகிறார். ஜனங்களழுது கொண்டிருக்கின்றன ரென்றான் நான் அவனருகிற் சென்று மந்திரவல்லமையால் விஷத்தை மாற்றினேன் அவனெழுந்து வருந்திக்களையாறிச் சற்றே யுலவி நீராடிக்கரையினிற்கும் ராசகுமாரத்தியைக்கண்டு காதல் கொண்டு என்னிடம் வந்து அம்மணி தலைக்கே

றியநாகவிஷமாற்றினுய்இப்பெண்மணியைக் கண்டவுடன் அதுபோலேறும்மோகவிடமாற்றும்படி செய்வாயென்றுன். கூடவந்தவர்களும் அப்படியேசொன்னுர்கள் அவன்சொல்லால் எங்களிருவரையும்வளையவும் ஆரம்பித்தனர். உடனே நான் சினந்து வந்தவர்கள் யாவருங் கற்சிலைகளாகப்போகக்கடவதென்று சபித்தேன். வந்தவர்கள் எந்த எந்த விடங்களில் நின்றனரோ அந்த அந்த இடங்களிற் கற்சிலைகளாய்விட்டனர். நாள் செல்லச் செல்லக் கற்களும் அதிகப்பட்டு வருகின்றன வென்று சொன்னுள். பார்ப்பனப்பெண் அவ்விர்த்தாந்தங்களைத் தெரிந்து பிரிவாய்ப்பேசி பன்னகசாலை வந்து மறுநாள் எனது நாயகனை யின்னும் பலவிடங்களிலும் பார்த்து வருகிறேனென்று அவர்கள் விடைபெற்று விசாரித்தபடி வழிநடந்து கங்கைக் கரையருகிலுள்ள பன்னகசாலையைக்கண்டு வாட்டமுடையவள் போல் அங்கு சென்றுள் வந்தவளைக் கண்ட மன்னவன் நீ யார் எவ்விடமிருந்து வருகிருயென்றுன் அவள் நானிருப்பது வைதிகபுரம் அறியாப்பிராயத்தில் மணஞ்செய்த நாயகர் தேசாந்தரம் போனவர் வரவில்லை. வருவார் வருவாரென்று வழிபார்த்திருந்து அன்னவஸ்திரத்துக்குக் கஷ்டப்பட்டு சகிக்கமுடியாமல் புருஷனில்லாப் பிழைப்பு ஒரு பிழைப்பாவென்று வீட்டை வெறுத்து பலவிடந் திரிந்து கங்காயாத்திரைவாசிகளுடன் கலந்து திரிந்தாலுந் திரிவாரென்று இவ்விடம்வந்தேனென்றுள் பஞ்சவர்மராஜன் வஞ்சகிவார்த்தையை வஞ்சகமென்றெண்ணுமல் அஞ்சவேண்டாம் உன் நாயகன் யாத்திரைவாசிகளுடன்சேர்ந்துஇவ்விடம்வந்தாலும்வருவார் கண்டுகொள்ளலாம்இல்லையெனில் நாங்களிருக்குநாளிருந்துசெல்லும்போது பலவிடங்களில்விசாரித்து தெரிந்தால் சேர்த்துவைக்கிறுேமென்றனன் பார்ப்பினிஉங்கள்சகாயத்தால் எப்படியாவதுநன்மைகிடைக்குமென்றனள். மாதர்களிருவரும் நமக்கோர் பெண்துணை கிடைத்தது நலந்தானென்று ஆதரவாயழைத்துப் பேசுவதைப் பேசியிருந்தனர். அவர்கள் வரலாறனைத்துந் தெரிந்துகொண்ட அந்தணர்மாது தாய்போலவும், ஊழியக்காரிபோலவும் பக்ஷமாகச் சொல்லிய பணிகளைச் செய்தும் தன்னை நம்பும்படியாகவே செய்துகொண்டாள் இப்படிச் சில நாளிருந்து ஒருநாள் இணைவசி மன்னர்பெருமானை நோக்கி அண்ணலே உமது தம்பி பிரமை நீங்கவேண்டுமானுல் இவ்வனத்துக்கடுத்த வனத்தில் பராங்கமுனிவரென்னும் ஓர் மகாரிஷியிருக்கிறுர் அவர் ஒருசமயம் கண்களைவிழித்துச் சீஷர்முதல்யாருடனும் பேசிக்கொண்டிருப்பார் ஒருசமயம் கண்களைமூடி மௌனமாயிருப்பார் அச்சமயம் அவரிடம் பேசமுடியாது இப்படியிருப்பதால்தான் போய்ச் சமயம்பார்த்துத் தம்பியைக் கொண்டுபோய்ப் பிரமையை மாற்றிவிடலாமென்றனள் பிராமணப்பெண் கூறிவரும் வாக்கியங்களைக் கேட்டபெருமான் பிரமை மாற்றுவதற்கு ஈதோர் வழிதானென்று இசைந்து ஆத்திரமுடையவனுதலால் அன்னநடைமாதரை

நோக்கி யின்னவள்பின் சென்று முனிவர்பெருமான் சமயம்பார்த்து அனுமதியுங்கேட்டுவருகிறேன். நீவிரிருவருங்கழுகரசருந் தம்பியைப்பார்த்துக் காத்துக்கொண்டிருங்களென்றெழுந்தான் பங்கையர்களும் சங்கடம் எப்போது தீருமென்கிற எண்ணமுடையவர்களாயிருப்பதால் சென்றுவருவீரென்றனர். கழுகுவேந்தரும் காத்திருக்கிருேமென்றனர். அரசன் திருமகன் ஆயுதமனைத்தையுந் தாங்கி அழகிய வீரக்கழல் சப்திக்க அந்தணர்மாது பின்னடந்தான் அவள் பலவார்த்தைகள் பேசிக்கொண்டே நடந்து பலவனங் கடந்து ரிஷிபத்தினி நீராடும் பொய்கையருகே கூட்டிவந்தாள் செயப்பிரகாசன் அங்குள்ளகல்லுருவங்களைக்கண்டு அம்மணி! ஈதென்ன மனிதரூபமானகற்சிலைகளாய்நிற்கின்றனவேஎன்றுன். அவள்எனக்குத்தெரியவராது மகாரிஷியிடங்கேட்டால்விளங்குமென்றனள். மன்னவனும்அப்படியேதெரிந்துக்கொள்வோமென்று மதித்து பிரமலப்யாற் பேதத்தையுணராமல் பொய்கைத்துறை யருகுசென்றுன். சுராங்கிசாபத்தொடர்பால் உடனே ராஜகுமாரன் கல்லுருவமாயினன் காளியாலயத்தில் வருணசாபத்திலானதுபோல் ராஜகுமாரனுடைய பொற்சிலையும், பொற்கணையும், பொற்கவசமும், பொற்பணியும், கற்சிலையும், கற்கணையும், கற்கவசமும், கற்பணியுமாய்விட்டன. அரசன் திருமகனடைந்த கல்லுருவைக்கண்டு அங்குள்ள சகலஜீவராசிகளும் வருந்தின வஞ்சகத்தி நாம் எண்ணிவந்ததில் ஒன்று கைகூடிவிட்டது. ஒன்றுங் கைகூடுமென்பதற்குச் சந்தேகமில்லையென்று ஊக்கமுடையவளாய் அன்று தங்கி மறுநாள் பன்னகசாலைவந்தாள்.

சுவர்ணப்பிரபைபார்ப்பனமாதுடன் சென்றவர் சூர்யனஸ்தமித்தும்வராததைக்கண்டு தங்கையைநோக்கி தங்காய்புவனசக்ரவர்த்தி போனவர் வரவில்லையே என்னதன்மையோ வென்றனள். ஆரண்யவல்லி அக்காள் அவர் அந்த மகாரிஷியாச்சிரமத்திலேயே பேசிக்காலங்கடத்தியிருப்பார் காலையிற் கண்டுகொள்ளலாமென்று தேற்றத் தெளிந்திருந்து மறுநாள் காலையெழுந்து வழிமேல்விழிவைத்து பார்த்திருந்தவள் வரும் பார்ப்பினியைக் கண்டு மறையவர்குலமாதே? உன் பிறகே வந்த மணவாளரெங்கேயென்றுள் அம்மோசக்காரி அம்மா! உன் நாயகர் பராங்கமுனிவராச்சிரமத்திலிருக்கிருர் முனிவர் மௌனயோகத்திலிருப்பதால் சமயம்பார்த்துப் பேசலாமென்று காத்திருக்கிருர். முனிபத்தினி உங்கள் வரலாறுகளைக் கேள்விப்பட்டு உன்னைப்பார்க்க விருப்பங்கொண்டாள். ராஜகுமாரர் தம்பியையுந் தம்பி மனைவியையுங் கழுகரசர் காத்திருக்கும்படிச் சொல்லி, உன்னை யழைத்துவரச் சொன்னாரென்றுள். மங்கையர்க்கரசி மணவாளன் திருமுகத்தைச் சற்றுநோக்கிற் காணலாமென்கிற அவாவினுலெழுந்து தங்கையை நோக்கி உனது நாயகனைப் பார்த்துக்கொண்டிருப்பாயானல் நான் தலைவரிடம்போய் முனிவர் சம

யக்கெரிந்து உங்களிருவரையும் அழைத்துக்கொண்டுபோகிறோ மென்றனள். ஆரணியவல்லி கண்ணீர்சொரிந்து என்னையும் என்னுடைய நாயகனையும் காட்டில்விட்டுப்போகிறீர்களே சுயகுணமில்லாத நாயகனைவைத்து நான் எப்படி காப்பாற்றுவேன். இவள் பிறகே நேற்று உன்புருஷன் போனதும் இன்று நீ போகிறதும் எனக்குச் சம்மதமாய்த் தெரியவில்லையே யென்றாள். இணைவசி என்னடியம்மா இப்படிச் சொல்லுகிறாய் இவள் யாரிடத்திற்போகிறாள் புருஷனிடத்திற்குப்போவது யோசனையென்னவென்றாள். சுவர்ணப்பிரபை இன்னும் சிறைவாசமிருக்கும்படியான ஊழொன்றிருப்பதால் பார்ப்பினி பேசும் பசப்புவார்த்தைக்கிணங்கி தங்காய் சஞ்சலப்படவேண்டாம் கழுகாசர் காத்துக்கொள்வார்கள் நான்போய் நாயகனைக்கண்டு நாயகனும் நானும் வந்து உங்களை யழைத்துப் போகிறோமென்று கழுகாசரிடமுஞ் சொல்லி பிராமணத்தி பின்னடந்தாள் இணைவசி இம்மாதேவி பூதலமன்னன் வீடுபுகச் சீதேவி நமது வீடுபுகச் சேமமாய் வாழலாமென்கிற சிந்தையுடையவளாய் வேறுவழி நடந்து அவள் மனம் வேறுபடாதபடி அவர்கள் சரித்திரங்களைச்சொல்லச் சொல்லி வெகுவாய்ப் புகழ்ந்து நடக்குங்காலையில் சுவர்ணப்பிரபையின் சுயசோதியழகைக் கண்டு மானினங்கள் மருண்டுபார்க்க மயில்கள் சாயலைவிரும்பிவர அன்னங்கள் நடையழகைக் கண்டு படிக்கும்படிவர, நன்மொழிச்சுவையை விரும்பி நாகணவாய்ப்பக்ஷியும், கிள்ளையுமிருபக்கங்களில் நெருங்க ஆபரணச் சோதிகளால் பாட்டையருகிலுள்ள விருக்ஷங்களின் பச்சிலைகள் பொன்னிலைகளாய்த்தெரிய வெயில் வெம்மையால் மேனிவியர்க்க நடந்து மாலையாகப்போகுஞ் சமயம் ஓர் சோலையிற்றங்கி பார்ப்பினியைநோக்கி என்னுயகனிருப்பிடமெதுவென்றாள். அவள் அம்மா! உன் பழையநாயகனிருப்பிடத்தை என் கேட்கிறாய் புதிதாய் வரப்பட்டவனை எல்லாவரிசையுந் தரப்பட்டவனைச் சற்றுநேரத்திற் காண்பாயென்றாள். அவள் கூறிய வார்த்தை ஆலகாலவிஷம்போற் செவியினுழைந்து உள்ளத்தை வாட்டியபடியால் சற்றுநேரம் சித்திரம்போல் நின்று பஞ்சமாபாதகத்தி நாயகனிடங்கொண்டுபோகாமல் வேறிடங்கொண்டுவந்துவிட்டாள் வேட்டைக்கு வந்தவனே இவளை விட்டழைத்ததாய்த் தெரிகிறது பாகிரதிக்கரையிலுள்ள நாம் இவளைச் சேர்த்ததும் பின்னே சென்றதும் பழவினையேயாகும் வருகிறவன்வந்தால் நாம் சொல்கிறதைச் சொல்லிக் கற்பைக் காப்பாற்றுவோம். உடையவர்வந்து மிட்கிறகாலம் மீட்பாரென்று மனதைத்திடப்படுத்திக்கொண்டு அவளை நோக்கி உன் மனம்போல் நடந்துகொள்ளுகிறேனென்றாள் இணைவசி யவ்விடத்திலுள்ளவர்களிடம் பிராமணத்தி பெண்கொண்டுவந்திருக்கிறாளென்றரசனிடஞ் சொல்லுங்கள் வெகுமானங்கிடைக்குமென்றாள். அவர்களப்படியே போய் அரசனை வணங்கி இணைவசி

யவ்விடத்துள்ளவர்களிடம் பிராமணத்தி பெண்கொண்டு வந்திருக்கிருளென் றரசனிடஞ் சொல்லுங்கள் வெகுமானங் கிடைக்குமென்ருள். அவர்களப்படியேபோய் அரசனை வணங்கி இணைவசி இந்திரலோகப் பெண்ணைக்கொண்டு வந்திருக்கிரு னென்றனர். போரங்கன் புளகாங்க முடையவனாய் வந்து சொன்னவர்களுக்கு வண்ணநிதி வர்க்கங்கள் வழங்கி கோரங்களைப் பார்த்துச் சேனை விருதுகளுடன் சென்று சோலையிலிருக்குங் குயிலை அழைத்து வருவாயென்றனன் அவன் அந்நேரமே குடை கொடி விருதுடனுங் கோதையர் கூட்டத்துடனும் சோலைசென்றான். சென்றமங்கையர் நின்ற மங்கையை நீராட்டிப் பூந்துகிலணிந்து அழகைப் பார்த்துப் பார்த்து ஆணாசப் பிறந்தோமாவென்று பேசிச்சிங்கமுகப் பல்லாக்கில் வைத்துக்கொண்டுவந்தனர்மாதரசிசேனைகள்சூழக்கடலொலிபோல்மேளத்தொனியுங் குரவைத்தொனியுஞ் சப்திக்கவாரங்கபுரிப்பட்டணம்வந்து மாநகரார்வியந்துபார்க்க மாளிகைமுன்வந்திறங்கி மங்கையர்கள்சூழத்தங்கமயமாய் நடந்து தவளமணி மாடமொன்றிலிட்டிருக்கும்ஓராசனத்திருந்தாள்.போரங்கன்பொன்னணியிலங்கப் பொற்கிரீடந் துலங்க மன்னவர் நெருங்க மடங்கலென நடந்து யாவரும் வெளியில்நிற்கத் தனியே மங்கையிருப்பிடஞ் சார்ந்தான். வேந்தன்வருங் குறிப்பைத் தெரிந்த மாதர்கள் மாதரசிபிடங்கூறி அங்கோராசனமிட்டனர் போரங்கன் பொன்னாசனத்திலிருந்து பூவையின் றிருவழகைப் பார்த்து நமது மந்திரி சொல்லியது உண்மையா யிராதென்றல்லவோ எண்ணியிருந்தோம். இப்போது பார்க்க அவன்சொல் அளவையுங் கடந்து உயர்கவிப் புலவருரைத்த உவமையளவையுங்கடந்து பார்க்கப்பதினாயிரங் கண்கள் வேணுமென்றல்லவோ இப்பாவை விளங்குகின்ருள். இவளை யிணைத்துவைத்த இணைவசிக்கு என்னகொடுத்தாலு மீடாகுமாவென்று இதயத்திலெண்ணி அவள் அழகிய வதனம் நோக்கி காமன்கணையால் எரிந்தொழிந்து போகும் என்னைரக்ஷிப்பதற்காக இங்கெழுந்தருளிய இன்பமே கேட்டருள்வீர் இதற்கு முன்பலவரசர் திரையிடப்பாரெலா மாண்டு அஷ்ட லட்சுமிபோகமனுபவித்திருந்த போதிலும் விசேஷமானவனல்ல ஏனெனில்என்னைப்போல் எத்தனையோ அரசர்களிருந்து வருகின்றனர். இன்று பொன்னைப்போன்ற மேனியையுடைய உன்னைத் தேவியாய்ப் பெற்றதினல் விசேஷமானவனாய் விட்டேன் கமலச்சீறடி பெயர்த்து வந்து கடைக்கண்ணருள் தரும்படியான தவப்பயனடைந்தேன். என்னையும் ஆண்டு என் அரசாக்ஷியுங் கைக்கொண்டு மகாராசியாயிருப்பாயென்ருன். போரங்கன் கூறிய வார்த்தையைக் கேட்ட ஆரங்கமழுந் தனத்தாள் காந்து மனத்தையடக்கி கலகாசூரனுக்கிவளை யெம்மாத்திரமாய்க் கணிக்கலாம். கணவனார் முன் கணநாழிகையாவது நிற்கும்வலி யிருக்கிறதா எதோபார்ப்போமென்று

அவன்மொழிக்கிசைந்தவள்போல் சொல்கிறதர்வது அட்டதிசை போற்றப் பட்டங்கட்டியாளும் பார்த்திபனே நான் ஓரரசன் மகன் சரியான பூமியாட்சியுடைய அரசனொருவனைச் சாராமல் க்ஷேத்திர நிலையில்லாத தேசாந்திரியொருவன் வசப்பட்டுத் திரிகிறேன் யாத்திரைத் துவக்கத்திலிருந்து யாத்திரை முடிவுவரை ஒருவருடத்துக்கு ஆண்சேர்க்கை ஆகாதென்று நீக்கியிருக்கின்றேன் யாத்திரைதொடங்கி ஆறுமாதமாகின்றது ஆறுமாதமுங் கடந்து விட வேண்டியதுகங்காதேவியை பிரார்த்தித்துக்கொண்டபடிவாரமொருதரங்கங்கைநீராடவேண்டியதாகவுமிருக்கின்றது ஆனதாலிவ்விரண்டிற்கும்அனுமதிசெய்தால்முடிந்தவுடன்உமதுகருத்துப்போல் நடந்துகொள்வேனென்றுள்.பூவையர்க்கரசிகூறியபுத்தமுதமொழியாற்சித்தங்களித்து முத்துநகை மாதே செய்த்துவர் வாய்திறந்து இத்தனை வார்த்தைகூற எத்தவஞ் செய்தேன் மனப்படியெல்லாம் நடக்கிறேன் பொறுத்திருக்கிறேனென்றான் மாதரசி புன்னகையாய் பிடித்தநோன்பு முடிந்தவுடன் நீரடையுஞ் சீர்வரிசையெல்லாம் பார்த்துக்கொள்வீரென்றுள் பேரரசன் பொன்மாடநீங்கி ராசசபைவந்து அவள் கூறியபடியே கங்காஸ்னனத்துக்குப் போய் வரும்படியான வாகனங்களும் காவற்சேனைகளுங் திட்டப்படுத்தி நடந்துவரும்படி செய்தாள். நங்கையும் அம்முறையேயிருந்து நாயகன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் இணைவசியும் அரசன்றந்த செல்வமனைத்தையும் பெற்று அன்னதானம் நடத்தி நாயகன் வரவை யெதிர்பார்த்திருந்தாள்.

இப்படியிருக்கும்போது ஆரணியத்தில் ஆரணியவல்லியான வள்மணவாளன்மயக்கம்நீங்குவதற்கானவழியைக்கண்டுவரவஞ்சகப் கப் பார்ப்பினி பின்சென்ற மன்னனுங் தேவியும் வருவார்கள் வருவார்களென்று வழிபார்த்திருந்த வண்ணமாகவே யிருந்தவள் அன்றுதினமும் மறுதினமும் வாராததால் நாயகனைப்போற் சித்தப் பிரமையுடையவளாய் மனங்கலங்கிப் பாதவித்துக் கொண்டிருக்கும் போது கழுகரசர் வந்து கவலைப்படாதே உனது தமக்கை நாயகனைச் செயிப்போர் திரிபுவனத்திலுமில்லை அவளோ அழியாத கற்புடையவள் அவர்கள் எவ்விடஞ் சென்றாலுங் தீங்குவாராது வதுங் சேருவார்களென் றுரைத்தனர். ஆரணியவல்லி ஐயமார்களே நீங்கள்சொல்வதுஉண்மைதான் சேர்ந்துசென்றிருந்தால்ஒன்றுமில்லை பாதகிபின்தனித்தனிசென்றனரே அவள்தனித்தனிஎவ்விடஞ்சேர்த்தனளோஎன்னதுன்பம் நேர்ந்திருக்கிறதோஒருவரையொருவர் சந்தித்திருப்பார்களோ இல்லையோ ஒன்றுங்தெரியவில்லையேயென்றேங்கிக்கண்ணீர்புரளச்சோர்ந்துசொன்னுள். கழுகரசர் கவலைப்படாதே

நீ கணவனைப் பார்த்துக்கொண்டிருப்பாயானல் நாங்களிதோ ஒரு நொடியிற் கண்டு அழைத்து வருகிறேமென்று குஞ்சுகளைத் செல்லுந் தாய்ப் பறவைகள் போற் ககன மார்க்கமாய்ப் பறந்து தேடிச் சென்றனர்.

கழுநாசர் போனபின் கருங்கானகத்தில் ஆரணியவல்லி கணவன் முகத்தைப் பலதரம் பார்த்தும் பேசியும் பதில் வார்த்தை யொன்று மில்லாததால் பெருமூச்செறிந்து பெண்ணே யென்று மணிவாய் திறந்து பேசும் வார்த்தையை என்று கேட்பேனே போனவர்கள் வரவில்லையேயென்று மனம் வெம்பியிருக்கும்போது மதிப்பிரகாசனுக்கு ஊழ்வினைத் தொடராற் றொடர்ந்த பிரமை மிகுந்து தன்னிடமிருப்பது மனைவியென்றும் தமையனும் தமையன் மனைவியு மிவ்விடமில்லை யென்பதுந் தோன்றாமல் எழுந்து நடந்தான். ஆரணியவல்லியோடி நாதா, போகாதீர் நாதா, போகாதீரென்று தடுத்தாள். அவனுக்குரிய சுபகுணமாறி மூர்க்க குணமான பிரமையானதால் அவளைத் தள்ளிவிட்டு நடந்தான். அவள் ஓடி ஓடிக் காலயர்ந்து கையயர்ந்து மெய்சோர்ந்து கண்ணீர் வடிய விரித்த கூந்தலை மாறுகள் பற்றியிழுக்க ஆ தெய்வமே நானினியென்ன செய்வேன் பெண்பாலாகிய என்னல் இவரையடக்க முடியுமா யாருந்துணையில்லையே ஆயிரங்கோடி யரக்கர்களை ஒருகணையால் வென்ற ஆண்சிங்கமே தம்பி செய்யுங்கோரணியை அடக்கவர மாட்டீரோ தங்கையே அஞ்சாதே யென்று சொல்லி அக்காள் வரமாட்டாயோ என் புருஷனிலை தெரிந்திருந்தும் இப்படி விட்டுவிட்டுப் போய்விட்டீர்களே கழுநாசரே நீங்களாவது வரக்கூடாதா எல்லாருங் கைவிட்டீர்களே பிறப்பில் இன்னஜாதியென்று தெரியாமல் நீசர்வீட்டில் வளர்ந்த பெண் எப்படிப்போனுற்றுனென்ன வென்றெண்ணி விட்டீர்களோ வென்று கல்லுங்கரைய மரமுமுருக பறவைசாலங்களு மிருக சாலங்களுங் கண்ணீர் வடிக்க அழுதாள்- வனதேவதைகளே வந்து காக்கமாட்டீர்களோ வென்று தொழுதாள். இன்னும் பார்ப்போமென்று துணிந்து மறித்தாள். அவனுக்குரிய பிரமை நெய்விட்ட நெருப்புப்போல் இவளைக் காணக்காண அதிகப்படுகிறபடியால் மிருகசுபாவமாய்ச் சீறி அடித்து இம்சித்துக் கொல்லத்துணிந்தான். ஆரணியவல்லியஞ்சி யிங்கு நின்றால் ஆவிபோய் விடும் அனியாயமாய் மாண்டுபோவதைப் பார்க்கிலும் அக்காளையும் அக்காள் புருஷனையுந் தேடிக் கண்டுபிடித்து அவர்களாலிவர் சேஷ்டையை அடக்குவது நலமெனத் தெளிந்து பன்னகசாலை வந்து கணவனுடைய ஆயுதங்களனைத்தையுந் தரித்து வச்சிரக் கவசமும் பூண்டு வீரக்கழலு மணிந்து சிறுவயதில் அசுரரிடங் கற்ற மந்திரத்தை யுச்சரித்துப் பார்த்தவர்கள் பெண்ணென்

றெண்ணுமல் ஆனென் றெண்ணும்படியாய் ஓர் திசை நடந்தாள் மதிப்பிரகாசன் அதே போக்காக வனத்தூடுசென்று வெளியென்றும் புதரென்றுந் தெரியாமல் நடந்து மதவெறிகொண்டு வரும் யானைகளின் கரத்தைப்பற்றிச் சுற்றிப் பாறைக் கற்களிலடித்தும் உன்னிப் பாயுஞ் சிங்கம் புலிகளைப் பிடித்து இரண்டாய்ப் பிளந்தெறிந்தும் மலைப்பாம்புகளைப் பிடித்துக் கயிறுபோல் வீசியும் அடங்காத பிரமராட்சதனைப்போற் றிரிந்து கங்கைக் கரையை அடைந்தான். அக்கங்கையில் நீராடிக் கொண்டிருந்த பிராமணக்கூட்டத்தி லொருவனை முதலை பிடித்துக்கொள்ள அவன் பிராணவஸ்தையடைகிருன் பார்ப்பாரக் கூட்டங்கள் பயந்துகரையில் வந்து கூடிக்கூடிப் பார்ப்பாராயினர் அப்பிராமணன் மனைவி கரையில் நின்று மார்பிலுந் தலையிலுமடித்துக் கங்கைநீராட வந்த பலன் கைமேற் பலித்ததே ஆ நாயகா என்னை விட்டுவிட்டு முதலைவாயிலா போகின்றீர். மீட்டுவிடும் புண்ணியர்களில்லையோ வென்று பிரலாபித்துக் கொண்டிருந்தாள். மதிப்பிரகாசனுக்குத தண்ணீரில் நின்று பிராமணன் கரங்களையுந் தலையையும் ஆட்டிச் சப்தமிடுவது ஓர்விதமாய்த் தெரிந்தபடியால் குபீரென்று தண்ணீரிலிறங்கி அவனையிழுத்தான் அவன் வாராதவிதமாய்க் கட்டைபோற் கிடக்கு முதலையைக்கண்டு மையாற்றடவி வாலைப்பிடித்துத் தூக்கிக் கரகரவென்று சுழற்றினுன் முதலை பிராமணனைக் கக்கிவிட்டது அவன் இன்றுதான் என்தாய் வயிற்றிற் பிறந்தேனென்று நீரில் மூழ்கியெழுந்து கரைசேர்ந்தான். மதிப்பிரகாசன் முதலையைப் பிடித்தபிடி விடாமற் கரையிற் கொண்டுவந்து சுழற்றியடித்தான் அது மாண்டது எமலோகஞ் சென்றுவந்ததுபோல் முதலைவாயினின்று வந்த நாயகனைக்கண்ட மறையவர்மாது மனமெலாங் குளிர்ந்து மதிப்பிரகாசனைநோக்கி உனக்கு வந்த இடையூறெல்லாம் நீங்கி யுன்மனைவியுந் தீர்க்காயுசு மங்கிலியாயிருக்கக் கடவதென்று வாழ்த்தினுள் பதிவிரதையான பார்ப்பினிகூறிய வாக்கியத்தாலும் பரமகங்கையிற்றோய்ந்த பாக்கியத்தாலும் பிடித்தபிரமையாதியமுதலிங்கக்கடவுள்பஞ்சாட்சரஞ் செபித்தோர் பாதகங்கள் தீர்ந்ததுபோல் தீர்ந்துமுன்னையநினைவு வந்துபன்னகசாலையிலிருந்த நாம் இங்குதனியேவரவேண்டியதென்னண்ணனையுந்தேவியர்களையும் போய்ப்பார்ப்போமென்று வேகமாய்ப் பன்னகசாலைவந்து பார்த்தான். ஒருவருமில்லை பக்கமெல்லாம் ஓடிப்பார்த்து மேனிவேர்த்து சற்றிருந்து ஆலோசிக்க மயக்கம்போற் றேன்றியது ஞாபகத்து வருகிறது செய்தவேலை தெரியவில்லை. உயிர்பிரிந்தாலும் நம்மைவிட்டுப் பிரியாதவர்கள் பிரிந்துபோனவிதமுந் தெரியவில்லை. தனதுபெண் பெரிதென்று நினைக்குந் தமையனர் நமதுபெண்ணையும் ஆயுதங்களையுங்கொண்டுகழுகு வாகனங்களுடன் சென்ற காரணமொன்றும் விளங்கவில்லை ஆன

தால் முன்போற் றேடிக்கண்டுபிடிக்க வேணுமென்கிற எண்ண முடையவனாய் கங்கையையகடந்து யாத்திரைவாசிகளுடன்கலந்து பரதேசிக்கோலமாய்ப் பாரெலாந் தேடித்திரிந்தான்.

ஆறும் அத்தியாயம் முற்றிற்று.

ஏழாம் அத்தியாயம்.

ஆரணியவல்லி சர்வாயுதங்களுந் தாங்கிக் கண்ட ஆடவர் நாணும்படி காடுமலை வனம் வனாந்திரங்களைக் கடந்து ஓர்வனத்திற் செல்லும்போது ஓர் சங்கத்தொனி கேட்டது அத்தொனியைக் கவனிக்க ஆடவர் இப்பக்கம் வரக்கூடாது வந்தால் ஆக்கினை செய்யப்படுவாரென்று முழங்கியது ஆரணியவல்லி எடுத்தவேடத் திற் கிசையாததா யிருக்கிறதே யென்றெண்ணி நின்றாள். தனக்கு எதிர்திசையாய் ஓர்மான் வேகமாயோடிவர அம்மானைத்தொடர்ந்து ஒருபெண்பஞ்சகல்யாணிக்குதிரையிலேறிவரப்பார்த்தாள்.

இக்கலைமான் அப்பெண்மானுக் ககப்படாமல் வருகிறதென்று ஓர் அம்பைத்தொடுத்தான். அம்புபட்டு மான் மாண்டு விழுந் தது. வந்தபெண்உத்தரவாற் சில சேவகப்பெண்கள் ஆயுதபாணி களாய் ஆரணியவல்லியை வளைந்து வருவாயென்றழைத்தனர் அவள் இருதன்மையுமுடைய நம்மை இவர்கள் என்னசெய்வார்கள் பார்ப்போமென்று அழைத்தபடியே சென்றாள், அவர்கள் செல் லும்பெண்கள் கூட்டத்திற் கலக்காமற் றனியேயழைத்துப்போய் பட்டணஞ்சேர்ந்து ஓர் மண்டபத்திலிருந்து நியாயவிசாரணைசெய் யும் ஓர் பெண்முன்னிறுத்தினர். அவள் நீயாரென்க நான் ஆர ணியனென்றாள். நீ சங்கத்தொனியைக் கவனியாமல் வேட்டைத் தலம் வந்ததென்ன ராஜாத்தி தொடர்ந்துவந்தமானை யெய்ததென் ன, இவ்விருகாரியமுங் குற்றமாயிருக்கிறதே இதற்கு என்னசொல் லுகிறாயென்றாள். வேடதாரி வெண்சங்கோசை கேட்டவிடத்திலே நின்றுவிட்டேன் மான்பின்வந்தவள் மகாராணியென்று தெரியாது மானையெய்தேன் உங்கள் சித்தப்படிசெய்யுந் தண்டனையைச் செய்யு ங்களென்றாள். விசாரணைத்தலைவியாகிய மனுவியனீதா ஆடவன் முகத்தையும் குரலையும் அழுத்தமாய்ப்பார்த்துப் பெண்சாயலாய்த் தெரிகிறது பின்யோசிப்போமென்று காராக்கிரகத்திலடைத்து வை க்கும்படிசெய்தாள். சேவகப்பெண்களப்படியேசெய்தனர் ஆரணி யவல்லி யிதிலுமிருந்து பார்ப்போமென்றிருந்தாள்.

வனசஞ்சரியென்னும் அம்மங்கையாண்டுவருந் தெங்களாபுரத்திற்கு நாற்காதவழி தூரத்துக்கப்பாலுள்ள மாதங்கபுரத்திலிருந்து சேவந்தனென்னும் ஓரரசகுமாரன் சேனைப்பெருக்குடன்வந்து கன்னிகை போருக்குவரும்படியாய்த் தூதுவிட்டான். தூதுவர்கள் வந்துசொல்ல துரைத்தனக்காரி தளாயினி மனுநீதா வீரி சூரி முதலிய சகலபெண்களையும் வரவழைத்து சங்கதியைச்சொல்லிப் போருக்குப் புறப்படும்படி செய்து தானும் போர்க்கோலங்கொண்டு பொன்மயத் தேரேறிப் புறப்பட்டாள் மனு நீதா மகாராசியை வணங்கி வேட்டைத்தலத்திற் பிடித்துவந்த ஆடவனை விசாரணைக்காக வைத்திருக்கிறேன் வீரன் போலிருப்பதால்அவனையும்அழைத்துப்போவது ஓர் சமயத்துக் குதவியாகுமென்றாள் வன சஞ்சரி மனம்போலழைத்துவரும்படிசெய்யென்றாள் அவன்சில பெண்களை ஏவ அப்பெண்கள் சென்று சங்கதியைச்சொல்லியழைக்கஆரணிய வல்லி அரக்கர் பாவையருடன் சேர்ந்து கற்ற ஆயுதத் தொழிலையிதிற்காட்டுவோ மென்றெண்ணி வருகிறே னென்று வந்தாள் சமயயூகி யென்னு மந்திரிப்பெண் அவ்வாடவ வேடக்காரிக்கு ஓரி ரதங் கொடுக்கும்படிச்செய்து சேர்ந்து வரும்படி செய்தனள் ரத கச துரகங்களும் ஆயுதந்தரித்தப்பெண் கூட்டங்களும் அநேக ஆயிரங்களாய்ப் புறப்பட்டு கோட்டையைக் கடந்து எதிரியிருக்குமிடஞ்சேர்ந்து இருபடையுங்கைகலந்தன. அபிமானமுள்ள புருஷவீரர் பெண்கள்பேரில் ஆயுதமெடுக்கக்கூடாதென்று நின்றனர். சிலர் வீராவேசத்தைமாற்றிக்காமா வேசமாய்நின்றனர். சிலர் அவர்களேவும் ஆயுதங்கள்பட்டும் அஞ்சாமற் கண்ணம்புபாய நின்றனர் சிலர் இவர்களுடன் மன்மதனாகிய வீரனுஞ்சேர்ந்து பகழிகளையேவுகிறானேயென்று பேசிக்கொண்டனர். சிலர் மாதர் கரத்தைப் பற்றப்போய் அவர்கள் கரவாளால் மாண்டனர். சிலர் அவர்களாயுதங்களைத்தடுத்துஞ் சிறைபிடித்துச் சென்றனர். சிலர் சீறி நெருங்கியவர் சிறு நகையாற்கோபத்தீயவியத்திரும்பினர் இப்படியான சமையத்தில் ஆடவவீரர் தொடுக்கும் அம்பாயுதங்களாற் பெண் வீரர்கள் நின்று நிருவகிக்கமுடியாமற் பின்னிடையத்தலைமையான மாதர்களுந் தலைவியுந் தங்கள் தங்கள்தேரைக்கடாவிச் சரமாரிபொழிந்து தலைவேறு உடல்வேறாய்த் தறித்து எங்கும் உதிரப்பெருக்கும் பிணக்குவியலுமாகச் செய்துவிட்டனர். சேவந்தனுஞ் சேனை வீரரும்பார்த்து இவர்கள் நூபுரபேரி யொலிக்க கனதனயானைகளைச்செலுத்தி புருவவில்வளைத்துக் கண்ணம்பு தொட்டு ஆடவ வீரரனைவரையும் வென்ற வீரர்களானாலும் நெருப்பாயுதங்களைப் பரப்பும் போர்க்களத்திலும் அவ்வெற்றியடையப் பார்க்கிறார்கள். நாம் ஏழ்மையாகிய காமகுணத்தைமாற்றி வயிராக்கிய மாகிய கோபகுணத்தைக் கைகொண்டாற்றான் செயிப்போ மென்று ஒருவர்க் கொருவர் கூறி தேர்களைத் தூண்டிச் சிலைகளை வளைத்

துச் செஞ்சரங்களைத்தூவி அவர்களேவியவற்றை யெல்லாந் தடுத்துப் பாணங்கள் மேனிகளி லூடுருவித் திக்கு முக்காடச் செய்தனர் அவர்கள் தியக்கத்தை ஆரணிய் வல்லி கண்டு அழகிய தேரைக்கடாவி சாமளரூபி நாயகனுக்குத் தந்தருளிய தனி வெஞ்சிலையை வளைத்துச் சரமாரி பொழிந்தனள் அச்சரங்கள் அம்மனருளிச் செய்திருந்தபடி 1-10-100-1000 10,000 லட்சக் கணக்காய் எதிரிகளேவிய நெருப்பாயுதங்களையெல்லாம் பொறி பொறியாக்கி யுடலையுதிரமயமாக்கப் படைத்தலைவர் நம்மைப் போல் ஆடவவீரன் வந்து விட்டானென்றஞ்சியோடினர் ஆரணியவல்லியாகிய வீரன் சேவந்தன் தேர் பரி வில் முதலாகியவைகளை யழித்து அவன் கழுத்தில் வில் நாணினையமாட்டி யிழுத்துத் தன்தேர்க்காலில்மாட்டி வனசஞ்சரி முன் கொண்டு வந்து கட்டவிழ்த்து நிறுத்தினன் வனசஞ்சரி கட்டுண்டு வந்தவனையுங் கட்டிவந்தவனையுங்கண்டு மகிழ்ந்து நம்மை ரக்ஷிக்கவே தெய்வம் இவனைக் கொண்டுவந்து சேர்த்திருக்கலா மென்று புகழ்ந்து சேவந்தனை நோக்கிச்சீறி யுன் தலையை வெட்டுகிறேன் பாரென்று வாளையுருவினள் வேடதாரியான வீரன் இளைத்து நின்றவர்களை வெட்டினால் மஹாபாதக மாகுமம்மாவென்று கூற சினத்தைமாற்றி அவன் செய்த நன்றிக்காக அவன் சொல்லை மீற மனமில்லாமல் ஊர் போய்ச் சேரடா வென்றுரைத்து படைகளுடன் பட்டணம் வந்து அரசிருக்கை மண்டபஞ் சேர்ந்து ஆடவன் செய்த வீரத்தை வெகுவாய்ப் புகழ்ந்து மந்திரிமுதலிய காரியகாரப் பெண்களை நோக்கி ஆண்வாடையாகா தென்றிருந்தோம் ஆணினலேயே நமதரசாக்ஷி நிலைத்தது அவனை யெப்படி வைத்திருப்போ மென்றனள் மந்திரியாகிய சமயயூகி உலகில் ஆண் பெண் கலப்பினலேயே எவ்விதக்காரியங்களும் நிலைபெறுகின்றன நாம் ஒருவகையாயிருந்து ராச்சியத்தை நிலை நிறுத்தியபோதிலும்ஆண் துணைவேண்டுவதவசியம் அவனுக்குச் சேனதிப்பட்டங் கொடுத்து நகரத்திலிருக்கச் செய்வதே நலமென்றனள் அப்படியே கோட்டையருகான ஓர் மாளிகையிலிருக்கும்படி செய்து வேண்டியதைக்கொடுத்துப் பரிபாலித்து வந்தாள் ஆரணியவல்லியும் அன்னதிலிருந்து நாம் நாடி வந்தவர்களை எவ்வாறு கண்டுபிடிப்ப தென்றுலோசிக்கலானள் அஃதெவ்வாறிருக்க இப் பட்டணத்தைபாளும் ராச குமாரத்தி விவாசமில்லாமல் அரசாளவேண்டிய்தென்ன அறிவோமென்று தானிருக்கு மாளிகையில் ஆண்வேடத்தைமாற்றிச் சுயரூபமாய் வெளிப்பட்டு அரண்மனை வாசல்போய் நின்றுள் அங்குநின்ற பாராக்காரப் பெண்கள் நீ யார் என்க அவள் ஒரு பெண் ராஜசமுகங்காண வந்து நிற்கிறுளென்று மகாராணியிடம் தெரியப்படுத்து வீர்களென்றுள் அவர்களப்படியே சென்று சொல்ல அரசி வரச் சொல்வீர்களென்

ருள் சேவகப் பெண்கள் வந்து சொல்ல ஆரணியவல்லியரசி யிடஞ் சென்ருள் கருங்குழலிலங்குஞ் சிரத்திற் கனகமுடிமின்ன கனகவளை யொலிக்குங் கரத்திற் செங்கோலிலங்க சந்திரனைச் சுற்றிய தாரகாகணம்போல் மந்திரி பிரதானி முதலிய பெண்களிருக்க ஆசனத்தில் வீற்றிருக்கும் அரசியைக்கண்டு அம்புயக் கை கூப்பி நின்ருள் தன் முன்னிற்குந் தையலின் முகத்தைக் கண்ட அரசி தன்னையறியாமல் மனமிளக பாசஞ் செல்ல உடனிருந்து யிரிந்தோரைத் திரும்பக் கண்டதுபோல் பரவசமானுள் ஆரணியவல்லியும் அவளைக்கண்டது சுவர்ணப்பிரபையைக் கண்டது போலாகி உள்ளக்கனிவாய் நின்ருள் அரசாளும் பெண் அவளைப்பார்த்து பெண்ணே நீ யார் இங்குவர வேண்டியதென்ன வென்ருள் அதற்கவள் மகாராசியே என்னை மாலையிட்டகணவன் வேட்டையாடத்தனித்து வந்தவர் தாங்கள் வேட்டையாடுந் தலத்தில் வந்ததாகவும் பிடித்து வந்ததாகவும் கேள்விப்பட்டு வந்தேனென்ருள் வனசஞ்சரி இவ்வரசை நிறுத்திய புண்ணியன் தேவியாவென்று புளகாங்க முடையவளாய் ஓராசனத்திலிருக்கச் செய்தாள்.

ஆசனத்திலிருந்த அவளை யரசிபார்த்து உங்கள் நகரமெது நாமதேய மென்னவென்று கேட்க எங்களூர் மந்தாகினிபுரம் என் பெயர் ஆரணியவல்லியென் துநாயகன்பெயரும் என்பெயர்தானென்றனள் அரசிமகிழ்ந்துஉங்களுக்குவேண்டியவைகளையெல்லாந்தருகிறேன் பெற்றுக்கொண்டு சதிபதிகளாகிய நீங்களிவ்விட மிருப்பீர்களென்று சாற்றி ஓர்மாதை யிருப்பிடங்காட்டி வரும்படி செய்தனள். அவள் அழைத்துப்போய் தன்னிருப்பிடங் காட்டிச்செல்ல தான் சென்றிருந்து உள் ஆணுகவும் வெளி பெண்ணுகவும்ராசசபை சென்று வந்திருக்கும்போது ஒருநாள் மாலைநேரம் மகாராஜாத்தியிடஞ் சென்று அரண்மனையில் அவளுடனுண்டு மஞ்சத்திலிருந்து சில பேச்சுகள் பேசிக்கொண்டிருக்கும் போது ஆரணியவல்லி பலகோடி ஜனங்கள் பணிய உலகாண்டுவரு மூத்தமியே ஆண்பால்செலுத்தும் ராஜாதிகாரம்பெண்பாலாகியநமக்குச் சிறந்ததே ஆடவர்சேர்க்கையை விரும்பாதிருக்க வேண்டியதென்ன இதனுலடையுஞ்சுகிர்தமென்ன ஆதிகடவுள் சீவகோடிகளைச் சிருஷ்டித்த நோக்கமிதுவல்லவே ஆண் பெண் கலந்து பெருகவல்லோஅப்படியிருக்கநீயிப்படியானநித்திய கன்னிவிரதம் பிடித்திருக்கும்படியான காரணமென்ன சொல்லியருள வேண்டுமென்றுசொல்லத்துரைத்தனக்காரி சொல்லலானுள்.

கேளாய் ஆரணியவல்லி யென்னுமன்னமே வாரங்கபுரிப்பட்டணத்தில் சாரங்கனென்னு மன்னனுக்குச் சீரங்கன் போரங்கனென்னு மைந்தரிருந்தனர் அவர்கள் வாலிபதிசையடைந்து மண

முடித்துத் தலையரசராகவும் இளவரசராகவும் ஆண்டுவருங்காலத்தில் சாரங்கன் சாயுச்சியபதவி யடைந்தான் இளையவனாகிய போரங்கன் மூத்தவனாகிய சிரங்கன் தலைமையதிகாரத்தை யபகரிக்க வேண்டு மென்கிற எண்ணமுடையவனாய் ஓர்நாளிரவு சிலதுஷ்டர்களைச் சேர்த்துக்கொண்டு சிரங்கனு மனைவியு நித்திரைசெய்யும் அந்தப்புர மாளிகையில் ஆயுதபாணியாய் வந்தனன். பார்த்த பணிவிடைப் பெண்களெல்லாம் அஞ்சியொடுங்கி நின்றனர். ஆளரவத்தாற் கண்விழித்து அரசிபாரசனுடன் கூறத் தமையனெழுந்து தம்பிவருங் கோலத்தைக் கண்டு தலைதப்பாதென்று மதித்து அடா தம்பி அரசாட்சிக்காகத்தானே தலையை வெட்ட வருகிறாய் அரசியலை நீயே எடுத்துக்கொள் எங்களிருவரையும் ஒன்றுஞ் செய்யாதே யென்றான். அவன் சிறி திரக்கமுடையவனும் ஆயுள் வரை நான் கொடுக்கும்படியை வாங்கி சாப்பிட்டுக்கொண்டிருங்களென்று சிறைச்சாலையிற் சேர்த்து அவன் பெண் குழந்தைகள் ஆறுமாதத்துக் குழந்தையொன்று இரண்டு வருடத்துக் குழந்தையொன் றிருந்ததைக் காட்டிற் கொண்டுபோய் விட்டுவிடும்படி செய்தான். பாதகர் பங்கயமுகங் குழந்தைக ளிரண்டையும் பாழானகாட்டிற் கொண்டுபோய் விட்டுச்சென்றனர். ஆறு மாதத்துக்குழந்தை வைத்தவிடத்திலேயிருந்து எக்கதியாயினதோ தெரியாது மூத்தகுழந்தை வனத்தில் அழுதுகொண்டே திரிந்தது பராங்குமுனிவர்தேவி சுராங்கி பிள்ளையழுகுரலைக்கேட்டு எடுத்துப்போய் முனிவரிடங்காட்டி வனத்திற் சஞ்சரித்ததால்வனசஞ்சரியென்று நாமமிட்டுவளர்த்துவந்தனள் முனிவர் சகலகலைகளுந் தனுசாஸ்திரமுங் கற்றுக்கொடுக்க இருந்துவருங்காலத்தில் தெங்களாபுரப் பட்டணவேந்தன் சங்கரேகன் வேட்டைமார்க்கமாய் வந்து முனிவரைக்கண்டு தன்னரசுக்குரியபுத்திரசந்தானமில்லாததால் இப்பெண்குழந்தையைத் தரவேண்டுமென்றுவாங்கிப்போய் மகுடஞ்சூட்டி மானிலத்தையாளும்படி செய்தான் அப்படியானவள் நான்தான் நான்வந்தவிஷயத்தைப் போரங்கன் எப்படியோ அறிந்து இவளால்ஒருகாலம் நமதரசுக்குமோசம்வந்தாலும் வருமென்கிற எண்ணமுடையவனாய் படையுடன்வந்து என் மூன்றாந் தந்தையை யழைத்து இப்பெண் என்சத்துருமகள் நீக்கிவிடு இல்லையேல் உனதரசைக்கவர்ந்து கொள்வேனென்றான் அவர் இப்பெண்ணால் ஒன்றும்வராது கண்டெடுத்துவந்தமகள்மேற் கருணையிருக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அப்பாதகன் இவள்நித்தியகன்னியாகவே யிருக்கவேண்டியது கல்யாணஞ் செய்யக்கூடாதென்று சொல்லிப்போய்விட்டான்.

சங்கரேகை மகாராஜன் சம்மதித்தபாவனையாய்ச் சகலவதிகாரமும் நானேபார்த்து வரும்படிசெய்து தான் புறம்பானவிடத்

திலிருந்து சகலபோகங்களையு மனுபவித்துத் தள்ளாவயதானதா லும் கடைகாலத்துதித்த மகன் சிறுவனாயிருப்பதாலும் போரங் கன் கெடுகாலத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அர சாக்ஷியில் ஆண்சம்பந்தம் வைத்துக்கொண்டால் அப்பகைஞன் ஆள்களைவிடுத்து மோசஞ் செய்தாலும் செய்வானென்று ஆண் வாடையாகாதென்கிறபாவனையா யரசாண்டுவருகிறேன். அவனு மாண்டு அன்னைதந்தை சிறையுநீங்கி நலம்பெறுங்காலம் வந்தால் நாயகனொருவனையடைகிறது இல்லையெனில்நித்தியகன்னியாகவே காலத்தைக்கடத்துகிறதென்று நிச்சயித்துக்கொண்டேன் இவ்வர லாறைவாரங்கபுரவாசிகள் சிலரால றியலானேன்இதுதான்என்வர லாறும்அந்தரங்கக்கருத்துமென்றுசொல்லிமுடித்தாள் அவள்கூறி வந்த வர்த்தமானங்க ளனைத்துங்கேட்ட ஆரணிபவல்லி தன்னை யறியாமற் கண்ணீர் தாரைதாரையாய்வழிய மனமெலாமிளக இவ் வரலாறு அரக்கன்மனைவி யாருமாதக்குழந்தையான வுன்னையெடு த்துவந்தேனென்று கூறியதற்கு ஒத்திருப்பமையால் இவள்நமது தமக்கையேயன்றி வேறில்லை நமதன்னை தந்தை சுற்றமானவரை யெல்லாம் இப்பிறவியிற்காணமுடியாதென் றிருந்தோம் காண்க லானோம் கண்டுமென்ன எல்லாம் அபாயத்துக்குள்ளாகவே யிருக் கிறது நமது வீரநாயகர்களையடைந்தே யிதனைச்சீர்திருத்தவேண் டுமேயொழிய பெண்பாலாகிய நாம்துணிந்து ஓர்காரியமுஞ்செய் யக்கூடாது நமது வரலாறையுஞ் சொல்லக்கூடாதென்று அவளி டம் நல்லகாலம்வரும்போது எல்லாம்வரும் சஞ்சலம்வேண்டா மென்றுசாற்றி அவளுடன்துயின்று அருணனுதயத்திலெழுந்து தன்னிருப்பிடம்வந்து ஆண்வேடம்புனைந்து ஆலோசித்துக்கொண் டிருக்கும்போது ஆதித்தனடைந்து இருளானசமயம் சிலர்வந்து கதவைத்தட்டினர் ஆரென்றுகதவைத்திறக்கச் சிலபெண்கள் ஓலை யை நீட்டினர் வாசித்துப்பார்க்க வடக்கேயுள்ள கிராமத்திற்சிலர் நுழைந்து அக்கிரமஞ் செய்கின்றனர் இந்நேரமேசென்று அவர் களை யப்புறப்படுத்தி வரவேண்டியது. இந்தப்படி ராசாத்தி உத் தரவு என்பதாக எழுதியிருந்தது ஆரணிய வல்லியாகிய வீரன் இரதத்திலேறியமர சாரதிப்பெண் குதிரைகளை வேகமாகச்செலு த்தி ஒருபெரியபட்டத்தினுள்ளதாய்மாடமத்தியிலமையப்பட்ட தாய் சிறுவாயலையுடையதாயுள்ள ஓர்சோலையின்பக்கம் நிறுத்தி னள் ஆடவரூபக்காரி இவர்கள் ஓலையில் காட்டியபடிதொன்று ரதத்தை யோட்டியபடிதொன்று இங்குகொண்டுவந்து காட்டியபடிதொன்றுயிரு க்கிறதே அறிவோமென்றிருக்கச் சிலபெண்கள் இறங்கிவரவேண் டுமென்றனர். இவர்களழைக்குங் கருத்தைத் தெரிவோமென்று அவர்களுடன் சென்றுபார்க்க கனகமணிமாடத்தில் ஓர் கன்னிகை ரதிதேவிபோ லிருக்கக்கண்டாள். இவள்தான் நம்மையழைத் திருக்கலாமென்றெண்ணி நிற்க அவள் ஆடவகோலத்தைக்கண்டு

காமமயக்கமேலாகி ஆசனத்திலிருக்கச்செய்து கன்னியர் யாவரையும் அப்புறம்போகும்படிசெய்து கலந்தணைய வேண்டுமென்றாள் ஆரணியவல்லி யிதுவுமோர் சோதனைதானென்று நகைத்து உன்னைப்பார்த்தால் ராஜகுமாரத்தியாயிருக்கிறாய் என்னை விரும்ப வேண்டிய காரணமென்னவென்றாள் அக்கன்னிகை நான்இவ்வூராகிய மாதங்கபுரப்பட்டணத்தையாளும் மாதுரந்த ராஜனுடைய மகள் மாதங்கியென்பது என்பெயர் என்னை விவாகஞ் செய்யும்படி சேவந்தனென்னு மோரரசகுமாரன் வந்தான்.என்றந்தை என் பகையாய் என் ராட்சியத்துக்கு இடைஞ்சலா யிருந்துவரும் வனசஞ்சரியென்னும் ராசகுமாரத்தியைச் செயித்துவந்தால் மணஞ்செய்கிறே னென்றார் அவன் அப்படியே படையுடன் சென்று போராடி ஆடவவீரனாகிய உன்னால் அபசயமடைந்து இங்கு வராமல் தனதூருக்கு ஓடிப்போய் விட்டான். அவனைச் செயித்த வுன்னை மணஞ்செய்து கொள்ளலாமென்று ரகசியமாயழைந்தே னென்றாள்.

அவ்வசனங் கேட்ட ஆரணியவல்லி யிவள்கொண்ட காமமென்ன காம் திரிகிற கோலமென்னவென்று நகைத்து இதனைச் சொல்கிறாள். வலியவிரும்பும் மாதைச்சேர ஆடவனுக்குரிய கடமையாயினும் என் குருசொல்லிய பிரகாரம்மாதர்களைச் சேரக் கூடாதென்று ஆறுமாத விரதம் பிடித்திருக்கிறேன் முடிந்தவுடன் டன் மனம்போல் நடக்கிறே னென்றாள். மாதங்கி சம்மதித்து அந்தப்புரமாளிகை யொன்றில் ரகசியமாயிருந்து வரும்படி செய்தாள். ஆரணியவல்லி ஆண்வேடமாய்ச் சோலையிலுலாவிக் கொண்டிருக்கும்போது புறத்திலிருந்து சோலையைக் காக்குங் காவலர் கண்டு மன்னனிடம் போய் ஓர் ஆடவன் அந்தபுரச் சோலையில் உலாவுகிறா னென்றனர். அவ்வரசன் வீரர் சிலர்களை யேவிப்பிடித்து வரும்படி சொல்ல அவ்வீரர்கள் அங்கு சென்று ஆடவகோலத்தைத் தூரத்தே பார்த்து வரும்போது அதனை அறிந்த ஆரணியவல்லி செடிக்குள் மறைந்து ஆடவருபத்தை மாற்றிச் சுயரூபமாய் வேறிடஞ்சென்று பூக்கொய்து கொண்டு நிற்கும் மாதர்களில் ஒருத்தியாய் நின்றாள். வந்தவர்கள் தேடிப்பார்த்து ஆடவனைக் காணமல்ஓடிப்போய்விட்டானென்று மன்னனிடஞ் சொல்லினர்.

ஆரணியவல்லி அன்றிரவு மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஊர்கடந்து ஆடவவேடமாய் நடந்து கங்கைக் கரையை அடைந்தாள் கதிரவனுதையமாகிக் கமலங்கள் மலர்ந்து அன்னங்களுலவ வண்டினங்கள் பாட கண்காட்சியாய் விளங்குங் கங்கை வளங்கண்டு வரும்போது ஓர் துறையில் ஓடம்

விட்டுக்கொண்டிருக்கும் வேடனொருவனைக் கண்டு அவனருகு சென்றாள். வருகிற வீரகோலத்தைக் கண்ட வேடன் ஆடவவீரா இவ்விடம் வாராதே வந்தால் தலைபோய் விடும் அப்புறம் ஓடிப் போய்விடுவா யென்றான் இவனிப்படிச் சொல்லவேண்டியதென்ன வென்று திகைத்துக் கிட்டப்போய் ஆரணியவல்லி வேடா ஏன் இப்படிச்சொல்லுகிறா யென்றாள். அவன் சொல்லுகிறதாவது ஓர் பெண் சேனைப் பெருக்குடன் நீராட வருகிறாள் காவலாயுள்ளவர்கள்கண்ட ஆடவரைவெட்டிவிடுகிறார்கள், அது அப்பெண்ணை வைத்திருக்கும் அரசனுத்திரவாம் சேனைகளுக்குத் தலைமையாய் வருகிறவன் சரகேசரி யென்னும் படைத்தலைவன் அவன் வந்து அப்பெண் நீராடி முடியும்வரை நான் செலுத்தும் இவ்வோடத்தில் வந்திருந்து உலாவிப்போவான். ஓடக்காரனாகிய எனக்கு அந்நியந்தனையில்லை. பெண் நீராட வருந்தினம் இன்றானதால் நீ அப்புறம் போய்விடுவா யென்றான். வேடன் வார்த்தையைக் கேட்ட வேடதாரி நீராடவருபவள் யார் அவளையறிவோமென்று வேடனைப் பார்த்து எனக்கும் சேனாபதிக்கும் சிநேகஞ் செய்து வைப்பாயானால் உனக்கொருகாலம் உதவிசெய்வே னென்றாள். வேடன் இவன் நல்லவனாகக் காணப்படுவதால் இவன் நாட்டப்படியே செய்வோமென்று இவ்வோடத்திலேறி இவ்வறைக்குள் மறைவாயிருப்பாயென்று இருக்கச்செய்து ஓடத்தையுலாத்திக்கொண்டிருந்தான். சுவர்ணப்பிரபை வாரங்கபுரிப் பட்டணத்திலிருந்து மாதர்கள்சூழ மணிச்சிவிகையிலமர்ந்து லக்ஷம் படைவீரர் காவலுடன் சரகேசரி யென்னும் படைத்தலைவன் தலைமையாய் வரக் கங்காதீரம் வந்து மங்கையர்களுடன் கங்கையிலிறங்கிச் செங்கைகூப்பி பலகோடி சீவராசிகளை ரக்ஷிக்குங் கங்கையே பரமன் சடாபாரத்தில் விளங்கும் மங்கையே பரந்தாமன் றங்கையே நாயகனைக் கண்ணிற் காட்டாயா நாங்களாடி இப்பலன் கண்டோமே யென்று புலம்பிப் பத்தாவைப் பார்ப்பதெப்போ தங்கை தங்கை நாயகனைக் காண்பதெப்போவென்னுங் கவலையுடையவளாய் நீராடிக்கொண்டிருக்க சரகேசரி யிரதம்விட்டிறங்கி வழக்கம்போல் வேடன்விடும் ஓடத்திலேறி அக்கரை யிக்கரைகளில் ஆடவர் வருகிறார்களா வென்றுலாவிக் கொண்டிருந்தான். ஆரணியவல்லி ஓடமறைவிலிருந் தெழுந்தாள். சரகேசரி தலையைக்கண்டு வெட்டும்படி வாளையுருவினான். ஆரணியவல்லியும் எழுந்து வாளையுருவினாள். வேடன் குறுக்கேபோய் நின்று ஒருவருக்கொருவர் சங்கதியை விசாரித்துப்பின்பு வெட்டிக்கொள்வீர்க ளென்றான். அவர்கள் வாட்போரை நிறுத்தினர் சரகேசரி நீயாரென்றான் ஆண் ரூபக்காரி தாழ்ந்து ஐயா நான் மாதங்கபுரராஜன் சேனாபதி மகன் தந்தை மனஸ்தாபத்தால் ஊரைவிட்டு நீங்கி வேற்றிடஞ்சென்று பிழைக்கலாமென்று வந்தேன் தாங்கள் கன்னிகாவலாய் இங்குவரு

கிறது தெரிந்து நேசம் பெற்றுக்கொள்ள ஓடத்திலிருந்தே னென்ருள். சரசகேசரி அவ்வீரன் பேச்சின் சாரத்தையும் வீரத்தையுங் கண்டு மகிழ்ந்து என்கூட வருவாயானல் எங்கள் மன்னனிடம் உத்யோகம் வாங்கித் தருகிறேனென்று கரைசேர்ந்த ஓடம்விட்டிறங்கி வரைபோன்ற விரதத்திலேறி மாதரசி பூம்புனலாடிச் செல்லப் பாதுகாப்பாக வாரங்கபுரப்பட்டணம் வந்து அவள் மாடம் புகுந்தவுடன் இவன் வாலிபனுடன் மன்னனிடஞ் சென்ருன். போரங்கன் புதிதாய் வந்த இவன் யாரென்க இவன் என் மைந்தன் சிறுவயதிற் றேசாந்திரஞ் சென்றவன். வல்லவர்பால் ஆயுதவித்தை கற்றுக் சங்காதீரவழியாய் வந்தான் கண்டுபிடித்துக் கூட்டிவந்தே னென்ருன். இப்படியான வீரனும் வேண்டுமென்று கன்னிகாமாடக் காவற்றலைமை கொடுத்தேன். மாதம் ஆயிரம் பொன் சம்பளமுந் தருகிறேன் பெற்றுச் சகல காவல்களையு மேற்பார்த்துவர வேண்டிய தென்ருன் சரகேசரி வேடக்காரியை வீட்டுக் கழைத்துப்போய் தன் மனையாளை தனக்கும் அவளுக்குஞ் சட்சுவையுடனன்னம் படைக்கும்படி செய்து சாப்பிட்டுத் தாம்பூலந் தரித்துக் கொண்டிருக்கும்போது ஆரணியவல்லியாகிய வீரன் வணங்கி தந்தைபோன்றவரே சிந்தையி லெண்ணுவதொன்று அதாவது கங்கைநீராடி வந்த கன்னிகையர் அவள் கங்கை நீராடி வரவேண்டிய காரணமென்ன சொல்லவேண்டு மென்க அவன் சொல்லுகிறதாவது கேளாய் மனதருமை மகனை அன்பனே சில நாளைக்குமுன் நமதரசன் வேட்டைக்குக் சென்றனர். கங்காதீரத்தில் ஓராடவன் அழகான பெண்ணுடனிருந்து பிரமதோஷம்பிடித்த தம்பிதோஷ நிவாரண காரணமாக தம்பி மனைவியுடனும் இரண்டு பன்னசாலை செய்து தங்கியிருந்தான். அறிந்து வரப்போன கோரங்கன்சொல்லால்அரசன்கோதையின்மே லாசைகொண்டு இரவுகொண்டுவரப் போயினன் அதுசமயம் இரண்டு கழுகுகள் பாய்ந்து மோதின அரசன் அஞ்சி ஊர்வந்து பாவையைக்கொண்டு வருபவர்களுக்குப் பாரித்தசெல்வந் தருவேனென்று பறைசாற்றினன். மறையோர் குலமாது சென்று எப்படியோ பெண்ணைக் கொண்டுவந்து விட்டாள் அரசன் அப்பெண் நேர்ந்து கொண்டபடி ஆறுமாத நோன்பாகிய கங்கை நீராடற் காரியங்களெல்லாம் செய்துவர அனுமதி கொடுத்திருக்கின்னன் அவள் நீராடப்போகு மிடத்தில் அவளுக்குரியவர் வந்தாலும் வரக்கூடுமென்கின்ற அச்சத்தால் கண்ட ஆடவர்களை வெட்டும்படி யெங்களுக்கு உத்தரவு கொடுத்திருக்கிருன். நான் உன்னைக்கண்டு வெட்டத்துணிந்ததும் இது காரணந்தா னென்றனன். சரகேசரி சொல்லிய சாரங்களைத் தெரிந்த வீரவல்லி வந்திருப்பவள் தமக்கைதான் சண்டாளி தலைவனை யென்னவிதஞ் செய்தனளோ இவளை இவ்விடங் கொண்டுவந்து சேர்த்திருக்கின்றனள்,

எல்லாந் தெரிவோமென்று அன்றுதினம் அவன் மனையிற்றங்கி மறுநாளெழுந்து மதயானைமேலேறிப் பட்டண நாலுவீதியுஞ் சுற்றிப்பார்த்துச் சிறைச்சாலை சென்று சேவகர் சிலர் காட்டஅங் குள்ளவர்களைப் பார்த்து வரும்போது சீரங்கராஜனுஞ் சிதளவசனியும் ஓரிடத்திலிருக்கப் பார்த்து இவர்கள் யாரென்க சேவகர் இவர்கள்தான் பெரியராஜாவும் பத்தினியு மென்றனர் அவ் வசனங்கேட்ட ஆரணியவல்லி அனலிலிடு மெழுகுபோலுருகி நம்மை யீன்றவர்களா இவர்களிப்படிமிருக்க நாம் காணாத தேசங் களில் வளர்ந்து வரும்படி கர்த்தரிட்ட கட்டளையோவென்று கண் ணீர் ததும்பநின்றாள். வாலிபகோலமாய் நிற்கும் வடிவைக் கண்ட மாதாபிதாக்கள் இவ்வாலிபன் யார் கண்டவுடன் புத்திர சோபம் பெருகிறதே யென்று ஒருவர்க்கொருவர் கூறி சேவகரி டம் இவன் யாறென்றனர். அவர்கள் இவர் சரகேசரியின் தனை யன் சிறுவயதிற் தேசாந்திரம் போனவர் வந்திருக்கின்றன ரென் றனர் அவாகள் அப்படியே இருக்கலாமென் றெண்ணிக்கொண்ட னர் ஆரணியவல்லி அவ்விடம் நீங்கி கன்னிகாமாடஞ் சென்று காவலரெல்லாம் உபசரிக்க ஓர் மனையிலிருந்து இரவான சமையம் யாவரையும் அனுப்பிவிட்டு வேடத்தை நீக்கி வேலைக்காரப் பெண் களுடன் கலந்து தனியே சுவர்ணப்பிரபை யிருக்குமிடஞ் சென்ற னள். காட்டிலுள்ளவர்களை நினைத்து நினைத்து எக்காலங் காண் பேரமென்றேங்கி யிருக்கப்பட்டவள் வருபவளை யுற்றுப்பார்த்து தங்கையென்றறிக்து தழையுங் காதலால்மழைபோற்கண்ணீர்பொ ழிய எழுந்துதழுவி உடற்பிறப்பான தங்கமே உன்நாயகன்பிரமை மாறியதா தலைவனைக் கண்டாயா பார்ப்பினி யிப்படிசெய்து விட்டனளேநீ எப்படித் தனித்து வந்தனையென்றுகேட்டனள், தங் கையானவள் பொங்கிய கண்ணீர் புனைதுகில் நனைய விம்மிவிம்மிப் பொல்லாதவள் வார்த்தையை உண்மை யென்று நம்பி என்னையும் யென்புருஷனையும் காட்டில் விட்டுவிட்டு இப்படி வந்து விட்டீர் களே, ஆடவர் திலதமாகிய அவரிருப்பிடமெவ்விடமோ சுழுகரசர் தேடி வரச் சென்றுவிட்டார்கள். எனது நாயகனுக்குடையபிரமை மீறி என்னைச் சித்திரவதை செய்யத் துணிந்தார், புருடனைக் காட் டில் விட்டுப் போன பொல்லாதநீலியென்று உலகத்தவர்கள்செய யும்நிந்தைகளுக்கும்அஞ்சாமல் கணவன் ஆயுதங்களைத்தரித்து ஆட வரூபமாய்ச் சென்றேன் வனசஞ்சரி யென் னும் அரசியரசாட்சி யிற் சேர்ந்து அவள் என் தமக்கை யென்கிற விசேஷந் தெரிந்து மாதங்கபுரத் தரசன் மகளாற் பிரிக்கப்பட்டு கங்கை வந்து சேனா பதி மகனென்று இவ்வூரரசன் தரும்உத்தியோகம்பெற்று உன்னை வந்து கண்டேனென்று உள்ளவற்றை யெடுத்துச்சொன்னாள். சுவர்ணப் பிரபை தங்கை சொல்லிய வற்றை யெல்லாங் கேட்டு ,இந் நாடு நீ பிறந்த நாடா? என்னைக் கொண்டு வரும்படிச செய்

தவன் உன்னைக் காட்டில் விட்ட கொலைப் பாதகனை நாயகரைக் கண்டடைந்து பகையைத் தீர்த்துச் கொள்வோம் மனிதர்க ளறியாத அகன்ற கடற்றீவில் வந்து அரக்கர்கள் வைத்திருந்த சிறையினின்று மீட்டியவர்கள் ஒருநாட் பயணத்திலுள்ள இவ்விடம் வந்து ஓர் கணை முனைக் காற்று இப் பஞ்சையைவென்று சிறை மீட்க மாட்டார்களா? வரும் வரை இந் நிலையிலேயே யிருப்போமென்று பேசி உண்டு துயின்று சூரியோதப சமயம் ஆரணியவல்லி ஆண்வேடமாய்ச் செல்லு மிடங்களிற் சென்றுவர சுவர்ணப்பிரபை கன்னிமாடத்தி லிருந்தாள்.

தமக்கை நீராடப்போரும்போது தங்கை சரகேசரிக்குப் பதிலாகத் தடங்தேரேறிச்சதுரங்கச் சேனைநாயகமாய்க் கங்கைவந்து வேடன்விடும் ஓடத்திலேறி யுலாவும்போது வேடா இப்பக்கம் இரண்டு ராசகுமாரர்கள் சேர்ந்தாவது தனித்தாவது வரப் பார்த்ததுண்டுமா வென்றாள். வேடன் ஓ ஓ இவனும் நம்மைப் போலிருவர் நாட்டமாக விருக்கிறதாய்த் தெரிகிறதே யென்றிதனைச் சொல்கிறான். சேனைதிபதியின் திருமகனே நான்றான் உயிர் போன்ற இருவீரரைப் பிரிந்து காசினியெல்லாம் அலைந்துகண்டு பிடிக்கும்படி கங்கையில் ஓடம் விட்டுக்கொண்டிருக்கின்றேன். அப்படியிருக்க நீ தேடும்படியான இருவர்கள் யாரென்றான் ஆரணியவல்லியாகிய வில்லி இவனு நம்மைப்போன்ற நிலையினிற்பதாகச் சொல்லுகிறானே அறிவோமென்று நீ தேடும் ராசகுமார்கள் நாமமென்ன சொல்லுவாயானல் நான் தேடும் ராசகுமாரர்களைச் சொல்லுகிறே னென்றாள். அம்மொழியைக் கேட்ட வேடன் விளம்பலானன். நானிருப்பது தூரமான தென்னடு அன்னட்டரசன் சேனதிபதியின் மனைவிகள் எங்கள் சேரியில் வந்து இருமைந்தர்களை யீன்றனர். செயப்பிரகாசன் மதிப்பிரகாச னென்பது அவர்கள் நாமம் வேட்டையாட வந்தவிடத்தில் கொங்கணதேசத்தரசன் மகனுடன் சேர்ந்து நால்வரும் ஓர் பொய்கைவந்து நாற்றிசையிலு மிருந்து வரும் மிருகங்களைத் துணிக்கப்போய் மூன்று திசையிற் சென்றவர்கள் வந்துசேர ஒருதிசையிற் சென்ற செயப்பிரகாசன் வரவில்லை நாங்கள் மூவருந்தேடிக் காரணவாசிப் பட்டணம் வந்து சத்திரமொன்றில் தங்கினோம் இளையவர் தமையனைத்தேடி ஊர்க்குட் சென்றவர் வரவில்லை நாங்களிருவரும் அச்சத்திரத்திலுண்டு நித்திரைசெய்து கொண்டிருந்தோம். விடியற்காலையில் இரண்டுபேர் வந்தெழுப்பினர் எழுந்து பார்க்கச் சேவகரிருவரையும் ஓர் ஆடவனையும் அழுது நிற்கும் ஓர் பெண்ணையும் வெட்டுண்டு கிடக்கும் பிரேதத்தையுங் கண்டோம். வெளியிற் பலசனமு நின்றனர் சேவகர் எங்களிருவரையும் ஆண்பால் பெண்பாலாகிய இருவரையும் பிரேதத்தையும் ராஜசபை சேர்த்த

னர். அரசன் இக்கொலைசெய்தது யாரென்று கேட்க அழுது நின்ற பெண் சொல்லியதாவது மகாராஜனே நாங்கள் அயலூர் வாசிகள் இவர்களிருவரும் எங்களூர்ப் பக்கமான கிராமவாசிகள் நானும் எனது நாயகனுங் கொழுந்தனுமாகப் பாதையில் வந்து கொண்டிருக்கும்போது இவர்களும் வந்து சந்தித்து நாங்களிருக்குமிடமெலாமிருந்துவந்தனர் இவ்வூர்ச் சத்திரம் வந்துநாங்கள் தங்கினேம்இவர்களுந்தங்கிக்கொண்டனர். இரவு நாங்கள்நித்திரை செய்யும்போது இந்தவாலிபன் இக்காட்டுமனிதனை யெழுப்பி பெண்ணுக்குரியவனை ரகசியமாய்வெட்டிவிடுவாயென்றான்அவனுமப்படியே செய்துவிட்டான். அரை நித்திரையான நான் எழுவதற்குமுன் இதுநடந்துவிட்டது நான் கூச்சலிட்டேன்சேவகரும் வந்தனர். மற்றவரும் வந்தனரென்றாள். அரசன் எங்களை நோக்கி யிப்படியேன் செய்தீர்க ளென்றான். நாங்கள் இவர்களைப் பகற்கண்டதும் மில்லை யிரவுகண்டது மில்லை யிக்கொலை செய்தது மில்லை செய்தவரைப் பார்த்தது மில்லை யென்று சொல்லினேம் அப்பெண்ணணவள் இவர்கள் சொல்வதெல்லாம் பொய் அக்காட்டு மனிதன் உறையிற் கிடக்குங் கத்தியைச் சோதித்துப் பாருங்களென்றான் அவர் களப்படியே பார்க்க உதிரமயமாயிருந்தது அரசன் அதனையே ஆதாரவாகக் கொண்டு என்னை விலங்கிட்டு செங்குத்தான மலையிலேற்றியுருட்டி விடும்படியாகச் சொன்னான் கொலையாளிகள் என்னை விலங்குபிணிக்குங் காலையில் எனது சிநேகன் இக் கொலை யெங்களால் நடந்ததல்ல வென்று சொல்லி ஆக்ரோஷப்படும் போது நூறுயிர வீரர்கள் கூடிப் பிடித்துக் கட்டியுருட்டிவிட்டனர் கொலையாளிகள் என்னைபொரு செங்குத்தான மலையிலேற்றியுருட்டி விட்டனர் நான்கை விலங்குடனுருண்டு மலையடியில் நிற்கும் ஓர் யானைமுதுகில் விழுந்து கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டேன் அது மதவெறியால் னைக் கொல்லும்படி துதிக்கையை நீட்டி நீட்டிப்பிடிக்க பார்த்தது நான் அதன் கைக்கு எட்டாத இடத்தில் ஓதுங்கி ஓதுங்கி என் வல்லமையாலிருந்து கொண்டேன் மூர்க்கமாய்ப் பலவிடங்களிலும் ஓடி மரங்களிற்றேய்த்து விடும்படி மரங்களையடுத்து வந்தது நான் ஒரு மரத்திற்றாவியேறிக் கொண்டேன் அவ்விருக்ஷத்தில் ஒரு வானரமிருந்தது அதனிடம் விலங்கை முறிக்கும்படிசைகை செய்தேன் அது கீழிறங்கி இரண்டு கற்களைக் கொண்டு வந்து ஒவறையடியில் வைத்து ஒன்றால் அடித்தது விலங்கு ஒடிந்துவிட்டது நான் மரத்தைவிட்டிறங்கி விசாரமுடையவனாய் ஒருவரைப் பிரிந்து இருவரைப்பிரிந்து மூவரையும்பிரிந்து தனியாய் விட்டோமேயென்று மனம் போன போக்காய் வடதிசைவந்தேன் ஒரு மலைச்சரிவில் பலமந்தியினங்கள் மத்தியில் ஒரு பெண்ணிருக்கக்கண்டு அடுத்துச் சென்றேன் பெருங்குசங்குகள் கற்களை

கொண்டும் தடிகளைக் கொண்டும் உருமிவந்தன நான் என் கைத்தடியாலடித்து நூறு குரங்குகளைக் கொன்றேன் மற்றக் குரங்குகள் ஓடிவிட்டன அப்பெண் என்னிடம் வந்தாள் வரலாறு கேட்டேன் அவள் சொல்லியது நான் கங்கையில் .ஓடம்விடும் காண்டவனென்னும் வேடர்தலைவன் மகள் குஞ்சரி என்பெயர் வேடச்சிறுமிகளுடன் சேர்ந்து சேரிக்குச் சிறிது தூரமான விடத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது சில பெருங்குரங்குகள்வந்து என்னைத் தூக்கிக் கொண்டுவந்து இம்மலையில் வைத்து கனிவர்க்கங்கள் கொடுத்துக் காத்துக் கொண்டிருக்கின்றன இன புருஷராகிய நீர் வந்து மீட்டி விட்டீர் என் பிறகே வருவீர் தந்தையிடம் போவோமென்றழைத்து வந்தாள் நான் அப்படியே வந்து அவள் தந்தையைக்கண்டேன் அவன் சங்கதியெலாம் விசாரித்தறிந்து கொண்டு இப்பெண்ணை நீயே கலியாணஞ் செய்துகொண்டு இவ்விடமிருப்பா யென்றான் நான் என் தோழர்களைத் தேடித் திரிகிறதென்ன கலியாணஞ்செய்து இவ்விடந் தங்கியிருக்கவா போகிறேன் அவர்களைக் கண்டாலல்லவா சஞ்சலமனைத்துந் தீருமென்றேன் காண்டவன்கங்கையில் ஓடம்விட்டுக்கொண் டிருப்பாயானல் காணமற்போன சிநேகிதரைக் கண்டுபிடிக்கலாம் எத்தேச வாசிகளும் இவ்வழிப் பிரயாணஞ்செய்வார்களென்றான் நானதற்கிசைந்து அவர்களைக் கண்டுபிடித்தகாலம் உனது கன்னிகையை மணஞ்செய்து கொள்ளுகிறேனென்று காலம்பலவாய் ஓடம் விட்டு விசாரித்துக் கொண்டிருக்கிறேன் ராசகுமாரர் புலனென்றுந் தெரியவில்லை யென்றான் வேடன்வரலாறுகேட்ட வீரகன்னி அன்புமீதூர வேடர்சேரியில் வளர்ந்து வேடன் மைந்தனுடன் வேட்டைக்கு வந்ததாக அவர்கள் சொல்லியிருந்தபடியால் அவ்வேடன் இவ்வேடன்தான் சமையம்போல் வரலாறு சொல்லித் துணையாக்கிக் கொள்ளுவோமென்று நீ நாடி எதிர்பார்க்கும் இராஜகுமாரர்களைக் காணும்படி செய்கிறேன் நான் நாடிய ராஜகுமாரர்களையுங்கண்டுபிடிக்க முடியவில்லை காணும்போது எல்லாரையுங் காணலாமென்று அவனிடம் சொல்லினள் தஙகைகாவலுக்கு வந்தனளென்று பொங்கியகாதலுடன் கங்கை நீராடு மங்கையுடன் மாநகரம்சென்று மாடம்புகுந்து வேடன்வரலாறனைத்துங்கூறினள் அவள் நமது புண்ணியர் தோழர்களும் இப்படியாதிரிகின்றார்களென்று உருக்கமாய்ப்பேசி இருவரும் யாருமறியாமல் சேர்ந்திருந்தனர்.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று

எட்டாம் அத்தியாயம்

தெங்களாபுரத்தில் வனசஞ்சரி யென்னு மாதரசி சேனாதி
பதியாய் தன்னரசை நிலைநிறுத்திய ஆடவனும் அவன் மனைவியும்
அர்த்தராத்திரியிற் போய்விட்டனரென்று மாதர்கள்வந்துகூற
மனச்சஞ்சலமுடையவளாய் மந்திரிபிரதானிப் பெண்களுடன்
யோசித்து பெண்பாலாகிய நாம் எவ்வளவு வீரமாயிருந்தாலும்
ஆண்பாற்றுணை வேண்டியதாகவே யிருக்கிறது என்ன செய்யலா
மென்றாள் சமயயூகி யென்னு மந்திரிப்பெண் சொல்லுகிறாள் நாமே
வோராடவனைக் கொண்டுவரலாகாது தந்தையாகவும் குருவாகவும்
விளங்கப்பட்ட பராங்க முனிவரனுமதியாற் பாதுகாப்புத்தேடிக்
கொள்ளவேண்டு மென்றாள் வனசஞ்சரி மாதர்சேனைகள் சூழ
ரதத்தின்மேற் சென்று முனிவர் முனிவர்பத்தினியைவணங்கி நின்
றாள் அவர்களாசீர்வதித்து உன் அரசியல் சேமமாவென்க அவள்
இதுவரை சேமந்தான் என் நாட்டைச் சுற்றிப் பலபகைஞர்களி
ருக்கின்றனர் இனி அவர்களால் என்ன தீங்கு நேரிடுகிறதோவென்
றனள் பராங்கமுனிவர் அஞ்சவேண்டாம் ஆடவர்கள்பலர் உன்
தாயிட்ட சாபத்தை யேற்றுக் கற்சிலைகளாக விருக்கின்றார்களல்ல
வா அசசிலைகளிலொன்றை யெடுத்துக் கொண்டுபோய் இம் மந்தி
ரத்தைச்சொல் சிலையிலடங்கிய வீரன் மனிதர் கண்ணுக்குப் புலப்
படாமல் வெளிப்பட்டு முன்னைய நினைவொன்று மில்லாமல் நாட்
டைக் காத்திருப்பானென்று மந்திரத்தைச் சொல்லினர் வனசஞ்
சரி மந்திரத்தைப்பெற்று தாயுடன் தாமரைப் பொய்கைவந்து
சமைந்த கல்லுருவங்களில் மகா வுன்னதமாய் விளங்கும் மன்னர்
பிரான் சமைந்தசெஞ்சிலையைத்தூக்கிரதத்தின்மேல்வைத்துமாதா
பிதாக்கள் விடைபெற்றுமாநகர்வந்து குலதெய்வமாகிய மங்களேஸ்
வரிஆலயமுன் முகப்பு மேடையில் நிறுத்தி முனிவர்கூறிய மந்தி
ரத்தைச் செபித்தாள் சிலையாயமர்ந்த செயப்பிரகாசன் மந்திரவல்
லமையால் சிலையிலிருந்தபடி யிருக்கத்தன்னுருவாகி யாவருக்குந்
தோன்றாமனின்றுஅரசியே நான் செய்யும் வேலையென்ன வென்றான்
என் நாட்டைக்காக்க வேண்டுமென்று மங்கை வணக்கமாகக் கூறி
னள் மன்னன் அப்படியே காக்கிறேனென்றான் அரசி மகிழ்ந்து
அரண்மனைச் சென்றாள் செயப்பிரகாசன் செங்கை வாளுட
னெழுந்து சூட்சம சரீரியாய் வனசஞ்சரி யாட்சியான நாட்டின்
எல்லைப்புறம் நகரங்களெங்கும் உலாவி கொள்ளை, களவு, செய்
வோர் ஒருவர் பொருளை வஞ்சிக்க எண்ணுவோர் பெரியோரை
நிந்திப்போர் அந்நாட்டின்மேல் படையெடுப்போர் யாவரையுங்
சண்ட கண்ட விடங்களிற் சண்டங்கண்டமாக்கி ஆக்கினை சக்கரம்
போற்றிரிந்த காலத்தில் சோரம் விபசாரம் அந்நிய படையெடுப்பு
முதலிய குரோதங்களற்று புலியும் பசுவும் ஓர் துறையில் நீருண்

ணப் பாம்புங் கீரியும் பரிந்து விளையாட கிளியும் பருந்தும் ஓர் கூட்டிலிருக்க எலியும் பூனையுமிணங்கிக் குலாவ சிங்கமுபானையுஞ் சேர்ந்து வுறவாட நளமாய் மாதகீதமும்மாரிபொழிய மனுமாந் தாதா புரூரவன் முதலிய மகா சக்கரவர்த்திகள் ராச்சியம்போல் தன் சென்மதேயத்திற் செய்யக்கூடிய அதிகாரத்தைச் செய்து ஒரு வீர தெய்வம்போல் விளங்கியிருந்தான் தமையன் இப்படி யிருக்கத் தம்பியினிலையைப் பார்ப்போம் யாத்திரைவாசியான மதிப்பிரகாசன் பலதலஞ்சுற்றிப் பலவூரலைந்துதமையன் பத்தினிகள் செய்தியொன்றும் புலப்படாமல் யாத்திரைவாசிகளை நீங்கி தனியே முன்னிருந்தவிடம் வந்தான் அங்கு அவர்களைக் காணமற் கவலைபெருக இவ்விடமிருந்தவர்கள் எவ்விடஞ் சென்றனரோ முன்போல் அரக்கர்கள் மாயையால் வேறு பிரித்தனரோ அரசர்கள் அண்ணலை வஞ்சித்து பெண்ணரசிகளைக் காணமற் கொண்டு சென்றனரோ ஒருவிபரமுந் தெரியவில்லையே யென்று வருந்தி அங்கு திரியப்பட்டவைகளையும் பறக்கப்பட்டவைகளையும் பார்த்து விலங்கினங்காள் புள்ளினங்காள் வீராதி வீரனைக்காணீர்களோ உங்களினங்களை யாகத்தில் மாண்டுபோகாமல் ரட்சித்த வுத்தமனைக்காணீர்களோ உங்களினமெலாம் பந்தலிடப் போர்க்களவினோதம் பார்த்துநின்ற புண்ணியனைக் காணீர்களோ ககனப்பரப்பில் உங்களினமலாஞ் சூழக் சமுகு வாசனத்திற் கருங்கடல் மேற் சென்ற கருணையங்கடலைக் காணீர்களோ துட்டரைச் சங்காரஞ் செய்து சுவர்ணப்பிரபை சிறைமீட்ட துரைமகனைக் காணீர்களோ பூலோக ரம்பையர்போன்றபூவையர்கள் வரக்காணீர்களோவென்று பல பல விதமாய்ப் புலம்பி ஆங்கோர்வழியாய்ப் போனன் அங்கு கங்கையில் நீராடிக்காவிவஸ்திரங்களையுலர்த்திக்கொண்டுபெருங்கும்பாய்ப் போகும் பரதேசிகளைக்கண்டுஅவர்களிடஞ்சென்றுஎங்குச்செல்கிறீர்களென்றான் அதிலொருவன் வாரங்கபுரப்பட்டணத்தில் ஓர் மறையவர்மாது யாத்திரைவாசியாய் வருபவர்களுக்கெல்லாம் அன்னதானஞ் செய்கிறாளாம் அதற்காகச் செல்லுகிறோ மென்றனன் மன்னவன்றம்பி இன்னதிலோர் புதுமையிருக்கின்றது அறிந்து வருவோமென்று அவர்களுடன்சென்றுவாரங்கபுரிப் பட்டணத்தை யடுத்துவந்து அக்கூட்டத்தினின்று நீங்கி பாட்டைமார்க்கத்தில் சோலையு மடமுமிருக்க அதனிற்சென்று சந்நியாசி யொருவரிருக்கப்பார்த்து வணங்கி நின்றான் அவர் அவனை யாசீர்வதித்து இருக்கச் சொல்லினர் ராசகுமாரன் இருந்து அவரிடம் பல தேச சங்கதிகளைப்பேசி இவ்வூரிற் பார்ப்பனப்பெண் பரதேசிகளுக்கு அன்னதானஞ் செய்யுங்காரண மென்னவென்றான் சந்நியாசி யாத்திரைவாசியே அவள் செய்கிற அன்னதானம் புண்ணியத்துக்காக வோசெய்கிறாள் அது விபரங் கேட்பாயாக இவ்வூரையாளும் போரங்காராஜன் வேட்டைக்குப்போன விடத்தில் ஓர் பெண்ணைக்

கண்டு அவளை எடுக்கப்போய்ப் பக்ஷிகளாற் பங்கப்பட்டு வந்து விட்டான் அன்னமிடும் பெண் போய் எப்படியோ கொண்டு வந்து விட்டாள் அரசன் லக்ஷக்கணக்கான பொன்னும் கிராமங்களுங் கொடுத்திருக்கிறான் அவளைச் சிறுவயதில் மணஞ் செய்தவன் செங்கமலபுரம் செயதேவஐயன்மகன் சீராளன் பெண் தாய் வீட்டிலிருக்கத்தன்னூர் போனவன் தேசாந்தரம் போய்விட்டான் வருடம் பதினைந்தாகியும் வரவில்லை செல்வமயமாய் விளங்கும் இணைவசியென்னும் பார்ப்பனப்பெண் கணவனைக் கண்டுபிடிக்கவே யிவ்விதஞ் செய்கிறாளென்று அவள் வரலாறனைத்தும் இவன் கேட்கக் கேட்கச் சந்நியாசி சரியாய்ச் சொல்லி முடித்தார் சங்கதியனைத்தையுங்கேட்ட மதிப்பிரகாசன் கங்கைக் கரையிலுள்ளவர்கள் காணாமற் போன காரணம் இப்பார்ப்பினிசெய்த சூட்சியினாலேயே ஏற்பட்டதாய்த் தெரிகிறது தமையன்மனைவிமட்டு மிவ்விடம் வந்திருக்கிறதாய்த் தெரிகிறதே யொழிய தமையன்போன காரணம் நமது தேவி சென்றசெயல் கழுகரசர்கதியொன்றுந் தெரியவில்லையெல்லாம் அவளிடமேசென்று விசாரிப்போமென்றுஅவ்விடத்தை விட்டு வேறிடஞ்சென்றுமுன்குடுமிசிரசிற்றுலங்கமுப்புரிநூல் மார்பிலிலங்க எதிர்ப்பட்டவர்களை யப்புறம் விலகுங்களென்று கையசைத்து வாரங்கபுரிப்பட்டண வீதியில் வந்தான் கடைவீதியிலுள்ளவர்கள் வாலிபப் பிராமணரே நீர் எந்த வூரென்றனர் அதற்கவன் நான் செங்கமலபுரம் செயதேவஐயர் மகன் சீராள ஐயர் சோமநாதஐயர் மகள் இணைவசியென்னும் என் மனையாளிடஞ் செல்கிறேனென்றான் அவர்கள் ஐயரே இங்கு வாருங்கள் வாருங்கள் அம்மாள் செய்துவரும் அன்னதானம் மைமேற்பலித்ததென்றழைத்து ஆசனப்பலகை தந்திருக்கச் செய்து போனசங்கதிகளை விசாரித்தும் இங்குள்ள செல்வவாரத்துச் செய்திகளையுஞ்செப்பியுமிருந்தனர் பிராமண வர்க்கத்தைச் சேர்ந்த வொருவன் பின்காற் பிடரியிற் படும்படியோடி அம்மாள் ஐயர் வந்துவிட்டாரென்று சொல்லினன் இணைவசி உலகிலெனக்கு இணையாரென்றெழுந்து ஆனந்தம் பொங்க வந்தவன் பிறகே வந்தாள் மதிப்பிரகாசன் ஆத்துக்குச் செல்வோமென்று அநேக பிரபுக்கள்சூழஎழுந்து சென்றான இருவருஞ் சந்திக்கும்போது இங்குள்ளவரும் அங்குள்ளவரும் ஒருவரை யொருவரறியச் செய்தனர் மதிப்பிரகாசன் மறையவர் மாதைக்கண்டு நேரிற்செல்ல மங்கை ராச குமாரனழகைக்கண்டு சிறு வயதிற் கலியாணமுடிக்கும் போதொரு விதமாயிருந்தவர் தேச சஞ்சாரஞ் செய்து வாலிபதிசையானதாற் றிருந்தி விட்டாரென்று அருகிற் சென்று வணங்கினள் இளையவன் நமது இனத்தைப் பிரித்த கனத்ததனக்காரியிவள் தானென்று கமலமலர் முகத்திற் களிப்பைக்காட்டி அவள் பிறகே வீடுபுகுந்தான் வீடு இடங்கொள்ளாதபடி சுற்றங்கள்வந்து நிறம்பின வந்த

வர்களெல்லாம் ஆளுக்கொரு கேள்வி கேட்டனர் மதிப்பிரகாசன் தன் மதியினுலும் கேள்வியினுலும் அயலூராளியான ஒருவன் எவ்வளவு சொல்ல வேண்டுமோ அவ்வளவையுஞ் சொன்னுன் அவர்கள்கேட்டுச் சந்தேசமற்று நீங்கித் தங்கள் தங்கள் வீடு சென்றனர்.

இணைவசி சட்சுவையுடன் அன்னஞ் சமைத்துப் படைக்க மதிப்பிரகாசன் சாப்பிட்டிளைப்பாறித் தாம்பூலந் தரித்து அவள் ஆசாபாசபோகமெல்லாந்தன்மெற் படும்படியாய்அங்கிருந்துயோசிக்கிருன். இவள் ஓராடவனுக்கு வாழ்க்கைப்பட்டுப் பாத்தியமானவளே அதிலும் பிராமணச் சாதியே நம்மை ஐயந்திரிபாநம்பி விட்டாளே இது நமக்கேற்குமா தருமதேவதை சம்மதிக்குமா தமையனுரறிந்தால் பரதார துரோகியென்று பசருவாரே தமையனிலையை அறிவதற்கு இதனைத்தவிர வேறுவழி யில்லையே உண்ணுதவிடங் கொல்லாது உள்ளபடியாகிறதென்று துணிந்து அவள் நாயகனைப்போல் இனிய வசனங்கள் கூறி பெண்ணே பஞ்சாங்க புரோகிதனைப் பலவூரலையு மென்னை ஜமீன் நிலையிலாக்கி விட்டாய் கங்காதீரத்தில் வந்திருந்த ஒருவன்கன்னியைக்கொண்டு வந்து காவலன்பா லொப்புவித்தனை அவன் தனியா யிருந்தானு கூடவிருந்தவருண்டுமா கனனியைக் கொண்டுவரும்போது அவர்களெங்கு சென்றனர் சொல்லுவா யென்முன் இணைவசி யிச்செய்தியைத் தங்களிடஞ் சொல்லாமல் யாரிடஞ் சொல்லப் போகிறேன். கேட்பீராகக் கங்கைக் கரையில் வந்திருந்தவர்கள் மகாவீரர்தீவாந்தரங்களிற் சென்று மாதர்களைக் கொண்டுவந்து தங்கியவிடத்தில் தம்பிக்குப் பிரமை தொடர்ந்தது அது தீருவதற்காக இருந்தனர் நான் சென்று அவ்வீரனைத் தந்திரமாயழைத்துச்சென்று பராங்க முனிவர் பத்தினி சுராங்கி சாபமேற்பட்ட பொய்கையில் விடுத்துக் கல்லாக்கிவிட்டு மாதை யழைத்து வந்து மன்னனிடமொப்பித்து வரிசையெல்லாம் பெற்றேன். எவ்வளவு செல்வம் பெற்றுலும் மணவாளனில்லாவிடில் என்ன பயனென்றுதங்களைக்கண்டு கொள்வதற்காகச்சதகோடி பரதேசிகளுக் கன்னம்படைத்து வருகிறேன் வருகிறயாத்திரைவாசிகளிடமெல்லாம்விசாரித்துக்கொண்டே வந்தேன். அடியாள் செய்த அன்னதானப் பலனுல் தேவரீர் வந்துசேர்ந்தீ ரென்முள். மாபாவி சொல்லியதைக் கேட்ட மன்னன் மகன் மனங்கலங்கிச் சற்றே திடமாகி பெண்ணே அழைத்து வந்தபெண் அரசனிடமெப்படி யிருக்கிருள். அவன் தம்பியுந் தேவியுங் காட்டிலெப்படி யிருக்கின்றனர் தெரியுமா வென்முன். பார்ப்பனப்பெண் மாது அரசனிடம் ஆறுமாதகங்காஸ்நானநோன் பென்றுசொல்லியிருக்கிருள். முடிவாகவில்லை மற்றுமிருவர்செய்தியு மெனக்குத்தெரியாதென்முள். மன்னன் சரிஉடையவனைக் கல்லாக்கி

உத்தமியை யொருவன் இல்லாக்கி எல்லாப் பாக்கியத்தையும் பெற்று என்னை எதிர்பார்த்திருந்தவளே யுன்னைப்போலொருத்தி யெனக்குக் கிடைப்பாளா வென்முன். இணைவசி சப்ரகூடமஞ் சத்திற் சயனிக்கலாம் வாருங்களென்ருள். பூபாலன் புண்ணிய தீர்த்தகலம் போய்வந்த நான் நாளை யுன்கருத்துப்படிநடக்கிறேன் கூடவந்தவர்கள் சத்திரத்தி லிருக்கின்றனர் கண்டுபேசி வருகிறே னென்று சொல்லத் தகுந்ததையெல்லாஞ் சொல்லி அவளை நிறுத்திவிட்டு அவ்வீடு நீங்கியோரிடம் வந்திருந்து வர்த்தமானங் களையெல்லாம் எண்ணி யெண்ணி மனம் புண்ணுகி பழிகாரி வினை செய்து விட்டாளே தமையன் மனைவி கற்பழியாதபடி யிவ்விட மிருக்கிருள் தமையன் நல்லாக விருக்கிருர் தன் மனைவி செய்தி தெரியவில்லை போரங்கனிடம் போராடி பூவையை மீட்போமென் ருலும் ஆயுதங்களில்லையே முனிவரிடஞ்சென்று சாப நிவாரணம் பெற்று தமையனை யழைத்துவந்து சண்டையிட்டு தையலை மீட் போமென்று அவ்விரவே நகரைக் கடந்தான் இணைவசி போன நாயகன் பொழுதுதையவரை வாராதிருப்பதைக்கண்டுஎழுந்து சத் திரஞ் சாவடி பலவுந்தேடிக் காணுமல் வேசாரி வீடுவந்தாள் காலை யில் பிரபுக்கள் வர்த்தகர்கள் உத்தியோகஸ்தர்கள் புதுஜமீன்தா ரைக் காணவேணுமென்று வந்து வெளித்திண்ணையிற் காத்தி ருந்தனர். இணைவசி யாதொன்றும் பேசாமல் வீட்டில்நுழைந்தாள் அவள்போன குறிப்பையும் கேட்கக் கேட்கப் பதிற்சொல்லாததை யுங்கண்டு எவனேவொருவன் புருஷனென்று புகுந்து இணைவசி யைச் சாதிப்பிரதிஷ்டையாக்கி விட்டனனென்று சப்தமிட்டனர். அந்நேரமே அவளேங்கிச் சீவனைவிட்டாள் வந்தவர்களெடுத்தடக் கஞ்செய்து ஒருவனை மோசப்படுத்தி அவன்பத்தினியைகொண்டு வந்தபாவம் போகுமாவென்று பேசிப்போயினர். பிரமகுலமாகிய அப்பெண் நம்பியதோஷம் ஊர்கடந்துசெல்லும் மதிப்பிரகாசனைத் தொடர்ந்து அறிவைப் பேதப்படுத்தியபடியால் பார்ப்பினி சொல் லிய பாதையையும் விட்டு மதியையும்விட்டு மனம்போனபோக்காக வனங்களிற் சென்ருன்.

வாரங்கபுரப் பட்டணத்தில் போரங்கராசன் பொன்னிற மங்கைபுகன்ற நோன்பு முடிவுநாள் நெருங்கிவிட்டதென்று கலி யாண முகூர்த்த நாள் வைத்து அரசர்களுக்கெல்லாம் ஓலை போக்கி ஊரையலங்காரஞ் செய்யும்படி செய்து மணவாளக் கோலமாயிருந்தான் ஆரணியவல்லியுஞ் சுவர்ணப்பிரபையும் அன் றிரவு வழக்கம்போற்கலந்து பேசுவதெலாம் பேசி நோன்பு முடி வாய் விட்டதே நாயகர்வரவில்லையே அவர்கள் எங்கு திரிகின்ற னரோ எங்கிலேயிலிருக்கின்றனரோ பாதகத்தி பார்வேந்தை யென்ன மோசப்படுத்தினளோ அவளையுபாயமாய் விசாரிப்போ

மென்றாலும் ஒருவன் மோசத்திற் சிக்கிச்சாதிப்பிரஷ்டையாக்கிச் சண்டனூர் சென்றனளே ஆயுதங்களிருப்பினும் அவன் பெரும் படையோடெதிர்த்தும் போராடும் வல்லமையில்லையே இது சமயம் ஊர்கடந்து போகிறதே யுத்தமமெனத்துணிந்து இருவரும் பணிவிடைப் பெண்கள் போலுடைபணிந்து உள் மாடம் நீங்கி வெளிமாடம் வந்து கன்னிகை விரும்பும் பொருளைவாங்கி வரக் கடைத்தெருபோகிறோ மென்று காவற்பெண்களிடமுங் காவல் வீரரிடமுங் கழறிக்காவல் கடந்து ஊர் கடந்து நாயகன் தோழர் வேடனிடஞ் செல்லுவோமென்று ஆரணியவல்லி ஆண்பால்வேடமாய் ஆயுதமேந்தி முன்னதாகவும் சுவர்ணப்பிரபை பின்னாகவும் நடந்து கதிரோனுதையத்திற் கங்கைக்கரை சேர்ந்தனர் கிரிசரன் வழக்கம்போல் ஓடம்விட்டு வடகரைவந்து மாதரசியுடனிற்கும் வாலிபன் ரூபியைக் கண்டு இப்பெண்ணை என்ன விதமாய்க் கொண்டு வந்தானோ வென்றெண்ணி யிருந்தான் ஆரணியவல்லி சிறிது நீரிலிறங்கி யோடத்திலேறி வேடராசன்றிருமகனே வேந்தர் மெச்சும்சீமானே என்னையும் இதோ நிற்கும் மாதரசியையும் ஓடத்திலேற்றி உன்னிருப்பிடங் கொண்டுபோய் சேர்ப்பாயானால் நீ நாடிக்கொண்டிருக்கும் ராசகுமாரர்கள் செய்திகளைச் செப்புகிறேனென்றாள் அவன் ஆத்திரமுடையவனாதலால் அப்படியே வந்தேறிக்கொள்வீர்களென்று ஓடத்திலேறும்படி செய்து கங்கையாற்றில் விட்டுத்தென்கரை சேர்த்துத் தன் குடிசைக்கழைத்துபோய் இருக்கும்படிசெய்து எங்கள் வேந்தர்களுடைய செய்திகளை விளம்பவேண்டுமென்றுவணக்கமாய் நின்றுகேட்டான் சுவர்ணப்பிரபை தங்காய்சொல்வா யென்றாள். அவள் தண்டகாரணியத்தில் வேட்டையாடவந்ததுமுதல்பிரிந்து இவ்விடமிருப்பதுகடைசியாகச்சொல்லிமுடித்தாள். வேடன்அடியற்றபனைபோல் அவர்கள் அடித்தலங்களில் விழுந்து அருமைத் தாய்மார்களே நீங்கள் இப்பாடாபட்டு வந்திருக்கிறீர்கள் எனது ஐயமார்களை எக்காலங் காண்பேன் கனிவாய் மொழியென்று கேட்பேனென்றழுது பிரலாபிக்கும் பத்தனை பத்தினிகள் நோக்கிப் பங்கயக்கண்ணீரரும் பப்பழமையான நட்பாளா வருந்தவேண்டாம் கடவுள் கருணையால் நாம் மூவருங் காணுங்காலங் கண்டுகொள்ளலா மென்று பகைவன் பலமாயிருப்பதனால் மறைந்திருக்க வேண்டுமே யென்றனர். அவன் அந்நேரமே தன்னுட்களைக் கொண்டு நிலவறையொன்று சமைத்து அதிலிருப்பீர்க ளென்றான். மாதர்கள் அப்படியே சென்று மறைவாயிருக்க வேடன் தேனுந் தினைமாவு மதுரகனிகளுங் கொண்டுவந்து கொடுத்துச் சாப்பிடும்படி சொல்ல அவர்களுண்டு பசியாறியிருந்தனர். வேடன் ஓடம்விடும்படிசென்றான் குஞ்சரி அவர்களிருப்பிடஞ்சென்று வணங்கியிருக்க அம்மாதர் அவளைநோக்கி நீயார் மகளென்றனர். அவள் நான் கங்கைச்

சேரித் தலைவன் காண்டவன் மகள் காடுசென்றேன் கவியினங்கள்
கவர்ந்துசென்று வைத்திருந்தன உங்கள் பத்தன்வந்து மீட்டிக்கொ
ணர்ந்தனர் என்தந்தை மணஞ்செய்து கொள்ளென்று சொல்லியும்
இணங்குகிறாரில்லை நீங்கள் என்னை மாலையிடும்படி செய்
வீர்களென்றாள், மாதரசிகள் உன் மனம்போற் செய்கிறோமென்று
அவள் சென்றதின் பின்வந்த வேடனைநோக்கி உன்னை விரும்பி
யிருக்கும் வேடராஜன் மகளை விவாகஞ்செய்து கொள்வாயென்ற
னர். அவன் ஆண்டவர்கள் கமலமுகங் காணாதிருக்க நீங்கள் இக்
கோலமாய் வந்திருக்க நான் கலியாணமுடித்துக் களித்திருப்பவனா
அவர்களைக் காண்கிறசாலம் எக்காலமோ அக்காலம் எல்லாம்
அனுபவித்தே னாவேனென்றான். தோகையூர்நள் அவன் தோழ
மையைக் கொண்டாடி வேடகன்னியிடம் எங்களாடவர்களை நாங்
கள் பெறும்போது நீயும் பெறுவாயென்றிசைந்து சொந்தவிடமா
யெண்ணிச் சுகமாயிருந்தனர்.

ஓர்நாள் சாயங்கால வேளை வேடனும் வேடரூபந்தரித்த
ஆரணியவல்லியும் இப்பக்கங்களில்ராசகுமாரர்கள் வரமாட்டார்
களாவென்று உலவிக்கொண்டிருக்கும்போது கன்னி நாட்டரசனை
யுங் காரிகையையுங் கண்டுபிடிக்கும்படி காசினியனைத்தையும்
வட்டமிட்டுக் கங்கைமார்க்கமாய் வருங்கழுகரசர்கரையிலுலவுமிரு
வரைத் தூரத்தேகண்டு நமதரசகுமாரர்களோவென்று சந்தே
கித்து கிட்டவந்து வேடகோலமாயிருப்பதைக்கண்டு நெருங்கும்
போது ஆரணியவல்லி அக்கழுகினங்களைக்கண்டு ஐயமார்களே
வாருங்களென்றாள் கழுகினங்கள் திகைத்து இவ்வேடன் கண்ட
வன்போலழைக்கிறானே யறிவோமென்றடுத்து வந்திருந்து நீ
யார் எங்களை யறிந்தவர்களோவென்க மாதுவேடன் அறிந்தவர்
கள்தான் நீங்கள்யாரைத்தேடி திரிகிறீர்களோ அவர்களிலிருவர்
இங்கிருக்கின்றனர் வாருங்களென்றழைத்து கிரிசரனுடன் நிலவரை
சென்று அக்காள் கழுகரசர் வந்துவிட்டனரென்றனள் உள்ளிருந்
தசுவர்ணப்பிரபை வெள்ளம்போற் கண்ணீர்வழிய வெளிவந்து
புள்ளரசர்களே எங்கிருந்து வருகிறீர்கள் வள்ளல்களைக் கண்டீர்
களாவென்றாள் கழுகுவேந்தர் பார்ப்பினிபின்சென்ற உங்களிரு
வரைத் தேடிப்பார்த்தோம் காணவில்லை பன்னகசாலை சென்று
பார்க்க இருந்த இருவருமில்லை ஆக நால்வரையுந் தேடிநாடெ
லாம் அலைந்து திரிகிறோமென்றனர் ஆரணியவல்லி சுயரூபமாய்
நின்று தங்களிருவர்வரலாறுகளை எடுத்துச்சொல்லினள். கழுகர
சர் தலைவர்களைக்காணும்போது கண்டு கொள்வோம் சுற்றித்
திரிந்தவிடத்தில் இரண்டுதன்மைகள் கண்டுவந்தோம் தெங்களா

புரப்பட்டணத்தில் ஓர் சிலையினின்று வீரனொருவனெழுந்து அந்நாட்டில் அக்கிரமஞ் செய்பவர்களையும் அந்நியநாட்டிலிருந்து அக்கிரமஞ் செய்யவருபவர்களையும் வெட்டியெறிகிறான். வாரங்கபுரிப் பட்டணத்தில் ஒருவன் பெண்ணை இரவேகொண்டுபோய்விட்டானென்று அவ்வூரரசன் திக்கெங்கும் வேவுகாரர்களை யனுப்பிக்கொண்டிருக்கிறான் அச்செய்கை உங்களிருவர் செய்கையா யிருப்பதால் வேவுகாரர் இவ்விடம்வந்தாலும் வரக்கூடும் போரங்கன் பெரியராஜன் பலவரசரும், பலபடைகளும் அவனுக்கு உண்டும் அவனையெதிர்த்து வெல்ல நமது போர்ச்சிங்கங்களால் ஆகுமேயன்றிநம்மால்முடியாது தெங்களாபுரப்பட்டணத்தில் ஒதுங்கித் தெய்வவீரன் ஆதரவு பெற்றிருந்தால் தீங்கொன்றும் வாராது செல்வரைக் காணும்போது கண்டுகொள்ளலாமென்றனர். தெரிவையரிருவருஞ் சம்மதித்துத் தெய்வதரிசனஞ்செய்து வருகிறோமென்று வேடனிடஞ்செப்பிக் கழுகினங்களிலமர்ந்தனர் வான்பறவைகள் மைபோன்ற காரிருளில் வான்வழிசென்று தெங்களாபுரப்பட்டணத்து மங்களேஸ்வரியாலய மணிமுகப்பு மேடையில் வந்திறக்கிவிட்டன. மங்கையரிருவரும் அங்கிருக்குஞ் சிலைமுன்சென்று எங்களைக்காத்தருளவேண்டுமென்று பணிந்துநிற்க சுவர்ணப்பிரபைக்குக் கற்சிலையைக்கண்டது கணவனைக் கண்டதுபோலாகிக் காதல்பெருகக் கனதனம் விம்மக் கைவளை கழல சிலையிற்சென்ற மனந் திரும்பாதிருக்க இப்படியானகுறிப்பைக் கண்டு ஈதென்ன இச்சிலை காந்தமிரும்பையிழுப்பதுபோல் நமதந்தக்கரணத்தையெல்லாமிழுக்கிறதேயென்று திகைத்து நின்றாள் சிலையிலடங்கியிருக்குந் தெய்வீகமன்னன் சுவர்ணப்பிரபையென்னுந் தோகையைக்கண்டவுடன் யோகியுள்ளம்போ லொருவழிப்பட்ட மனம் காமவழியிற்சென்று உருக்கமும் அன்பும் உத்தமிமேற்படிய சூட்சமரூபமாய் வெளிப்பட்டு சுராங்கி சாடவல்லமையால் சொந்த மனையாளென்றறிந்துகொள்ளுஞ் சுயவுணர்ச்சியின்றிச் சொல்வதாவது அர்த்தராத்திரியில் வந்து வணங்கும் அணங்கரசிகளே யுங்களைக் காக்கிறேன்நீங்கள்எந்தவிடத்திலிருந்தாலுஞ்சரியென்றனன்ஆரணியவல்லி இத்தெய்வம் எங்கிருந்தாலும் வந்துகாக்கிறேனென்று சொல்வதால் நாம் இங்கிருக்கவேண்டியதில்லை இப்பட்டணத்தையாள்வது எனது தமைக்கையாயிருப்பினும் நாயகரைப்பிரிந்து வாட்டமடையும் நாம்போவது நலமல்லவென்றனள் மங்கை தங்கையுடன் கழுகிலமரவுவைகள் வானிற்சென்றன. தீரமன்னன் சிலையிலிருக்க மனம் பற்றாமல் செங்கைவாளிலங்க தங்கமேனிதுலங்கச் செம்பதியருகு சேயிழைகண்களுக்குத்தெரியும்படிசென்றான். நங்கையும் இத்தெய்வம் நம்மைக்காக்கிறதற்காக வருகிறதென்றுநாயகன்மேனிச்சாயலாய் விளங்குந்தோற்றத்தைக் கடைக்கண்களாற் பார்த்துக்கொண்டேபோனாள் மாதர்சேரிசேர்ந்து நிலவரை சென்றிருந்தனர். கிரிசரன் வந்து கண்டு கனிவர்க்கங்கள் தந்து ஓட்டம்விடச்சென்றான். ஆரண்ய

வல்லி வேடரூபமாய் கங்கைப்பக்கம் உலவிக்கொண்டிருந்தான் சுழுகுவேந்தர் அடுத்தவிடம்பாரத்துவரச் சென்றனர். தெய்வமன்னன் சுவர்ணப்பிரபையிடந் தோன்றி மாதாசியே நான் உன்னைப்போன்ற ஓரரசியின் நாடு காக்கப்பட்ட காவல்வீரனுயிருப் பினும் என்மனம் ஒரு மாதிடமுஞ் சென்றதில்லை யுன்னிடமே சென் றிருக்கின்றது தொடர்ந்துவந்தேன் சேர்ந்தணைவாயென்றனன். அவ்வசனங்கேட்ட சுவர்ணப்பிரபை சித்தம்வருந்தி அரி அரி நாரா யணு ஆதிமூலம், அச்சுதா அலைகடற்றுயின்றவா அம்புயக்கண்ணு அன்று அனற்பிறந்தாள் மானங்காத்ததுபோல் கன்னிப்பருவத்தை கனல்காக்கவிருந்த என்னையுங் காத்தருள்வாய் உலகத்திலுள்ள பெண்ஜென்மம்போல் நானும் பெண்ஜென்மமாய்ப் பிறந்தேன் பிறந்த வுடன் ஊரார்கள் பார்த்து உவந்தனர் தவழ்ந்தகாலம் தாரணியோர் கண்டு களித்தனர் நடந்தகாலம் நாட்டார் விரும்பினர் கல்விபடித்த காலங் காவலர் கண்வைத்தனர். மங்கைப்பருவம் மன்னர்வளைந்த னர். தீவாந்தரத்திலுள்ள ராட்சதன் தேடிவந்தெடுத்துப்போய்ச் சிறையில்வைத்தான். புருஷனுடனிருக்கும்போதே போரங்கன் விரும்பினன். தெய்வச் சகாயத்தால் இச்சிக்கல்களினின்று என் கற்பைக் காப்பாற்றினேன். கடைசியில் இத்தெய்வமும்வந்து சோதிக் கின்றது என்னசெய்யலாமென்று அதனைநோக்கி அடங்காதவர்களை யடக்கியாளுந் தெய்வமே பெண்பாலாகிய என்னை விரும்புவது உன் தெய்வலட்சணத்துக்கழகா உலகத்தார் அக்கிரமஞ் செய்தால் அர சன் தெண்டிப்பான். அரசன் அக்கிரமஞ்செய்தால் தெய்வந்தெண் டிக்கும். தெய்வம் அக்கிரமஞ்செய்தால் யார் தெண்டிக்கிறது ஆனல் என் புருஷர் உன்னைப்போன்ற தெய்வங்களுக்குப் பயப்படுகிறவரல் லர் அடா மந்திரரூபதேவதை, சிவமிர்த்திகாதேவதை, கொள்ளி வாய்த்தேவதை முதலிய தேவதைகளெல்லாம் அவர்முன் அஞ்சி யொடுங்கிவிட்டன. நீ இங்குநிற்குஞ்செய்தியை அவர் அறிவாரா யின் உடனே மந்திரக்கணைகள் வந்துவிடும். ஆயிரத்தெட்டண்டம் இருநூற்றிருபத்துநாலு புவனங்கள்போயொளித்தாலும் விடாது சாம்பலாக்கியேதிரும்பும் நீ இவ்வார்த்தைகூறிக் கற்புடையாளாகிய என்னைக்காப்பதைப்பார்க்கிலும் காவல்செய்யாமற்போவதே நலமெ ன்று கடிந்துகூறினள். செயவீரன் பூர்வநினைப்பேயில்லாவிடினும் சாபகாரணநினைப்பு ஓர்விதமாய்த்தோன்றுவதால் பத்தினிவார்த் தைகளாலஞ்சி இவள் நாயகன் எத்தவமுடையவனே அவனால் நமக் கிடையூறு வந்தாலும்வரும் எவ்வளவு மட்டற்ற தெய்வவல்லமை பெற்றிருந்தாலும் ஞாயவிரோதஞ்செய்தால் அழிந்துபோகுமென்ப தாய்ப் பொதுவான நீதியொன்றிருப்பதாலும் கற்புடையாருக்கு மூலகர்த்தாக்களெல்லாம் அஞ்சுவார்களென்றிருப்பதாலும்நாமிவளை விரும்பக்கூடாதென்று சென்ற மனதையடக்கி மாதே யிவ்வார்த்தை யினிச்சொல்லமாட்டேன் உன்னை விரும்பவுமாட்டேன். அஞ்சாம

லிருக்கக்கடவாய் வனசஞ்சரி நாட்டையும், நீயிருக்குங் காட்டையுங் காப்பது என்கடமையென்றுரைத்துக் ககனவழிசென்று கற்சிலையிலமர்ந்திருந்தான். சுவர்ணப்பிரபை அங்கு தோன்றியவுருவம் நீண்டகாலமாய்ப் பிரிந்த நாயகனுருவத்தைப் புதுப்பித்துவந்ததுபோலிருந்ததன்றி வேறுகருத்தோன்றுமலிருந்தபடியால் மறுப்புமொழியேயல்லாமல் மனநிலையப்படியல்ல சிந்தனை தெய்வவுருவிற்சென்றுகொண்டேயிருந்தது அதனால் அவள் சித்தம் பிரமித்து இப்படி யாகவேண்டியதென்ன. காரணகர்த்தர்களாலும் அசைக்கமுடியாத உள்ளத்தைக் கவர்ந்துசென்ற தெய்வம் என்ன வசீங்கற்றதோ கற்பழிவதற்குக்காரணமுமில்லை வரவரக்கண்டறிவோமென்று தங்கையிடமும் கூறுமற் றன்மனதிடத்தே கூறியிருந்தாள். பூவையர்கள் போரங்கனுக்கஞ்சாமல் கழுகாசர் வட்டமிட்டுக்காக்க வேடன்வில்லேந்திநிற்க. தெய்வவீரன அஞ்சாதீர் அஞ்சாதீரென்று வந்துசொல்ல இரவு நித்திரைசெய்து விடிந்தெழுந்து இனிதிருந்தனர்.

சுவர்ணப்பிரபையும், ஆரணியவல்லியும் ஊர்கடந்துவந்த இரவு விடிந்தவுடன் வாரங்கபுரப்பட்டணத்திற் சகல ராஜாக்களும் வந்து நிறைய வேதப்பிராமணுள் வேள்விக்குரியவைகளுடன் வந்திருக்க மேளவாத்தியத்தொனி மேலுலகமெலாங் கேட்க மாங்கலியப்பெண்கள் மங்களசோபனம் பாடிவர போரங்கள் பொன்னுபரணமின்ன அலங்கரித்த கல்யாணமண்டபம் வந்திருந்து அங்குள்ளமங்கையரை நோக்கி மங்கையர்க்கரசியை அலங்காரஞ் செய்துகொண்டு வாருங்களென்றுன் அப்படியவர்கள் அங்குசெல்ல அங்கிருந்து இருபெண்கள் தலைமேற்கரங்களை வைத்தழுதுகொண்டு வந்தனர் என்னசங்கதி யென்றுகேட்க கலியாணப்பெண் காணமற்போய்விட்டாளெனறனர் திரும்பியவர்களுடன் விவாகமண்டபம்வந்து வேந்தனைக்கண்டு மகாராஜாவே அம்மாள் செய்தியைச் சொல்லப்பயமாயிருக்குதென்றனர் அவன் சும்மா சொல்லுங்களென்றுகூற சொல்வதென்ன மணிமாடமெங்குந்தேடிப்பார்த்தோம் அவள் இல்லவேயில்லை இரவேமாயமாய்ப்போய்விட்டனளென்றனர். போரங்கன் பெருமூச்செறிந்து கோரங்கனைநோக்கி ஈதென்ன மாயமென்றுன் மந்திரி பாராக்காரப்பெண்கள் வீரர்களை விசாரிக்கவேண்டுமென்றுன். அரசன் அவர்களையழைத்து விசாரிக்க இருபெண்களிரவு கடைவீதிசென்று மாதுக்குரிய பொருள்களை வாங்கிவருகிறதாய்ப்போனவர்கள் வரவில்லையென்றனர். அரசன் யாரடா காவற்றலைமையான சரகேசரி மகனை யழைத்துவாருங்களென்றுன். தூதுவர்கள் நாலாவீதியுந் தேடிப்பார்த்து அவனில்லையென்றுவந்தனர். கோரங்கமந்திரி அவன் தானையா கோதையைக்கொண்டு போனவனென்றனன். போரங்கன் பொங்கியெரிந்து அடடா நமது பிழைப்பு நாட்டார் கேட்டு நகைக்கும்படியாயிற்றேயென்று விழிகள் சிவக்க மீசைகள் துடிக்க சர

கேசரியை நோக்கி யுன் மகன்செய்தமோசத்துக்கு நீ என்னசொல்லு கிறுயென்றான் அவன் நடுநடுங்கி அகண்டமண்டலாதிபதி என்னைச் சிறவேண்டாம் அத்துரோகிப்பயல் என்மகனுமல்ல மாதுரந்தரராஜன் சேனுபதி மகனும் கங்கைக்கரை வந்து வேண்டினுன் ஏழைமதியால் என் மகனென்று இவ்விடம்வேலைபார்க்கச்செய்தேன் இப்படிச் செய்துவிட்டுப் போய்விட்டான் சிறிது ராணுவங்கொடுத்தால் நான் சென்று அவனைச் சித்ரவதைசெய்து சேயிழையைக் கொண்டுவருகிறேனென்றான் அரசன் சில படைகொடுக்க நடத்திக் சங்காநதி வந்து வேடனைக்கண்டு என்மகன் ஓர் கன்னியுடன் வரக்கண்டாயாவென்றான் அவன் நான் காண்கவில்லையேயென்று சொல்லிவிட்டான். சரகேசரி சேனைகளை நடத்திக்கொண்டு மாதங்கபுரிப் பட்டணம் சென்றான். அவ்வூரரசன் பெரியராஜாவின் சேனுபதியென்று பிரியமாயுபசரித்தான் சரகேசரி சபையிலிருந்து உங்கள் சேனுபதியான வொருவன் மகன் ஊர்கடந்து போனதுண்டுமா வென்றான். அப்படிப்போகவில்லையேயென்று அங்குள்ளவர் சொல்லினர் மாதுரந்தரராஜன் அப்படிக் கேட்பது என்னகாரணமென்றான். படைத்தலைவன் சிலநாளைக்கு முன் கங்கைக்கரைவந்தேன் ஓர் வாலிபன் மாதங்கபுரப்பட்டணச் சேனுபதிமகன் உங்களூரில் உத்தியோகம் வாங்கித்தரவேண்டுமென்றான். நான் அப்படியே எங்கள் மன்னனிடம் காவல் உத்தியோகம் வாங்கிக்கொடுத்தேன். அவன் காவலன் கொண்டுவந்துவைத்திருந்த கன்னியைக் கடத்தி இரவேகொண்டுபோய்விட்டான். தேடிவந்தேனென்றான் சிலர் இவர் சொல்வது சரிதான் நமது ராஜாமகளிருக்கும் அந்தப்புரச்சோலையிலொருவனுலாவினுன் அவனைப்பிடிக்கப் போகும்போது தப்பிப்போய்விட்டான். அவனை விசாரிக்க வனசஞ்சரியிடம் சேனுபதிவேலை பார்த்தவனென்று தெரியவந்தது போரங்கராஜா வைத்திருந்த பொன்னைக் கொண்டுபோனவன் அவனுகவேயிருக்கலாம். அவனும் அப்பெண்ணரசி நாட்டிலேயே போயிருப்பான் அங்கு கற்சிலை வடிவமான ஓர் வீரன் அந்நியர்போனுல் வெட்டிவிடுகிறுன் இவன் கவர்ந்துசென்ற மாதுடன் அவள் நாட்டிலேயிருப்பது நிச்சயம் நீர் இச்சேனையுடன் சென்று அச்சிலை வீரனைச் செயிக்கமாட்டீர் உமதரசன் உள்ளபடையெலாந்திரட்டிவந்தால் சிலையான வீரனையுஞ் செயித்துக் களவுசெய்தவனையும்பிடித்துப் பெண்ணையுங்கொண்டுவரலாமென றனர். சரகேசரி யதற்குச் சம்மதித்துத் தன்படையுடன்திரும்பி வாரங்கபுரிபட்டணம்வந்து போரங்கராசனிடம்போய் விசாரித்தவைகளையெல்லாம் விபரமாய்ச்சொன்னுன். சேனுபதியானவன் செப்பியவசனங்களைக் கேட்ட போரங்கன் சீற்றமுடையவனுய் வனசஞ்சரியென்னு மங்கைதனையனுகிய சத்துராதிமகள் அவனை யன்றே யரசாட்சி செய்யவேண்டாமென்று தடுத்தேன் சங்கரேசராஜன் சொல்லால் விடுத்தேன். நான் கொண்டுவந்த பெண்ணைக் கொண்டுபோனவன் தங்கும்படி

இடங்கொடுத்தாளல்லவா அவள் ராஜ்ஜியத்தை வேரோடழித்து விடுகிறேனென்று சதுரங்கப்படைகளுடன் புறப்பட்டான். பூச்சக்கரவட்டக்குடை கொடிகளால் பகலோமொளிமறையப் பொங்கிய தூளிகள் புவனமெலாம் நிறைய வாத்தியத்தொனிகளால் திக்குகள் செவிடுபட ஆரபாரத்துடன் கங்கைக்கரையடைந்தான் கங்கை வடகரையெலாம் படைக்கடலாய்வரும் பான்மையைக்கண்டகன்னியருங் கழுகரசரும் கானகவேடனும் கலக்கமடைந்தனர். கிரிசரன் அம்புவில்லேந்தி அணங்கரசிகள் முன்வந்து அம்மணிகளே! நான் ஏழைவேடனானாலும் அதோ வருகிற என்பகையாளிக்கு ஏழையாகமாட்டேன். கங்கையிலிறங்குவார்களேயானாற் கைக்கணையாற் கண்டங்கண்டமாக்கிக் கங்கையிலுருட்டிவிடுகிறேன். வல்லவர்களானால் அவர்கள் கைக்கணையால் மாண்டு தோழமைக்கடன் கழிக்கிறேனென்று துடித்துநின்றான். புள்ளரசர் இதோவரும்போரங்கன் அன்று எங்கள் சிறையாலறைபட்டுத் திரும்பிப்போனவன் ஆற்றிலிறங்குவானேயானால் மூக்காற்கொத்திக்கொத்தி வெள்ளத்திலெறிந்துவிடுகிறோமென்றனர். ஆரணியவல்லி யென் குலப்பகையாய் வந்த இவனை யிவர்கள் சகாயத்தாற் கொல்லுகிறேனென்றாள். சுவர்ணப்பிரபை யெல்லாரையும் அமர்த்தி இவன் கங்கையில் இறங்கிவருவானேயானால் நம்மைக் காக்குந்தெய்வம் நாசப்படுத்திவிடுமென்றாள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்க போரங்கன் தன் படைகளைக் கங்கைக்கரைவழியாய் நடத்தி மாதங்கபுரப்பட்டணஞ் சென்றான். மாதுரந்தரராஜன் சேனைகளுடன் எதிர்கொண்டழைத்துப்போய் அநேக மரியாதைகள்செய்து தனக்கும் வனசஞ்சரியாகிய மாதுக்கும் ஏற்பட்ட பகையையும் தனக்காகப் பரிந்துபோன சேவந்தனுகியமருமகன் அபசயப்பட்டுவந்ததையும் சொல்லி அவள்சேனாபதி மிருகாமி எனதுகன்னிகை யிருக்குமிடமும்வந்தான் காவலர் கண்டுபிடிக்கப் போகும்போது தப்பித் தங்கள் நகரம்வந்து மங்கையைக் கொண்டுபோய்விட்டான் இப்போது அவள்நாட்டைச் சிலேபாயமைந்த வொருவன் காத்துவருகிறான். ஆண்பால் யாரும் அங்குபோகமுடியாதவிதமாயிருக்கின்றதென்றான். போரங்கன் அக்கன்னியரசியலேயும் பார்க்கிறேன் சிலேயிலுள்ள வீரனுகிய பேயையும் பார்க்கிறேன் நீயும் உன்சேனையுடன் புறப்படு அந்த ராஜ்ஜியத்தை யுனக்கே தருகிறேனென்றான். மாதுரந்தரன் இச்சகாயத்தால் நமது பகையைத் தொலேத்துவிடவேண்டுமென்று தன் படையுடன் போரங்கனேடு கலந்துசென்றான். சரகேசரி அநேகதூரம் பரவிவரும்படைகளை யொழுங்கு செய்து அணியணியாய்ப் பிரித்து அநேக வரிசைகளாக்கி மத்தியில் போரங்கன் கோரங்கன் பின்னணியில் மாதுரந்தரன் போகும்படிசெய்து தானெருபுறமாகச்சென்றான்.

சேனைகள் செல்லுமதிர்ச்சியாற் பக்கவூர்க்காரரெல்லாம் கலங்கி இனிப்பெண்ராஜ்ஜியம் நிலைக்கமாட்டாதென்று பேசிக்கொண்டனர் தெங்களாபுரப்பட்டணத்திலுள்ள தெரிவையர்கூட்டஞ் சேனைப்பெருங்கைக்கண்டு தியங்கி ராஜாத்தியிடஞ்சென்று எவனோ ஒரு பெரிய ராஜன் படையெடுத்துவருகிறான். நம்மனைவருக்கும் பெருமோசம் நேரும்போற் றெரிகிறதேயென்று வாடிவருந்திச் சொல்லினர் வனசஞ்சரிவரும் படைகளை வந்து பார்த்து மங்களேஸ்வரி யாலயமணிமுகப்புமேடையில் வந்து வயிரச்சிலையை வணங்கி யிதுசமயங் காத்தருளவேண்டுமென்று துதித்தாள். செயதேவன் கற்சிலையினின்று கதிர்வாளுடன் வெளிப்பட்டு வானத்திற்றாவிப் படைக்கடல்முன் சென்று முன்னணியில்வரும் ஐந்துபேர்தலையை வெட்டினன் அங்குள்ளவர்கள் இதென்ன மின்னுமலந்தர விடிவிழுந்ததென்றஞ்சினர் அதற்கடுத்த அணியிற் பத்துப்பேர் தலையைவெட்டிப் போகப்போக 20, 40, 80, 160, 320 என்கிற ரெட்டிப்புத்தொகையாக வெட்டிக்கொண்டுபோக படைகளிரண்டுபாசமாய்ப் பிரிந்துதிரும்பி முறிந்துவர போரங் ராஜனும் கோரங்கமந்திரியும் பார்த்து எதிராளிபடையிற் புகுந்துவிட்டானென்றேமேலிட்டுவரும்படைவீரர்களையும் கூறுக்கரிவாளால் வெட்டப்பட்டு விழும் பனங்காய்கள்போலே விழும் வீரர்தலைகளையுங்காண்கிறார்களன்றிவீரனையாவது வீரனேந்திய ஆயுதத்தையாவது காணவில்லை இதென்னமாயமென்று திகைத்து நிற்கும்போது செயதெய்வம் ஒரேவீச்சில் போரங்கன் தலையையும் கோரங்கன் தலையையும் வெட்டியெறிய அத்தலைகளந்தரத்தெழுந்து சிரித்துவிழுந்தன ராஜன் மந்திரிதலை வெட்டுண்டதைக் கண்ட பக்கத்துள்ளவரும் படைவீரருங் கலங்கி இச்செய்கை இந்நாட்டைக் காத்துவரும் வீரதெய்வத்தின் செயலாகுமென்று ஆயுதங்களை யெறிந்து சிரமேற்கரங்கூப்பித் துதித்தனர் அஞ்சித்துதித்தவர் தலைகள் தப்பின. அஞ்சாமல் ஆயுதங்களை யேந்தினோர் தலைகள் வெட்டுண்டன. இச்சம்பவங்களைக் கண்ட மாதுரந்தான் நடுநடுங்கி இந்நாடு காக்கும் வீரத்தெய்வம் பொல்லாததென்று கேள்விப்பட்டிருப்பவனாதலால் எம் பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்று துதிக்க அவன் தலைதப்பியது. அரசனைப்போல் மற்றவரும் அப்படியேசெய்து தப்பினர். சரகேசரியுமப்படியேசெய்து பாதசாரியாய் ஓடினான் முறிந்துதிரும்பியபடைவீரர்கள்பயந்துவிரைந்துகாற்கதிகாட்டி கன்னிநாட்டிற்போகாதீர்களென்றுமக்களிடஞ்சொல்லிவைக்கவேணுமென்பதாய்மாநகரோடிச்சென்றனர் மாண்டவருடல்களாற் போர்க்களம் நிறையமீண்டவர்திரள்களால் ஊர்நிறைய மாதுரந்தான் தன்னகர்வந்தான்ஜெயவீரன்படைவேட்டையாடிக்கற்சிலையிலமர்ந்தான் தேவர்கள் பூமாரிபெய்தனர். பூவையர்கள் புளகாங்கிதமுடையவர்களாய்ப் போற்றித்துதித்துப் பொன்பனைசென்றனர். நாட்டிலுள்ள ஜனங்கள் நமனுமிந்நாட்டைப் பார்க்கமாட்டானென்று கும்புகும்பாய் வந்து

வணங்கிப்போனவண்ணமாகவே யிருந்தனர். போரங்கன் மாண்ட செய்தி புவனமெல்லாந் தெரிந்ததால் பெண்ணரசி நாட்டை யாருங் கண்ணெடுத்துப் பார்க்கப்போகாதென்று மற்ற வரசர்கள் பேசிக் கொண்டனர்.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாம் அத்தியாயம்.

கங்காநதித் தென்கரைச் சேரியிலுள்ள மாதர்களும், பறவை வேந்தரும், வேடனும் வெள்ளம்போல்வந்த போரங்கன் சேனையு மவனும் கற்சிலையிலுள்ள காரணவீரனால் வீரசுவர்க்கமடைந்தன ரென்ற செய்தியைக் கேள்விப்பட்டும் பறவையரசரைப்போய்ப் பார்த்துவரும்படி செய்தும் அச்சமென்பதை யகற்றிக் கங்காஸ்நானஞ் செய்து காவலர் வரவுபார்த்துக்கொண்டிருந்தனர். ஒருநாள் கிரிசரன் ஓர் மரப்பேழையைத் தலைமேல்வைத்துச் சுமந்துவந்து மாதர்கள்முன்னிறக்கினன் அவர்கள் இதனை யெங்கிருந்து கொண்டு வருகிறாய் என்னபொருளிருக்கிறதென்றனர். வேடன் அம்மணிகளே நான் கங்கையில் ஓடம்விட்டுக்கொண்டிருந்தேன் இப்பேழை தண்ணீரில் மிதந்துவந்தது. நான் நேராக ஓடத்தைவிட்டு எடுத்து வந்தேன் கனமாயிருப்பதால் கனகப்பணிகளிருக்கலாம். எடுத்தணிந்துகொள்வீர்களென்றான். மாதர்கள் பேழைப்பூட்டை வேடனுடைக்கும்படிசெய்து மலர்க்கரத்தால் திறந்துபார்க்க ஓர்பெண் குளிரால் மேனியெலாம் விரைத்து ஒடுங்கி அசைவற்றிருக்கக்கண்டார்கள். ஆச்சரியமடைந்து கையாற்றட்டிப் பெண்பாவாய் எழுந்திருவென்றனர் அவள் அழகிய கண்களைவிழித்து நிற்பது பெண்களென்றறிந்து நடுக்கமுடையவளாயெழுந்தாள். அவளைப் பேழையினின்று வரும்படிசெய்து அக்கினிவெப்பத்தாற் குளிரைப்போக்கி தேனும் கனியுமருந்தச்செய்து ஆயாசத்தைமாற்றி நீ எந்தத்தேசம் யார் மகள் கங்காவெள்ளத்தில் பெட்டிக்குள்ளிருந்து வரவேண்டியதென்ன சொல்வாயென்றுகூற அவள் சொல்லலானாள். கேளுங்கள் என்னையெடுத்தாதரித்த அன்னையர்களே நானிருக்குந்தேசம் வடக்கேவெகுதூரத்திலுள்ளதும் மலையரசுதேசமென்பார்கள் அத்தேயத்திலுள்ள சயிலவாளநகரை யாளப்பட்ட சயிலேந்திரன் எனது தந்தை என்பெயர் வரதமங்கை வரதராஜனென்றொரு தமையனுமுண்டும். சிறுவயதிற் பாடசாலைசென்று கல்விபயின்றுவரும்போது

மாதனஞ்செட்டி மகன் மணிவர்ணஞ்செட்டி யெங்களுடன் படித்து என் தமையனோடு சிநேகமாய் அரண்மனைக்கு வரப்போகவிருந்து களங்கமில்லாமற் பேசியிருப்போம். பாலப்பருவம் நீங்கிப் படிக்குந்தொழிலும் இன்றி அவரவரிருக்குமிடத்திலிருந்துவந்தோம் என் தமையனுக்கு விவாகமாகியது நான் புஷ்பவதியாயரண்மனையிலிருந்தேன். மாதனஞ்செட்டி பெரியபணக்காரனாகவும் யாபாரியாகவும் ராசசிநேகமாகவுமிருந்தபடியால் அரண்மனைக்குச் செல்லவேண்டிய சாமான்களையெல்லாம் ஒருபெட்டியில்வைத்து ஆள்வசம் தினந்தினமனுப்பி மாதமுடிவிற் கஜனாவிற்பணம்பெற்றுக்கொள்வான் ஒருநாள் சூரியனஸ்தமயமாகிப் போசனமருந்தித் தாம்பூலந்தரித்து தூங்குமஞ்சத்திற் படுத்திருந்தேன் இருவர் குரல்கேட்டு எழுந்து பார்க்க படுத்திருந்த மஞ்சம் பெட்டிக்குள்ளாகவும், அரண்மனை செட்டிவீடாகவும் ஆசனத்திலிருப்பது மணிவர்ணஞ்செட்டியும் தமையன்மனைவி விரகமோகினியாகவுமிருக்கக்கண்டு அச்சமும் நடுக்கமுமொருபுறம் வாதிக்க மானமுங் கோபமும் பொங்க அடி அண்ணி! எங்கள் சமஸ்தானத்தை யாளவந்தவளே இதென்னவேலை உன்னையுங்கெடுத்து உன் தாய்தந்தைபேரையும் படுத்து என்தமையன் புகழையுந்தொலைத்து எங்கள் தாய்தந்தை சீரையும் அலைத்து கடைசியில் என்னையும் அழிக்கத்துணிந்துவிட்டனையே இதென்ன ஞாயமென்றேன். அதற்கப்பாதகி ஏனம்மா இப்படிப் பேசுகிறாய் செட்டியாருடன் நீ பாலசிநேகமாயிருந்துவந்தாயாம் வீட்டுக்குவரப் போகவிருப்பவராதலாற் சேர்த்துவைக்கவேண்டுமென்று என்னிடங் கேட்டுக்கொண்டார். நான் சரக்குக்கொணர்ந்த பெட்டியை நீ துயிலுமஞ்சத்தின்கீழ்வைத்துஇறக்கிக்கபிற்றையவிழ்த்திறக்கிமூடி இவ்விடம் கொண்டுவரும்படிசெய்து ரகசியமாய் வந்தேன் எனக்கில்லாதமானம் உனக்கென்ன இவரைச்சேர்ந்தணைவாயென்றாள் செட்டியும் அயலூரிலிருந்து வந்தவளே என்மேல் மனம்வைத்து வந்து போகிறதாயிருக்கப் பாலசிநேகியாகிய நீ என் கருத்துப்படி நடப்பதற்கென்ன தடையென்றான் உடனே நான் ஒன்றுஞ் சொல்லாமல் எழுந்து சீற்றமாய் நடந்தேன். செட்டி வாளைக்கொண்டுவந்து இரண்டுவெட்டு வெட்டினான் நான் கீழேவிழுந்தேன். என் அண்ணன் பெண்ஜாதி யோடிவந்து ஓர் துகிலால் என்மேனியை மூடினாள். இதுதான் தெரியும் பின்புநடந்தது தெரியாவிடினும் இப்படித்தான் நடந்திருக்கலாமென்று உத்தேசிக்கிறேன். மயங்கிவிழுந்த என்னை இருவருந் தூக்கி ஒரு பெட்டிக்குள் வைத்து ஓராளிடங்கொடுத்துக் கிணற்றிற் போடும்படி சொல்லியிருக்கிறார்கள் அவன் பெட்டியைத் தூக்கித் தலையில்வைத்து ஊரைக்கடந்து ஒரு பாழுங்கிணற்றோரம் வந்து இறக்கிக் கற்களைக் கட்டிககொண்டிருந்திருக்கிறான். கிணற்றோரமாயுள்ள பாதையில்வந்த ஒருவன் அவனைப்பார்த்து யாரென்க. அவன் ஓடிவிட்டதாகவுந் தெரிந்தது. வந்தமனிதன் பெட்டி

யைத்திறந்து சுவாசக் குறிப்பால் மனுஷீகமென்று உடைக்குறிப் பாற் பெண்ணென்றுந் தெரிந்து கைப்பரிசத்தாற் காயங்களையுங் கண்டு வினவியதற்குப் பேசாததால் மயக்கமிலையென்று முணர்ந்து முந்தானையாற் காற்றுவர வீசி களைதீரச் செய்தான் நான் கை கால்களை யசைத்ததைக்கண்டு நீ யாரென்றான் நான் மெதுவாக யாரையா வென்றேன், அவன் கூலிக்காரன் அயலூர் போய் வருகிறேனென்றான், நான் என் சொற்படியெலாங் கேட்டுச் சொஸ்தமாக்கி விட்டால் கூலிக்காரனாகிய வுன்னைக் குபேரனாக்கி விடுகிறேனென்றேன். அதற்கவன் உன்போன்றவர் தருங்கூலியை விரும்பி வேலைசெய்து திரிகிறவனல்லன் ஆனால் ஆருமற்ற அனாதையை யாதரித்து வைப்பதும் என் கடமையிலொன்றா யிருப்பதால் உன்னைச் சுகமாக்கி வைக்கிறேன் உன் தந்தை பெயரென்ன நீயிருப்பது மெந்த வூரென்றான். நான் இருப்பது சயிலவாள புரம், தந்தைபெயர் பூபால முதலி, என் தாய் தந்தையர் எங்கள் சுற்றத்தில் நடக்குங் கல்யாணத்துக்காக அயலூர் சென்று விட்டனர். கடைசி வீடாகிய என் வீட்டில் நான் தனித்திருந்தேன் கள்ளர் சிலர் வந்து கதவைத்திறந்து கனகநிதி யனைத்தையு மெடுத்துக் கூச்சலிட ஆரம்பித்த என்னை கத்தியால் வெட்டிச் செத்துப் போனேனென்று பெட்டியில் வைத்து இப்பாழுங் கிணறுதேடிப் போடவந்தவர், உன்னைக்கண்டு ஓடிவிட்டதாகத் தெரிகிறதென்று சொன்னேன். அவன் நான்இப் போதுசெய்ய வேண்டியதென்னவென்றான் நான் என்னை இவ்வூர் ராஜா அரண்மனைக்குப் பக்கமான விடத்தில் வாடகை வீடமர்த்தி கொண்டுபோய் வைத்து வைத்தியராற் காயத்தை யாற்றுவாயென்றேன் அவன் அப்படியே செய்கிறேனென்று பெட்டியை மூடி தூக்கித்தலையில்வைத்துச் சயிலவாளபுரப்பட்டணம் வந்து மதிலடைபட்டிருப்பதால் இறக்கி வைத்து எனக்காறுதலையான வார்த்தைகள் சொன்னான் நான் அணிந்திருந்த மணிக் கோர்வையில் ஒன்றை யுருவிக்கொடுத்து விற்றுச் சிலவுசெய் யென்றேன் அவன் அதைப்பெற்று விடிந்து கோட்டைவாசல் திறந்தவுடன் ஓராளுக்குக் கூலிபேசிப் பெட்டியை எடுத்து வரும்படி செய்து அரண்மனைப் பக்கமாயுள்ள வீடொன்றமர்த்திநான்அயலூர் வாசி பிழைக்க வந்தேனென்று பக்கவீட்டுக் காரரிடம் பகர்ந்து உள்வீட்டிற் கொண்டுபோய் என்னைப் படுக்கவைத்து கடைவீதிபோய்மணியை ஆயிரம்பொன்னுக்கு விற்று கூலிகொடுத்து வேண்டியபதார்த்தங்களை யெல்லாம் வாங்கிவந்து சமைத்து எனக்குமிட்டு அவனுமுண்டு என் சொற்படியே ரணவைத்திய னொருவனைக் கண்டு என் மனைவியும் நானும்ஊர்கடந்து வரும்போது கள்ளர்வந்தனர் நான் பயந்தோடி விட்டேன். அவர்கள் பணிதிகளையும் பறித்து காயப் படுத்திச் சென்றனர். அக்காயங்களையாற்றுவாயென்று சொல்லி

அழைத்துவந்து பார்க்கும்படி செய்தான். அவன் உரியமருந்துகளை வைத்துக் கட்டிப் பத்துநாளையிற் காயங்களை யாற்றிச் சுகமாக்கி யுள்ள கூலியையும் வாங்கிப்போய விட்டான். கூலியாளாகிய அவன் சமைத்துச் சாதம் படைப்பான். இப்படியான அவன்மேல் என் மனஞ்சென்று காலபாசம் வருநேரம் வந்து காத்துத் தலையில் வைத்துச் சுமந்துசொன்னபடியெல்லாம் நடந்து பணிவிடையெலாம் புரிந்துவரும் பாலியனாகிய இவன் எச்சாதியாயிருந்தாலென்ன எவ்வளவு ஏழையானாலென்ன இவ்வுலகில் இவனைத்தவிர பெண்பாலாகிய நமக்கு என்ன துணையிருக்கின்றதென்று உள்ளத்தில் வைத்து சரசமொழி பேசுவேன் பதில்பேச மாட்டான். கண்ணால் நோக்கி நகைப்பேன் பார்க்கமாட்டான் தொழில்புரியும் நேரந்தவிர மற்ற நேரங்கிட்ட வரவுமாட்டான் இப்படியான அவனிலையைக் கண்டு நற்குலத்தானென்று மதித்திருக்கும் போது அவன்பெண்ணே உன்சாயங்களாறிவிட்டன. உன்னிருப்பிடஞ்செல்லுவாய் அல்லது இதிலிருந்தாலுமிருந்துகொள்வாய்நான்போகிறேனென்றான். நான் கூறியது கூலியாளா என் தாய்தந்தையர் வீடு கொள்ளையாகினாலும் காணமற்போயினதைக்கேள்விப்பட்டு மனம் வெறுத்து இனியென்ன போக்கென்றிருக்கிறார்களாம். இவ்வீட்டைக்கிரையமாக்கி யிருந்துகொண்டால்வந்து சேருவார்கள். நீயும் போகலாம்கடைசிவீடும் ஆசாதென்றேன் அதற்கவன்சம்மதித்திருந்தான். நான் சிலமணிகளை யெடுத்து இவ்வூர் மாதனஞ்செட்டியார் மகன் மணிவர்ணஞ் செட்டியார் கடைக்குச் சென்று நான் உமதினம் இவ்வூரில் வணிகஞ்செய்ய வந்தேன். பங்கயபுரம் பரந்தாமன் செட்டியார் பின்பு எல்லாப் பொருள்களும் வருகிறபடியால் மனையாளும் நானும் வந்தோம் வீடுவாங்க வேண்டியதிருக்கிறதுஇதற்குரியகிரையங்கொடுவென்று கேட்பாயானால் அவர் கொடுப்பார் வாங்கிவா கள்ளர் வரும்போது புடவைக்குள்ளிருந்தன வென்று கொடுத்தேன். அவன் சொண்டுபோய் அப்படியே சொல்ல அச்செட்டி லட்சம் பொன் கொடுத்தான் கூலிக்காரர் தலையிலேற்றி வந்து கூலியாள் என்னிடங்கொடுத்தனன். நான் அப்பொன்னை வாங்கிவைத்து அவ்வீட்டுக்குரியவனிடத்தில்முன்சொல்லிய அவன் பேர்ப்படிக்குக் கிரையஞ் செய்யச் சொன்னேன் அப்படியே கிரைய முடித்து ஐயாயிரம் பொன் வாங்கிக்கொண்டு வீட்டுகாரன் போய் விட்டான். நான் சில கொல்லத்துக்காரர்களைக் கூட்டி வரும்படி சொன்னேன் அப்படியே கொண்டுவந்தான். நான் அவர்களிடம் ரகசியமாய்ப் பேசி இவ்வறைக்கும் ராஜகுமாரத்தியிருக்குமறைக்குஞ் சுரங்கஞ் செய்வீர்களேயானால் ஒன்றுக்கு நாலு கூலி தருகிறேனென்றேன் அவர்களப்படியே இரண்டு நாளிற் செய்துமுடித்துப்பொன் பற்றுச்சென்றனர். இரவில் நானிருக்கும் அறையைப் பூட்டிவிட்டு சுரங்கவழியாய் நானிருந்த அறைசென்று

மாடஞ்சென்றேன். அங்கு தாதியர் தோழியர் தாய் தந்தையர் தமையன் முதலாயினோர் என்னைக் காணமற் பலவிடங்களிலுந் தேடி யில்லையென்று வருந்தியிருந்தவர்கள் என்னைக் கண்டவுடன் வந்துகூடி யெங்குசென்று வருகிறாயென்றனர். நான் உப்பரிகையில் நித்திரைசெய்து கொண்டிருக்கும்போது எழுதெய்வகன்னியர் அந்தரமார்க்கமாய் வந்திறங்கி எங்களிடம் வாவென்று மஞ்சத்தோடு தூக்கி அந்தரமார்க்கமாய் ஓரிடஞ்சென்றனர். ஆங்கோர் கோவிலுஞ் சோலையு , சுத்தமாக விருந்தது அவ்விடஞ் சென்றவுடன் இவ்விட நினைவேயில்லை யவர்களுடன் சேர்ந்து விளையாடிச் சிலநாளிருந்து உங்கள் நினைவுவர எங்கள் தாய்தந்தையரைப்பார்க்கவேண்டு மென்றேன். அவர்கள் என்னை இவ்விடங் கொண்டுவந்துவிட்டு அதோபோகின்றார்களென்றேன் அவர்கள்என் சொல்லையுண்மையாய்நம்பிமஞ்சத்தோடுபோனதற்குக்காரணஞ்சரியென்றிருப்புக்கொண்டனர் நடமயனைத்தனித்து வைத்து அரண்மனைப்பொருள்செட்டியனுப்பும்பெட்டிவசம்போகிறதாக என்னைக் கொண்டுபோன தெய்வகன்னியர் செப்பினர் பார்த்துக் கொள்வீரென்று அறையில் நுழைந்து சுரங்கவழியாய்ப் புதுவீட்டறையில் வந்து தாழைத்திறந்து கூலியாளென்று கூப்பிட்டேன் ஏனென்று வந்தான் நான் வீடு சீர்திருத்தமாய்விட்டது மனைப்பிரவேசம் செய்யவேண்டும் திரவியந்தருகிறேன் மணிவர்னஞ் செட்டியாரிடம் போய் ஆனபொருள்களெலாம் வாங்கிக் கொண்டு அவரையும் மற்றவர்களையும் விருந்துக்கு வரும்படி சொல்லிவாவென்றேன் அவன் அப்படியே சென்று சொல்லிப்பொருள்களையும் வாங்கிப் பிராமணனையும் அழைத்துக்கொண்டுவந்து என் சொற்படிவீட்டுக்குத்தலைவன் தானெனச்சொல்லி வந்தவர்களுக்கெல்லாஞ் சந்தனந்தாம்பூலந்தந்து பிராமணன் விதிப்படி கிரகப்பிரவேசகிரியைகள் முடிக்க சாப்பிடத்தக்கவர்கள் போக மற்றவர்களை மரியாதையுடன் அனுப்பிக் கொண்டிருந்தான் நான் சில ஆட்களை கொண்டு சமையல் செய்து கொண்டிருந்தேன் மாலையானவுடன் வந்தவர்களில் இனமானவர்களுக்குச் சாதம்படைத்தேன் மணிவர்னஞ்செட்டி என்முகத்தைப்பார்த்துக் கொண்டிருந்தானேயொழியக் கையால் அன்னமெடுத்துச் சாப்பிட்டவனல்லன் நான் அவனைக் கடைக்கண்ணாற் பார்த்தே புன்னகைசெய்தேன் அவன் என்சிந்தையாகவே இருந்தெழுந்து வாய் பூசி வர்த்தகவினத்துடன் வண்ணப்பாயலிலிருந்து தாம்பூலந்தரித்து வந்தவர்களெல்லாம் போக இவன் போகமனமில்லாமல் என்னைப்பார்த்துக் கொண்டேயிருந்தான் நான் கூலியாளைப் பார்த்து நேரம் அகாலமாய் விட்டது செட்டியார் தனியே போகமாட்டார் படுத்துக் கொள்ளும்படி சொல்லென்று சொல்ல அவன் அப்படியே சொல்லினன் செட்டி யென்சொற்குறிப்பை யறிந்து படுத்துக்

கொண்டான் நான் அறையிற்படுத்திருந்தேன் அவன் எழுந்து அறைமுன் வந்து நின்ருன் நான் வாவென்றேன் வந்தான் நான் என்னை வெட்டியகத்தியையெடுத்து இரண்டு துண்டாய் வெட்டிப் பாயலில்விழும்படிவைத்துவிட்டு கூலியாளிடம்வந்தேன் அவன் என் உள்ளத்தையெல்லாங்கவர்ந்து ராசலட்சணமாக நித்திரை செய்து கொண்டிருந்தான் கரத்தர்ற்றட்டினேன் எழுந்து என்ன பெண்ணேயென்ருன் நான் கள்ளன் கரவாளால் வெட்டுண்டு குற்றுயிரான வென்னைக் காத்துப் பணிவிடைபுரியுங் கோமானே நான் எவ்வளவு செல்வவான் மகளாயிருந்தாலும் நீ எவ்வளவு பரமஏழையாயிருந்தாலும் எனக்கு நீ ஊழியஞ் செய்கிறது எம்பெருமாளுகிய ஜகதீசனுக்கேற்காது ஏற்காதகாரியங்களைச் செய்து வந்த உனக்கு என்னபொருளைக் கொடுத்தாலு மீடாகாது நான்பாரியாளாகிப்பணி விடை செய்யவே சித்தமாயிருக்கிறேன் கோரிய காரியமு முடியப்பெற்றேன் காமவேட்கை தீரக் கலந்தணைவாயென்றேன் அவன் என்ன வார்த்தை சொல்லினை இப்படியெண்ணக் காரியாயிருப்பது தெரிந்தால் தூக்கிச் சுமக்கவுமாட்டேன் சொற்படிகேட்கவுமாட்டேன் இதோ எழுந்து போகிறேனென்ருன். நான் இவ்விரவில் பலநாள் பழகிய நாம் வலியவந்தும் ஆடவர் பேசாத பேச்சுப் பேசுகிருனே மனநிலையை இன்னும் பார்ப்போமென்று உபகார குணத்தைபுடையவனே உன் மனமறிய இதுசொன்னேன். இன்னும்இரண்டுநாளையில் என்தாய் தந்தையர் வருவதாகச் சொல்லிவிட்டிருக்கின்றனர். வந்தவுடன் அவர்களிடம் என்னை ஒப்புவித்து செல்லுமிடஞ் செல்வாயென் றேன். அவன் அம்மொழிக்கிணங்கி யங்குபடுத்துக் கொண்டான் நான் வெளிமதிலில் மணிவர்ணஞ் செட்டி இவ்வீட்டிற்கொலையுண்டு கிடக்கிருனென்று கரியாலெழுதி வைத்துவிட்டுச் சுரங்கவழி கன்னிகாமாடஞ் சென்றேன். தமையன் என்சொற்படி தெருப்பக்கம் நின்று பெட்டியைச் சோதனைசெய்ததில் தன்மனைவி யிருக்கக்கண்டு ஓரேவெட்டி லிரண்டு துண்டாக்கி அப்பெட்டியோடு கொண்டு போய் மயானத்திலெரித்துவிடும்படி செய்தான். விடிந்தவுடன் மணிவர்ணஞ் செட்டியைக் காணேமென்று கூச்சலாகி கரியெழுத்தால் நானிருந்தவீட்டைச் சோதனை செய்து கூலியாளையும் வெட்டுண்டு பிரேதத்தையுங் கண்டுபிடித்து ராஜசபைசேர்த்துவிசாரணை நடந்தது அரசன் கூலியாளைநோக்கி, செட்டியை ஏன் கொலைசெய்தாயென்ருன் நான் கொலைசெய்யவில்லை யென்ருன் பக்கக்கடைக்காரர்கள் இவன் செட்டியாரை விருந்துக்கழைத்துப் போனனென்று சாக்ஷிசொல்லினர்! அழைத்துப் போனதும் கொலையுண்டவிடமும் பொருத்தமாகவிருப்பினும் கொலை நடக்கும்போதுகண்ட சாக்ஷியும், இவன் அவ்வீட்டைவிட்டுப் போகாதிருந்த காரணமும், கொலைக்குப் பொருத்தமில்லாமற் றெரிவதால்

தீரவிசாரிப்போம் சிறையில் வையுங்களென்முன் அவனையப்படியே வைத்துச் செட்டியை அடக்கஞ் செய்தனர். ஞாயிறடைந்தபின் நான் ஆடையணிகள் வேறுதரித்து சிலபலகாரங்களை யொருதட்டில் வைத்துச் சுரங்கவழியாய் வீடு கடந்து காவற்சாலையடைந்து பாராக்காரரை நோக்கி நான் இவ்வூர் பெரியதனச் செட்டியார் மகள் வந்தபிணிவிலகினல் சிறையாளருக்குச் சிற்றுண்டியான தர்மஞ் செய்கிறதென்று பிரார்த்தனை செய்துகொண்டேன் நோய் விலகிவிட்டது. சொன்ன படி கொண்டுவந்திருக்கிறேன் நிறைவேற்றி வைக்கவேண்டு மென்று சில பலகாரங்கொடுத்தேன் அவர்கள் உள்ளேவிட்டு விட்டார்கள் நான் சென்றுபார்க்க அவன்மிக்க வாட்டமா யிருந் தான் கண்டவுடன் உள்ளமுருகிக் கண்ணீர் பெருகி என்னை ரட் சித்தபுண்ணியனேஅஞ்சாதேகாப்பாற்றுகிறேனென்றேன். அவன் சும்மா பாதைவழிபோகாமல் சுமந்துவந்து தாமதித்ததால் கொலைக் குற்றந் தலைமேலேறி விட்டது, இத்தலைதப்பினுலுஞ்சரி போனுலுஞ்சரியென்று சொல்லி புலம்பினுன் நான் அவனைநோக்கி என தந்தரங்க வன்பனே என்னை யாரென்று நினைத்தாய் இப்பட்ட ணத்தையாளும் ராஜன் மகளாகும் செட்டவர்செயலால் இப்படி யானேன் தெய்வம் உன்னிடங்காட்டிக் கொடுத்தது காப்பாற்றிய வுன்னிடங் காதல்சென்றது! பழிக்குப்பழி வாங்கனேன் கலியா ணஞ் செய்துகொள் எனதுதந்தை எனக்கு சுயம்வரஞ்சாட்டியி ருக்கின்றனர். அரசர்கள் வருவார்கள் நீ அங்கு வரவேண்டியது மாலையுனக்கே சூடுகிறேனென்றேன். நான் சொல்லியவைகளை யெல்லாம் அவன் கேட்டுப் பிரமித்து நீ ராஜகுமாரத்தியாயிருந் தும் ராஜகுமாரர்களையின்றியென்னை விரும்புகிருய் இப்போதுஎன் னுயிர் உன்கையிலிருக்கிறது உன் மனம்போல் நடந்துகொள்கிறே னென்முன் நான் அவனுக்கும்அங்குள்ளவர்களுக்கும்பலகாரங்கொ டுத்து புதுவீடுபுகுந்து சுரங்கவழிகடந்து அரண்மனை வந்து அன் னைதந்தை தமையனை நோக்கி தெய்வங்கள் அடிக்கடி கொண்டு போகிறதும் வருகிறது மாயிருக்கின்றன, அரண்மனைக்காரியங்கள் ஊர்க்காரியங்களாகிய இவைகளையுஞ் சொல்லுகின்றன அதாவது மணிவர்ணஞ்செட்டியைக் கொலை செய்தானென்று ஓர்கூலிக்காரனை உன் தந்தை அடைத்துவைத்திருக்கிருன். அது அவனுல் நடந்த தல்ல செய்தவன் இரவே தேசாந்திரஞ் சென்று விட்டானென்று செப்பினவென்று செப்பினேன் அவர்கள் முன் சொல்லியது சரியாயிருந்தபடியால் இதையும் ஒப்பிவிடுதலை செய்தனர் இப்படி யிருக்க இரண்டொருநாளிற் சுயவரதினமும் வந்தது அரசர்களனை வரும் வந்தனர் நான் ஆடையாபரண அலங்கிர்தையளாகித் தோழியர் சூழ்ந்து வரச்சுயவரமண்டபஞ் சென்று அரசர்களொரு வரையும் பாராமல் கல்யாணவி சஷம் பார்க்கவந்திருப்பவர்களில்

ஒருவனாக வந்திருக்கும் கூலியாள் தோளிலேயே பூமாலை சூடினேன் அரசரனைவரும் நகைத்தனர். ஊரார்வருந்தினர் உடனே என்றந் தைசிற்றமுடையவனுப் ஒன்றையும் யோசியாமல் என்னை ப்பெட்டியில் வைத்துக் கங்கையாற்றிற்றள்ளும்படி செய்தான் பெண்களும் ஆடவருங்கூடி அப்படியே செய்துவிட்டனர். நான் அப்பெட்டியில் வைத்தபதார்த்தங்களையருந்தி உயிரைப் போக்காமல் கருத்திலெண்ணிய கணவனையடைந்தாலுஞ்சரி கடலையடைந்தாலுஞ் சரி உன்கதியேகதியென்று கங்கா பவானியைத்துதித்து வந்த நான் குளிர் பொறுக்காமலொடுங்கிப் பயந்து உங்களைக் கண்டேனென்று சொல்லி முடித்தாள். அவள் சொல்லிவந்த காரணங்களனைத்துங் கேட்ட சுவர்ணப்பிரபையும் துணைவியும் கழுகாசரும் வேடனும் உருக்கம் பெருக கருத்துப்படியான கணவன் கிடைக்குங் காலங் கிடைக்கு மென்று பேசியிருந்தனர். இவர்களிப்படி யிருக்க முன் வாரங்கபுரிப்பட்டணங்கடந்துவந்தமதிப்பிரகாசன்பார்ப்பினியிடஞ்சென்று அவள்பத்தாவென்று நம்பி உயிர்விட்ட பாவகாரணத்தால் முன்போல புத்திபேதப்பட்டு பார்ப்பினி சொல்லிய பாதையும் விட்டுக் காடேகதியாய்த் திரிந்து சுராங்கி சாபத்தாற் றமையன் கல்லாயிருக்கிறு னென்பது நினைவாயிருந்து மற்றதெல்லா மறந்து பாராங்க முனிவர் தேவி சுராங்கிசாபந்தாவி கல்லாய்ப்போன அண்ணு காண்பதெப்போ கண்ணுவென்றேபுலம்பிப், புவனமணிப் பட்டணமேபோய் கடைத்தெருமுதல் எல்லாத்தெருவுந்திரிந்து, பராங்கமுனிவர் தேவி சுராங்கி சபாந்தாவி கல்லாய்ப்போன அண்ணு காண்பதெப்போ கண்ணுவென்றே சொல்லி யலையும் போது, புத்திபேதமானவன் இப்படிப்புலம்புகிறுனென்று பேசிக் கொண்டனர். அங்ககரையாளும் பூவண்ணராஜன் மந்திரிபிரதாணி சேனைகள்சூழ மாதர்கள் நடனஞ் செய்யச், கட்டியக்காரர் கட்டியங்கூற, கனகதப்பு தம்பட்ட முதலிய வாத்தியமுழங்க வாங்கா கொம்பு சங்கு முதலிய துளைக்கருவிகள் சப்திக்க வீதியிற்பவனி வந்துக் கொண்டிருந்தான் சகல ஜனங்களுமெழுந்து மரியாதை செய்துநின்றனர் மதிப்பிரகாசன் ராஜன் கூட்டத்துக் கெதிரே புலம்பிக் கொண்டேபோனுன் பிரம்பேந்திய சேவகன் அப்புறம் போவென்று தள்ளினுன் மதிப்பிரகாசனுக்கு கோபவுணர்ச்சி தோன்றி கையால் ஓரறையறைந்தான் அடி பொறுக்கமுடியாமல் அச்சேவகன் கீழே விழுந்துவிட்டான் மற்றுள்ளஜனங்களெல்லாம் கூடி ஆக்ரமித்தார்கள். யூகசாகர மந்திரி வாகனத்தைவிட்டிறங்கி வந்து ஜனங்களைவிலக்கி யவனைப்பார்க்க பராங்க முனிவர்தேவி சுராங்கி சாபந்தாவி கல்லாய்ப்போன அண்ணு காண்பதெப்போ கண்ணுவென்றேசொல்லிக்கொண்டிருந்தான் அச்சொற்குறிப்பைத் தெரிந்த மந்திரியாசனிடஞ் வந்து இவன் தமையன் பராங்க முனிவர் தேவி சுராங்கியம்மனிட்ட சாபம் பெற்றிருக்கிறதாய்த்

தெரிகிறது வரலாறு தெரிந்து வரவேணுமென்றான் பூவண்ண ராஜனுமப்படியே போவோமென்று அவனைப் பிடித்து தேரிவி ருக்கும்படி கட்டி சேனைகள்சூழப் பராங்க முனிவராச்சிரமஞ் சென்றான். பித்தனைச் சித்திரத்தேரினின்றிறக்கி முனிவர் முன் னிறுத்தி வணங்கி நின்றனர் மறைவல்லாளன் முன்னிற்பவனைத் திருக்கண்ணாற் பார்த்தருளினார் அக்கருணைப் பார்வையால் வந்த மயக்கமெலாம்பறந்து சுயவறிவுதோன்றிநாம் நாடிவந்தது இவரைத் தானே யென்கிற ஞாபகமும் பிறந்து அவர் செந்தாமரைத்தாளிற் சிரசுபட வணங்கி ஆரியகுலமணியே அருட்பெருங் கடலே மெஞ் ஞானதீபமே ஏழைகள் துயர்தீர்த்தருள வேண்டுமென்று பல வாறு துதித்தான் மாமுனிவர் நீ யார் நேர்ந்த குறையென்ன சொல் லுவா யென்றனர். மன்னவன்றம்பி என்னையாளும் பரமகுருவே நாங்கள் தென்னாட்டிலுள்ளவர்கள் தீவுதீவாந்திரஞ் சென்று கங் கைக் கரையிலிருந்தோம். தங்களிடம் வந்துபோன பார்ப்பினி என் தமையனையழைத்து வந்து அம்மாளிடுஞ் சாபமேற்ற பொய் கையில் விட்டு கல்லாக்கிவிட்டாள். விமோசனஞ்செய்து தந்தருள வேண்டுமென்று பணிந்தான். பராங்கமுனிவர் பத்தினியைநோக்கி இவன் தமையனைக் கல்லுருவினின்று மீட்டிவிடுவா யென்றனர் அவள் அநேகங் கற்களில் எதுவென்று காண்பேன் ஒருகல்லை மகள் வனசஞ்சரி கொண்டுபோயிருக்கிறா ளென்றனள் மகாமுனிவர் பெண்ணே அறிவில்லாமல் ஒருவன்செய்த பிழைக் காக அவன் எக்காலமுங் கல்லாகவும் அறியாமல் வந்தவர்களெல் லாம் கல்லாகவுஞ் செய்வது ஞாயமல்ல, எல்லாக் கல்லுருவங்களை யும் நீக்கிவிடு பொய்கையிடத்தில் அப்படியாகாமல் மாற்றிவிடு உள்ள கல்லுருவுவங்களில் இவன் தமையனில்லா விட்டால் மந்தி ரத்தைச்சொல் இவன் வனசஞ்சரி பட்டணம் போய் மாற்றிக் கொள்வா னென்றனர். சுராங்கி அப்படியே செய்கிறே னென்றெ ழுந்து சென்றாள் அரசன் முதற் சகலரும் முனிவரனுமதிபெற்று சென்று அங்குள்ள கற்சிலைகளைக் கண்டு நின்றார்கள்.

சுராங்கிகல்லுருவம் நீங்கும்படியான மந்திரங்களை யுச்சரித் தாள் கல்லுருவாய்நின்ற ஆடவர்பலருஞ் சுயவுருவாய் நின்றனர். அவர்களில் முன் வேட்டையாடவந்த போதகாபன் மந்திரியுடன் வந்து நிற்குந் தந்தையைக்கண்டு சாஷ்டாங்கமாய் வணங்கினான். பூவண்ண ராஜன் புதல்வனைக்கண்டு காதலுடன் தழுவி இங்கு வந்தாய் கல்லுருவமாகி விட்டனை, பூமியெலாந் தேடிப்பார்த்து வேட்டைக்கு போன மகன் வீட்டுக்குவரவில்லையே யென்று ஏக்க மேலிட்டிருந்தேன் இப்புண்ணியனை யிங்குகொண்டு வந்ததால் உன்னைக்கண்டு கொண்டேனென்று உருக்கமாய் கூறினன். சுராங்கி தன்னுடன் வந்து நீராடிய ராஜகுமாரத்தியை விரும்பினதால்

சாதகமேற்பட்டதென்று சாற்றினாள் தமையனைக்காணுமல் வருந்தி
நிற்கு மதிப்பிரகாசனை நோக்கி உன் தமையனமைந்த கல்லுருவை
வனசஞ்சரி கொண்டு போயிருப்பதால் இம்மந்திரத்தைச் சொல்
லிக் கல்லுருவை நீக்கிக் கொள்ளென்று வேல்வேந்தர் புகழும்பே
ரான் வேல்காடனருளிய சீரான் சண்முகவேல்வள்ளலெனுந்
தயாள குணப்பிரபுவி தவரா மொழின்போன்ற மந்திரத்தை
உபதேசித்தாள் சொல்லும் வழியையுஞ் செப்பினாள் மன்னவன்
றம்பி அன்னவளருளிய மந்திரத்தைப் பெற்று வணங்கிச் சென்
றான் சாபகாரணந் தெரியாமல் வந்து கல்லுருவான வர்களெல்
லாம் சுராங்கியம்மனைப் பணிந்து பராங்குமுனிவரிடமும் வந்து
போற்றித் தங்கள் தங்கள் நகரஞ் சென்றனர். பூவண்ண ராஜனும்
புதல்வனும் போத முனிவரைப் பணிந்து நிற்க, முனிவர் அரச
னைப்பார்த்து உன்புதல்வன் ஓர் பெண்ணை விரும்பிக் கல்லுருவ
மாயினன் அப்பெண்ணும் விவாகமில்லாதிருப்பதால் அவளையே
மணம் முடிப்பனென்று அவள் வரலாற்றைத்துஞ் சொல்லி நீ
ஊர் சென்றிருந்து தெங்காளபுரப் பட்டணஞ் சென்று மண
முடிப்பாயென்றுரைத்து விடை கொடுத்தார் அரசன் மகாபாக்கிய
மென்று சென்றான் மதிப்பிரகாசன் சுராங்கி யம்மாள் சொல்லிய
வழியே நடந்து தெங்களாபுரிப் பட்டணமடைந்துமங்களேஸ்வரி
யாலயம் வந்து முன்முகப்பு மணிமேடையில் நிற்குங் கல்லுரு
வைக்கண்டான், கண்களில் தாரைதாரையாய் நீர் பெருக அண்ணா
அண்ணாவென்று முகத்திலறைந்து அடியில் விழுந்து புரண்டு
வேட்டையாடப் போன மைந்தர் வருவார் வருவார்களென்று
தாய்மார்வழி பார்த்திருக்க தொடர்ந்த தோழமாரொரு புறம்
தேடித்திரிய அன்று சிறைமீட்ட சீராளர் இன்று சிறைமீட்க
வருவார்களென்று தேவியாரெதிர்பார்த்திருக்க அரக்கரினத்தில்
வளர்ந்த பெண் யார்க்குந்தெரியாமலலையகாத்திருந்தகழுகு வேந்தர்
காணுமற்போக நான் சென்மங்கள் பலவுஞ் செய்தபாவங்களெல்
லாஞ் சேர்ந்து தொடரப்பித்தங் கொண்டுழல இவையனைத்தை
யும் பார்க்கக் கூடாதென்று கல்லாகி விட்டீரோ, என்பிரமைநீக்கு
வதற்காகச் சண்டாளிபின்வந்து பொன்மலர்ப் பொய்கையிற்
கல்லாகநின்று விட்டீரே புரவலர் சிகாமணியேயென்று புலம்பிச்
சோரும் உத்தமனைச் சிலாரூபமாய் நின்ற திடவீரன் தெய்வமுனி
தேவிசெப்பிய சாபவல்லமையால் தம்பியென்று கண்டு கொள்ள
முடியாமற் சாற்றுவதாவது, சாதுவே நீயார் நான் யார் தம்பி
யென்று வந்து தமையனென்று என்னைப்பாராட்டிப் பலகாரணஞ்
சொல்லுகின்றனையே வரலாறென்ன வென்றான். தம்பி சமைந்த
துக் கல்லுருவமானாலும் பிறவிபாசங்களெல்லாம் வேறாகவா
போய் விட்டதென்று மதித்து வரலாறு சற்று நேரஞ்சென்று
சொல்லுகிறேனென்று ஆறித்தெளிந்து பொறிபுலனடக்கிக்

லங்கனினவலங்கிர்த சுந்தரச்சுயவுருவடைந்துநின்றான். அப்படி நின்றதமையனைத் தம்பியானவன் ஆருக்காதலுடன் அண்ணாவென்ற ழைத்து அம்புயத்தாள்களில் வீழ்ந்து வணங்கினன். வணங்கிய தம்பியையெடுத்து மார்புடனணைத்து கண்ணின் புனலால் அவன் பொன்னிறமேனியைக்கழுவி அப்பனே என்னுருயிர்த்துணைவனே உன்பிரமைமாறிவிட்டதா பன்னகசாலையில் நமது தேவியர் சுகமா யிருக்கின்றனரா? கழுகரசர் காத்துவருகிறார்களா? உன்பிரமையை மாற்றியது பிரமரிஷியா? வேறொருவராஎன்னை யழைத்துவந்த பிராமணப்பெண் எங்கு போய்விட்டாள்? நாம் நிற்குமிடம் பொய் கையாயிராமல் வேறிடமாய்த் தெரிகிறதே விபரஞ் சொல்லுவா யென்று விளம்பும் வேந்தர் கோனைநோக்கிப் பாந்தமுள்ள தம்பி பகரலானன் அண்ணா நாம்பறவையினங்களுடன்மதுகற்பகாடவிவன த்தில் வந்திறங்கிக்கழுகரசருடனிருந்தது தெரியும் ஏதோ மயக்கந் தோன்றியதால் இடையில்நடந்தது ஒன்றுந் தெரியவில்லை பின்பு தனியேகங்கைசென்றுமுதலைவாயிற்சிக்கிய பிராமணனைமீட்டினேன் அவன் மனைவிவாக்கால் என் பிரமைபோலிருந்தது நீங்கப்பெற்று பன்னகசாலைவந்தேன் நீங்களொருவரும் அவ்விடமில்லைபின்புயான் யாத்திரை வாசியாகிப்பலவிடந்திரிந்து வாரங்கபுரப்பட்டணத்தில் இணைவசியென்னும் பார்ப்பனப்பெண் போரங்கராசனிடம் கங்கை க்கரையிற் சணவனுடனிருந்த கன்னியைக்கொண்டுபோய் ஒப்புவி த்து, அவன்தருஞ் சன்மானங்களைப்பெற்று தேசாந்தரஞ் சென்ற நாயகனைக்கண்டு பிடிக்கும்படி அன்னதானஞ் செய்கிறாளென்று கேள்விப்பட்டு அவள் புருஷனைப்போல் அவளிடஞ் சென்று விசாரிக்க அவள் மோசமாய் அழைத்து வந்துபராங்கமுனிவர்பத் தினி சாபமேற்றபொய்கையில் விடுத்துப்பாரக்கல்லாக்கி விட்டதாக வும் பின்பு அவளால் அழைத்து வரப்பட்டதேவி ஆறுமாதநோன் பென்று சொல்லியிருப்பதாகவுந்தெரிந்துநான்வாரங்கபுரிபட்டணங் கடந்துபராங்கமுனிவ ராச்சிரமம் நாடிவரும்போதுமுன்வந்தமயக் கம்பின்பும்வந்து வழிதவறிப்புவனமணிப்பட்டணம்போய்பூவண்ண ராஜன் தேரிற் கொண்டுவந்து சேர்க்க ரிஷியீஸ்வரர் தெரிசனம் பெற்று மயக்கம் நீங்கி மந்திரம்பெற்று இவ்வூரையாளும் வனசஞ் சரி யென்னும் மங்கை தன்னுடு காப்பதற்காக தாங்கள் அமைந்த கல்லுருவைக்கொண்டு வந்ததாகத் தெரிந்து வந்து உருச் செபித்து கல்லுருவை மாற்றினேனென்று சொன்னான் தம்பிகூறி வந்த வாக்கியங்களைக்கேட்ட தரணிகாவலன் நமக்குத்துன்பமும் பிரிவும் வந்துகொண்டிருக்கிறதே யொழியத் தீர்ந்தபாடில்லை பாத கத்தி சொல்லை நம்பிப் பங்கயப்பொய்கையில் வந்து கல்லாகி விட்டேன் நீஉலகெலாம்பித்தனையுழன்று திரிந்திருக்கிறாய்நம் தேவி அன்னியன் ஒருவனிடத்திலிருக்கிறதா யிருக்கிறது இவ்வள

வுக்குக் காரணமாயிருந்த போரங்கனுகிய அவனை யன்றே தொலேத்திருப்பேன் பூவை பொறுக்க வேண்டுமென்று சொல்லியதால் பொறுத்தேன், இப்படி நேர்ந்தது பகையையும் நெருப்பையுஞ் சிறிதென்றெண்ணக் கூடாதென்று பெரியோர் சொல்வதுண்மையாய் விட்டது இப்போது அவனுடன் போராடி மங்கைசிறை மீட்க வேண்டியதாயிருக்கிறது புறப்படுவாயென்முன் இளையோன் அண்ணு நான் வாரங்கபுரிப்பட்டணம் போன சமயம் அவ்வரசனைச் செயித்து மங்கையை மீட்டி யிருப்பேன் ஆயுதமில்லாமற் போய்விட்டது போரங்கன் பட்டணத்தில் இப்போது மாது இருப்பதும் இல்லாததுந் தெரியவில்லை தெரிந்துதான் யுத்தத்துக்குப் போக வேண்டும் வருபவரிடம் விசாரிப்போமென்று சொல்லி அவ்விடமே யிருந்தனர்.

அந்நேரம் ஆரணியவல்லி கழுகுவாகன மொன்றிலமர்ந்து ஒன்று அருகில்வர அங்குவந்தாள் முன்னிருந்த கற்சிலையில்லாமல் இருவீரர்களிருக்கப் பார்த்து யாவர்களோ வென்று திகைத்து சற்று தூரத்தே வாகனத்தை விட்டிறங்கி ஆண்வேடமானதால் அஞ்சாமல்வந்து தமது ஆண்டகைகளாக விருக்கக்கண்டு செவ்வரிக்கண்களினீர் பொழிய அவர்கள் சேவடிகளில் வீழ்ந்து எல்லாவுலகங்களையுங் காக்கவந்த செல்வங்களே இணையற்ற சுத்த வீரங்களே, எங்களாருயிர்த் துணைகளே யிவ்விடமா யிருக்கிறீர்கள் என்ன என்ன விதமாய்ச் சென்றீர்கள் இங்கு எப்படி வந்தீர்கள் தமக்கையைக் கண்டேன் உங்களைக்காணவில்லை உங்களைக்கண்டேன் அவளைக்காணவில்லை பெண்ணுக்குப் பெண்ணுகவும் ஆணுக்கு ஆணுகவுமிருந்து காத்த பலன் கைகூடவுமில்லையே யென்று சோர்கின்றதைக்கண்ட சுத்தவீரர்கள் திகைத்து எடுத்த வேடக்குறிப்பாலுஞ் சொல்லும் சொற்குறிப்பாலும் ஆரணிய வல்லியென்று தெரிந்து கொண்டிருக்கும்போது, பறவை வேந்தரும் நெருங்கித் தமது பார்த்திபரா யிருக்கக்கண்டு வானமழைப்போற் கண்ணீர் பொழியப் பிரிந்த குஞ்சுகளைக் கண்டதுபோற் கருங்கடற்புவனமெலாந்தேடிக் கற்கிலையிருந்தவிடத்திற்கண்டு கொண்டோமென்று வந்தணைந்த புள்ளரசரைக்கண்ட பொதியமலையான் பொருமி வெள்ளம் போற்கண்ணீர் பொழிய என் சொற்படிகாத்து, வந்த காவலுக்கிடையூறுவந்ததோ? எவ்விடமலைந்தீர்கள் ஆரணியவல்லியை எங்குகண்டீர்கள் சுவர்ணப்பிரபையைக்கண்டுபிடித்தீர்களா? கண்டு இப்போது காணேனென்று புலம்புகிறளே என்னகாரணமென்று மன்னவன் கேட்கப் பொன்னிறக் கழுகரசர் புகலலாயினர் புவனத்திலொருவருக்குமடங்காத போர்ச்சிங்கமே உத்தரவுப்படி பன்னகசாலையைக் காத்திருந்தோம் தேவரீர் உத்தரவுப்படியென்று தேவியைப் பார்ப்பினியழைத்துச் சென்ருள் தேவரீருந் தேவியுந்

திரும்பிவரவில்லை நீங்களிருவரும் வாராததால் நாங்கள் பானு கிரணம்பரவுமிடமெலாந் தேடிப்பாகிரதிக்கரையில் இவ்வேடமாய் நிற்கையில் ஆரணியவல்லியைக் கண்டோம், மாதர்க் கரசியையுங் கண்டோம் ஆதித்தோழமை வேடன் கிரிசாரனையுங் கண்டோம் பொல்லாதவள் பின் சென்று போரங்களிடஞ் சிறைப்பட்டு ஆண் வேடமாய் ஆரணியவல்லியமைத்து வந்திருப்பதையுங் கேள்விப் பட்டோம், இவ்விடத்துள்ள சிலையின் தெய்விக வீரதத்துவந் தெரிந்து போரங்களுக்கஞ்சியிருந்த பூவையரைக் கொண்டு வந்து வணங்கச் செய்தோம். அத்தெய்வம் காக்கிறேனென்று உறுதி வாக்குக் கொடுத்தபடியால் சேரி சேர்ந்திருந்தோம். போரங்கள் இந்நாட்டிற் படையெடுத்து வீரதெய்வத்தால் மாண்டுபோனன். இன்றுதினம் நாங்கள் வானத்திலுலவினேம்ஆரணியவல்லி தரையி லுலவினள்.வேடனேடேத்தினீரிலுலவினன்.பின்புயாவருஞ்சென்று பார்க்கச் சுவர்ணப்பிரபையைக் காணேம். சேரிபக்க விடமெல்லாந் தேடிக் காணுமையால் தெய்வவீரனிடங் கேட்டறிவோமென்று வந்தோம் உங்களைக் கண்டோம். இதுதான் செய்தியென்று செப் பினர். கழுகரசர் கூறிவருங் காரணமனைத்துங் கேட்ட காவலன் புதல்வன் கண்ணு மனமுஞ் சுழலச் சித்தம்பிரமித்து உத்தமியே உன்முகமென்று காண்பேனென்றுருகித் தன்னைமறந்து மூர்ச்சை யானன். தமையன் பரிதாபத்தைப் பார்த்துத் தம்பியுந் தளர்ந் தான் ஆரணியவல்லியு மயர்ந்தாள். செம்பதி தரையில் வீழ்ந்த துரைமகனைச் சிறைகளாலணைத்து இளங்காற்று வரும்படி சிறை யால் வீசியபோது மயக்கம்நீங்கிமலர்க்கண் விழித்துமானேமயிலே மரகதமே யென்றெழுந்து சுற்றியிருப்போரை நோக்கித் தாளத் திரள்போற் கண்ணீரொழுக பலவிடங்களிலுந்தேடினீர் கண்டீர்கள் காத்தீர்கள் அக்காவலுச்கும் அவ்வருமையான பெண்சோதி அமையாமற் போகுமென்றால் நான் செய்வதென்ன நினையாமற் கடல் கடந்து காணுத தீவிற் கண்டகனகமணி அக்கினிதேவனே காத்து என்னிடம் ஒப்புவித்த அரும்பொருள் கண்டவுடனே என் னுள்ளமெலாம் பூரிக்க இனித்து நிரம்பிய ஆமிர்தம் ஏழேழு ஜென்மங்களாய்ச் செய்தபலனல் வழுடுக்கு மாளிகையிற் கண்ட டைந்த தெய்வபோகம் திரைகடலிற்றிசை தெரியாவிடத்தும் வீழ்த்தப்பட்டும் என்மனதினின்று சதாவும் பிரகாசித்துக் கொண் டிருந்த சோதிவிளக்கு வந்த பறவைகளிடம் சந்திராரங் கொடுத்த னுப்பிய சுந்தரானந்தம் பலலாயிரம் அரக்கர்களை தெலைத்துக் கண்டுகொண்டபாக்கியம்பிரிந்து தேடிவந்துநின்றபோது கையால ணைத்துக்கொள்ளமாட்டாமற்கல்லாயிருந்து விட்டேனென்னிற்பே சவாயுமுண்டோ?கனிவாயமிர்தப்பெண்ணைக் கற்சிலையினின்றுகாத் ததாகச்சொல்கிறீர்கள்என்னகாவல்காத்தே னென்றிறங்கும் இறை வன் மகனைச்சிறைப்புள்ளரசர்தேற்றி ஆதியில் நினையாமற்கிடைத்த

பொருள் கிடைக்குமே யொழிய கிடையாமற் போகாதென்றனர்.
முத்தமிழ்க் குடையான் சித்தந் தெளிந்து தம்பியை நோக்கிச் சேயி
ழைசென்றமாயந் தெரியமுடியாததாயிருக்கின்றதே என்னசெய்யலா
மென்றான்புத்தியுள்ள தம்பி அண்ணா அரக்கரோ அரசரோ முன்போற்
கொண்டுபோனதாய்த் தெரிகிறது இருப்பிடந் தெய்வவருளாற்
றெரியலாமே யொழிய மனுஷீகத்தன்மையாற் றெரிந்து கொள்ள
முடியாதென்றான். செயப்பிரகாசன் இங்குள்ள தெய்வவருளாற்
றெறிவோமென்று தம்பியுடன் மங்களேஸ்வரி யாலயஞ் சென்று
அம்மனைப்பிரதக்ஷணஞ் செய்து சந்நிதி முன்னின்று இருகரங்க
ளையுஞ் சிரமேற்குவித்து தெய்வ மனோன்மணி சச்சிதானந்தரூபி
மறைச்சிலம் பொலிப்ப மகாதேவனுடன் மாநடம் புரியும் வாலை
யம்பிகை மகாதேவி மாது சென்றவிடஞ் சொல்லியருளவேண்டு
மென்று துதித்தனர். திக்கெல்லாம் நிறைந்த சிவசோதியான
அம்மைமக்கள் கவலை நீங்கும்படியாய் திருவுளங் கொண்டு அச
ரீரிவாக்காக இதனைச் சொல்வதாயினள், எக்காலமும் என்னை வழிப்
பட்டுவருபவர்களின்சந்ததிகளாய்விளங்கிய தருமகுணமைந்தர்களே
நீங்கள் சாகரதீபாந்தரவரைப் பட்டணத்தில் அரக்கருடன் போர்
புரியுங்காலத்தில் ஓர் விஞ்சையன் மகன் சிறைமீட்கப் பட்டானல்
லவா? அவன் மனைவி உன் மனைவியைப் பார்க்க விருப்பங்கொண்டி
ருந்தாள் அவ்வுலகவாசிகளும் உங்களைப் பார்க்கவும் உங்கள் வல்
லமையறியவும் விரும்பியிருந்தனர். இக்காரணத்தால் அம்மாதால்
ஏவப்பட்ட வோர்மாது தங்களுலகப் பக்ஷிகளிரண்டுடன் வந்து
சமயம் பார்த்திருந்தாள். நீ தெய்வவீரனை யுலவிக்கொண்டிருந்த
படியாற் கொண்டுபோக முடியவில்லை நீ அந்நிலையைவிட்டு இந்
நிலையை அடைந்து விட்டபடியால் தெய்வப் பறவைகளை யுங்கள்
வாகனங்களாகிய கழுகரசர்போலாக்கி ஆரணியவல்லிபோல்வந்து
இவ்விடம் வருவதாக ஒன்றிலமரச்செய்து ஒன்றிற்றானமர்ந்து
விஞ்சையலோகங் கொண்டுபோய் விட்டனள். உங்களுக்கு மந்திர
முபதேசிக்கின்றேன் பெற்றுக்கொள்வீர்கள் உங்களுக்கும் வாக
னங்களுக்கும் களைப்பிராது, சூரியவெப்பந்தாக்காது சுகமேசென்று
சுவர்ணப்பிரபையை மீட்டி வருவீர்களென்று மந்திரத்தையும் அச
ரீரிவாக்காகச் சொல்லி மறைந்தருளினன். மைந்தர்களிருவரு மகி
ழ்ச்சியுடையவராய் மலரடிவணங்கி மணிமேடைவந்து கழுகரச
ருக்குங் கன்னிகைக்குங் கன்னிசென்ற காரணஞ்சொல்லி யிருந்
தனர். ஆரணியவல்லி ஆயுதமனைத்தையுந் திருமுன் வைத்து
கன்னிகைரூபமாய் வணங்கி நின்றாள். கன்னிநாடன் சென்னி
யசைத்துக் கனிட்டனுக்கு வாய்த்த கனகமே எவ்வளவு வீரிய
விவேக மிருந்தபோதிலும் வளர்ந்துவந்த விடமாகிய அரக்கர்
குண மாறவில்லையே பிரமையான தம்பியைக் காட்டில் விட்டுப்
பிரியலாமா? பிரியமனந்துணிந்ததா? கற்புடையமாதருக்கழகாகுமா?

வென்றான். பூணார் முலையாள் நாணம் பெருகக் கானிரைவிரலால் மாணிலங்கீறித் தலைகவிழ்ந்து சாற்றுவதாவது அண்ணலே! தேவரீருந் தேவியருஞ் சென்றதின்பின் பிரமைமீறி, என்னைவதைக்கத் துணிந்தார். உங்களால் நிவர்த்திசெய்யலாமென்று ஆண்வேடமாய் ஆயுதங்களைத் தாங்கிச் சென்றேன், அடியாள் அன்பில்லாமற் செல்லவில்லை யென்றனள். அரசர்கோன்மகன் அப்படியாவென்று அருளுடன் புன்னகைபுரிந்து சம்பதியை நோக்கி எங்களைரட்சித்த புண்ணியவான் மகன் வேடனையழைத்துவா வென்றனன். சம்பதி அந்நேரமே சென்று அரசகுமாரர்களிருக்குஞ் செய்தியையும் அழைத்துவரச்சொல்லியசெய்தியையும்சொல்லினன் அவன் துள்ளிக் குதித்து துரைமக்கள் தரிசனங்காண இவ்வளவு காலஞ் சென்றதோ கங்கையைக்காத்திருந்த பலன் கைகூடியதோ வென்று சமுகரசனை வணங்கி எங்கள் கோமக்களிருக்குமிடம் இன்று போய்க்காண என்னாலாகுமாகால் நடை நடந்தால் இரண்டு நாட்செல்லுமே யென்றான் சம்பதி யிம்மரக்கிளையிலிருந்து கொள்வாயென்று இருக்கச்செய்து அதனையொடித்துக் காலிலிடுக்கி யந்தரத்தெழுந்து அரைநொடியிற்போய் அரசமக்கள்முன்விட்டனன் வேடன் மரக்கிளையினின்று தாவி வேந்தர்கோன் பாதாம்புயத்தில் வீழ்ந்து வீராதி வீரர்களே. விட்டுப்பிரிந்து போனவர்களே, ஆருயிர்த்துணைவர்களே அலையவிட்டுப் பார்த்தவர்களே இவ்விடமாயிருக்கிறீர்களென்று தன்கண்ணீரால் அவர்கள் பாதங்களைக் கழுவி யழுதது சோரும் உத்தமத் தோழனைக்கண்ட உத்தமன் உருகி ஊற்று நீர்போற்பொங்கும் நயன நீரால் அவனுடலெலாம் நனைய நீண்டகைகளாற்றழுவி நிகரற்றதோழா நினைக்குஞ் சீராளா எங்கள்குடியை ஆதரிக்குந்தயாளா கானகவேட்டையிற் கைதவச்சிங்கம் பின்சென்று கன்னிமையலிற் சிக்கியுன்னை மறந்த பாவி என்னநன்றி யறியப்போகிறேனென்று புலம்பும் புரவலனடியில் மறுபடியும் வீழ்ந்து ஊர்நீங்கிவந்த தாய்மார்களைத் தந்தை சிந்தனையில்லாமற் காத்தான்,காத்து வருகிறான், இனிமேலுங் காப்பான்,உங்கள் மரபனைத்தும் விளக்கவந்த சோதிமணி விளக்கு, எங்கள் தவமெலாமீடேற வந்த தெய்வம் கோடி கோடி நிதிசிலவு செய்து தேடினாலுங் கிடையாத கற்புக்களஞ்சியம் திருச்சமுகம் நின்றுபிரிந்து பகைவனூர் புகுந்து வந்ததைப்பத்திரமாய்க் காத்துத் திருமுன்காட்டி என் ஊழியத்தை நிறைவேற்றாமல் விட்டுவிட்டேனே போனவிடந் தெரியவில்லையே யெனப்புலம்பும் பின்னவனைப்போன்ற அன்னவனை மன்னவன் தன்னிரு கரங்களாலணைத்துக் கன்னியிருப்பிடந் தெரியவந்தது கொண்டு வருகிறோம் நீயும் ஆரணியவல்லியும் கங்கைக்கரை போயிருப்பீர்களென்று சாற்றி விடை கொடுத்தனன். ஆரணியவல்லியும் வேடனும் அவர்கள் அடியிணைவணங்கி விடைபெற்று சம்பதி

மேலும் காலிவிடுக்கிய மரக்கிளையிலுமிருக்க அவன்வானத்திற்ருவி கங்கை கரைவந்து இறக்கிவிட்டு மீண்டுவந்தனன் சூரியன் அஸ்த மாயினன் இவர்களும் மங்களேஸ்வரி யாலயத்திலிருந்தனர்.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று

பத்தாம் அத்தியாயம்.

அஞ்சனக் கடலிற்செஞ்சூரியனுதையமாகச் செயப்பிரகாசனுந் தம்பியுமெழுந்து செகதீஸ்வரியின்றிருவடியைப் பணிந்து செம்பதி சம்பதிமேல் ஆயுதபாணிகளாயமர்ந்து வானவழியாய் வடதிசை நோக்கிச் சென்றனர் மாயாவினோதன் மரகதவண்ணன் செவடிவிரிவும் நல்லையம் பதியான் நாடவர்திலகன் மாயபூபதியின் புகழ்விரிவும் பரவிய புவனப் பரப்பெலாங் கடந்து செல்லுங்காலையில் பராசத்தியருளிய மந்திரவல்லமையால் சூரியவெப்பந்தாக்கல் களைப்பு ஆயாசம் மன்பவையில்லாமல் வானவழிசென்றனர். அவர்களைப் பார்த்த தேவர்கள் பங்கயாசனன் பரந்தாமன் பன்னிரு கையன் ஆகிய முத்தேவர்களில் எத்தேவர்களோ பறவை வாகனங்களிற் செல்லுகின்றனரென்று பேசிக்கொண்டனர் வீரர்கள் விஞ்சையருலகத்தையடுத்தனர் அவ்வுலகவாசிகளிற் சிலர் கண்டு அந்நியவுலகவாசிகள் வருகின்றனரென்று ஆக்ரமித்துப் பலகோடி படைகளைத்திரட்டி மறித்துப் போருக்கு ஆயத்தமாய் நின்றனர் அப்படையெதிர்ப்பைக்கண்டு இல்லையென்றிரப் போர்க்கில்லையென்னமற் கொடுக்கும் நல்லையம்பதியான் நன்று நன்றெனநகைத்து வில்லையெடுத்து வளைத்து நாணெறிந்தான் அவ்வோசையாற் பிரமலோக முந்தத்தளித்துத் தெய்வலோகமு மதிர்ந்து விஞ்சையருலகமு மயங்கிய யெதிர்த்த படைகளுங்கலங்கி நாலா பக்கமுமோடின வீரர்கள் யாதொருதடையுமின்றி விஞ்சயருலகம் புகுந்து ஓர் விருக்ஷத்தடியிலிறங்கியிருந்தனர். ஓடியவிஞ்சையர்கள் தங்கள் தலைவனை வணங்கி மானிடர் வரவைத்தெரிவித்தனர் சிறு நாணொலியாற் சித்தமயர்ந்திருந்த மன்னனாகிய தேவகுஞ்சரன் சபையிலுள்ளாரை நோக்கி வருகிறமானுடர் யாராயிருக்கலாம் அறிந்து வாருங்களென்றான். மகனாகியசிலாதரன் தோழருடன் சென்றுசெஞ்சேவகரைக்கண்டு ஐயன்மார்களேவாருங்கள்,வாருங்களென்று உபசரித்தான். அவனைக்கண்ட இருவீரரும்இவன்அன்று அரக்கர்நகரில்சிறைமீட்டுவிடப்பட்டவனல்லவாவென்று அன்பாய் பேசிவந்தகாரியத்தைக்கூறினர் அவன் தந்தையிடம் வருவீர்களென்று பொன்மயத்தேரில் வைத்தழைத்துப் போய் அரசன் முன்விடுத்தான் விஞ்சையர் வேந்தனைப் பஞ்சவர் மரபில்வந்த பார்த்

தீபன் பணிந்து நின்றனர். மணியாசனத்தில் வீற்றிருக்கச் செய்து மகனை நோக்கியிவர்கள் யார் வந்தகாரணமென்ன வென்றான் சிலாதரன் இவர்தானையா அன்று அசுரர்களிடமகப் பட்டுக் கொண்ட என்னை மீட்டிய புண்ணியர்கள் திரிலோகங்களிலும் எதிரில்லாத வீரர்கள் என்மனையாளாகிய சரசகுணமஞ்சரி இவர் மனையாளர்கிய சுவர்ணப் பிரபையைப் பார்க்கும் படியாய் ஸ்திரிபுருஷாளாகிய இருவரையும் அழைத்துவரச் சொல்லியிருந்தாள் நான் அதனைக் கவனிக்காததினல் மாதரசியை மட்டும் நமதுலகப் பெண்ணைக் கொண்டு அழைத்திருக்கிறாள் ஆனதால் தேடி யிவ்வுலகில் வந்திருக்கின்றனரென்று செப்பினன். மகன் வாக்கியத்தால் அகமகிழ்ந்து சகலலோகங்களையுங் காத்ததனிவீரர்களே யெனப்புகழ்ந்து ஆயிரத் தெட்டண்டங்களையும் ஆண்டசூரன் முதலான அசுரக்கூட்டங்களை ஆறுமுகக்கடவுள் அழித்தார் தேவலோகத்தில் ஊர்வசியைக் கொண்டுபோன அசுரவர்க்கங்களை உங்கள்குலமுன்னேனை புரூரவச் சக்கிரவர்த்தி யழித்தான் திரிலோகங்களையும் அரசுசெய்த ராவணுதிராட்சதர்களை ஸ்ரீ ராமபிரான் சம்மாரஞ் செய்தார் கற்பகாட்டை யலக்கழிவு செய்து வந்த காலகேயநிவாத கவசர்களைக் காண்டீபகாளையாகிய அர்ச்சுனன் கொன்ருன் அவர்களைப்போல் நீங்களும், விரிகண்டதீவு சாகர தீபாந்தரவரைப்பட்டன முதலியவிடங்களில் வசித்துவந்த கொடியோர்களைச் சங்காரஞ்செய்து எல்லாவுலகங்களுக்கும் ஏற்பட்ட துன்பங்களை நீக்கிவிட்டீர்கள் இனியரக்கர் பூண்டேயில்லையென்று சொல்லலாம் வில்லாளர்களேயென்று வெகுவாய்ப் புகழ்ந்து சரசகுணமஞ்சரியின் தோழியாய்ப் பூலோகம் போய்வந்த மாய மோகினியை அழைத்து வரச்செய்து அவளைநோக்கி இவர்கள் மாதையழைத்து வந்து எவ்விடம் வைத்திருக்கிறீர்களென்ருன் அவள் அஞ்சி நடுங்கி யெங்கள் மகாராஜாவே தங்கள் மருமகள் உத்தரவுப்படி இவ்வுலக அன்னப்பறவைக ளிரண்டைத்துணையாக கொண்டு பூலோகத்திற் கங்கைக்கரை சேர்ந்து கன்னியைக்கவரலாமென்று பார்த்ததில் ஓர் வீரன் தெய்வதத்துவமாய் உலவிக்காத்துக் கொண்டுவந்தான் அவ்வீரனும் அவள் நாயகனுகிய இவர்தான் முனிபத்தினி சாபகாரணத்தாற் கல்லுருவம் பெற்றும் காக்குந்தொழிலை விட்டாரில்லை இவரில்லாச சமையமொன்று கிடைத்தமைபால் அவள் தங்கை ஆரணியவல்லி வடிவமாய்ச்சென்று அன்னங்களைக் கழுகுகளாக்கித் தெய்வதரிசனஞ் செய்து நாயகர் செய்தி தெரிந்து வருவோமென்று ஒன்றிலமரச்செய்து ஒன்றில் நானிருந்து தெரியும் பொருள்களைக் கவனியாதிருக்கும்படி மயக்கமுண்டாக்கி யிவ்வுலகமே கொண்டுவந்து சரசகுணமஞ்சரியின் அந்தப்புரச் சோலையில் ஓர் விருக்ஷத்தடியிலிறக்கி யிருக்கச் செய்து எங்கள் எஜமானியிடஞ் சென்று அழைத்துவந்து இருவ

ளும் பார்க்கப் பொற்சிலையாயிருக்கக் கண்டோம் நாங்கள்வருந்தி
யென்ன சம்பவிக்குமோவென்றெண்ணி யிருக்கின்றோம் இதுதான்
செய்தியென்றனள். இவ்வார்த்தையைக்கேட்ட செவ்வேற்கையான்
சித்தமயர்ந்து ஈதென்னபுதுமை பிரிவான பொருளைப்பேராசையு
டன்தேடிவந்து காணப்போகும் சமயத்தில் வேறுவிதமாய் விட்ட
தென்றால் என்ன சொல்லுகிறது அவள் எவ்வித ரூபமாயிருந்தா
லுங் கண்டாற்றான் கவலைதீருமென்று தம்பியுடன் எழுந்தான்.
விஞ்சைவேந்தர் பலர்சூழ நடந்து பூஞ்சோலை சென்றுபார்க்க
சுவர்ணப்பிரபையின் மேனிச்சாயலெல்லாம் வேறுவகைப்படாமல்
திவ்யமங்கள விக்கிரகரூபமாய்க் விளங்குவதைக்கண்டு கமலக்கண்
ணீர்பாயவிமலநாட்டரசன்மகளேவிண்ணவர்க்குங்கிடையாதஅமுத
மேசோமகாந்திகரத்தில்வளர்ந்தசொர்னமே, மின்னைப்போன்ற ஆயு
தமேந்திய அரக்கர் சிறையினின்றுமீட்டியஉன்னைப்படாதபாடுபட்டு
இவ்வுலகம்வந்து கண்டும்உயிரற்றபதுமையாய் விட்டனை, வனத்தில்
விடுத்து வஞ்சகிபின் சென்றேன் வந்துகாணமாட்டேனென்கிற
வெண்ணமோ கைகுவித்து எதிர் நிற்கக்கண்டுங் காதலியேயென்ற
ழைக்காதபடி வன்மனக்கற்சிலையாய் விட்டான் நாம் ஒருவரும்
புகுதாதவுலகிற் பொற்சிலையாய் விடுவோமென்றெண்ணி யாயினை
யோ என்று புலம்பிவருந்துங் காலையில் தெய்வயாழ்முனிவனாகிய
நாரதமகாரிஷி யவ்விடமெழுந்தருளிப் புரவலனை நோக்கி மன்ன
வனே நெஞ்சிற் கவலைவையாதே இவளைமாயமோகினி கொண்டு
வந்து இச்சோலையில்விட்டுத் தனதரசியிடஞ் சென்றாள் மாதரசி
இவ்வுலகமாடமாளிகை சோலை விசேஷங்களைக் கண்டு முன்
போன்ற அரக்கர்செயலா யிருக்குமென்றஞ்சி ஒருவர்
கரம்வந்து படுமுன் நான் கற்புடையவளாயிருப்பது
உண்மையெனில் சிலையாகவேண்டும் நாயகன்கரம் வந்துபட்டாற்
சுயரூபமாக வேண்டும் இல்லையெனில் உயிரைவிடுவேனெனத்து
ணிந்துநின்றாள் உடனே அவள் மனப்படி பொற்சிலையாய் விட்
டாள் இதுதான் காரணம் உன்கரத்தாற்றொட்டு பெண்ணை
யொப்புக் கொள்வா யென்றான் நாதிபன் நாரதரைவணங்கி
காதல்தூண்டக்க மலக்கரத்தாற் கனகச்சிலையைத் தொட்டான்
வானதேவர்கள் தேனலர் தூற்றச்சூழ்ந்துநின்றவர் அற்புதம் அற்
புதமென்று சொல்லப் பொற்சிலையாய் நின்றவள் கற்பகக் கொம்பு
போலிலங்கி நிற்பவன் கோலங்கண்டு செங்கரஞ் சிரமேற்கூப்பி
என்னுயிர் என்தவம் இவ்வுலகந்தேடி வந்ததால் கங்கையிலாடிய
பலனும்கால காலனைக்கண்ணனை யெண்ணிச் செய்த தவமும்
கைகூடியதோ வென்றுருகிக் கண்ணீர் புரளநின்றான் பொன்னுரு
மாய் நின்னறவள் தன்னுருவமாய் நின்றகாட்சியைக் கண்டதரணி
வேந்தன் தாங்காத்துயர் நீங்கப் பெருங்காதலோங்க எவ்விடம்
பிறந்து எவ்விடஞ் சிறையிருந்து எவ்விடம் நமைப்பிரிந்து எவ்

விடம் நம்மைப்பிரிந்து எவ்வுலகம்புகுந்து எவ்வுருவமாகி இவ்வுருவமாய் நின்றுள்! நாமும் வெவ்வேருகி வேறுரூபமாகி தெய்வச்செயலால் இங்குவந்து கண்டோம் செல்வனேயென்று தம்பியுடன் கூறி ஆனந்தமடைந்தான். அந்தவேளையில் இந்திரன்முதலிய சகலதேவர்களும் அரம்பையர்களும் வந்து காவலர் வீரியத்தையும் கன்னியின் கற்பையுங் வெகுவாய்ப் புகழ்ந்தனர். வந்தவரைச் சுந்தரர்பணிய இந்திராணி சந்திரவதனமாதைச் செந்தளிர் கரங்களாலணைத்துக் கங்கைக் கரையில்வந்து காத்த தெய்வத்தினிடமாக மனஞ்சென்றமையால் கற்புத்தவறியதோ இல்லையோ வெனுஞ் சந்தேகத்தை நீக்கப் பொற்சிலையாகும்படி யுன்னைத் தானே சபித்துக்கொண்டாய், தெய்வமாக வந்தவன் உன் நாயகனேயன்றி வேறில்லையென்று சங்கதியனைத்துங் கூறச் சுவர்ணப்பிரபை பரமானந்தமடைந்தாள் வந்ததேவர்களும் தேவர்கள் தலைவனும் வாழ்த்திப் போயினர் தேவசஞ்சரன் மன்னன் மைந்தரையுமங்கையர்க்கரசியையும் பொன்னின் மனைகொண்டுபோய் இன்னமுதருந்தச் செய்து யாழ்வாத்தியம் அரம்பையர் நடனம்முதலிய வினோதங்களைக்காட்டி வைபவமாய் வைத்திருந்தான். சரசகுணமஞ்சரி அரசபத்தினியைத் தனதிடங் கொண்டுபோய் பொன்வள்ளத்திலமுதருந்தச் செய்து தன்கழுத்திலுள்ள மங்கிலியத்தைத் தொட்டுக்காட்டி யிதுகாத்தது உன்புருஷன் தானம்மாவென்று கூறி அனற்கவச முடையவளே அழியாத பத்தினியே உன்னையும் உன் புருஷனையும் எங்கள் வீட்டில் வைத்துப்பார்க்கப் பலநாளாக எண்ணியிருந்தேன் கைக்கூடியதென்று தெய்வமணிப்பணிதிகளும் செம்பொன் னுடைகளுங் கொடுத்தாள். மங்கையர்க்கரசி உங்கள் தெரிசனங் கிடைத்ததும் எங்கள் தவமெனப் புகழ்ந்து நாயகனிடம் வந்திருந்தாள் விரிகடல்வறள வேல்விடுஞ் சேவகன் விஞ்சையர் வேந்தைப் பணிந்து எங்களுலகம் போகும்படியருள் செய்ய வேண்டுமென்று கூறினன். அவன் அகமகிழ்ந்து தெய்வஅணிதுகில் வர்க்கங்களுங் கொடுத்து தன்மனப்படி செல்வதாகிய ஓர் விமானமுங்கொடுத்தான் வீரர்கள் அவைகளைப்பெற்றுயாவரையும் பணிந்து விடைபெற்று பொன்னிற விமானமேல் தானும்மங்கையும்அமர்ந்து தம்பியொருபுறமிருக்கச் சமூகரசரொருபுறமிருக்கும்படி செய்து விமானம் எழுந்து செல்லக் கடவதென்று நினைத்தான் அவ்விமானமெழுந்துவிஞ்சையவுலகை விட்டுவடகடற்பக்கம் வரும்போது ஓர்தீவு தோன்றி மாளிகையொன்று தனியேயிருக்கக் கண்டு இதிலுள்ளவர் யாவரோ அறிவோமென்று மாளிகையருகில் விமானமிறங்கும்படி நினைத்தான் அது அப்படியே இறங்கியது மாளிகையிலிருந்து ஐந்து அரக்கர்களும் ஐந்து மானிடப் பெண்களும் வெளிப்பட்டு ராஜ குமாரரையும் ராசகுமாரத்தியையும் வணங்கி நின்றனர். சுவர்ணப்பிரபை தோழியர்களைக் கண்டவு

டன் கண்ணீர் சோரவெழுந்து விரைந்துவந்து தாய்போற் காத்
துவந்த அன்னங்களே என்னைவிடாமல் வந்த உங்களுக்கு இந்தக்
கதியா கிடைத்தது என்ன சொல்லப் போகின்றே னென்றேங்
கினுள் வெய்யவர்கள் மீனவர் பெருமான் வீரக்கழல்கள் கிடந்த
லம்பும் பாதார விந்தத்தில் விழுந்து புலம்பி எங்கள் குலத்தை
வேரறுத்தவந்தலே தேவரீருடைய தீக்கணைகளுக் கஞ்சியிங்கு
வந்திருக்கு மேழைகள் சினம் பொறுக்கமாட்டோமென்று செப்பி
முறையிட்டனர். பாண்டித்தலைவன் பதின்மரையுந் தெரிந்து
கொண்டு உங்களிருப்பிடந்தேடி முன்வந்தோம் அங்கில்லை யிங்கு
எப்படி வந்தீர்களென்றான். அரக்கர்கள் அண்ணலே சாகரதீபாந்
தரவரைப் பட்டணத்தில் நீங்கள் நடத்திய போர்த்திறத்தையும்
அம்புகளோடுந் தீக்ஷண்யத்தையும் பார்த்தோம் அரக்கர் கூட்ட
மும் நம்மிடமும் நிலையாதென்று ஐந்து மாதர்களையும் விமானத்தி
லேற்றி வடகடற் பாங்காகிய இத்தீவு வந்திருக்கின்றோம் எங்களு
யிர் அடைக்கல மென்றனர். தோழியரைவருந்துரைமகளைவணங்கி
நாங்கள் செய்தொழிற் குடையவராயிருந்து தீயவரிடஞ் சிக்கிய
போதிலும் உன்னைப்போலவே மாசுபடாமலிருக் கின்றோம்
பாரென்று மரப்பாவைகளைக் கொண்டு வந்து நிறுத்திப் பிரமரா
ராக்ஷசமுனிகூறியமந்திரத்தைக்கூறினர் ஐந்து பாவைகளும் அப்
பெண்களைப்போல ஐந்துஸ்திரீகளாய்நின்றனர் அண்ணலும்பெண்
ணரசுஞ்செம்பதி சொல்லியபடியிருக்கிற தென்றெண்ணிக் கொண்
டனர் அரக்கர்கள் திகைத்துநின்றனர் மாதர்கள் கழுகரசரைநோக்க
அவர்கள் ஆதியில் தங்களிடங்கூறியதை விளக்கமாகச் சொல்ல
வேந்தர் கோன்ராக்கதரை நோக்கியெங்கள் பெண்களை உரிமையா
க்கி நீஙகள் வைத்திருந்தபோதிலும் அழிவுபடாமலிருந்து வந்தி
ருக்கின்றனர் உங்கள்சையோகத்துக் கிணங்கிய உங்கள் குலப்
பெண்களைக் கொண்டு உங்கள் தேசம்போய்ச் சேருங்களென்றான்
அவர்கள் புத்தியென்று போறறிவிடைபெற்று மெல்லியரைவரு
டன் விமான மேற்கொண்டு தீவு கென்று பிரமராக்ஷச முனியைக்
கண்டு சாபவிமோசனம் பெற்றுச் சாகரதீபாந்தர வரைப்பட்டணம்
போய்ச் சுகமேவாழ்ந்திருந்தனர் மன்னர்பெருமான் கன்னியரை
விமானமீதேற்றிப் பொன்னிறமாதுடனிருக்கச் செய்து அத்தீவு
கடல் கடந்து இமையமால் வரையில்வந்தான் இவ்வரை எவ்வுல
கங்களையும் ஈன்றவளை ஈன்றதானதால் தங்கிப் போவோமென்று
ஓர் புறமிறங்கினன் அங்கு அநேக மாகமுனிவர்கள் தவயபுரிந்தும்
யோகநிஷடையிலிருந்தும் சிஷர்களுக்கு வேதபுராணங்களை யோதி
யுமிருக்கத் தனது தோழனாகிய பாகாங்கனும் அவர்களுடனிருக்
கப் பார்த்தான் உடனே தம்பியுந்தானும் விமானம் விட்டிறங்கி
மகான்கள் முன்பு வரப்பாகாங்கனும் வருந்தோழரைக் கண்டு
பெருங்காதல் பொங்கத் துள்ளிக்குதித்தோடி என்னுயிர்த் தோழ

ர்களே எவ்வுலகம் போய் வருகிறீர்கள் நான் இவ்வுலக மெல்லாந் தேடினேன் நீங்கள் வேறுலகம் போனபடியால் கண்டு கொள்ள முடியவில்லையென்றான் செயப்பிரகாசன் செங்கைகளாற்றழுவிக் கொங்கநாடாள வருங்கோமானே எங்களைப் பிரிந்த நீ யெப்படி யிங்குவந்தாயென்றான் அதற்கவன் சொல்லுகிறதாவது சேகவேந்தர் புகழுந்தீரர்களே உங்களில் ஒருவர் முன்பிரிந்து ஒருவர் எங்களுடன் வரக்காரணவாசிப் பட்டணம் வந்தோம் அவரும் பிரிந்தார் வேடன்மகனும் நானும் அவ்வூர்ச்சத்திரத்திற் சாப்பிட்டு அன்றிரவுபடுத்திருந்தோம் அவ்விடத்திலொரு பெண் அவன் நாயகனைக் கொலைசெய்ததாக அவ்வூர் அரசனிடங் கொண்டுபோனாள் அவன் விசாரணை செய்து வேடனுறையிற்கிடந்தவாளில் உதிரந் தோய்ந்திருந்ததால் கொலைசெய்தது உண்மையென்று வேடன் கரத்தில் விலங்குபிணித்து மலைமேலேற்றிக் கீழேதள்ளும்படி உத்தரவு செய்தான் கொலையாளிகள் அவனை விலங்கு தரிக்கும்போது நான் தடுத்து அவன் கொலைசெய்யவில்லை யென்று பலதரஞ் சொல்லியுங் கேளாததால் சினமுடன் ஆக்ரமித்தேன் நூறு வீரர்கள் என்னைப் பாய்ந்து பிடித்துப் பாரவிலங்கிட்டுச் சிறைச்சாலையிலடைத்து மறுநாள்விசாரணைசெய்தனர் நான் காட்டுவேடனையேவி இவள் நாயகனைக் கொல்லச் சொல்லியதும் உண்மை கொன்றதும் உண்மை என்னையும் மரணஆக்கினை செய்வீரகளென்றேன் மந்திரிகள் நீதிவிசாரணைத்தலைவர்கள் திகைத்து நேற்று ஒப்பாதகொலையையின்று ஒப்புகிறானேயென்று யோசித்துக் கொண்டிருந்தனர் ஓர் சங்யாசி அவடம்வந்து மகாராஜனே நடந்தவுண்மை யெனக்குத் தெரியும்நான் துயிலாதிருந்தேன் இம்மாதுடனிற்குமிவன்சோரநாயகனென்று வார்த்தைக் குறிப்பால் தெரிந்தேன் இவள் காட்டுமனிதன் உறையிற்கிடக்குங் கத்தியாற் கொன்று விடுவாயென்றாள் அவனும் அப்படியே செய்துவிட்டான் அரவத்தால் அங்கு படுத்திருந்த சனங்களெல்லாம் விழித்துக் கொண்டபடியால் தூயவனாகிய இவன் மேற்பழியேற்றினாள் இதுதான் செய்தியென்றான் காரணவாசி வேந்தன் சங்கியாசி சொன்னதையே சரியான சாக்ஷியாகக் கொண்டு சோரநாயனையுஞ் சோரநாயகியையுந் தெண்டனை செய்து என்னை விடுதலைசெய்து உபசாரமாகத் தீரவிசாரியாமல் உன்னுடன் வந்தவனைக் கொன்றுவிட்டோம் அதனை மன்னித்துநாங்கள் தரும்உத்யோகம்பெற்றுஇவ்விடமிருப்பாயென்றனர். நான் தோழரும்பிரிந்தார் வேடனும்போனான் உங்கள் ஊரிலேயேயிருக்க மாட்டேனென்று அவ்வூர் கடந்து பலவூர் திரிந்து உங்கள் ஏக்கமேமிகுந்து வேடனுக் கென்ன சொல்வோம் வேடர் சேரியிலிருக்கும் பத்தினிசனுக் கென்ன சொல்வோம் இருவரையுங் கண்டால் ஊர்போகிறது இல்லையெனில் வேடன்மகனைப்போல் மாண்டுபோகிறதென்று வனங்கள்

மலைகள் சேரிகள் பட்டணங்கள் பலவாயலைந்து இடங்களுக்கேற்றபடி வேடன் போலவும் பிச்சைக்காரன் போலவும் கூலியாள் போலவும் வியாபாரி போலவும் தேடித்திரியுங் காலத்தில் மலையரசுநாட்டில் இமவளமென்னும் பட்டணத்துக்கருகு பொழுதஸ்தனமித்துப்பத்து நாழிகைநேரத்திற் போய்க்கொண்டிருந்தேன் ஓர்மனிதன் ஓர்பெட்டியைக் கிணற்றருகு வைத்துக்கொண்டிருந்தான் நான்யாரென்றேன் அவனோடிவிட்டான்திருடனென்றுதெரிந்து பெட்டியைத் திறந்துபார்க்க ஓர்பெண் வெட்டுக்காயத்துட னிருக்கக்கண்டு விசாரித்து அவள்சொற்படியேகொண்டுபோய் அவ்வூரரசன் மகள்அரண்மனையருகு வீடுவாடகைக்குப் பேசியிருக்கச்செய்து வைத்தியராற் காயங்களை ஆற்றினேன்அவள் எனது தாய்தந்தையர் அடுத்தவூர் போனவர்கள் வந்ததின்பின் என்னையவர்களிடம்விடுத்துப் பின்போகலாமென்று நிறுத்திக்கொண்டாள். எனக்குஉங்கள் எண்ணத்தைத்தவிர அவள் பேரிலெண்ணமேயில்லை அண்டினவளையிடையில்விட்டுப் போககூடாதென்கிற தருமநியாயத்துக் கஞ்சியவள் சொல்லியவூழியங்களையெல்லாங் கேட்டேன் அவ்வூர்மாதனஞ் செட்டிமகன்மணிவர்ணஞ்செட்டியிடமேசகல பொருள்களையும்வாங்கிவரசெய்தாள் அவனுக்கு மிவளுக்கும் ஓர்சம்பந்த மிருக்கலாமென்றெண்ணியபோதிலும்நாமே அதனைக்கவனிக்கவேண்டு மென்று அவள்சொற்படியே செய்துவருங்காலத்தில் புதுவீடுகுடி யேறுவதற்கென்றுமுகாந்திரம்சொல்லி செட்டியைஅழைத்து வரச்சொன்னாள் அழைத்துவந்தேன் என்னசெய்தாளோ தெரியாது என்னிடம்வந்துசேரென்றாள் நான்பெண்வேண்டித்திரிகிறவனல்லன்தோழமார்பெரிதாய்த்திரிகிறவனென்று சொல்லிமறுத்துவிட்டேன் காலையில்ராசசேவகர்கள்வந்து மணிவர்ணஞ்செட்டியைக்கொலைசெய்தவனென்று பிடித்துக்கொண்டு போகஅரசசபையில் அரசனால்விசாரணைசெய்யப்பட்டு சிறைச்சாலையிலடைத்தனர். அப்பெண் அங்குவந்து காதலைத் தெரிவித்தனள் விடுதலையானால் ஒப்புகிறேனென்று ஓர்போங்காய்ச் சொன்னேன் விடுதலையாய்விட்டது அவளும்ராஜகுமாரத்தியாக வேயிருந்தாள் சுயவரத்தில்மன்னர்களுக்குமாலைசூடாமல் எனக்கே மாலைசூட்டினாள் அதுதெரிந்தஅவள் தந்தைபெட்டியில் வைத்துஆற்றில்விட்டு விட்டான் நான்நம்மைத் தொடர்ந்த பெண்சனியன்தொலைந்ததென்று அந்நகர்கடந்துஇம்மலைவந்து இங்குள்ள யோகீஸ்வரர்களிடம் என்னுடையமுறைப்பாடனைத்தையுஞ் சொன்னேன் அவர்கள் தேற்றி வேடன்மகனிறக்கவில்லை நீதேடிய நண்பர்கள் இம்மார்க்கமாய் வருவார்கள் இங்கிருப்பாயானால் கண்டுகொள்வாயென்றனர் நான் நாள்பலவாயிருந்து பெரியோர்களுக்குத் தொண்டுசெய்து வருகிறேன் அவ்புண்ணிய பலனால்உங்களை யின்றுகண்டு கெண்டே

னென்றான் சுவர்ணப் பிரபைநாயகனை நோக்கிகங்கையிலோர் பெண் பெட்டியில்வந்தாள் எடுத்துவிசாரிக்க இவர்சொல்லிய வர்த்தமானங்களுக்கேற்றபடியே சொல்லியிருக்கிறாளென்று விளக்கமாகச் சொன்னாள் கவனவாம்பரியான்இவனை நாடிய பெண் அவள்தானென் சிறுவன்முதற்றேவர்களாலுங்கடக்கரியகன்னியர்மயலைமதுபொருட்டாற்கடந்து பலதேசங்களைக்கடந்து இங்குவந்திருக்கிறானே இவனல்லோ வுத்தமத்தோழனென்றிருகரத்தழுவி அன்பனேசற்றுநேரம்பழகியநட்புக்காக இரவிற்றனியே வந்தகன்னியைக் கலவாமல் அகன்றுஇம்மலை வாசியாயினை உன்னைப்பிரிந்த நாங்கள்கன்னியரைக்கண்டணைந்து இன்பசுகங்கண்டவர் களாயிருக்கின்றோமென்றுமன்னர்களுமாதர்களும் பின்வரநடந்து அங்குள்ளதபோதனர்களைக்கண்டுவணங்கஅவர்கள்நோக்கிஇவன்சிவன் றந்ததமிழ்நாடனல்லவாவெனத்தெரிந்து செய்துவந்த வீரியங்களையெல்லாங் கியானதிருஷ்டியாலறிந்து ஆனந்தமுடையவர்களாய் வீரர்களேயுங்களையின்றுகண்டது தண்டகாரண்யத்தில் ஸ்ரீராமலட்சுமணனையன்று கண்டதுபோலாயிற்றென்று தனித்தனியாசீர்வதித்து உங்கள்நாடுசென்றுபல்லாண்டு பல்லாண்டு காலங்களாய் பாரம்பரையாய்அட்டலட்சுமிநடனம்புரியவாழ்ந்து வரக்கடவீர்களென்றுவாழ்த்தினர். அரசர்பெருமான் அவர்களைப்பன்முறை தொழுதுவிடைப்பெற்று வேற்றடங் கண்ணிதோழியர் துணைவருடன் விமானமேற்கொண்டு தென்றிசை சென்றான்.

செயப்பிரகாசன் சித்தப்படிசென்ற தெய்வ விமானம் அவன் எண்ணத்துக்கு விரோதமாக வேறோர் திசை சென்றது இப்படிச் செல்ல வேண்டியதென்னவென்று கருதிக்கொண்டிருக்குங்காலையில் ஓர் பெரிய கல் மேடையையும் அதனுச்சியிற் சுழன்றுகொண்டிருக்கும் பளிங்குஉண்டை யொன்றையுங் கண்டான் விமானமும் மேடையில் வந்தமர்ந்தது மன்னன்குமாரன் இன்னதுஅரக்கர் மாயமோ அமரர் சூட்சியோவென்று நினைத்திருக்கும்போது அம்மேடையிலுள்ள அதிகாரிகள் ஆயுதந்தரித்த வீரர்பலர்வர வெள்ளிப்பிரம்பு கரத்திற் பிடித்துவந்தனர், வந்தவர்கள்சுவர்ணப்பிரபையைக்கண்டு அவள் தூயமலர்ச் சேவடியில் வீழ்ந்து மகாராஜன்திரு மகளல்லவாவென்று வருந்தினர் சுவர்ணப்பிரபை தந்தையின் அரண்மனை வேலைக்காரனென்றும் வந்திருப்பது பிறந்தஊரென்று தெரிந்து தயாளகுண முள்ளவர்களே தாய்தந்தையர்கள் சுகமா, என்னைப்பிரிந்து என் தாயார் எவ்வாறு உயிர் வைத்திருந்தாள் தந்தை யெப்படி ஆறினாரென்று சொல்லிக் கொண்டிருக்க மகள் வந்தனளென்று வந்து சொல்லிய வொருவன் வாய்மொழியால் சோமகாந்தனுஞ் சோமகாந்தியும் பொங்கி யெழுந்த வுவகையராய்ப் புத்திரிபாசம் பற்றி யிழுக்கப் பூவையர்களும்

கிளைஞருஞ்சூழ மேடையில்வந்து மெய்த்தவப் புத்திரியை விழி களாற்கண்டு ஆனந்த பரவசம்பெருகஉலகிலொருவரும்படையாத அழகைபடைத்த மகளே இவ்வளவுகாலம் எவ்வுலகம் போயிருந்து வருகின்றனை யென்று உவந்தனர். தவமகள் அவர்கள் சேவடியில் விழ்ந்து அருந்தவஞ் செய்து பெற்றவர்களே அடுக்கரையில் வைத்து வளர்த்தவர்களே நான் போய்வந்த தீவு தேசங்களைச் செப்பலாகுமா, பட்டதுன்பங்களை பகரலாகுமா, உங்களை எக்கா காலங் காண்போமென்றெண்ணி யிருந்தஏக்க மின்று தீர்ந்த தென்று பொருமிப் பொருமிக்கூறிய புதல்வியையும், வீரகோ தண்டங் கைத்தலம் விளங்கத் தம்பியுடன் வீற்றிருக்கும் ராசகு மாரனையுங்கண்டு இவன் எவ்வுலக மன்னன்மகனே நமது மகளை எவ்விடத்திற் கண்டடைந்தனனே பின்பு தெரிவோமென்று வந்து பணிந்த தோழியர்களுக் காதரவுகூறி ராசகுமாரனருகிற் சென்று மகளழுகுக்கேற்ற மணவாளரே யெங்கள்மனை வந்தருளவேண்டு மென்றனன். பூவேந்தன் நோக்கிப்புவனத்திலிணை யில்லாமகளைத் தந்த மாமனுமென்று மதித்து தம்பி பாகாங்கன் கழுகரசரும் அரச் சுவர்ணப்பிரபையுடன் சோமகாந்தன் பொன்மனை சென் றனன் நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் வந்து வந்து கண்டு மங்கையர்க்கரசியையும் மணவாளனையும் பார்க்கக் கண்களாயிரம் வேண்டுமெனப் புகழ்ந்து மகிழ்ந்தனர். யோகசாந்த முனிவர் அவ்விடம் எழுந்தருளினர். சகலருங் கைகுவித்து வணங்க ஆசீர்வதித்து ராஜகுமாரன்றிரு முகத்தை நோக்கி அனற் கவச மேந்தி நின்றவளை எவ்விடங் கண்டடைந்தனை செப்புவா யென்றார் தும்பைமலர் மாலையான் தம்பியைநோக்க அவன் தங் கள் வரலாறுமுதல் இவ்விடம் வந்தது கடைசியாக சொல்லி முடித்தான். ஜனங்களெல்லாங்கேட்டு மனங்களித்தனர் மாமனு மாமியு மகள்பட்ட வருத்தங்களை நினைந்து வருந்தித்தேறி வாய்த் தமருமகன் வீரியத்தை மதித்துப் பிரமானந்தமடைந்தனர் யோக சாந்தமுனிவர் தென்னாட்டு வேந்தை நோக்கிக் கன்னிகையை அரக்கன் விமானத்திற் கொண்டுபோனதை யொருவாறு தெரிந் தோம் கண்டுபிடிக்கும் விதத்தைக்கருதிக் கல்லாலே மேடைக் கட்டி விமானச்சாயை தோய்ந்தவுடனிழுக்கக் கூடிய சக்தியுள்ள யந்திரப்பளிங்குவுண்டையொன்று சுழலும்படிசெய்து வானவெளி களிற் செல்லும் தேவர் கந்திருவர் இயக்கர் விஞ்சையர் அசுரர் முதலானோர் விமானங்களைச் சோதனைசெய்து வருகின்றோம் இது வரையெத்தனையாயிரம் விமானங்களோ சோதிக்கப்பட்டிருக்கின்ற னசோதனை செய்யுங்காலத்திற் சங்கதியைச் சொல்லினால் விமானத் திலுள்ளோர் கோபிக்கிறதில்லை அணங்கரசியிருப்பிடங்கண்டறியுஞ் சக்தியில்லாதபடியால் இவ்விதஞ் செய்துவருகிறோம் பதினாயிர யோசனைதூரம் வரைசெல்லும் விமானங்களை யெல்லாம் இவ்

வேந்திரம் இழுக்கும் என்தபோபலத்தால் உண்டு செய்து கொடுத்தேன் சமைத்தது பழுது போகாமற் கன்னிகாரத்தின த்தையும் மன்னவர்க்கரசராகிய உங்களையுங் கண்டுகொண்டோம் ஆதியில் நான் சொல்லியிருந்தபடி பதினறு வயதிற்பாரிலிணை யில்லா வீரிய நாயகனையடைந்து கொண்டாளென்று வேதமுனிவர் விளம்பினர் சோமகாந்தி தேமலமுகியையுங் காமனைப்போன்ற மருமகனையுங் கண்டு மகிழ்ந்தாள் ஐந்து நாள்வரை அவ்விடமிருந்து அவர்கள் வருந்தித்தந்த விடையும் பெற்று எங்கள் சுயதேசம் போய்வந்து போயிருக்கிறேமென்று தோழியரைவரையும் அவ்வி டம் நிறுத்தி பாகங்கன் தம்பி சமுகாசர் பக்கத்திலிருக்கச் சுவர்ணப் பிரபையுடனமர்ந்து பொன்னணி விமானத்தைத் தென்றிசை செலுத்திச் சென்றான். செல்லும் வழியிலுள்ள மலைகள் ஆறுகள் வனங்கள் நகர்கள் பலவுங் கண்டு கண்டு வகைகூர்ந்து பராங்க முனிவர் ஆச்சிரமங்கண்டு விமானத்தைத் தாழும்படி செய்து தானுந்தம்பியுந் தோகையுந்துணைவனும் பறவைகளும் பின்வர நடந்து மகாமுனிவர் சேவடியில் வணங்கினன். அம்முனிவர் மதிப் பிரகாசனல் வரலாறு முன் தெரிந்தவரானபடியால் ஆசீர் வதித்து தென்னடு வந்தவுங்களால் பொனடு முதல் எங்நாடு முயர்வுபெற்ற தென்று கனிவானவுரைகள் பேசியிருக்கச் சுராங்கி யானவள் தன்னடிவணங்கிய மன்னனை நோக்கித் துஷ்டனெரு வனுக்காக இட்டசாபம் தாயவனகிய உன்னையும் தம்பியையுங் சொம்பினையுங் கனவருத்தத்துக் குளாக்கியதே யெனவருந்திக் கூறினள். தரணிகாவலன் சராசரங்களைத் தந்த தாய்போன்றவளே பராபரன் கட்டளைப்படி வருகிற இன்பதுன்பங்களுக்கு யார் என்ன செய்யலாமென்றான். பராங்கமுனிவர் பார்த்திபனைநோக்கி நீ கல்லுருவாயிருந்து காத்த நாட்டையாளும் மாதரசியும், உன் தம்பிக்கு வாய்த்தமங்கையும், உடன் பிறந்தவர்கள் ஒருத்தியை அரக்கி கொண்டுபோய் வளர்த்தாள். ஒருத்தியை நாங்கள் வளர்த்து வந்தோம் என்று வரலாறனைத்துஞ் சொல்லி அவ்வரசி போரங்கன் மாண்டகாலம் புருஷனெருவனை கொள்வேனென்று அந்தரங்க விரதம் பூண்டிருப்பதால் கற்சிலையாயிருந்து சென்ற போதகாமன் வருவான் விவாகஞ் செய்து வைக்கக்கடவாய் வனசஞ் சரி நீ விஞ்சையருலகம் போயிருக்கும் போது கற்சிலையைக் காணு மெற்று வந்தாள் நான் காரணமனைத்துஞ் சொல்லியிருக்கிறே னென்றார். காவலன் மறைவாக்கியம் போல் நத்திடவைக்கிறே னென்று விடைபெற்று விமானமேறிக்கொண்டு கங்காநதி வந்தான். அங்கிருக்குங் கன்னியருங் கானகவேடனும் எதிர்வந்தனர் விமா னம் வந்திறங்கியவுடன் கிரிசரன் ஆடிப்பாடி அவர்களடிடுந்தலத்தில் வீழ்ந்து எனதன்னையும் ஆண்டவனும் ஒன்று சேர்ந்து காட்சிதரப் பெற்றேனென்று வந்து பணிந்து கொங்கநாடன் குமாரனை நோக்

இக்காரணவாசிப் பட்டணத்தில் வந்த கண்டத்தினின்று தப்பினீரா தலைவரையெவ்விடஞ் சந்தித்தீரென்ருன் அவன்நான் தப்பியது பெரிதல்ல காதலிகளுடன் கொலையாளிகள் வசம்போன நீதப்பியதேபெரிதென்று கலந்து பேசிக் களிப்படைந்தனர் வரதமங்கை கூலியாளாகிய ராசகுமாரனைக்கடைக்கண்ணால் நோக்கி நிறைந்த நாணமுங்களிப்பும் நெஞ்சிலுலாவ ஓர் புறம்நின்ருள் சுவர்ணப்பிரபைநாயகனிடம் அவளைச் சுட்டிக் காட்டி அவளும் வேடன்மகளுங்கொண்டிருக்குங் கருத்தையும் எடுத்துக்கூறிவணங்கிய மாதர்களைத்தழுவியுபசரித்தாள். மன்னன்மகன் தோழரிருவரையும் நோக்கி எங்கள்மேல்வைத்த அன்பால் உங்களை விரும்பிய மங்கையர்மேல் நோட்டம் வையாதிருந்தீர்கள் இனித்தனித்தனி மணஞ் செய்துகொள்வீர்களென்ருன் அவர்கள் திருவுளப்படி நடக்கச்சித்தமாயிருக்கின்ருே மென்றனர் சேரியின் றலைவனகிய காண்டவன்வேடர் குழுவுடன் வந்து தேனுங்கனிகளையும் அவர்கள் திருமுன்வைத்து வணங்கிஏழைகளிருப்பிடம் தேடிவந்தமகராஜர்களேஎங்களாற்றரப் பட்டஉண்கனியை அங்கீகரித்துப் பெண்கனியைஉங்கள் தோழன்அங்கீகரிக்கும்படி செய்யவேண்டு மென்றனன்செகவேந்தன்சித்தமகிழ்ந்து நாங்கள்வேந்தரைச் சேர்ந்தோராயினும்வேடரைச் சேர்ந்தல்லோயிவ்வித மேன்மையடைந்தோம் உங்களுக்குமெங்களுக்கும் பேதமில்லைஎன்றுசொல்லி அவ்விடத்திலேயே அவ்விருபெண்களையும் அவ்விருவருக்கு மாலையிடச்செய்து அவர்களையுமழைத்துக் கொண்டுவேடன் விடைபெற்று விமானமீதமர்ந்துதெங்களாபுரத்தில் மங்களேஸ்வரியாலயம் வந்திறங்கிஅம்மனை வணங்கி மகிழ்வுடனிருந்தனன்.

வனசஞ்சரி மணிமேடைவந்து கற்சிலையைக்காணுது வருந்திமாமுனிவரிடஞ் சென்றுசொல்ல அவர் ராஜகுமாரர்கள் சரித்திரங்களையும் அக்காள் தங்கையாகிய அவர்கள் சங்கதியையும் போககாமனை மணந்து கொள்வதாகிய பொருத்தத்தையுங் கூறியனுப்பினர் அவள் தன்னகர்வந்து வளர்ப்பித்த தந்தையாகிய சங்கரேகராஜனிடம் செப்ப அவன் சிரங்கராஜன் சீதளவசனி பூவண்ணராஜன் போதகாமன் ஆகிய இவர்களையும் மற்றும் அழைக்கப்பட்டவர்களையும் அழைத்து ராஜகுமாரர்கள் வரவை யெதிர்ப்பார்த்திருந்தனன் அப்படியிருக்கும் போதுசிலரோடிவந்து எவ்வுலப்வாசிகளோ மாதர்களுடன் விமானரூடராய் மங்களேஸ்வரியாலயம்வந்திருக்கின்றன ரென்றனர். மன்னவனுமற்றவர்களும் தாமெதிர்பார்த்திருக்கும் அன்னவர்களாகத் தானிருக்கலாமென்று சேனைவி

ருதுகளுடன் சென்று சிம்மம் போன்றிருப்பவர் தம்மைபணுகி ஆலிங்கனஞ்செய்து தெக்ஷணத்திலுதித்துத் தீயவர்களை வதைத்துச் சித்துவிளையாடிய தெய்வீகப் பிரபூவே தங்கள் செயலெலாந் தெரிந்து கொண்டோம். எங்கள் அரண்மனை யெழுந்தருள வேண்டு மென்றனன். மன்னர் பெருமான் அப்படியே வருகிறே மென்று பொன்னிறமாதுடன் செம்பொற்றேரிலமர்ந்து மற்றவர்களுஞ் சதிபதிகளாய் இரதங்களில் வரக்கழுகரசர் ககனமார்க்கமாயெய்த தெங்களாபுரப்பட்டணம்வந்து தெய்வீக மன்னனென்று பல்லாயிரஞ் சனங்கள் பணிந்து வாழ்த்த செம்பொன்மணி மாளிகை வந்திறங்கி சகலராலும் உபசரிக்கப்பெற்று வீற்றிருந்தான். ஆரணியவல்லி மாதர்க்கரசியையும் மற்று இருமாதர்களையும் அழைத்துக்கொண்டு அந்தப்புரஞ்சென்று தாய் தந்தையரைத் தமக்கையைப் பணிந்து பேசவேண்டிய பூர்வோத்தரங்களைப்பேசியிருந்தனள் பின்பு செயப்பிரகாசனும் மாமுனிவர் சொற்படி வனசஞ்சரி யென்னுமாதை போதராமனுக்குப் புதுமணஞ்செய்து அவ்விடம் தம்பியுந் தோழரும் தானும் களித்திருக்கு நாளில் ஓர் நாள் வேட குமாரன் வேந்தனகுமாரனை வணங்கி நாம்அதிட்டபுர மன்னனுத்தரவால் வேட்டையாடவந்து அநேக நாளாகின்றது தனையனைக்காணோமென்று அவரும்வருந்தியிருப்பார்கண்ணையுங்கருத்தையுங் நம்மிடமேவைத்துப் பாதுகாத்த தாய்மார் எவ்விதசஞ்சலத்திலிருக்கின்றனரோ எனது தந்தை யெவ்விடந் தேடியலைகின்றனரோ தெரிகிலம் புறப்பட வேண்டுமென்றான் மதிப்பிரகாசனுந் தாமதிக்கக் கூடாதென்றான் செயப்பிரகாசன் மாதர்களை நோக்கி உங்கள் தாய் தந்தையரைக்கண்டு கொண்டோம் அவர்களெடுத்தணைத்து மகிழ்ச்சி கொண்டாடப் பெற்றீர்கள் அதுபோல் எங்கள் தந்தையைக் காணுவிடினும் வேடர் குடிசையிலிருக்கும் ஏழைகளைப்போன்ற தாய்மாரைக் காணவேண்டாமா வென்றான் மாதர்கள்மலர்க்கரங்கூப்பி நாங்கள் இவ்வளவுபாக்கியங்களைக் கண்டடைய உங்களைத் திருவுதரங்களிற் பூத்த தெய்வங்களாகிய மாமிமாரைப் பார்க்க ஆசை யளவில்லாதிருப்பதாற் சித்தம்போற் புறப்படுவோமென்றனர் செயப்பிரகாசன் சகலரிடமும் விடைபெற்று மாதர்களுந் தோழரும் விமானமீ தமர்ந்திருக்க தானினிருந்து தன்றிசையாய ஆங்குள்ள பட்டணங்கள் சோலைகள் ஆறுகள் மலைகள் முதலியவற்றைச் சுவர்ணப் பிரபைக்குக்காட்டி ஆங்காங்குள்ளவர்கள் பரமசிவனும் பார்வதியும் விமானரூடராய்ச் செல்கின்றனரென்று பலவாறு துதிக்கப் பாண்டிநாடு நோக்கிச் சென்றான்.

இவர்களிப்படிவரத் தாய்மாரிருக்கும்படியான இயல்பைக் கவனிப்போம். அன்று ஆரணிய சேரியில் வேடராசன் சென்று

ராஜபத்தினிகளிடம் என் மகன் எங்களை வரவழைத்த அவ்வரசன் மகன் ஆகிய இருவரையுந் துணைக்கொண்டு மிருக சமூகங்களை வேரறுத்து அரசன் தரும் வெகுமதியுடன் உங்கள் மைந்தர்இ ரண்டொருநாளையில்வந்துசேர்வார்களென்றுசொல்லியிருந்தான்அ வர்கள் அவன்சொல்லியபடிஅநேகநாள்வரைபார்த்து வராததினல் தாய்மார் மனஞ்சலித்து' சஞ்சலக்கடலிலாழ்ந்து உண்ணீர் வாளக் கண்ணீர் பெருகக் கனவிலும் நினைவிலும் மறவாக் கண்மணிகளே உங்கள் தந்தையார் உங்கள்நிறங்குறியொன்றுங் காணமலே இருக் கும் நிலையைக் குறிப்பாற்றெரிந்து நமது வாணளும் ராஜாங்கமு மெப்படியாயினுமாகுக மனைவியர் வயிற்றிலமைந்த மணிகள் பூலோக வுதையமானற் போதுமென்றல்லவோ எங்களைப் போக்கி னர். புருஷனுக்காபத்தென்று கேட்டவுடன் உயிரை விடும்படி யான நிலையையுடைய நாங்களும் வயிற்றிலுள்ள வுங்களை நம்பி மணவாளனைப் பிரிந்து வனசேரிவந்து உங்கள் திருமுகங் கண் டோம். சாமளரூபியம்மன் திருவுளம் பற்றியபடி தலைவனையோர் காலங் கண்டுகொள்ளலா மென்றிருந்தோம். வேட்டையாடப் போன மக்கள் வீடுவந்து சேர்வதற்கில்லாததாய் விட்டீர்களே யென்று நைந்து வேடராசனே போர்முனை சென்ற புருடர் செய மாயிருந்தால் தேடி வந்திருப்பார், வேட்டை சென்ற காதலர் சுகமேயிருந்தால் மீண்டு வந்திருப்பார்கள் காட்டில் வந்த எங்களை யாதரித்து நிறுத்திய உனக்குமோர் புகழுமில்லாமற் போய்விட் டதேஇருவகைப்பயனையுமிழந்த நாங்களிவ்வுலகி லிருந்ததிலென்ன பயன் அக்கினி வளர்த்துக் கொடுத்தால் வீழ்ந்து மடிகின்றே மென்றனர் அரணியன் அம்மணிகாள் அஞ்சவேண்டாம் அவர்கள் பரிபூரணனந்த முனிவர் ஆசீர்வாதமும் பராசத்தியருளும் பெற்ற வர்கள்.

இவர்களைச்செயிப்போர் எவ்வுலகினுமில்லையென்றுமகாமுனி வர்சொல்லக் கேள்விப் பட்டிருக்கின்றேன் வருடங்கள் எவ்வளவு சென்றாலும்வந்து சேருவார்களேயொழிய வராதிருக்க மாட்டார்க ளென்றான். மன்னவன்பத்தினிகள் என்னசொல்லியபோதிலுந்தேறு வதற்கின்றிப்புலம்பியயரவேடர்கோன் மெல்லியர்களைவேதமுனிவ ரிடமழைத்துப் போய் வணங்கி மைந்தர் போனசெய்தியைக் கூற அவர் மக்களைக்குறித்து வருந்தாதீர்கள் சிறிதுநாளிற்சொல்லுதற் கரிய பயனேடு வந்து தோன்றுவார்களென்றார் மாதர்கள் சிறிது தேறி சேரிவந்து குலதெய்வங்களைத்தியானித்துக் கொண்டிருந்த னர்.

அப்படியான தாய்மார்களிருக்குஞ் சேரிப் புறமாக மன்னர் பெருமான் பொன்னணி விமானம் இந்திரவிமானம் போல் வந்தி

றங்கியது விமானத்தைக் கண்ட வேடர்கள் திகைத்து யாருடைய
விமானமோ இருப்போர்கள் எவ்வகைத்தேவரோவென்றுநெருங்கி
இங்குவர வேண்டிய தென்னவென்று பார்க்க தங்கள்தலைவன்
மகன் கிரிசரனுந் தோழர்களுமாய் விளங்கு வதைக்கண்டு வந்து
விட்டார்கள் வந்து விட்டார்களென்று துள்ளிக்குதித்து ஆனந்தக்
கூத்தாடினர்கள். அவ்வாரபாரத்தைச் சேரியிலுள்ள வேடர்குழாம்
பலருமறிந் தெழுந்தோடிவந்தனர் சிலர் வெளிப்புறமிருந்து வருப
வரைநோக்கி யென்ன சங்கதியென்க அவர்கள் தன்னைமறந்தகளிப்
பால் வந்துவிட்டனர் வந்துவிட்டனரென்கின்றன ரேயன்றிவந்த
வரின்னாரென்று சொல்கின்றார்களில்லை அதனால் எல்லாரும்வந்து
விட்டனரென்று கூச்சலேயிடுவாராயினர். அவ்வோசை சுற்றிலு
முள்ள பலவூர்களிலுங் கேட்கப் பட்டன இவ்வோசை கேட்ட
தாய்மார்களும் வேடர்தலைவனும் எழுந்தோடி வந்தனர் சிலரெதி
ரோடிவந்து அம்மணிகளே மகாராஜனே நமது மாதவப்பேறுகள்
வந்து விட்டனவென்றனர்! அவர்கள் சொற்குறிப்பால் மைந்தர்
வந்தன ரென்று தெரிந்து வற்றிய ஆறுபெருகியதுபோல் வாடிய
வுடலம் உவகையாற் பூரிக்க வழியெலாங் கண்ணீரோடச் சேரிப்
புறம் வந்தனர்.

தாய்மார்வருங் கோலங்கண்ட சமரசன்புதல்வர் ஆனந்தக்கண்
ணீர்பொழிய இன்பம்பெருகவிமானம்விட்டிறங்கி அவர்கள் விரைம
லர்ச்சேவடியில்வீழ்ந்துவணங்கினர் வணங்கியமைந்தரை மாதாக்க
ளெடுத்துஉருக்கத்தாலெழுந்தகண்ணீர்ப்பெருக்கால்அவர்களைத் தி
ருமஞ்சனமாட்டி கொங்கைப்பாலூறக்குழைய தழுவிமக்களேவேட்
டையாடிவர இவ்வளவுகாலமா உங்கள் திருமுகங்காணாமல் நாங்
களிதுகாலபரியந்த மிருந்தது பிரமவிதிப் பலமேயன்றி வேறில்லை
யெனப் பலவாறு கூறிப்பிரலாபித்தனர் மைந்தர்கள் எங்களைரக்ஷி
த்த அருமைத்தாய் மார்களே வேட்டையாடித் திரும்பியுங்களைக்
காண வேண்டு மென்கிற அவாவுடன்தான் சென்றோம் பிரமலபிச்
சூட்சிகள் வெவ்வேறு விதஞ் செய்துவிட்டன விபரம் சாவகாச
மாய்ச் சொல்லுகிறோமென்று வேடனையும் பணிந்து நின்றனர்
கிரிசரன் அன்னைதந்தையையும் அரசபத்தினிகளையும் வணங்கினன்
ராசகுமாரத்திகள் அரசபத்தினிகளைநோக்கி இவர்கள் நமது நாயக
ரைப்பெற்றவர்களா அங்கக்குறைவாயிருக்கின்றனரேயென்று நினை
ந்துஎப்படியிருந்தாலென்னவென்றெழுந்துபணிந்தனர் பணிந்தவர்
களை மருமக்களாகுமெனமதித்துருபலாவண்யங்களைப்பார்த்துப்பிர
மித்து நமது மைந்தர் தேவரம்பைகளைக் கொண்டு வந்திருக்கின்ற
ரெனச் சித்தமகிழ்ந்து ஏழைக்குடிசையிலிருக்கும் எங்கள் மைந்
தரை யேற்று வந்த ஏந்திழையர்காள் தீர்க்க மங்கிலிகளாய் வாழ்ந்
திருக்கக் கடவீர்களென்று வாழ்த்தினர் குஞ்சரி மாமன்மாமி மன்

னவன் பத்தினிகளை வணங்கி நான்மொழி கூறப் பெற்றனள்
பாகாங்கனும் பத்தினியும் தோழர்கள் தாயரென்று பணிந்தனர்
அரணியன் அமுதகுலோத்துங் கனிடஞ் செய்தி சொல்ல ஆட்களை
யேவி வேடர்களால் விஸ்தாரமானப் பந்தலிட்டு அதில் மாதர்கள்
சகிதம் மன்னர்களையிருக்கச் செய்து உணவாதிகள் தந்து உபச
ரித்தான் வேடர்கள் சொல்லால் பரிபூரணானந்த முனிவர் பாரா
சன்மைந்தர் வரவு தெரிந்து சீஷர்கள் சூழச்சேரியிலெழுந்தருளினர்
வேத முனிவர் வரவைக்கண்ட வீரமைந்தர் மகிழ்ந்தெதிர் சென்று
பணிந்து எங்களையெடுத்தாண்ட பரமகுருவே வீரப்பிரதாபகல்வி
மேன்மையெவ்வுலகங்களிலும்பிரகாசிக்கச்செய்தஞானப்பிரகாசமே
பூரணக்கருணையால் போகாதவுலகங்களிற் போய்வந்தோ மென்று
துதித்தனர் மாமுனிவர் இட்ட ஆசனத்தி லமர்ந்திருந்தனர். வேட
ர்கள் சொல்லாற் கொங்கண ராஜன் தேவியுடன் சேனைகள் சூழ வேட
சேரி வந்தான் பாகாங்கனும் வேடனு மெழுந்து பணிந்தனர். புத்
ரனை ஆசைப்பெருக்கோடணைத்து அருந்தவமுனிவனை வணங்கியோ
ராசனத்திலிருந்தனர் கால சவுந்தரியுங் கனகவல்லியும் வந்தவன்
தமையனென்று தெரிந்து அவன் பாதத்தில்விழுந்து கோவென்று
அழுது அண்ணா உன் வீடு தேடிவந்த எங்களுக்கு நேர்ந்த ஆபத்
தை யென்னவென்று சொல்வோ மென்று புலம்பினர் அமுதகு
லோத்துங்கன் இவர்கள்யார் அங்க ஈன முடையவர்களாயிருந்து
அண்ணாவென்று புலம்புகின்றனரே யெனமதித்து முனிவரை
நோக்கி யிவர்கள் யார் பத்தினிகளென்றான் பரிபூரணானந்தர் பார்
த்திபனே இவர்கள் சமரசன் பத்தினிகள் உன் சகோதரிகளென்று
ஆதிகாரணங்களை யெடுத்துக் கூறினர். கொங்கண ராஜன் தங்
கையர்காள் உங்களுக்குவந்தசஞ்சலமிப்படியாவென்றுவருந்தினான்
தனிவீரர் இவர்தாய் மாமனாரா நாம்பாண்டிவேந்தர் பாலரா தெரி
யாமற் போயினோமே யென்றெழுந்து அவ்வரசனை வணங்கினர்மரு
மக்களென்று தெரிந்தமாமனாகிய மன்னன் அனலைக்கண்ட மெழுகு
போலுருகி அன்னையர் நாடிவந்தும் காலகதியாற்றங்கி விட்டனர்
வேடருடன்சேர்ந்துவந்த உங்களைக்கண்டும் வீட்டிற்கொண்டுபோ
யுபசரியாமல் யார்பெற்றமைந்தரோவென்று அசட்டையாயிருந்து
விட்டேனே யென்று கவலையடைந்தான். பாகாங்கன்பழகிய தோ
ழர் மைத்துனரானதைத் தெரிந்து மகிழ்ந்தான். மாமுனிவர் மன்
னவன் குமாரர்காள் நீங்கள் போய்வந்த காரணங்களைச் சொல்லு
வீர்களென்றனர். மூத்தவ னுத்தரவால் இளையவன் எல்லாச் சங்
கதிகளையும் கூறினன் யாவருங்கேட்டுவியந்துபுகழ்ந்தனர். செயப்
பிரகாசன் தாயர்களைச் சினப்பார்வையாய்ப்பார்த்து நாங்கள்போ
னவிடங்களில் எத்தனையெதிரிகளைச்செயித்து எத்தனைபேர்இடை
ஞ்சல்களைத் தீர்த்தவராய் யிருக்க எங்கள் குலப்பகையைத் தொலை

த்துத் தந்தை சிறைமீட்காதவர்களா யிருக்கின்றோம். முன்னமே யேன் அச்சங்கதியைச் சொல்லவில்லை யென்றனன்.

தாய்மார் எங்கள் கலிதீர்க்கவந்த கண்மணிகாள் இவ்வாக்கியத்தை யெதிர்பார்த்தே இவ்வாரணியத்திற் காலம்பலவா யிருந்தோம் நீங்கள் சிறுவபதா யிருந்தபடியால் பகைவரை யெதிர்த்துச் சென்றுவிடுவீர்கள் அனர்த்தம் நேரினும் நேருமென்றஞ்சிச் செப்பா திருந்துவிட்டோம் துணைதெரிந்து சொல்லலாமென் றிருந்தோம் வேட்டைக்குப்போய் விட்டீர்களென்றனர். மதிப்பிரகாசன் திருநல்லூர்ப்பட்டணம் இப்போதேசெல்ல வேண்டுமென்றான். மன்னன்மகன் யாவரையுந் தன்னோடுவரும்படிசொல்லி விமானமேல் இனிதமர்ந்து அவர்களுடன் சேண்வழி சென்று தேவர்கள் பூமாரி பொழிய செகரட்சகி சாமளரூபி யாலயம் வந்திறங்கி மாதர்கள் மாதாக்கள் மாதுலன் மாமுனிவர் வனவேடர் யாவரும் புடைசூழ சந்நிதானம் வந்து வலம்வந்து ஆயிரங்கண்ணியடிமலரில் வீழ்ந்து பலவாறு துதித்தான் சாமளரூபி பிரசன்னமாகி வாருங்கள் மைந்தர்களே தீவுதீபாந்தரங்கள்சென்று தீயோர்களை வென்று செந்திருவைப்போன்ற சுந்தர மங்கையரைப் பெற்றீர்கள் சுயதேசஞ் சென்று தென்னாடனைத்தும் அரசிசெய்து வரக்கடவீர்க ளென்றாள். செயப்பிரகாசன் சர்வலோகேஸ்வரி நானும் என் பின்னோர்களும் எக்காலமுந் தெரிசனங்கண்டு வணங்கி வரும்படி நல்லருள் வைக்க வேண்டுமென்று வணங்கச் சாமளரூபி திருவுளங்கனிந்து அப்படியே வணங்கி வருவீர்கள் நீயிருக்கும் பதியில் நான் வந்திருப்பேன் முன்னே செல்லுவாயென்று மொழிந்தருளினாள். சீதங்கொள் மதிபரபான்பூதங்கள் விளையாடுந்திருவாயல நீங்கி சகலரு முவந்துசூழ விஞ்சையர்கோன்தரும் விமானமேலமர்ந்து தென்கீழ்த்திசை வழியாய்ச் சென்று பலபதிகள் கடந்து மாடமாளிகை கூடகோபுரத்துடன் விளங்கும் மாநகரைக் கண்டு என தன்னைமார்களே ஐந்துகோட்டைகள் தனித்தனிவிளங்கும் இந்நகர் யார் நகரென்றான். அவர்கள் கண்ணீர் ததும்பப்புவனம் புகழுமைந்தர்களே இதுதான் உங்கள் தந்தையார் அரசுசெய்த நகரமென்றனர் மன்னவள் சென்னியசைத்து அந்நகரின் கீழ்த்திசையில் விளங்கும் பொன்மலர்ச் சோலையில் வந்திறங்கினன்.

செயப்பிரகாசன் செம்மலர்ச் சோலையைக் கண்டு தாயருந் தேவி யருந்தவமுனிவரும் காரும் வேடருஞ் சூழ்ந்துவர நடந்து இரவியரசுமாறி யிருளரசு வீற்றிருக்க வாழை மா பலா கோங்கு பாதிரி அசோகம் வில்வம் ஆத்தி தெங்கு முதலிய விருக்ஷங்களும் மல்லிகை முல்லை யிருவாட்சி ரோஜா மந்தாரை முதலிய புஷ்ப

செடிகளும் நெருங்கி வண்டினங்கள்பாட மயிலினங்களாட குயி லினங்கள் கூவ கிள்ளைகளும் பூவைகளும் தமிழ்மொழிகள் பேச தென்றலுலவ விளங்குங் காட்சிகளைக் கண்டு வரும்போது வில்வ மரச் செறிவுக்குள் பன்னகசாலை யொன்றில் ஓர் மாதானவள்சடை பட்ட கூந்தலும் விபூதி பிரகாசிக்குந் திருநுதலும் மாவுரிவுடையு மிலங்க விருக்குந் தவக்கோலங் கண்டு வணங்கி நின்றான். மாதவ அணங்கு வந்து நிற்போனை நோக்கி எத்தேச மன்னன் மகனோ வென்றெண்ணி யிருந்தாள். சமரசன் புதல்வன் தவயோகசாதனை யில் விளங்குந்தாயே நீ எவ்விடத்துள்ளவள் இங்கிருக்கவேண்டிய தென்னவென அவள் நான் இத்தலத்திலுதித்தவள் தான் இங் குள்ள அமுதலிங்கக் கடவுளையும் அமுதநாயகியையும் வில்வமல ராற் பூசித்துச் தவஞ்செய்து வருகின்றேன் என்பெயர் பொன் னணங்காகு மென்றனள். பூபாலரும் பூவையரும் வணங்கி நின்ற னர் மனனர் பெருமான் இந்நகரையாண்டு வந்தவன்யார்இப்போது ஆள்பவன் யார் சொல்லவேண்டு மென்க தவத்தணங்கு இன்ன கரைமுன் ஆண்டவன் சமரச மகாராஜன் அவன் சத்துருக்கள் செய்த சமரத்துக்காற்றுமல் தோற்று அவர்களூரில் அவர்களா லிடுஞ்சிறை வசப்பட்டுப் போனான். கர்ப்பவதிகளான அவ்வர சன் பத்தினிகள் போனமாயமுந் தெரியவில்லை. எதிரிகளிலொரு வனாகிய கர்நாடதேசத்தரசன் இவ்வூரை யாண்டுவருகிறான்பழைய ராஜனு மந்திரியும் பகைவர் சிறையினின்று தப்பி ஓரூரிலிருந்து இரவு ரகசியமாய் வந்து அமுதலிங்கப் பெருமானையும் அமுதாம்பி கையையும் வணங்கிப் போகின்றனர், சிறையினின்று தப்பிய செய்தி தெரிந்த மன்னர்கள் சேனைகளை பலப்படுத்தி யிருக்கின்ற னர். இதுதான் செய்தி நீவிர் எவ்விடத்துள்ளவர் எங்குசெல் கின்றீர்க ளென்றாள் செயப்பிரகாசன் எங்கள் வரலாறு சவகாச மாய்ச் சொல்லுகிறோ மென்று அங்குள்ள சந்திரகாந்த மண்ட பத்திற் சகலரும் புடைசூழ விருந்து அங்குள்ளவர்களிடம் யாத் திரை வாசிகளென்று கூறி வேடர்களால் பட்டினத்திற் பல சாமான்களும் வாங்கி வரும்படிசெய்து மங்கையர்' செங்கை களாற் சமைத்த போசனத்தை விருந்தினருடனுண்டு தாம்பூல மருந்தியிருக்கும்போது செங்கதிர்ச் செல்வன் சென்று தங்குல முதல்வனாகிய சந்திரனுதையமாயினன். மல்லிகைமலரத் தென்ற லுலவப் பொன்னணங்கும் வந்துபேச மிகுவுல்லாசமாயிருக் கும்போது பனிரண்டு நாழிகைக்குமேல் இருவர் இரண்டு பரிகளிலேறி வந்து இவர்கள் எத்தேச வாசிகளோ எனத்திகைத்து அறிவோ மென்று நெருங்கினர் கமல சவுந்தரியுங் கனகவல்லியும் வந்து நிற்பவர்அரசன்அமைச்சனென் கிற அடையாளத்தைக் கண்டு எழுந்தெதிர் சென்று பத்தாவின் பாதங்களில் விழுந்து எங்களை ஊரைவிட்டுப் போகும்படி செய்த

உத்தமப் பிரபுவேயென்று பொழிந்த கண்ணீரால் புடவையெலாம்
நனையப் பொருமியழுதனர் புரவலன் திகைத்து சூட்ட நோய்பற்
றிய இவர்கள் நமது மனைவியர்போல் நமது ஆதிவிர்த்தாந்தங்களை
யெல்லா மெடுத்துச் சொல்லிப் புலம்புகின்றனரேயென்று யோசி
க்குங் காலையில் தனையரிருவரு மெழுந்து தங்களைப் பெற்றசா
க்ஷாத் தந்தையாராகு மென்று தாமரைத்தாளில் வணங்கினர்
அவன் யாதொன்றுந் தோன்றாமற் சித்திரம்போல் நின்றான்
பரிபூரணனந்தர் பாண்டிவேந்தே இவர்கள் உன்பத்தினிகளும்
பாலர்களுமாகு மென்று பட்டணங் கடந்து சென்ற பான்மை
யெல்லாங் கூற அதுசமயம் அரசிகள் அம்மனருளிய குளிகைகளை
யருந்திப் பழையரூப மாயினர் சமரக மகாராஜன் ஆதியில் நாம்
சொல்லியபடி மனைவியர்நன்மைந்தரைப் பெற்றுவந்திருக்கின்றன
ரென்று அங்கமுருகி ஆனந்தக் கண்ணீர்பாய நின்ற மைந்தரை
நீண்டகைகளாலணைத்து உச்சிமுகந்து உள்ளம் பூரிக்கமரபெலாம்
விளக்கவந்த மணிகளே மன்னா மகுடத்தில் விளங்கும் அணி
களே உங்கள் வைபவக் காட்சி நலங்களை யோர்காலங்காணலா
மென்கிற ஆசையாலல்லவா உங்களன்னையரை யூரைவிட்டகற்றி
னேன் மகாமேருவைப் புடைத்து வந்தகடலைத் துடைத்து வலாரி
மகுடத்தையுடைத்து அரசாண்ட வீரமன்னன் குலத்தில் வந்த
நான் எதிரிகளைச் செயிப்பது அல்லது மாளுவது என்கின்ற
முறையை விட்டு விட்டு உயிரிருந்தாற் கண்டு கொள்ளலாமென்
கிற காதலால் முகில்சிறையிட்ட புகழ்பழிபடபகைவரிடுஞ் சிறை
யிலுழன்று உபாயத்தாற்றப்பி மந்திரியுடன் சேவக வேடமாய்
பலவூர்கள் திரிந்தும் கொங்கண தேசஞ் சென்றும் செய்தி தெரி
யாமல் மலைவாசமாயிருக்கும் யோகீஸ்வரர்களிடம் தொண்டுகள்
புரிந்து கேட்டதில் நீங்கள் பலவிடந்திரிய வேண்டாம் உங்கள்
ஊருக்கே மனைவியரும் மைந்தரும் வந்து சேருவர்களென்று கூறி
யபடியால் நாங்கள் இந்நகருக்கு மேல்பாலுள்ளது வசநகரில் ஓர்
சாதுவின் மனையில் வந்து தங்கியிரவுவந்து தவபத்தினியாகிய
பொன்னணங்கிடமட்டும்உண்மையைச் சொல்லி ஆதியமுதலிங்கக்
கடவுளையுஞ்சோதியமுதாம்பிகையையுந்தொழுதுவருகிறோமென்ற
னன் மனைவியருமைந் தருந்தங்கள் தங்கள் விர்த்தாந்தங்களை
யெடுத்துக் கூற வேந்தர் சோரன் அளவிறந்த இன்பமுடையவனாய்
வாய்த்த சுந்திரவதிகளையும் பார்த்து செய்த வீரப்பிரதாபங்களை
புஞ்சித்ததத்தி வெண்ணி தேவானுக்கிரகங்களையும் உள்ளத்தில்
மதித்து பிரமானந்த மடைந்து மைத்துனனாகியகொங்கநாடனைத்
தழுவி அரணியனை நோக்கி என்னைப் போற்பாது காத்த எந்தலே
யெனப்புகழ்ந்து மாமுனிவரை வணங்கி மகிழ்ச்சி கூர்ந்தான் மந்தி
ரியும் நாம் ஆதியில் எடுத்த யுக்திபடியே அமைத்ததென்று ஆன
ந்த மடைந்தான் பொன்னணங்கும் நமது குலமணிகளெனப் பூரி

த்தாள் மாதரசிகளும் பாளங்களும் மாமனை வணங்கி மகிழ்ச்சிய
டைந்தனர்இவர்கள் உல்லாசமாய் அளவளாவி திங்கட்பிரகாசத்தில்
சோதிமணி மண்டபத்தில் பறவையரசர் காவல் செய்ய நித்திரை
செய்தனர் திரவிட நாடுகாக்கும் புராதனகர்த்தர்கள் வந்தனர் வந்
தனர்என்று சப்திப்பதுபோல்பட்சிசாலங்களெல்லாம் ஒலிக்கமன்ன
னைக்கண்டுமகிழும் திருநல்லூர்வாசிகளின்வதனம்போல்தாமரைகள்
மலரதீவாந்தரஞ்சென்றுவந்த தென்னர்பெருமான் சிரத்திற்கவிக்
கும் மகுடத்திற்கு ஓர்சிகாமணிவருணன்றாப் யிரகாசிப்பதுபோற்
சூரியனுதயமாயினன்மன்னர்களும் பொன்னனார்களும் துயில்விட்
டெழுந்து அங்குள்ள வாவியில் நீராடிப் போசன மருந்தியினி
திருக்குங் காலை செயப்பிரகாசன் தந்தையின்றிருவடியை வணங்கி
இது வரைநுழைபாவிடமெலாம் நுழைந்து செயிக்கக் கூடாதவர்
களையெல்லாஞ் செயித்து கிடையாத கிளிமொழிமாதர்சளையும்
ஜெயலட்சிமியையும் அடைந்து வந்தேனாயினும நமது ஆட்சி
யான நாட்டைக் கைக்கொண்ட பகைவர் விஷயமாய் நடப்பதற்குத்
தங்கள் திருவுள நோக்கத்தையும் உத்தரவையும் எதிர்பார்க்கிறே
னென்றான் சமரசன் தனையன் கூறிய வாக்கியங் கேட்டுத்தடமா
பினிலெடுத்தணைத்துச் செகதல மெங்குஞ் சென்று வந்த மகனே
நீ செயித்து வந்த பிரமாண்ட அரக்கர் பெலங்கள் வரங்களை
நினைக்கும் போது இம்மன்னர் படைகள் ஓரம்பு முனைக்காற்றுமா
உன்மனம் போற் செய்யக்கடவாயென்றான்மதிப்பிரகாசன் இவன்
என்னாட்டிலுள்ளவன் பொன்னாடு போன்ற நமது தென்னாடு வந்து
நமது தந்தையைச் சிறையாக்கிச் சொந்த நாடு போலாண்டு வருகி
றானே அவனைச் சித்திரவதை செய்தாலென்ன வென்றான் கொங்
கண தேசமன்னன் மனுநீதிவரம்பைக் கெட்டவர்கள் விட்டு விட்
டாலும் விட்டு விடாமற் கொண்டுவருவது நல்லோர் கடமையோ
ன்றிருப்பதால் தூதொன்றேவிப் பகைவர்மனக்கருத் தறிந்து
போரைக்கருத வேண்டுமென்றான் தந்தையார் நோக்கமும் மாமன்
வாக்குப் போலிருக்குங் குறிப்பைத் தெரிந்த மன்னர் பெருமான்
தம்பியின் வதனம் நோக்கி ஐயனே நமக்குவருமின் பதுன்ப
மெவ்வாறிருப்பினும் அரச நீதியைக் கடப்பதழகல்ல மாதுலன்
சொற்படி தூதுமூலமாய் அவர்கள் மனக்கருத்தறிய வேண்டு
மென்று கூறித்திருமுகமொன்றெழுதிக் செம்பதியிடங்கொடுத்து
திருநல்லூர்ப் பட்டணஞ் சென்று கன்னட தேசத்தரசனிடங்
காட்டி அவன் கூறும் பதிலைத் தெரிந்து வாவென்றான் செம்பதி
செயப்பிரகாசன் செலுத்திய கழுகிறகு பூண்டகணையைப் போற்
சேணிற் பறந்து நல்லையம் பதிநோக்கிச் சென்ற காலையில் ஆங்கா
ங்கு கோட்டைகளிலிருந்த காவலர் கண்டுபெரும்பறவை வருகின்ற
தென்று அம்பாயுதங்களைச் செலுத்தினர் அவைகளைச் செஞ்சிறை
யால் வீசிக்காற்றால் திசாதிசைகளிற் போகும்படி செய்து கோட்

கோட்டை மேற்றுவ காவலரஞ்சிக் கன்னடராஜன் சபைநாடி யோடிவந்தனர் அதற்குமுன் அரண்மனைப் பாராக்காரர் அரசனடியில் வீழ்ந்து ஓர் கழுகு செயப்பிரகாசன் தூதென்று அரண்மனை வாசலில் வந்து நிற்கின்றதென்றனர். கன்னடதேச மன்னனாகிய சௌரியசிங்கன் ஒரு நாளுங் கேளாதபுதுப் போரகவும் விசேஷமாகவு மிருக்கின்றதென்று அப்பறவையை அழையுங்களென்றான். அவர்களப்படியே யழைக்கச் செம்பதி பெருஞ்சிறையை ஒடுக்கி சபையிற்சென்று அரசன் முன்னிற்கச் சௌரிய சிங்கன் பறவை யரசை நோக்கி நீ யார் விடுந்தூதென்றான் செயப்பிரகாசன் நீட்டிய ஓலையை மூக்காலெடுத்துக்கொடுக்க அரசனதை வாங்கிப்பக்கத்திருப்போனை வாசிப்பாயென்க. அவன் வாசிக்கும் போது இருந்த விபரமாவது :— செயப்பிரகாசன் கன்னடதேச வேந்தன சௌரிய சிங்கன் காண்க எழுதிய நிருபம் எங்கள் முன்னோர்கள் பரம்பரையாய் ஆண்டுவந்த நாட்டை நீ வந்து ஆண்டு கொண்டிருப்பதால் உடனே நீங்கிவிடவேண்டியது காலாந்தகன் கலகாசூரன் முதலிய அரக்கர் தலைவருடனும் கோடிக்கணக்கான அசுர வீரருடனும் போராடிச் செயித்த நான் பஞ்சையாகிய உன்னிடம் போர்புரிய விருப்பமில்லை எனதுதாய்மார் நீங்கவுந்தந்தைசிறைப் படவுஞ் செய்த ஞாயவிரோதத்தை மனுநீதி வரம்பால் தணிக்கை செய்து இந்நிருபமெழுதலானேன். போராட விருப்பமிருப்பின் தனியேவந்தாலும் சரி உலகிலுள்ள அரசர்களைச் சேர்த்துவந்தாலும் சரி தம்பியைஅனுப்புகிறேன் உடனே பதில்வரவும் இல்லையெனில் கடுங்கனலைக் கக்கிக்கணைகள் வரும் என்று எழுதியிருக்க சௌரியசிங்கன் மந்திரிபிரதானி காரியக்காரருடன் யோசித்துக் கொண்டிருக்கும் போதுகோட்டைக் காவற்காரரோடி வந்து வணங்கி பறவையைக் கண்டஞ்சி இப்பறவை எங்கள் காவல்வரம்பைக் கடந்து வந்து விட்டனவென்றனர். காவலன் ஓலையில் கண்டது உண்மையாயிருக்கலால் உடையவன் வந்து விட்டான் ஒப்பித்து விடுகிறதே நலமென்று சகலவிருதுடன் புறப்பட்டான் அந்நகர வாசிகளும் நமதரசன் மைந்தருடன் வந்திருக்கின்றானென்று காணிக்கைகளுடன் புறப்பட்டனர். அரசர் சேனைகளும் ஊர்ச் சனங்களும் நகரின் கீழ்ப்பக்கத்திலுள்ள பூஞ்சோலை வந்து புரவலன் மைந்தருடன் விளங்கு வதைக்கண்டு அவர்கள் பொன்னடிகளிற் பணிந்தனர். கன்னடமன்னன் சமரச மகாராஜனைப் பன்முறைவணங்கி ஐயனே சிறியேனாகிய நானும் என்னைச் சேர்ந்தவர்களும் செய்த அபசாரங்களைப் பொறுத்தருளி த்திரு நகரரசாட்சியை ஒப்புக் கொள்ளவேண்டு மென்றான் பாண்டிவேந்தன் பட்சமாய் நோக்கி எங்கள் காலவினைப்பயனுக்கு நீயென்ன செய்வாயென்று கழறி வந்த மந்திரிகள் சேனபதிகள் பிரபுக்கள் முதலியயாவர்களுக்கும் ஆதரவு கூறிப்பட்டணத்திற் பிர

வேலிக்கச் சித்தமாகி வந்துநின்ற இரதங்களிற் புதல்வருந்தானும்
ஆரோகணித்து பலகோடி சைனியம் புடைசூழ மேள வாத்தியஞ்
சப்திக்க மாதர்கள் சோபனம்பாட வானதேவர் பூமாரி பொழிய
நல்லையம்பதி சென்றனர். மர்தாக்களும்மாதரார்களும்விமானமேல
மர்ந்து வந்தனர் செயப்பிரகாசன் ஐந்து கோட்டைகளையுடைய
அப்பட்டணத்தைக்கண்டு பிரவேசிக்கும்போது அநேகமாயிர மா
தர்கள் குரவை யொலியுடன்வந்து ஆலாத்தியெடுக்க வேதியர்கூட்
டம் தங்கக்கலசங்களிலுள்ள புண்ணிய தீர்த்தங்களைத் தெளித்து
ஆசீர்வதித்து அட்சதைவழங்க ஆடவர்களும் மாதர்களும் அள
வில்லாத ஆனந்தங் கொண்டாட ராஜாதி ராஜனாகிய செயப்பிரகா
சன்தேவாதி தேவனாகிய அமுதலிங்கக் கடவுள்திருவாலயஞ்சென்
றுசகலருடனும் வாகனம் விட்டிறங்கி ஆலய பிரதக்ஷணஞ்செய்து
சந்நிதி முன்நின்று ஆனந்த நீர்ததும்ப அங்கமுருகிச் செங்கை
சிரமேற்கூப்பி அகண்டசச்சிதானந்த சோதிச் சொரூபனே, அடி
யார்க் கெளியவனே எள்ளுக்குளெண்ணைபோல் எங்கும்நிறைந்தப
ரனே அமுதாம்பிகை வரனே எங்களை வழிவழி யடிமை கொண்ட
சோமசுந்தரனே ஏழைகளை ரட்சிக்குங் கருணைக்கடலே யென்று
பலவாறு துதித்தான் செகபரஞ்சோதியாகிய அமுதலிங்கக் கட
வுள் அமுதாம்பிகையுடன் மழவிடை மேலமர்ந்து சிவகணத்தலை
வர்களுந் தேவர்களும் புடைசூழப் பிரசன்னமானார். மன்னவரும்
பொன்னனாரும் என்னதவஞ்செய்தோமென்றிணையடியில்வீழ்ந்து
ஆனந்தக் கண்ணீர்பாய உடல் சிலிர்க்கப் பரவசமாகிப் பலவாறு
துதித்தனர் பரமநாதன் பட்சமாய்ப் பார்த்தருளி
ராஜகுமாரர்களே, நீங்கள் செல்லாவிடங்களிற் சென்றிருந்த கால
த்தும் நமதருட் பார்வை யுங்களிடமே யிருந்து பொல்லாதவர்க
ளையுச் செயித்துப் பூபாரந்தீர்த்து வந்தீர்கள் அகண்ட ஐஸ்வரிய
வளங்களுடன் நீங்களும் உங்கள் கால்வழியிலுள்ளவர்களும் என்
னைவழி பட்டுவாக் கடவீர்களென்று திருவுளம்பற்றி சோதிச்சுயம்
புலிங்கத்தில் மறைந்தருளினர். செயப்பிரகாசன் திருவாலயத்தி
னின்றுநீங்கி ஆவணவீதியினழகை யம்புயக்கண்களானோக்கிச் சக
லரும் புடைசூழ அரசிருக்கை மண்டபத்திற் சென்று இனிது வீ
ற்றிருந்தான் மாதர்கள் அந்தப்புரஞ் சென்றிருந்தனர். அமுதகு
லோத்துங்கனும் சௌரியசிங்கனும் பரிபூரணனந்தரும் யோசித்து
சமரச மகாராசனிடமுங் கலந்து செயப்பிரகாசனுக்குத் திருமகு
டாபிஷேகம் புனையவேண்டுமென்று தேசராஜர்களுக் கெல்லாம்
ஜெயப்பிரதாபக் குறிப்புகளையுங்காட்டி ஓலையெழுதித் தூதர்வச
மாகவும் தூரமானவிடங்களுக்குகழுகாசாரனை யால்வரும் பறவை
கள் வசமாகவும் அனுப்ப அரசர்கள் ஓலைகளைப்பார்த்து தேவர்க
ளாலுஞ் செயிக்கக்கூடாத அசுரர்களைச் செயித்துவந்த தென்பா
ண்டிவேந்தன் மகுடாபிஷேக சேவைக்குச்செல்லாதிருக்கில்நீ■கு

நேரிடுமென்று அவரவர் தேசம்பதிகள் நீங்கித் திருநல்லூர் பட்டணம்வந்து சேர்ந்தனர். தெக்ஷண பூமியிலுள்ள சிற்றரசு பாண்டியர்களும் வந்தனர் மகுடாபிஷேகத்திற்கென்று புதிதாய் சீர்திருத்தஞ் செய்யப்பட்ட தூயமணி மண்டபத்திற் சுபதினத்தில் அந்தணர்கூட்டமும் அரசவெள்ளமும்வந்து நிறைய சப்த சமுத்திரம்போல்வாத்தியங்கள்முழங்கசமரசமகாராஜன்ஓராசனத்திலிருந்துபரமானந்த மடைய சகலசிவராசிகளுங் களிக்க வேதியர் வேந்தர்முதலானவர்களால் மங்களஸ்நானம் செய்யப்பட்டு சுவர்ணப்பிரபையாகிய பட்டத்தரசியுடன் ரத்தினசிங்காதனத்தில் வீற்றிருக்கும்செயப்பிரகாசன்சிரசில் சகலருந் தொட்டு வாழ்த்திக்கொடுக்கப்பட்ட திருமணிமகுடத்தைப் பரிபூரணாந்த முனிவர்சூட்டிவாழ்த்தினர். சுபம்.

பாடல்.

வெள்ளியும் பொன்னுமென்போர் விதிமுறை மரபிற் கொண்ட
ஒள்ளிய நாளில் நல்லவோரையி லுலகமேழுந்
துள்ளின களிப்ப மௌலி சூடினன் கடலிற்றோன்றுந்
தெள்ளிய நிலனும் பூவிற் றையலுஞ் சேருந்தோளான்.

சகலரும் ஆரவாரித்தனர். தேவதுந்துமி முழங்கின தேவர்கள் பூமாரி பொழிந்தனர். நமதிடைஞ்சலைத் தீர்த்த புண்ணியனென்று எறும்புகடை யானை முதல் எண்பத்து நான்குலட்சஞ் சீவராசிகளுங் களிகூர்ந்து வாழ்த்தின. திருநல்லூர் வாசிகளாகிய சகல ஜனங்களும் என்றும் அடையாத பேரின்ப மடைந்தனர். கன்னியர் நடனஞ் செய்தனர். கவிவாணர் பாடினர் மதிப்பிரகாசனுக்கு இளவரசுப் பட்டமும் கொடுக்கப்பட்டு மிகுந்த வைபவமாயிருந்த அச்சபையில் சங்க ரேகனும் சீரங்கனும் எழுந்து தங்கள் நாட்டிலும் தீவாந்தரங்களிலும் இவர்கள் செய்த வீரியங்களை அரசர்களறியச் சொல்லினர். காரணவாசி மன்னன் கன்னிநாடனை வணங்கி தெக்ஷண சிங்காதனபதியேதேவரீருடையதோழர்களைத்தீரவிசாரியாமல் தெண்டனைசெய்த குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று கூற அருளாளன் அறியாமற் செய்த பிழைக்கு ஆர் என்னசெய்யலாம் அந்த எண்ணமேயில்லை யென்றான். இப்படியாகச் சகலவரசர்களும் ஒருமாதவரையிருந்து அரசர் பெருமானிடம் விடைபெற்று அவரவர் நாடு சென்றனர்.

கிரிசரனும் அரணியனும் வணங்கி அரசகுமாரனைத் தரப்பட்ட வெகுமதியுடன் சேரி சேர்ந்தனர். பரிபூரணானந்த முனிவர் ஆசீர்வதித்துத் தமதிருப்பிடஞ் சென்றார். கொங்கணராசனுங் குமாரனும் விடைபெற்றுத் தங்கள் தேசம் புகுந்தனர். செம்பதிசம்பதியாகிய கழுகரசர்காவலர்களையும்பாவையர்களையும் வாழ்த்தி

அவர்கள் உருக்க்த்தோடு தந்த விடைபெற்று பறவையினஞ்சூழ மதுகற்பகாடவி வனஞ்சேர்ந்தனர். செயப்பிரகாசன் அன்னை தந்தை யுள்ளங்களிக்க சுவர்ணப்பிரபையர் ஆரணியவல்லியாகிய மாதர்கள் மனங்களிகூர திருத்தம்பியுடன் செகதலமனைத்தும் சந்திரவட்டக் குடையிலடங்க நல்லையம்பதியி னரசாட்சி செய்திருந்தான். சுபம்.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

வாழி.

தென்னவனென்று கூறுஞ செயப்பிரகாசன் சோதிதானே
பொன்னெனும் பிரபையான பூவையாமி களின்பவர்
மன்னுமிக்காதை வாழிவளந்திகழ் நல்லூர்வாழி
உன்னு நான்மறைகள் வாழியுலகெலாம் வாழிதானே.

செயப்பிரகாசன் முற்றுப்பெற்றது.

அட்டவணை.

1-வது முகவுரை.
2-வது சாத்துக்கவிகள்.
3-வது 1ம் அத்தியாயம்.
4-வது 2ம் அத்தியாயம்.
5-வது 3 ம் அத்தியாயம்.
6-வது 4ம் அத்தியாயம்.
7-வது 5ம் அத்தியாயம்.
8-வது-6ம் அத்தியாயம்-
9-வது 7ம் அத்தியாயம்
10-வது-8ம் அத்தியாயம்
11-வது 9ம் அத்தியாயம்-
12-வது 10-பத்தாம்-அத்தியாயம்-